In Public domain, Digitization Muthulakshmi Research Academy

# திருப்புகழ் - 111

SENTHIL LIBRARY
6/4, 3rd Cross Road,
R.A Puram, Chennai - 600 028.
Ph : 42303408
www.easwarilibrary.in
Door Step Delivery Available

திருப்புகழ்ப் பதிப்பகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3557

Ph : 42303406
SENTHIL LENDING LIBRARY
www.easwarilibrary.com
6/4, 3rd Cross Road
R.A. Puram, Chennai - 600 028.
Please Return in Good Conditions
Within 10 Days: Check your Entries
While Returning & Borrowing Books.
DOOR STEP DELIVERY

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

முருகா சரணம்

# திருப்புகழ் - 111

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளியது

மூலமும் - சிற்றுரையும்

**திருப்புகழ்ப் பதிப்பகம்**

2(52) முத்தையா முதலி இரண்டாவது தெரு

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

போன் : 847 4468

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற்பதிப்பு : டிசம்பர் 2002

**விலை ரூ. 60/-**

உரை விளக்கமும் நூல் வடிவமைப்பும்

'திருப்புகழ்த் தல ஆராய்ச்சித் திலகம்'
'செவ்விலக்கியச் செம்மல்'
'தொண்டர் மாமணி'
'திருப்புகழ் மாமணி'

**வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்**

| *இதர வெளியீடுகள்* | *விலை (ரூ.)* |
|---|---|
| திருப்புகழ் - 66 (8 வரிப்பாடல்கள்) | 6.00 |
| திருப்புகழ் - 108 (16 வரிப்பாடல்கள்) | 30.00 |
| வேண்டுவது அளிக்கும் வேலன் திருப்புகழ் | 6.00 |
| திருமுறைகளில் திருமுருகன் | 20.00 |
| மகேச்வர வடிவங்கள் | 150.00 |
| முழுதும் அழகிய குமரன் | 40.00 |

**ஒளிஅச்சுக் கோர்வை :**
அபயா கம்ப்யூட்டர் கிராபிக்ஸ்,
திருவானைக்கோவில், திருச்சி. போன் : 0431-2231391

**அச்சிட்டோர் :**
ஸ்ரீ அபிராமி பிரிண்டிங் ஒர்க்ஸ் (பி) லிமிடெட்,
சென்னை-14. போன் : 044-8130282, 8133285

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



# அணிந்துரை

‘திருப்புகழ்ச் செம்மணி’
‘திருப்புகழடிமை’
திரு. **S. நடராஜன்**, B.Com.,

Easwari library
002-S25114

பூனாச்சி என்ற கிராமத்தில் அவதரித்த அர்த்தனாரி என்பார் பிற்காலத்தில் வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமியாக பரிணமித்த வரலாறு ஆச்சரியமானது, சுவாரஸ்யமானது கூட. எழுத்தறிவோ, பக்தி இலக்கியத்தில் ஈடுபாடோ இல்லாமல், மைசூர் அரண்மனையில் பணிபுரிந்து வந்த அவருக்கு பேற்றைத் தவம் கூடினதால், அப்பர் பெருமானுக்கு சூலை நோயைக் கொடுத்து சிவபெருமான் ஆட்கொண்டு அருளியது போல், தகப்பன் சாமியாகிய செவ்வேள், அர்த்தனாரிக்கு கடும் வயிற்று வலியை ஏற்படுத்தி, பழனிக்கு வரச் செய்து, ‘சிவமார் திருப்புகழில்’ ஈடுபாட்டைக் கொடுத்த காதை யாவரும் அறிந்ததே. ‘கனல்மால்வரை’யாகிய அருணையில் வதிந்து கொண்டு, திருப்புகழ் தொண்டு செய்யும் காலத்தில் ஒருநாள் ‘துரியநிலையே கண்ட முத்தர்’ களான சேஷாத்ரி முநிவரும், ரமண மகரிஷியும் அர்த்தநாரிக்கு ‘திருப்புகழே மஹா மந்த்ரம்’ என்றுரைத்து, அவரை வள்ளிமலைக்கு அனுப்பினார்கள். அங்கு திருப்புகழ் ஆசிரமம் நிறுவி, ‘ஓதுகின்ற திருப்புகழை நித்தம் பாடும் அன்பை’ வள்ளியம்மையின் அருளால் பெற்று, வள்ளிமலை சச்சிதானந்த சுவாமி என்ற பெயரைப் பெற்றார். ஓர் இரவு, விண் வாக்காக ‘பெருமையை வெளிபட மொழிவாயே’ என்ற கட்டளையைக் கேட்டார். இந்த வாக்கியத்தைத் தனக்குத் கொடுக்கப்பட்ட உபதேசமாகக் கருதி, திருப்புகழின் பெருமையை ‘பூர்வ பச்சிம தக்ஷிண உத்தர திக்கு’களில் எல்லாம் பரப்பி வந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இப்பெரிய மகானின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பல ஆன்றோர்கள் திருப்புகழைப் பரப்புவதையே வாழ்க்கைக் குறிக்கோளாக மேற்கொண்டு வந்தார்கள்; வருகிறார்கள். இத்தலைமுறையில் இப்பணியில் சிறந்து, முன்னோடியில் நிற்பவர் முருகஸ்ரீ வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் அவர்கள் ஆழ்க்கடலில் குளித்து ஆணி முத்து எடுப்பது போல், அவர் அருட்கடலில் குளித்து அவ்வப்போது திருப்புகழ் முத்துக்களைத் திரட்டி எடுத்து 'வாருமே பெருத்தபாருளீர்' என்று அடியார்களைக் கூவி அழைத்துக் கொடுக்கிறார். முன்பு **'66', '108'** என்ற கணக்கில் திரட்டினார். இப்போது **'111'** முத்துக்களை, முத்துக் குமரய்யனுக்கு அர்ப்பணம் செய்யவிருக்கிறார். இத்தொகுதியிலடங்கிய பல பாடல்கள் முன்பு எந்த சபையாலும் பாடப்படாதன. கூடிய விரைவில், இந்தப் பாக்களையும் நல்ல இராகங்களில் இசை அமைத்து, தம் துணைவியார் மூலம் ஒலி நாடா வடிவில் வெளியிடுவார் என்று நம்புகிறேன். முத்தமிழ் முருகனும் ஓசை முநியும் அவருக்கு நீண்ட ஆயுளும், 'நினைத்த காரியத்தில் அனுகூலமும்' நல்கி அருளவேண்டும் என்று இறைஞ்சு கிறேன்.

**S. நடராஜன்**

6, லட்சுமண செட்டித் தெரு,
தியாகராய நகர்,
சென்னை-17.

14.10.2002

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உ

திருமுருகன் தாள் இருமைக்குந் துணை

*'பாம்பனடிமை'*

*'திருப்புகழ்ச் செம்மணி'*

சத்குரு **வீ. முத்துக்குமர குருசாமி,** B.A.,

# வாழ்த்துரை

*''சுக்குக்கு மிஞ்சின மருந்து மில்லை*

*சுப்பிரமணியனுக்கு மிஞ்சின தெய்வமு மில்லை''*

என்பது முதுமொழி.

அந்தந்த தெய்வங்களுடைய பெருமையைச் சற்றும் குறையாமல் நிறைவாகச் சொல்லிப் பாட்டுடைத் தலைவனாகிய முருகப்பெருமானின் பரத்துவத்தை நிலைநாட்டித் திருப்புகழ்ப் பாடிய காரணத்தால் ஸ்ரீமத் அருணகிரிநாத முனீந்திரரை, ''சேயோன் ஒருவனையே புகழ்ந்த அருணகிரி'' என்று பாடிப் பரவுவார் மகாதேஜோ மண்டலகுரு அபராருணகிரி அத்யாச்சிரம சுத்தாத்துவித வைதீக சைவ சித்தாந்த ஞானபாநு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.

முருகன் பெருமை சொல்லிலும் கருத்திலும் அடங்காத மாண்புடையது. கேட்ட மாத்திரத்திலேயே கலியுகத்தி லுண்டாம் கஷ்டங்கள் அத்தனையும் தீர்க்க வல்லது கந்தப் பெருமான் கீர்த்தி. இதனை ''ஸ்கந்தஸ்ய கீர்த்தி மதுலாம் கலிகல்மஷநாஸினீம்'' என்று ஸ்ரீஸ்காந்தம் கழறும்.

முருகன் புகழைப் பரப்பி, திருப்புகழாதிய திருப்பாடல் களைப் பரப்பிவருபவர் ''திருப்புகழ்த்தல ஆராய்ச்சித் திலகம்'' வலையப்பேட்டை ஸ்ரீ ரா. கிருஷ்ணன் அவர்கள். திருப்புகழில் எளிய 66 பாடல்களைத் தேர்ந்தெடுத்து புத்தகத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பதிப்பித்தும் திருமதி. T.V. சுந்தரவல்லி, ப்ரியா, ரமா ஆகியோர் தீங்குரலிசையில் ஒலிப்பேழையில் இழைத்து வெளியிட்டுள்ளார். பின்னர் திருப்புகழில் 108 பாடல்களை எடுத்து சுருக்க பொழிப்புரையுடன் புத்தக ரூபமாகவும், திருமதி. சுந்தரவல்லி & அக்ஷயா ஆகியோர் குரலில் ஒலிப்பேழையில் இழைத்தும் திருப்புகழ்ச் சங்கமம் மூலம் வெளியிட்டுள்ளார். திருப்புகழ்ச் சங்கமம் திருப்புகழ் வாணர்களை ஒருங்கிணைத்து ஒப்பற்ற சேவை செய்து வருவது கண் கூடு.

சைவ சித்தாந்தத்தில் காணப்படும் பித்துக்கள் மூன்று. அவை உலக ஆசை பொதிந்த பாசப்பித்து; உயிர்கள் காதல் தொடர்ந்த பசுப்பித்து; பரப்பிரம்மத்தின்பால் பக்தி பழுத்த பதிப்பித்து எனவாம்.

முருகப் பெருமான் மீது கொண்ட பதிப்பித்து காரணமாக திருப்புகழ்ப் பாடல்களைப் பாடித் துதித்தும், மற்றவர்களுக்கு படிப்பித்தும், புதிய ஒலிப்பேழை, ஒலித்தகடுகளில் இழைப்பித்தும், புத்தகங்களாகப் பதிப்பித்தும் வலையப்பேட்டை ஸ்ரீ ரா. கிருஷ்ணன் ஆற்றிவரும் பணிகள் போற்றற்குரியன.

தற்போது திருப்புகழ்ப் பாடல்களில் 111ஐ எடுத்து உரையுடன் சிறப்புற வெளியிட்டுள்ளார். ஆஸ்தீக அன்பர்களும் சிறப்பாக முருகனடியார்களும் திருப்புகழ்ப் பதிப்பகமும், திருப்புகழ்ச் சங்கமமும் வெளியிடுகின்ற அத்தனைப் பொக்கிஷங்களையும் மொத்தமாகப் பயன்படுத்திக் கொள்வார்களாக!

சென்னை
**20.11.2002**

அன்புடன்
**வீ. முத்துக்குமர குருசாமி**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உ

முருகா சரணம்

# திருப்புகழ்-111 தல அகராதி


## விநாயகர் துதி

1. நினது திருவடி

## முதல் திருப்புகழ்

2. முத்தைத் தரு

## திருப்பரங்குன்றம்

3. கனகந்திரள்
4. உனைத்தினம்
5. கருவடைந்து

## திருச்செந்தூர்

6. முந்துதமிழ் மாலை
7. அந்தகன் வரும்
8. தொந்தி சரிய
9. வஞ்சங் கொண்

## திருவாவினன்குடி & பழநி

10. நாதவிந்து
11. போதகந்தரு
12. குரம்பைமல (சிவமலை)
13. புடவிக்கணி (பழநிச்சிவகிரி)
14. இரவியென (பழநி)
15. சுருதிமுடி (பழநி)
16. தலைவலிமருத் (பழநி)
17. அதலவிதல (பழநி)
18. மூலங்கிள (பழநி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy




**சுவாமிமலை (குருமலை)**

19. ஆனாத பிருதிவி
20. எந்தத் திகை
21. ஒருவரையும்
22. கறைபடும்

**குன்றுதோறுடல்**

23. பனியின்விந்து - கயிலைமலை
24. கறுத்த தலை - வடமலை
25. சரவணபவநிதி - வடமலை
26. ஏதுபுத்திஐயா - திருத்தணிகை
27. குருவிளனப் - திருத்தணிகை
28. கொந்துவார் - திருத்தணிகை
29. நிலையாத - திருத்தணிகை
30. அந்தோமன - திரிசிராப்பள்ளி
31. சீரானகோல - விராலிமலை
32. ஐந்துபூதமும் - விராலிமலை
33. பொன்றலைப் - திருச்செங்கோடு
34. கொடியமறலி - திருச்செங்கோடு
35. கோதி முடித்து - ஊதிமலை
36. பாட்டில் உரு - தீர்த்தமலை
37. அரிவையர்கள் - கநககிரி
38. உடுக்கத்துகில் - கதிர்காமம்

**சோலைமலை**

39. ஆசை நாலு
40. துடிகொள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



**காஞ்சிபுரம்**

41. கனகிரவுஞ்
42. கறையிலங்
43. கனிதரும்
44. செறிதரும் (கச்சி மேற்றளி)
45. புனமடந்தை (குமரகோட்டம்)
46. தலைவலையத்து (கவுரி திருக்கோட்டம்)

**திருவானைக்கா**

47. ஓலமறைகள்
48. குருதிபுலால்

**திருவண்ணாமலை**

49. குமரகுருபர
50. கருணைசிறிதுமில்
51. சினமுடுவல்
52. செயசெய அருணாத்ரி
53. தமரகுரங்களும்

**திருக்காளத்தி**

54. சரக்கேறித்தப்
55. பங்கயனார்

**சிதம்பரம் (கனகசபை; புலியூர்)**

56. குகனெ குருபர
57. வந்து வந்து
58. தியங்குஞ்சஞ்
59. அவகுணவிரகனை
60. வாதபித்தமொடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## இதரத் தலங்கள்

61. தாரணக்கதி - காசி
62. வதனசரோ - வெள்ளிகரம்
63. பொன்றாமன் - திருவாலங்காடு
64. அணிசெவ்வி - திருமுல்லைவாயில்
65. இகலவரு - திருமயிலை
66. சீதளவாரிஜ - சிறுவாபுரி
67. மனைமான் - மதுராந்தகம்
68. காணொணாதது - தேவனூர்
69. பலபலதத்துவ - திருவெண்ணெய்நல்லூர்
70. நிணமொடு - திருப்பாதிரிப்புலியூர்
71. சதுரத்தரை - திருவேட்களம்
72. சருவி இகழ்ந்து - சீகாழி
73. பூமாதுரவேணி - சீகாழி
74. மூலாதார - வேளூர்
75. மாலினால் - வேளூர்
76. ஏட்டின்விதி - திருக்கடவூர்
77. சோதிமந்திரம் - அம்பர்
78. பச்சையொண் - திருநள்ளாறு
79. தருவூரிசை - வழுவூர்
80. தலைநாளில் - வழுவூர்
81. இபமாந்தர் - திருவாஞ்சியம்
82. பாலோதேனோ - திருவாரூர்
83. புலவரை - சிக்கல்
84. சுருதியாய் - குடவாயில்
85. படியையள - திருவிடைமருதூர்
86. செனித்திடும் - கும்பகோணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



87. மலைமேனும் - சிவபுரம்

88. மூலமுண்டக - திருநல்லூர்

89. குருதிகிருமி - வயலூர்

90. இராக்கமுஞ் - திருப்பெருந்துறை

91. நித்தப்பிணி - கருவூர்

92. மனத்திரைந் - அவிநாசி

93. மதப்பட்ட - திருப்புக்கொளியூர்

94. அன்னமிசை - கன்னபுரம்

95. அலகில் - மதுரை

96. ஞானாவிபூ - மதுரை

97. வேதத்திற் - திருக்குற்றாலம்

98. கற்பகஞான - உத்தரகோசமங்கை

99. அமலகமல - இந்தம்பலம்

100. தொக்கை - அத்திக்கரை

**பொது**

101. அகரமுதலென

102. ஆனாத ஞான

103. நெடியவட

104. பகிரநினைஒரு

105. புகரில் சேவல

106. மாண்டார்எலும்

107. வேதவித்தக

108. போதநிர்க்குண

109. நாலிரண்டிதழாலே

110. நிருதரார்க்

111. கும்பகோணமொடு
(க்ஷேத்ரக்கோவை)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்புகழ் பெருமை - அருணகிரிநாதர் துதி

பாட இனிக்கும் பாடுங்கால்
பரிவிற் கேட்க மிக இனிக்கும்
நாடப் பொருளை நனி இனிக்கும்
நாதன் உருவம் உளத்தமைத்துக்
கூட இனிக்கும் எஞ்ஞான்றும்
குனிக்க இனிக்கும் மலநோயை
சாட இனிக்கும் **அருணகிரி** சாற்றும்
அருள்சேர் **திருப்புகழே**

*-வாகீசகலாநிதி. கி.வா. ஜகந்நாதய்யர்*

கேட்டாற் செவிக்கினிக்கும் கேள்வியொடு பண்கலந்த
பாட்டாச் சொலற்கினிக்கும் பாவொடுநா - மாட்டார்
எழுதஇரு கைக்கினிக்கும் எண்ணமகத் துக்கெப்
பொழுதும் **திருப்புகழ்**உன் போல்.

*-சாதுராம் சுவாமிகள்*

கந்தன் கருணைக்கடல் முகந்து
காதி மோதி வாதாடும்
மந்த மதியாம் அரவங்கள் மருண்டுள்
ஒடுங்க இடித்து மின்னிச்
சந்த விந்தைத் **திருப்புகழாம்**
தமிழ்மா மழையால் சிவபோகம்
தந்த தமிழ் முகில்எம் **அருணகிரி**
சரண கமலம் முடிக்கணிவாம்

*-மதுரகவி க.கி. ராமசாமி ஐயர்*

நெடியான் உகந்த மருகன் **திருப்புகழ்** நித்தமுமே
படியார் படித்துப் பரகதி பற்றப் பரிந்தளித்த
அடியான் **அருண கிரி**நாதன் அம்பொன் னடிமலர்க்கே
அடியார் எவரோ அவரேஎம் ஆவிக் கருந்துணையே

*-தணிகைமணி வ.சு.செங்கல்வராயபிள்ளை*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருவம் ஒரு நான்காகி உருவம் ஒரு
நான்காகி அவைஇரண்டும்
மருவிஉள உருவருவம் ஒன்றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கும் அப்பாலாய் உள்ள பொருள்
ஈதெனவே பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்த அருள் அருணகிரி
சேவடிப்போ துளத்தில் வைப்பாம்
-ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்

விருப்புடன் உபய சரண மென் மலரை
வேண்டுவார் வேண்டுவ தளிக்கும்
பொருப்புகள் தோறும் நின்றருள் ஒருவன்
புகழினை அகநெகப் புகன்று
கருப்புகுதாத கதிதனைக் காட்டும்
கலையுணர் புலவர்கள் திலகம்
திருப்புகழ் அருணகிரி எமதடிகள்
திருவடி குருவடி வாமே
-திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

உலகதனை ஒரு நொடியில் ஓர் கனிக்காய்
உலவிவந்த குமரன் கீர்த்தி
உலகதனிற் சீவர்களுக் குறுதுணை யாய்உதவி
யருள் உயர் மெய்ஞ்ஞான
உலகதனிற் சிவஞான பராபரையாள்தன்
காதிற் பொருந்தி மோன
உலகதனிற் ஞானொளிரும் விஞ்ஞானி
அருணகிரி பாதம் போற்றி
-திருப்புகழ்சாமி தா.ப. வேங்கடசுப்ரமணியன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உ

## விநாயகர் துதி

உம்முடைய திருவடி, வேல், மயில், சேவற்கொடி இவைகளை நினைக்கும் அறிவைப் பெறவேண்டி, நிறைய அமுது, முப்பழம், அப்பம், பால், தேன், முறுக்கு, கரும்பு, லட்டு, அரிசி, பருப்பு, அவல், எள், பொரி, இனிய வாழைப்பழ வகைகள், இளநீர் இவைகளை மன மகிழ்ச்சியுடன் தொடும் கரத்தையும் அசுரவெறி கொண்ட மகாகூர்மத்தின் வெறியை அடக்க, சமுத்திரத்தை உறிஞ்சிய ஒப்பற்ற துதிக்கையையும் உடைய யானைமுகத்து ஒற்றைக் கொம்பனாம் விநாயகரை வலம்வந்து, மலர்கொண்டு தோத்திரங்களால் துதித்தும், காதைப்பிடித்துக்கொண்டு தோப்பணம், குட்டு ஆகியவை செய்தும், தாமரை போன்ற அவரது அழகிய பாதங்களை அர்ச்சனை செய்வதை மறவேன்.

ஈக்கள் மொய்க்கும் இரத்தம், சதைகள், மாமிசக்குடல், மூளை ஆகிய இவை நிரம்பிய போர்க்களத்தில், மத்தளம், இடக்கை என்னும் வாத்யங்கள் ஒலிக்கவும், ஊது குழலுடன் உடுக்கைப்பறைகள் இடியென ஒத்து முழங்கவும் மேள ஓசைகள் எழவும், பேய்கள் கைப்பறை கொட்டவும், ரணபயிரவி கூத்தாடவும் எதிர்த்துவந்து அசுரர்களை அழித்தருளிய பெருமாளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உ

## விநாயகர் துதி

நினது திருவடி சத்திம யிற்கொடி
நினைவு கருதிடு புத்திகொ டுத்திட
நிறைய அமுதுசெய் முப்பழம் அப்பமு
நிகழ்பால்தேன்-
நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்
நிறவில் அரிசிப ருப்பவல் எட்பொரி
நிகரில் இனிகத லிக்கனி வர்க்கமும் இளநீரும்;

மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு
மகர சலநிதி வைத்தது திக்கர
வளரு கரிமுக ஒற்றைம ருப்பனை வலமாக-
மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச பரிபுர பொற்பத அர்ச்சனை மறவேனே;

தெனன தெனதென தெத்தென னப்பல
சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்
திரளும் உறுசதை பித்தநி ணக்குடல் செறிமூளை-
செரும உதரநி ரப்புசெ ருக்குடல்
நிரைய அரவநி றைத்தக ளத்திடை
திமித திமிதிமி மத்தளி டக்கைகள் செகசேசே;

எனவெ துகுதுகு துத்தென ஒத்துகள்
துடிகள் இடிமிக ஒத்துமு ழக்கிட
டிமுட டிமுடிமு டிட்டிம்எ னத்தவில் எழும்ஓசை-
இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்று நடித்திட
எதிரு நிசிசர ரைப்பெலி யிட்டருள் பெருமாளே. 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"தித்தித்தெய" என்ற தாளத்திற்கு ஏற்ப, சிலம்பணிந்த பாதத்துடன் பயிரவி திக்குகளில் சுழன்று ஆடவும், கழுகுடன் பேய்களும் ஆடவும், அஷ்டபயிரவர்கள் பவுரி நடனமாடவும், கொத்துப்பறை கொட்டவும், கிழக் கோட்டான்கள் வட்டமிட்டெழவும், அசுரரை வெட்டிப் பலியிட்டு கிரௌஞ்ச மலையைக்குத்தி போர் செய்ய வல்ல பெருமாளே!

முத்துப் போன்ற பற்கள் வரிசையுடன் விளங்கும் தேவசேனைக்கு இறைவனே! சக்திவேல் ஏந்திய சரவண! முத்திக்கு ஒருவித்தே! குருபரனே! என்று ஓதி நின்ற முக்கண் பரமனுக்கு வேதத்தில் முற்பட்டு நிற்கும் பிரணவத்தைக் கற்பித்துப் பிரம்மா, விஷ்ணு, முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோர் உமது திருவடியைப் போற்ற விரும்பும் பெருமாளே! அரக்கனின் பத்துத் தலைகள் சிதறும்படி அம்பை ஏவியும், மந்திரமலையை மத்தாக நட்டு கடலைக் கலக்கியும், பட்டப்பகலை தமது சக்கரத்தால் இரவாக்கியும் பக்தனுடைய (அருச்சுனனுடைய) தேரை நடத்திய பச்சை மேக வண்ணன் மெச்சும் பெருமாளே! அன்புவைத்து (என்னைக்) காத்தருளும் ஒரு நாளும் உண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## ✱ முதல் திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை! சத்திச் சரவண!
முத்திக்கொரு வித்துக் குருபர! எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்!
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே!

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக் கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே. 2

✱ *திருவண்ணாமலையில் முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்த முதல் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தூயவனும், முப்புரங்களையும் வெல்ல இன்பநிலையில் சிரித்து தீ வெளிப்படச் செய்த திறல் கொண்ட சிவபிரானின் புதல்வனே! வலிமையுடன் பறைகள் ஒலிக்க, அண்டங்கள் அதிர்ந்து நெரிந்து போகுமாறு வந்த சூரர்கள் மனத்தில் தீ எழவும், அவர்கள் உடலும் குடலும் கிழிபடவும், மயிலில் ஏறி வந்தருளிய பெரியோனே! சூரிய சந்திரர்கள் தடவிச் செல்லும் அளவுக்கு உயர்ந்துள்ள சோலைகள் நிறைந்த வளங்கள் பெருகிய பரங்கிரியில் அருளை வழங்கும் பெருமாளே!

(உக்கிரப் பெரும் வழுதி அவதாரத்தில்) பொன்மலையாம் மேருவை ஒளிவீசும் செண்டால் அடித்த வீரனே! மதம் மிகுதியால் புணர்வதும், கவளமாக உண்பதுமாகிய யானை (உருவம் கொண்ட கணபதி)யின் துணைவனாகப் பிறந்த முருகனே! பாம்பின் மீது துயில்கின்ற வரும், முன்பு கடலைக்கடைந்த பரமனும், மேகநிறப்புயல் வண்ணனுமாகிய திருமால் அன்புகொள்ளும் மருகனே! பலதுன்பங்களில் சிக்கிக் கலங்கிய சிறியனும், புலையனும், கொலையனுமாகிய நான் செய்த பாவம் எல்லாம் கழிய இன்று வந்தருள் புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்பரங்குன்றம்

கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில்வந்து தகன் தகன் என்றிடு
கதிர் மிஞ்சிய செண்டைஎ றிந்திடு கதியோனே!
கடமிஞ்சி அநந்தவி தம்புணர்
கவளந்தனை உண்டுவ ளர்ந்திடு
கரியின்துணை என்றுபி றந்திடு முருகோனே!

பனகந்துயில் கின்றதி றம்புனை
கடல்முன்பு கடைந்தப ரம்பரர்
படரும் புயல் என்றவர் அன்புகொள் மருகோனே!
பலதுன்பம்உ ழன்றுக லங்கிய
சிறியன்புலை யன்கொலை யன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே!

அனகன் பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட இன்புடன்
அழலுந்தந குந்திறல் கொண்டவர் புதல்வோனே!
அடல் வந்துமு ழங்கியி டும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்டநெ ரிந்திட வருசூரர்

மனமுந்தழல் சென்றிட அன்றவர்
உடலுங்குட லுங் கிழி கொண்டிட
மயில் வென்றனில் வந்தரு ளுங்கன
பெரியோனே!

மதியுங்கதி ருந்தட வும்படி
உயர்கின்றவ னங்கள்பொ ருந்திய
வளமொன்றுப **ரங்கிரி** வந்தருள் பெருமாளே! 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



போர்க்களத்தில் பேய்கள் கூத்தாடுவதால் மாமிசம் உடைந்து அந்த உடலினின்றும் சிதறும் மாமிசத்தைக் கழுகுகள் உண்ண அங்கு பரட்டை முடியையுடைய அசுரர்களோடு போர் புரிந்த வேலனே! பண்கள் நிறைந்த குயிலின் மொழி போன்ற வள்ளியின் முலை மீது அழுந்தும் நறுமண மிக்கப் புயங்களை உடையவனே! நால் வேத முநிவன் (பிரமன்) நிறைய பூக்களை விதிப்படி அர்ச்சிக்க, தேவர்களும் முநிவர்களும் தொழ மகிழ்பவனே! தேனைத் தெவிட்டுமளவுக்கு ஆசையுடன் உண்ணும் வண்டுகள் நிறைந்த பொழில்கள் விளங்கும் திருப்பரங்குன்றத்தில் விளங்கும் சரவண மூர்த்தியே!

தினந்தோறும் உன்னைத் தொழுவதும் இல்லை; உன்தன்மையினை உரைப்பதும் இல்லை; உன் திருவடிகளைப் பல மலர் கொண்டு பணிவதும் இல்லை; எந்தத் தவமும் செய்யவில்லை; உன்னுடைய அருள் அன்பர்கள் இருக்கும் இடத்தை அறிகிலன்; உன் மலையை விருப்பமுடன் வலம் வருவது இல்லை; உன் புகழை மகிழ்ச்சியுடன் துதிக்கவில்லை; எருமையின் மீது வரும் கரிய யமதூதர்கள் (என் மீது) கயிறை எறிந்து, கதையால் அடித்து போர் செய்யும் வேளையில் நான் கலக்கமுற்று துன்புறும்போது ஒரு கணத்தில் என் பயம் நீங்க மயில் முதுகினில் வருவாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்பரங்குன்றம்

உனைத்தி னந்தொழு திலன்உன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடுன் அடியிணை
உறப்ப ணிந்திலன் ஒருதவம் இலன்உன தருள்மாறா
உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும் வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன்
மலைபோலே

கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செயல் ஒழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தில் என்பய மறமயில் முதுகினில் வருவாயே

வினைத்த லந்தனில் அலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெய் உகுதசை கழுகுண
விரித்த குஞ்சியர் எனும்அவு ணரைஅமர் புரிவேலா!
மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை உடையோனே!

தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநிவரர்தொழ மகிழ்வோனே
தெனத்தெ னந்தன எனவரி அளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
**திருப்பரங்கிரி** தனில்உறை சரவண பெருமாளே. 4

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சூரியன், இந்திரன் இருவரும் (சுக்ரீவன், வாலி என்னும்) குரங்கு அரசர்களாகவும், பிரமன் கரடியினத்துத் தலைவனாம் சாம்புவானாகவும், நெடிய நீலன் அக்னியின் கூறாகவும், ருத்ரன் சிறந்த அனுமனாகவும், ஒப்பில்லாத தேவர்கள் யாவரும் இவ்வாறாக பூமியில் வந்து பிறக்க, தம்படைகளுக்கு (இவர்களைத்) தலைவராகக் கொண்டு அரக்கர் குலத்தை வென்ற அரிமுகுந்தன் மெச்சும் குணமிக்க மருகனே! பிரமனைத் தண்டித்தும், உலகத்தைப் படைத்தும் அருள் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

கருவளர்ந்து, பத்து மாதம் முற்றி, குழந்தை வடிவமாக வந்து தோன்றி, அக்குழந்தைக்கு முலைப்பால் ஊட்டி, அது அழுதும், அழகிய கைகளால் கொட்டியும், தவழ்ந்தும், நடமாடியும், அரைநாண் கட்டிய சதங்கை, காதணி, சுட்டி, தண்டை, முதலியன அணிந்து, இப்படியே வளர்ந்து வயது ஏறி, அழகிய பெண்களின் நட்பைப் பெற்று, பிணியில் உழன்று சுற்றித் திரிந்தது போதும்! உனது க்ருபையை என்று பெறுவேன்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்பரங்குன்றம்

கருவ டைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை வடிவாகிக்
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக்கி டந்து
கதறிஅங்கை கொட்டித்த வழ்ந்து நடமாடி

அரைவ டங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவை அணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி
அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணி உழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்தம் என்று பெறுவேனோ?

இரவி இந்த்ரன் வெற்றிக்கு ரங்கின்
அரச ரென்றும் ஒப்பற்ற உந்தி
இறைவன் எண்கி னக்கர்த்தன் என்றும் நெடுநீலன்
எரியதென்றும் ருத்ரற்சி றந்த
அநுமன் என்றும் ஒப்பற்ற அண்டர்
எவரும் இந்த வர்க்கத்தில் வந்து புனமேவ

அரிய தன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர் தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமு குந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே!
அயனை யும்பு டைத்துச்சி னந்து
உலக மும்ப டைத்துப்ப ரிந்து
அருள் பரங்கி ரிக்குட் சிறந்த பெருமாளே. 5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்பாலிக்கும் அழகிய வேத வேள்விக்குக் காவல் புரிபவனே! செந்தமிழ்ச் சொற்களால் ஆகிய பாமாலைகளை அணிபவனே! தேவர்களுக்கு உதவும் சேவற் கொடியோனே! தலைக்கு மேல் கைகூப்பித் தொழுவோர்களிடம் அன்புடையவனே! மலையை ஊடுருவிய வேலை உடையவனே! முழுதும் அழகிய குமரனே! எழில் மிகுந்த தேவசேனை விரும்பும் போகக்காரனே! குறமாது வள்ளியுடன் பொழுது போக்குபவனே! அடியார்கள் மீது அன்பு கொண்டவனே! பெரிய யுத்தத்தில் பகைவரை அழிப்பவனே! பெரும்போரில் சூரனை சூறையாடியவனே! செந்தில் நகரில் வாழும் ஆட்சித்திறமை மிக்கப் பெருமாளே!

முற்பட்டதான தமிழ் மொழியில் பாமாலைகளை பலகோடிக் கணக்கான சந்தப் பாவகையில் நீண்டனவாய் பாடிப்பாடியும், அழியும் தன்மை படைத்த மக்கள் தமது வீட்டுவாயிலைத் தேடித் தேடியும் திரியாமல், முற்பிறவியில் வந்த வினை (என்னை) தொடராமலும், போக மங்கையர்களின் ஆசை ஓடிப் போகவும், (வாழ்வில்) முந்த வேண்டும் என்னும் அடிமையாகிய என்னை ஆட்கொண்டு (என்) எதிரில், தாளத்திற்கு ஏற்ப நடனம் செய்கின்ற சிறியகால்களையும், அகன்ற தோகையையும், தூய்மையான நன்மை புரியும் பார்வையையும், தீரம் மிக்கதும், செம்பொன் நிறத்தையும் உடைய மயிலின் மீது எப்போது வருவாய்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருச்செந்தூர்

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி உழலாதே-
முந்தைவினை யேவராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை ஆளத் தானு முனைமீதே;

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்-
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்க அநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லே எப்போது வருவாயே!

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ் சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே-
அஞ்சலி செய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம் வெகு வான ரூபக் கார எழிலான;

சிந்துரமின் மேவு போகக் கார
விந்தை குற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான-
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
**செந்தினகர்** வாழும் ஆண்மைக் கார பெருமாளே. 6

*திருவுருவ தரிசனம் பெற இத்திருப்புகழை ஓதுக*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பூங்கொத்துக்கள் மலர்ந்திருக்கும் திருவடிகளே சரணம் என்று கும்பிட்ட தேவேந்திரன் தனது ஊரைப் பெறவும், தேவயானை உமது புயங்களில் அணையவும், அரக்கர்கள் அழியவும், கிரௌஞ்சமலை பொடிபடவும், காலில் அழகிய திருவரைக் கிணிகிணி "கிணின் கிணின்" என்று ஒலிக்கவும், குண்டலங்கள் அசைவதால் ஒளிவீசவும், சதங்கைகள் சிறிய ஒலி செய்ய, மணிகள் நிறைந்த தண்டைகள் "கலின்கலின்" என்று ஒலிக்கவும், அழகான தாய் சங்கரி மனம் குழைந்து உருகி (உன்னை) அழைக்க முத்தம்தர தளர்நடையிட்டு வரும் குழந்தையே! உலகினர் தொழுதேத்தும் சரவணப் பெருமாளே!

யமன் வருகின்ற நாள் விலகிஓட, எப்போதும் பெண்களிடம் போய் அவர்களின் அன்புக்கு உருகும் நட்பு விலக, முக்குணங்களும் அழிய, இரவு பகல் என்ற நிலைகளையும் ஒழித்து, ஐம்பொறிகளால் வரும் மறப்பு, நினைப்பு எனும் துன்பங்களையும் அறுத்து, உன் தாமரைத் திருவடிகளின் பெருமைகளை கவிகளில் பாடி, திருச்செந்திலைக் கருதி உணர்ந்து, அதனால் ஞானம் பிறக்கவும், கந்தப் பெருமானாகிய உன்னை அறிந்து, அந்த அறிவின் வழியே போய் உணரும் தெளிவு ஏற்பட, அடங்காத மனமும் நெகிழ்ந்து, உரையும் ஒழிந்து, என் செயலும் அடியோடு அற்றுப்போக, உண்மை அறிவுவர என்று உன் தரிசனம் காணப் பெறுவேனோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருச்செந்தூர்

அந்தகன்வ ருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள-
அந்திபகல் என்றிரண் டையும் ஒழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்;

**செந்திலை** உணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை அறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத-
சிந்தையும் அவிழ்ந்தவிழ்ந் துரையொழித்து
என்செயல் அழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்று நின் தெரிசனைப் படுவேனோ;

கொந்தவிழ் சரண்சரண் சரண்எனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்-
குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணின்எனக்
குண்டலம் அசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்;

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலின்எனத் திருவான-
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடை
சந்ததிச கந்தொழுஞ் சரவணப் பெருமாளே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



என் அப்பனே வருக! ரகு நாயகனே வருக! மைந்தனே வருக! மகனே இங்கு வருக! என் கண்ணே வருக! என் ஆருயிரே வருக! அழகனே வருக! அரசே வருக! பால் உண்ண வருக! மலர் சூடிட வருக! என்று அன்புடன் கௌசலை கூற வரும் மாயன் (திருமால்) மகிழும் மருகனே! குறவர் குலக்கொடி வள்ளி அணையும் அழகனே! தேவர்சிறை நீக்கி அசுரர்களை வேரோடு மடியச் செய்த தீரனே! நிலவு, பாம்பு, கங்கை முதலியவைகளைச் சூடிய பரமனது குமரனே! அலைகள் கரைகளில் மோதும் செந்தில் நகரில் இனிதே விளங்கும் பெருமாளே!

வயிறு சரிய, முடி வெளுக்க, பற்கள் அசைவு பெற, முதுகு வளைய, உதடு தொங்க, ஒருகையில் தடி பிடித்து, "பெருங்கிழவன் இவன்" என்று பெண்கள் பரிகாசம் செய்ய, இருமல் ஒலிக்க, அதனால் சொற்கள் குழற, கண்கள் ஒளி மங்கி, குருடனாகி, காது செவிடாகி, வந்த நோய்களும் அதற்காக வந்துபோகும் வயித்தியனும், உடல் வேதனையினால் அவதியுற, பிள்ளைகள் (தகப்பன்) சொத்து எவ்வளவு? கடன் எவ்வளவு? என்று விடாமல் கேட்பதால் துன்பம் அதிகரித்து, மனைவி அழுது விழ, யமதூதர்கள் வந்து போராடவும், மலம் ஒழுக உயிர் ஒடுங்கிப்போகும் போது (நீ) விரைவில் மயில்மேல் வரவேணும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருச்செந்தூர்

தொந்தி சரிய மயிரே வெளிரநிரை
தந்தம் அசைய முதுகே வளைய இதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடி-
தொண்டு கிழவன் இவன் ஆர்என இருமல்
கிண்கிண் எனமுன் உரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி;
வந்த பிணியும் அதிலே மிடையும் ஒரு
பண்டி தனுமெ யுறுவே தனையும் இள
மைந்தர் உடைமை கடனே தெனமுடுக துயர்மேவி-
மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகஉயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்;
எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர் வருக அபிராம-
இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவர்இள
வஞ்சி மருவும் அழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா-
திங்க ளரவு நதிசூடிய பரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
**செந்திநகரில்** இனிதே மருவிவளர் பெருமாளே. 8

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வஞ்ச எண்ணம் கொண்டவனான ராவணன், பந்து போல பறக்கும் குதிரை, தேர், யானை, அநேக சேனை இவைகளுடன் வந்து, நாள் முழுவதும் வீண் பேச்சுக்கள் பேசி சண்டை செய்தபோது, குரங்குச் சேனைகள் நெருப்புப் போலக் கோபமடைந்து மலைகளையும், கரடுமுரடான மரங்களையும் பிடுங்கி வீசி, மலைகளினால் நொறுக்கி, தலை, உடல், கைகள் இவைகளை சிதற அடித்து, அரக்கர் குலம் முழுவதையும் யமனது தென்திசைக்கு அனுப்ப, எமதூதர்கள் அவர்களைத் தள்ளிக் கொண்டு போக, போர்க்களத்தில் மாமிசத்தை உண்டும், பேய்கள் குதித்துக் கூத்தாடவும் உயர்ந்த அம்புகளைக் கொண்டு (அரக்கர்களை) வென்ற மாதவன் (திருமாலின்) மருகனே! சிறியேனுடைய அறிவு மிகக் கொஞ்சம்! உன்னிடம் அடைக்கலம், அடைக்கலம்! துரையே! அருள்தந்து எப்போது இன்பம் தரும் மோட்ச வீட்டைத் தருவாய்! சங்கு, தாமரை, மீன்கள் நிறைந்த குளங்கள் பல இடங்களிலும் இருக்கும் மகா பரிசுத்தம் தங்கும் செந்திலில் வாழும் ஒப்பற்ற பெருமாளே! (வீடது தருவாயே).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருச்செந்தூர்

வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பந்தென் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வெகுசேனை-
வந்தம்பும் பொங்கிய தாகள
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் பும்பல பேசியும் எதிரேகை;
மிஞ்சென்றுஞ் சண்டை செய் போதுகு
ரங்குந் துஞ் சுங்கனல் போலவே
குண்டுங்குன் றுங்கர டார்மர மதும் வீசி-
மிண்டுந்துங் கங்களி னாலெத
கர்ந்தங்கங் கங்கர மார்பொடு
மின்சந்துஞ் சிந்தநி சாசரர் வகைசேர;
வுஞ்சண்டன் தென்திசை நாடிவி
ழுந்தங்குஞ் சென்றெம தூதர்க
ளுந்துந்துந் தென்றிட வேதசை நிணமூளை-
உண்டுங்கண் டுஞ்சில கூளிகள்
டிண்டிண்டென் றுங்குதி போடவு
யர்ந்தம்புங் கொண்டுவெல் மாதவன் மருகோனே;
தஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சம் கொஞ் சந்துரை யேஅருள்
தந்தென் றின் பந்தரு வீடது தருவாயே-
சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுநி
தந்தங்குஞ் **செந்திலில்** வாழ்வுயர் பெருமாளே. 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஏழு பூமியில் உள்ளவர்களும் புகழும் காவேரி நதியால் வளம் பெருக்கிச் செழிப்புறும் சோழ மண்டலத்தில் உள்ளதும், ஈதல், கோலாகல பூஜை, ஓதல், நல்லகுணம், ஆசாரம், நீதி, இரக்கம், குருவின் அழகான பாதசேவை ஆகியவைகளைக் கொண்டதுமான மிக அழகான ராஜகம்பீரம் என்ற நாட்டின் நாயகனாகிய வயலூர்ப் பெருமானே! திருவாரூர் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் நட்புகொண்டு அவருடன் முன்நாளில் அற்புதமான குதிரைமீதேறி கயிலாயத்திற்குச் சென்று "திருக்கயிலாய ஞானஉலா" என்னும் நூலை ஆசுகவியாகப் பாடிய சேரமான் பெருமானுக்கு உரிய கொங்கு மண்டலத்தில் உள்ள வைகாவூர் என்ற நாட்டுப் பிரிவைச் சேர்ந்த திருவாவினன் குடி என்னும் தலத்தில் வாழும் தேவர்கள் பெருமாளே!

ஒலி தத்துவமான நாதத்திற்கும் ஒளி தத்துவமான விந்துவிற்கும் ஞானமான கலைக்கும் ஆதிகாரணரே! (நாதம் = சேவல், விந்து = மயில், ஞானம் = வேல்) உம்மை வணங்குகிறேன்; வேதங்கள், மந்திரங்கள் வடிவாய் உள்ளவனே! ஞானபண்டித சுவாமியே! பலகோடி திருநாமங்களுடைய சிவனின் குமாரனே! போகத்தை அளிக்கும் பராசக்தியின் பாலனே! பாம்பை அடக்கிக் காலில் கொண்டுள்ள மயில்வாகனனே! சூரர்களை தண்டித்த விநோதனே! இசை ஒலிக்கும் கிண்கிணியைப் பாதத்தில் அணிந்தவனே! தீரனே! வீரனே! மலைகளுக்கு அரசனே! மங்களமான தீப ஒளியே! தூய்மையான பரவெளியில் விளையாடுபவனே! தேவயானையைப் பக்கத்தில் கொண்டவனே! உம்மை வணங்குகின்றேன்! உம்மை வணங்குகின்றேன்! திருவருளைத் தந்தருள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவாவினன்குடி

* நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி-
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்;
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ-
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்;
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லும்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவாத-
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா;
ஆத ரம்பயில் ஆருரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முன்நாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி-
ஆதி அந்தஉ லாஆசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்நாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள்
பெருமாளே. 10

* அர்ச்சனைத் திருப்புகழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கூரிய வேலாயுதத்தால் சூரனாதியர்களை அழித்தவனே! தேவர்களை வானுலகில் மீண்டும் குடியேற அருளியவனே! சந்திரனை அணிந்தவர்; சூலம் ஏந்திய சங்கரர்; இசைப்ரியர்; ஒளிநிறைந்த புயங்களைக் கொண்டவர்; கயிலாயர் ஆகிய ஆதிசங்கரர் இடப்பாகத்தில் விளங்கும் உமையம்மை; மனோன்மணித்தாய்; நாரணி ஆகிய அபிராமி அம்மை ஆசையுடன் சீராட்ட அழகான திருவாவினன்குடியில் வாழும் தேவர்கள் பெருமாளே!

ஞான உபதேசத் தலைவனே! உம்மை வணங்குகின்றேன்; நீதி நிறைந்த தேவனே! பூலோகத்தை ஆள்பவனே! ஆக்கல், காத்தல், கரத்தல் முதலிய பணிகளைச் செய்பவனே! வேடர்குலக் கொடி வள்ளியிடம் ஆசைகொள்பவனே! பிரமன் போற்றுகின்ற சுவாமியே! உம்மை வணங்குகின்றேன்; வேத மந்திர ரூபனே! ஞானபண்டித நாதனே! வீரக்கழல் அணிந்த திருப்பாதனே! உம்மை வணங்குகின்றேன்; அழகான திருமேனி கொண்ட பெருமானே! தேவர் குலக்கொடி தேவசேனை நாயகனே! வெற்றி கொண்ட விசாகனே! உம்மை வணங்குகின்றேன்! உம்மை வணங்குகின்றேன்! திருவருளைத் தந்தருள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவாவினன்குடி

* போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை ஆள்வாய் நமோநம பணியாவும்-
பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் ஸாமீ நமோநம அரிதான;
வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டை கொள் தாளா நமோநம அழகான-
மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்;
பாத கஞ்செறி சூராதி மாளவெ
கூர்மை கொண்டயி லாலே பொராடியெ
பார அண்டர்கள் வானாடு சேர்தர அருள்வோனே-
பாதி சந்திர னே சூடும் வேணியர்
சூல சங்கர னார்கீத நாயகர்
பார திண்புய மேசேரு சோதியர் கயிலாயர்;
ஆதி சங்கர னார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மநோமணி
ஆயிசுந்தரி தாயான நாரணி அபிராமி-
ஆவல் கொண்டு விறாலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில் மீறிய
**ஆவி னன்குடி** வாழ்வான தேவர்கள் பெருமாளே. 11

* *அர்ச்சனைத் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இலுப்பை, மகிழமரம் ஆகியவைகளோடு கூடிய பலவித சோலைகளிலும் உள்ள குயிலும், வண்டும் இசை ஒலி எழுப்பிட அதற்கு மயில்கள் நடனமிடுகின்ற ஒப்பற்ற புலியூர் வளநாட்டுக்குரியவனே! இருண்ட கிரௌஞ்சமலை இடிபடவும், கடல்தீப்பற்றிக்கொள்ள, யானைகள் பல திசைகளிலும் பிளிற, அசுரர்களோடு யானை குதிரைப் படைகளையும் யமன் ஊருக்கு அனுப்பிய கந்தவேளே! பிரமன், முனிவர்கள், தேவர்கள், அரம்பையர் அனைவரும் ஹர! ஹர! சிவ! சிவ! எனப் போற்ற நடனமிடும் அழகிய சிவபிரானுக்குக் குருநாதனே! பவளம்போன்ற ஒளியையும், சிரித்த முகமும் கொண்ட குறமகள் வள்ளியின் இணைமுலைகளை அணைந்த வெற்றிக் குகனே! சிவமலை மருவிய பெருமாளே.

கூடுபோன்ற உடல், அதில் மலம், சலம், எலும்பு, சதை, ஈரல், குடல், மயிர், ரத்தம் இவைகளுடன் பல ஆபாசங்கள் குடி புகுந்துள்ள கொடுமையாளர்கள், அகம்பாவம் கொண்டு ஒருவழியிலும் சேர்ந்து போகாதவர்கள், குற்றம், குரங்குசேட்டை, அறிவில்லாதவர், நெறியில்லாதவர் இப்படிப்பட்ட மிருக குணத்துடன் விஷத்தன்மையுடையவர்களோடு உறவு கொண்டவனை, நரகத்துக்குச் செல்ல வேண்டியவனை, குதிரை போல் நெறிகெட்டு ஓடும் குணம் கொண்டுள்ளவனை, வறியவனை, உடல் ஆசை கொண்டவனை, ஆட்கொள்ள சிவஒளியை எனது மனதினில் அழுந்த உபதேசிக்க, மயிலில் ஏறிவரும் அழகிய திருமுக ஒளியையும், குளிர்ச்சியான கண்களையும், இணையற்ற திருவடிகளையும் அழகிய சரவணனே! நான் மறவேன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சிவமலை (பழநி)

குரம்பை மலசலம் வழுவளு நிணமொடு
எலும்பு அணிசரி தசையிரல் குடல்நெதி
குலைந்த செயிர்மயிர் குருதியொ டிவைபல கசுமாலக்-
குடின்பு குதுமவர் அவர்கடு கொடுமையர்
இடும்பர் ஒருவழி இணையிலர் கசடர்கள்
குரங்கர் அறிவிலர் நெறியிலர் மிருகணை விறலான;
சரம்ப ருறவனை நரகனை துரகனை
இரங்கு கலியனை பரிவுறு சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமொடு மயிலேறித்-
தழைந்த சிவசுடர் தனைஎன மனதினில்
அழுந்த உரைசெய வருமுக நகைஒளி
தழைந்த நயனமும் இருமலர் சரணமும் மறவேனே;
இரும்பை வகுளமொ டியைபல முகில்பொழில்
உறைந்த குயில்அளி ஒலிபர விடமயில்
இசைந்து நடமிடும் இணையிலி புலிநகர் வளநாடா-
இருண்ட குவடிடி பொடிபட வெகுமுக
டெரிந்து மகர மொ டிசைகரி குமுறுக
இரைந்த அசுரரொ டிபபரி யமபுரம் விடும்வேளே;
சிரம்பொன் அயனொடு முநிவர்கள் அமரர்கள்
அரம்பை மகளிரொ டரகர சிவசிவ
செயம்பு வெனநட மிடுபதம் அழகியர் குருநாதா-
செழும்ப வளஒளி நகைமுக மதிநகு
சிறந்த குறமகள் இணைமுலை புதைபட
செயங்கொ டணைகுக **சிவமலை** மருவிய
பெருமாளே. 12

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


பூமியின் ஆடையைப் போன்று எட்டுத் திக்கிலும் பரந்துள்ள கடலைக் குடித்த அகத்தியமுநி, எட்டுக் கண்களையுடையவரும், நூறு இதழ் தாமரையில் இருக்கும் நான்கு வேத பிரமன், திரிபுரங்களை புன்னகையால் அழித்த அற்புதமான அரகர பரமசிவ மூர்த்தி ஆகியோர் தமது சித்தம் தெளிவுறும் வகையில் அவர்களது அழகிய செவிகளில் பிரணவ ரகசியப் பொருளை உரைத்த குழந்தை குருநாதனே! எதிர்த்த அசுரர்கள் படைகளை முழுதும் அழித்தும், மலைகள் பொடிபட்டு உதிரவும், அண்டச்சுவர்கள் அதிரவும், அதன் உச்சி கிழிந்தும், ஆகாயவெளியெலாம் கிடுகிடு என்று சப்தம் செய்ய சண்டை செய்து, கையிலுள்ள வேலானது பாய்ந்ததால் ரத்த நீர் ஏழுகடலைவிட மிஞ்சும்படி ஓட, குதிரையில் வந்தது போன்று மயிலில் வந்த விந்தைக்குமரனே! செம்பொற்கிரியாம் மேரு மலையை நீ வலம் வர, கணபதிக்குச் சிவபிரான் பழத்தைத் தந்தமையால் பரமன் வெட்கமடைய கோபத்தால் தனக்குக் கனியைக் கொடுக்கவில்லையே என்று நீ செந்திலிலும், பழநிச் சிவகிரியிலும் உறைந்து அருள்பாலிக்கிறாய் கந்தப் பெருமாளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பழநிச்சிவகிரி

புடவிக் கணிதுகில் எனவளர் அந்தக்
கடல்எட் டையுமற குடிமுநி எண்கட்
புநிதச் சததள நிலைகொள்ச யம்புச் சதுர்வேதன்-
புரமட் டெரிஎழ விழிகனல் சிந்திக்
கடினத் தொடுசில சிறுநகை கொண்டற்
புதகர்த் தரகர பரசிவன் இந்தத் தனிமூவர்
இடசித் தமுநிறை தெளிவுற வும்பொற்
செவியுட் பிரணவ ரகசிய மன்புற்
றிடவுற் பனமொழி உரைசெய் குழந்தைக் குருநாதா
எதிருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
கிடம்வைத் திடஅவர் குலமுழு தும்பட்
டிடவுக் கிரமொடு வெகுளிகள் பொங்கக்கிரியாவும்;
பொடிபட் டுதிரவும் விரிவுறு மண்டச்
சுவர்விட் டதிரவு முகடுகி ழிந்தப்
புறமப் பரவெளி கிடுகிடெ னுஞ்சத் தமுமாகப்-
பொருதுக் கையிலுள அயில்நிண முண்கக்
குருதிப் புனலெழு கடலினு மிஞ்சப்
புரவிக் கனமயில் நடவிடும் விந்தைக் குமரேசா;
படியிற் பெருமித தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரஅரன் அந்தப்
பலனைக் கரிமுகன் வசமரு ளும்பொற் பதனாலே-
பரன்வெட் கிடவுள மிகவும்வெ குண்டக்
கனியைத் தரவிலை எனஅருள் செந்திற்
**பழநிச் சிவகிரி** தனில் உறை கந்தப் பெருமாளே. 13

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பசுக்கூட்டங்கள் மலைநிழலிலே வரவும், குளிர்ச்சி தரும் மருத மரத்துடன் மோத வந்த வண்டியை உதைத்து, மாயமாய் வந்த மழையை நிலைகுலையும் படிச்செய்ய கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தத் தாமரை திருக்கரங்களையுடைய கண்ணனின் மருகனே! நிர்மலி, முக்கண்ணி, குமரி, கவுரி, பயிரவி, திரிபுவனியாம் பர்வத வர்த்தனியின் பாலனே! கடல், மலை, அசுரர் கூட்டம் அனைத்தையும் தவிடுபொடியாகச் செய்து, தேவர்கள் துயர் நீங்க வேலேவி போர் செய்த மயில்வீரனே! நான்கு வேதங்களிலும் வல்லவர்களுக்கு அணிகலனாயிருப்பனே! கற்பூரம், கஸ்தூரி கலவைசாந்தணிந்த குறமகள் மகிழும் லீலா விநோதனே! மதுரம் நிறைந்த தேவாரத் தமிழ்ப் பாமாலையைத் தந்தவனே! பழநியில் கோலகலமாக விளங்கும் தேவர் பெருமாளே!

சூரியன், வடவாக்னி போன்றும், ஆலகால விஷம் இது என்றும் உருவம் கொண்டு சந்திரனும் ஆகாயத்தில் வர, காமன் தமது பாணங்களை செலுத்த, குயில் கூவவும், ஏழு கடலின் முரச வாத்யம், புல்லாங்குழல், மாடுகளின் மணி ஓசை இவையெல்லாம் குறுகி இருகாதுகளிலும் நாராசமாய் ஒலிக்க, இந்தக் காம வேதனை பாரத்தை உணராத ஊரார் வசைச் சொற்களைப் பேசவும், ஹர ஹர! இந்தப் பெண் படுகின்ற பாடு மிகவும் மிகவும் வேதனை; மயக்கத்தாலும், ஊரார் பேச்சாலும் அமுதமும் மயிலும் போன்ற இந்தப் பெண் மிகவும் மெலிந்து போனாள்; திக்கற்ற இவளது தலைவிதி இப்படி இருந்தாலும் உன்னை விட்டு விலக மாட்டாள்; இவளை அடிமை கொள்வது உனது பாரம்; இந்தத் துன்பங்களை பொறுக்கமுடியாத தன்னந்தனிய பெண்ணான இவளை அணைய, இனிய ஓகார உருவமுள்ள மயிலில் வந்தருளுக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பழநி

★ இரவினன வடவைஎன ஆலால விடமதென
உருவுகொடு ககனமிசை மீதேகி மதியும்வர
இரதிபதி கணைகள்ஒரு நாலேவ விருதுகுயில் அதுகூவ-
எழுகடலின் முரசின்இசை வேயோசை விடையின்மணி
இசைகுறுகி இருசெவியின் நாராசம் உறுவதென
இகல்புரிய மதனகுரு ஓராத அனையர்கொடு வசைபேச;
அரஹரென வநிதைபடு பாடோத அரிதரிது
அமுதமயி லதுகருதி யாரோடும் இகல்புரிவள்
அவசமுற அவசமுற ஆரோமல் தரவுமிக மெலிவானாள்-
அகுதி இவள் தலையில் விதி யானாலும் விலகரிது
அடிமை கொள உனதுபரம் ஆறாதஒரு தனிமை
அவளை அணை தரஇனிதின் ஓகார பரியின்மிசை
வருவாயே;
நிரைபரவி வர வரையுள் ஓர்சீத மருதினொடு
பொருசகடு உதையதுசெய் தாமாய மழைசொரிதல்
நிலைகுலைய மலைகுடைய தாவே கொள் கரகமலன்
மருகோனே-
நிருமலிய திரிநயனி வாள்வீச வருகுமரி
கவுரிபயி ரவிஅரவ பூணாரி திரிபுவனி
நிபுடமலை அரசனருள் வாழ்வான புரணஉமை
அருள்பாலா;
பரவைகிரி அசுரர்திரள் மாசேனை தவிடுபொடி
படஅமரர் துயரகல வேலேவி அமர்பொருத
பதுமகர தலமுருக நால்வேத கரர்அணிக மயில்வீரா-
பளிதம்ருக மதகளப சேறார வளருமுலை
வநிதைகுற மகள் மகிழும் லீலாவி தரமதுர
பநுவல் தரு **பழநி**வரு கோலாக லவஅமரர் பெருமாளே.
14

★ *அகப்பொருள் (நற்றாயிரங்கல்)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஒரே பரம்பொருளை விரித்துரைக்கும் ஆறு சமயங்களுக்கும் வேதங்களின் அடி, முடி, நடுவுமாகி அண்டமாகிய முட்டையினின்றும் வெளிப்பட்டு உயிர், உடல், உணர்வு என்று வகைப்பட்டு எங்கும் தோற்றம் கொண்டுள்ளவனே! இன்ப ஊற்றாகி புதிய அமுத போக சுகத்தைத் தருகின்ற அமலாநந்த சக்திவேலாயுதனே! அறிவு உருவமான பிரணவத்திற்குத் தலைமைப் பொருளாகவுள்ள குருநாதனே! சூரியஒளி வீசும் பாதங்களில் கிண்கிணி அசைய, அண்டங்களில் நடனம் செய்கின்ற பெருமை மிக்கத் திருவடிகளை உடையவனே! செருக்கும் உயர்ச்சியும் வெற்றியும் கொண்டுள்ள மயிலில்வரும் திறலோனே! பணிகின்ற அடியார்கள் உள்ளத்தில் மெய்ப்பொருளாகக் கருதி வணங்கும் சரவணபவா என்னும் ஆறெழுத்துக்கள் பேரொளியாக வளர்கின்ற பழநி மலை மேல் நிற்கும் சுப்ரமண்யா! தேவர் பெருமாளே!

வேத முடிவாய், மோன நிலையைக் காட்டும் அறிவுமயமான சிவ சமய வடிவாய் உள்ள இரண்டற்ற பரஞ்சுடர் ஒளியாய் விளங்கும் களங்கமற்ற ஒப்பற்ற வாழ்வே! யோக நெறியில் உள்ள பெரியோர்களின் உள்ளத் தாமரையில் உண்டாகும் மெய்ஞ்ஞான சுகமதாய், சோதியாய், பேரின்ப நிலையாயுள்ள திருவடிகளைச் சேர உணராமல், கருவில் தங்கியுள்ள சுக்கிலத்தோடு வாயு சேர்க்கையால் வந்த மூன்று குணங்களின் வேறுபட்ட நிலையும், வஞ்சகமும், சூதும் மூடி உடலில் வினைகள் கலகமிட, குப்பை போல மாசுபட்ட இவ்வாழ்வை நிஜம் என்று திரிபவனும், மாயமான குகையாம் இவ்வுடலை நிலையான தென்று எண்ணும் நாயாகிய இந்த மூடனை ஆட்கொண்டு அருள் தருவாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பழநி

சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுதல்
ஒருவாழ்வே-
துரியநிலை யேகண்ட முத்தரித யாகமலம்
அதனில் விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅடைய உணராதே;
கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதஅரி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே-
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜம்
எனவுழலும் மாயஞ்செ னித்தகுகை யேஉறுதி
கருதசுழ மாம்இந்த மட்டைதனை யாள உன
தருள்தாராய்;
ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகிஉயிர்
உடலுணர்வ தாயெங்கும் உற்பனம தாகஅமர்
உளவோனே-
உததரிச மாம்இன்ப புத்தமிர்த போகசுகம்
உதவும்அம லாநந்த சத்திகர மேவுணர
உருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா;
பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதுங்க வெற்றிமயி லேறும் ஒரு
திறலோனே-
பணியும்அடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவொன்று வற்கரமு மாகிவளர்
**பழநிமலை** மேல்நின்ற சுப்ரமணி யாஅமரர்
பெருமாளே. 15

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பெருங்கடலை அடைத்து விகாரமான ராவணனுடைய மணிமுடிகளை அறுத்து உயிருக்கு ஒப்பான சீதாதேவியை அழைத்துக் கொண்ட புஜவலி மிக்க மாயவனை மாமன் என அழைக்கும் மருகனே! அருகம்புல்லை முடியில் அணிந்தவன், உயிர்க்கு ஆதாரமானவன், மான் மழு ஏந்தியவன்! மகா காளி வெட்கமடைய சபையில் நடித்தவன்! ஆகிய சிவபிரானைத் தந்தையே என அழைக்க வந்தவனே! கலை வல்லவர்கள் ஓதும் நாவில் உறைகின்ற திருவடிகளை உடைய வேலாயுதனே! பரண் மீதிருந்த குறப்பெண்ணை சேர்வதற்கு ஆசைகொண்ட மணாளனே! தாமரை மலரும் வயலும் பாக்குமரத்தின் வரால் மீன்கள் துயிலும்படி நீர் வளம் உடைய ஆறு காவேரியாம் சண்முகநதி சூழ விளங்கும் பழநியில் கற்பூர மணம்கமழ விளங்கும் பெருமாளே!

தலைவலி, காமாலை, ரத்தசோகை, சுரம், கண்ணோய், வயிற்றுவலி, காசம், நீர் சம்பந்தமான நோய்கள், கொடிய விஷ நோய்கள், விகாரமான நோய்கள் ஆகியவை என்னை அணுகாமல், அதனை நீங்குவதற்கு வழி யாது என்று அதற்கான பேர்களிடம் கேட்க சிலர் காது கேளாது இருப்பர்; சிலர் வயதானால் இப்படித்தான் என்பர்; என்ன கொடுப்பீர்? என்றெல்லாம் பிறர் கூறும்படியான விதியை என் தலையில் எழுதாதபடி, நல்ல மணமுள்ள மலர்களை எடுத்து ஆபரணங்களைப் போல தொடுத்து, உனது திருவடியில் சூட விரும்பும் தவமுநிவர்களின் திருவடிகளை விருப்பமுடன் உள்ளத்தில் தரித்து ஆய்ந்த அறிவுடன் பாடி, உன்னை வழிபடுவதற்கு என் மீது அன்பு கூர்ந்து திருவருளை வழங்க மயில்மீது வந்தருள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பழநி

தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம்வெகு
சலமிகு விஷப்பாக மாயாவி காரபிணி அணுகாதே-
தலமிசை யதற்கான பேரோடு கூறியிது
பரிகரி எனக்காது கேளாது போலுமவர்
சரியும்வய துக்கேது தாரீரசொ லீரஎனவும் விதியாதே;
உலைவறவி ருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை எடுத்தேதொ டாமாலி காபரணம்
உனதடியி னிற்சூட வேநாடு மாதவர்கள் இருபாதம்-
உளமது தரித்தேவி னாவோடு பாடியருள்
வழிபட எனக்கேத யாவோடு தாளுதவ
உரகம தெடுத்தாடு மேகார மீதின்மிசை வரவேணும்;
அலைகடல் அடைத்தேம காகோர ராவணனை
மணிமுடி துணித்தாவி யேயான ஜானகியை
அடலுடன் அழைத்தேகொள் மாயோனை மாமன்எனு
மருகோனே-
அறுகினை முடித்தோனை ஆதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதை யேஎனவும்
வருவோனே;
பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
இருசரண வித்தார வேலாயு தாஉயர் செய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவ மோகமுறு
மணவாளா-
பதுமவய லிற்பூக மீதேவ ரால்கள் துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழநிவரு கற்பூர கோலாக லாஅமரர் பெருமாளே. 16

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"தத்த தத்தத்த தந்தத்த தந்தத்த.......... தந்தகுகு திந்திதோதி"......டிண்டிட்டி டிண்டிடிமி..... என்று தாளம் பறை, திமிலை, உடுக்கை, தம்பட்டம் இவையெல்லாம் பேரொலி செய்ய, அசுரர்கள் நடுங்க, கொடிய கழுகுகள் குடல்களையும் விலா எலும்புகளையும் பிடுங்க, காளி வெற்றிக் கூத்து ஆட, நரிகள் ஊளையிட, பருந்துகளின் சிறகுகள் கவரி வீச போரில் வென்று மயில் மேல் அமர்ந்த பழநி மலையில் இந்திரர்கள் தம்பிரானே!

அதலம், விதலம் கீழ் உலகங்கள் எனவும், பூமி, மேல்உலகம், அனைத்துக் கடல்கள், எட்டுத்திசைகளிலுள்ள மலைகள் எனவும், அக்னி, சூரியன், அமுதம் போன்ற குளிர்ச்சியான சந்திரன் ஆகிய சுடர்கள் எனவும், ஒற்றுமைப்பட்ட மந்திரங்கள், விசேஷமான வேதங்கள் எனவும், அரிய தத்துவங்கள், அணுவுக்குள் அணு என்று இவ்வாறாக நிறை பொருளாய் இருக்கும் பேருண்மை உள்ளத்தில் தோன்ற, அஞ்ஞான இருள் ஒழிந்து அக்கணமே இதயத் தாமரை மலர்ந்து, உணர்விலே அநுபவஞானத்தை உணரும் வகையை நீ உதவியருள, அன்பால் அமையும் செஞ்சொல் இசைப்பாக்களாம் மதுரகவிகளில் ஆசைவைத்து உன்னைத் திருப்புகழால் புகழும் உரிமைப் பாக்யத்தைப் பெற்ற அடிமையாகிய நான் உன்னையன்றி உலக வாழ்வினை நம்புவேனோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பழநி

அதல விதலமுதல் அந்தத்த லங்களென
அவனி யெனஅமரர் அண்டத்த கண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென
அங்கிபாநு-
அமுத கதிர்களென அந்தித்த மந்த்ரமென
அறையு மறையெனஅ ருந்தத்து வங்களென
அணுவில் அணுவெனநி றைந்திட்டு நின்றதொரு
சம்ப்ரதாயம்;
உதய மெழ இருள்வி டிந்தக்க ணந்தனில்இ
ருதய கமலமுகி ழங்கட்ட விழ்ந்துணர்வில்
உணரும் அநுபவம னம்பெற்றி டும்படியை
வந்துநீமுன்-
உதவ இயலின்இயல் செஞ்சொற்ப்ர பந்தமென
மதுர கவிகளில்ம னம்பற்றி ருந்துபுகழ்
உரிய அடிமைஉனை யன்றிப்ப்ர பஞ்சமதை
நம்புவேனோ;
ததத ததததத தந்தத்த தந்ததத
திதிதி திதிதிதிதி திந்தித்தி திந்திதிதி
தகுத தகுதகுகு தந்தத்த தந்தகுகு திந்திதோதி-
சகக சககெணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டிடிடி
தகக தகதகக தந்தத்த தந்தகக என்றுதாளம்;
பதலை திமிலைதுடி தம்பட்ட மும்பெருக
அகில நிசிசரர்ந டுங்கக்கொ டுங்கழுகு
பரிய குடர் பழுவெ லும்பைப் பிடுங்கரண
துங்ககாளி-
பவுரி யிடநரிபு லம்பப்ப ருந்திறகு
கவரியிட இகலை வென்றுச்சி கண்டிதனில்
பழநி மலையின் மிசை வந்துற்ற இந்திரர்கள்
தம்பிரானே. 17

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சூலம், கலைமான், மழு, துடி, பிரமகபாலம், பாம்பு, தோடு, குழை இவை கொண்டுள்ள சிவபிரான் அருளிய முருகனே! சூரனது கை, மார்பு, வில், வாள், தோள், தலை யாவும் தூள்படவும், அவனது சபதத்தை ஒழிக்க வேல் விட்ட மயில்வீரனே! காலில் அணிந்துள்ள வீரக்கழல், நூபுரம், வெண்டையம் ஆகியவைகளின் ஒலிகளே யுக காலங்களின் ஓசையாகத் திகழும்படி நடனம் இடுவோனே! வள்ளியை அணைத்த வேலே! ஒளிவீசும் பழனாபுரியில் விளங்கும் பெருமாளே!

மூலாதாரத்தினின்றும் ஒரு வடிவாய் வெளிப்பட்டு குய்யத்திற்கும் குதத்திற்கும் நடு இடத்திலிருந்து நான்கு அங்குல அளவின்மேல் சுழுமுனை, இடைகலை, பிங்கலை என்னும் நாடிகளுடன் கலந்து, ஒளிவிட்டு, சூலாயுதம் போல ஓடுகின்ற பிராணவாயுவை முதுகுத் தண்டிலுள்ள சுழுமுனை வழியாகக் கணக்காக ஓடச் செய்து, நெற்றியின் புருவ மத்தியில் விளங்கும் ஆறாவது ஆதாரமாகிய ஆஞ்ஞை ஸ்தானத்தில் மகாமனுவாகி "சி" கார அட்சரத்தோடு பொருந்தி பிரகாசிக்கும் பரம் பொருளின் பாதத்தைப் பெற வேண்டி அருஉருவாகிய ஞானசதாசிவ நிலையை அடைந்து அங்கு கேட்கும் பாடல்ஒலி, சிலம்பொலி, கழல்ஒலி ஆகிய நாதத்தின் அன்பு பெருகும்படி அடியேனையும் அருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பழநி

மூலங்கிள ரோர்உரு வாய்நடு
நாலங் குல மேநடு வேரிடை
மூள் பிங்கலை நாடியொ டாடிய முதல்வேர்கள்-
மூணும்பிர காசம தாய்ஒரு
சூலம்பெற ஓடிய வாயுவை
மூலந் திகழ் தூண்வழி யேஅள விடஓடிப்;
பாலங்கிளர் ஆறுசி காரமொ
டாருஞ்சுட ராடுப ராபர
பாதம்பெற ஞானச தாசிவ மதின்மேவிப்-
பாடுந்தொனி நாதமு நூபுர
மாடுங்கழல் ஓசையி லேபரி
வாகும்படி யேஅடி யேனையும் அருள்வாயே;
சூலங்கலை மான்மழு ஓர்துடி
தேவன்தலை யோடும்அ ராவிரி
தோடுங்குழை சேர்பர னார்தரு முருகோனே-
சூரன்கர மார்சிலை வாளணி
தோளுந்தலை தூள்பட வேஅவர்
சூளுங்கெட வேல்விடு சேவக மயில்வீரா;
காலின்கழல் ஓசையு நூபுர
வார் வெண்டைய ஓசையு மேயுக
காலங்களின் ஓசைய தாநட மிடுவோனே-
கானங்கலை மான்மக ளார்தமை
நாணங்கெட வேஅணை வேள்பிர
காசம்பழ னாபுரி மேவிய பெருமாளே.18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பலவிதமான ஆயுத சேனை சூழ்ந்து வர, வீரர்கள் கடலை அணை கட்டி அடைத்து கரையேறி, இலங்கை வீழ்ச்சியடைய பத்து தலை பாவியாகிய ராவணனைக் கொன்ற சீராமன் மருகனே! மணம்வீசும் சோலை சூழ்ந்துள்ள வயலூரில் உள்ள அக்னீச்வரர் திருக்குமரனே! வேலாயுதனே! வேடுவப்பெண் வள்ளியிடம், காதுவரை நீண்ட உன் கண்ணாகிய அம்பு என் நெஞ்சுக்குள் பாய்கின்றதை நீ காணவில்லையா? செருக்கை விட்டு எனது ஆவி உய்ய அருள்பாலிப்பாய் (உன்னுடைய 'நான்' என்ற ஜீவபோதத்தை விடுவாயேல், உன்னுடைய ஆன்மா கடைத்தேற நான் அருள் புரிவேன்) என்று பரிவுடன் உரைத்த இளையவனே! காவேரி வடகரையில் சுவாமிமலையில் உறையும் தம்பிரானே!

மண்ணாசை விலங்கும், அஞ்ஞான இருளும் ஒழிய, ஆகாச பரம அறிவு சோதியான பராசக்தியை அடைந்து முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்ததும், யோகியர் எவரும் எட்டாததான துரியநிலைக்கு மேற்பட்ட உருவமற்ற நிலையில் தோன்றி நிற்பதாய், வசீகரம் உடையதாய், ஆகாயம் முதலான சகல விரிவுள்ள வாழ்வுப் பொருளாய், ஆதியும் முடிவுமாய், உண்மை அறிவாய், பிரமன், மால், ஈசன் என்பவர்க்கு மூலகாரணமாய் நிற்கும் பெருமை கொண்டதாய், தானே மெய் என்ற தன்மையுடைய அரியதும், சார்பு இல்லாததும், அழிவில்லாததுமான நிலையான சோதியாய், ரூபம் அற்றதாய் ஒப்பில்லாத சுக வெள்ள நிலைப் பொருளாம் சிவத்துடன் என்று சேர்வேன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சாமிமலை-சுவாமிமலை

ஆனாத பிருதிவிப் பாச நிகளமும்
மாமாய இருளுமற் றேகி பவமென
ஆகாச பரமசிற் சோதி பரையைஅ டைந்துளாமே-
ஆறாறின் அதிகமக் க்ராயம் அநுதினம்
யோகீசர் எவரும்எட் டாத பரதுரி
யாதீத மகளம்எப் போதும் உதயம்அ நந்தமோகம்;
வானாதி சகல விஸ்த் தார விபவரம்
லோகாதி முடிவுமெய்ப் போத மலரயன்
மாலீசர் எனுமவற் கேது விபுலம சங்கையால்நீள்-
மாளாத தனிசமுற் றாய தரியநி
ராதார முலைவில்சற் சோதி நிருபமு
மாறாத சுகவெளத் தாணு வுடன்இனி
தென்றுசேர்வேன்;
நானாவி தகருவிச் சேனை வகைவகை
சூழ்போது பிரபலச் சூரர் கொடுநெடு
நாவாய்செல் கடலடைத் தேறி நிலைமைஇ
லங்கைசாய-
நாலாறு மணிமுடிப் பாவி தனைஅடு
சீராமன் மருக! மைக் காவில் பரிமள
நாவீசு வயலிஅக் கீசர் குமரக டம்பவேலா;
கானாளும் எயினர்தற் சாதி வளர்குற
மானோடு மகிழ்கருத் தாகி மருடரு
காதாடு முனதுகட் பாண மெனதுடை
நெஞ்சுபாய்தல்-
காணாது மமதைவிட் டாவி உயஅருள்
பாராய்எ னுரை வெகுப் ப்ரீதி இளையவ
காவேரி வடகரைச் **சாமி மலை**யுறை தம்பிரானே.

19

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உயர்ந்த மலைகளும், திசைகளும் கடல்களும் கலங்கும்படி சல்லரி, பேரி, என்னும் வாத்யங்கள் ஓசை எழுப்ப, மணிகள் கலகல என்று ஒலிக்க, தேவர்கள் பூமாரி பொழிய, பிரமன் வேதப் புகழை ஓத, அசுரர்களை யம லோகத்திற்குச் செல்லும்படி வேலாயுதத்தைச் செலுத்தியவனே! சடைமுடி மணம்வீச, அக்னி போன்ற திருவுருவத்தையும், வெற்றியையும் உடைய சிவபிரானுக்கு உயிர்போன்ற பச்சைநிறப் பார்வதியாம் உமை அருளிய இளையவனே! தாமரையில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவி, பூதேவி இருவரையும் அழகிய குலமகளாம் இலக்குமியையும் மணந்த திருமாலின் மருகனே! மணம் வீசும் சோலைகள் நிறைந்த குருமலையில் விரும்பி உறையும் பெருமாளே!

திசை, மலை, கடல், பூமி, மலை உச்சி ஆகிய எதிலும் வசிக்கின்ற பல வகையான எந்த உயிர் பிறப்புக்களிலும் நான் உழன்று திரியாமல் என் உயிர் நிலைபெற (சதேஹமுக்தி) இந்த உடல் இருக்கும் போதே நான் உமது திருவடிகளில் மணமுள்ள மலர்கொண்டு என்சித்தமும் மனமும் உருக வைதீக வழிபாடுடன் "ஹரஹர சிவ சரணம்" என்று கும்பிட்டு வழிபட, உன் திருவடிகளை என்தலை மீது வைத்து என் உடல் அதனால் புளகிதம் அடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவிபோல பாய நீவீர் மின்னல் கொடி போன்ற அழகிய தேவசேனையின் முன் திருநடம் இடும் உமது திருவடி அழகுடன் காண இந்த சபையில் எனது உள்ளம் உருக வந்தருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## குருமலை

எந்தத் திகையினு மலையினும் உவரியில்
எந்தப் படியினு முகடினும் உளபல
எந்தச் சடலமும் உயிரியை பிறவியின் உழலாதே-
இந்தச் சடமுடன் உயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின்
முறையோடே;
சந்தித் தரஹர சிவசிவ சரண்என
கும்பிட் டிணையடி யவைஎன தலைமிசை
தங்கப் புளகித மெழஇரு விழிபுனல் குதிபாயச்-
சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமுன்
நந்தத் திருநட மிடுசரண் அழகுற
சந்தச் சபைதனில் எனதுளம் உருகவும் வருவாயே;
தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசை மலை உவரியு மறுகச லரிபேரி-
துன்றச் சிலைமணி கலகல கலின்என
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு மயில்வேலா;
கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
எந்தைக் குயிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி உமையருள் இளையோனே-
கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில் திகழ் **குருமலை** மருவிய
பெருமாளே. 20

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திரிபுரங்களையும் மன்மதனையும் எரித்துச் சாம்பலாக்கியவரும், இளமையான இடபவாகனம் உடையவரும், நடராஜரும், எங்கும் விளங்கும் நெருப்புமலையின் சொரூபம் கொண்ட வரும், ஆதி அந்தம் அறியமுடியாதவரும் சூக்கும, ஸ்தூல பஞ்சாட்சரத்தின் காரணப் பொருளானவரும், ஞான அமுதைத் தந்தருளி எனை ஆண்டவருமான எந்தை சிவபிரானது இடப்பாகத்தில் மகிழும் உமையம்மை அருளிய புதல்வனே! எண்ணிலா வேதங்களும் "குமரகுருவே" என்று ஒலிக்க, வலிய ஆதிசேடன் அஞ்ச, கோழிக் கொடியுடன் மயில் மீதேறி பூமியில் உள்ள எல்லா மலைகளும் சுழல வருவோனே! குறமகள் வள்ளியின் பாதச்சிலம்பு ஒலிக்கவும், அவளோடும் இந்திராணி மகள் தேவசேனையுடனும் கலந்து குருமலையில் வீற்றிருக்கின்ற குருநாதனே!

இருவினை காரணமாக துன்பமும் கலக்கமும் அதனால் மனம் மிகவேதனைப் பட்டு நெருப்பிலிட்ட மெழுகு போல வாடி, முற்பிறவியில் செய்த வஞ்சனையின் காரணமாக பொம்மலாட்டத்தின் மரப்பாவையைக் கட்டியுள்ள கயிறு போல ஆட்டங்களை ஆடி, ஓடி, உடல் வெந்துபோய் மறையும் என்னையும் ஒரு பொருளாகக் கருதி, ஒப்பற்ற பரம் பொருள் இது என என் இரு செவிகளிலும் உபதேசித்து என் பிறவி வினைகளையும், மும்மலங் களையும் அறுத்து குளிர்ச்சி பொருந்திய கருணை பொழியும் தாமரை போன்ற உனது ஆறுமுகங்களும், கடப்ப மாலையும், திருமுடிகளும், திருவடிகளும் விளங்க மயில் மீது ஏறி வந்து மகிழ்ச்சியுடன் என்னை ஆண்டருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## குருமலை

ஒருவரையும் ஒருவர்அறி யாம லுந்திரிந்
திருவினையின் இடர்கலியொ டாடி நொந்துநொந்(து)
உலையிலிடு மெழுகதென வாடி முன்செய்வஞ்
சனையாலே;

ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி ஆடி விண்பறிந்
தொளிருமினல் உருவதென ஓடி அங்கம்வெந்
திடுவேனைக்;

கருதிஒரு பரமபொருள் ஈது என்றுஎன்
செவியிணையி னருளிஉரு வாகி வந்தஎன்
கருவினையொ டருமலமும் நீறு கண்டுதண்
டருமா மென்-

கருணைபொழி கமலமுகம் ஆறும் இந்துளந்
தொடை மகுட முடியும் ஒளிர் நூபு ரஞ்சரண்
கலகலென மயிலின் மிசை ஏறி வந்துகந்
தெனையாள்வாய்;

திரிபுரமும் மதனுடலும் நீறு கண்டவன்
தருணமழ விடையன்நட ராஜன் எங்கணும்
திகழருண கிரிசொருபன் ஆதி அந்தம்அங்
கறியாத-

சிவயநம நமசிவய கார ணன்சுரந்
தமுதமதை அருளிஎமை யாளும் எந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்ப யந்திடும்
புதல்வோனே;

குருகுகொடி யுடன்மயிலில் ஏறி மந்தரம்
புவனகிரி சுழல மறை ஆயி ரங்களும்
குமரகுரு எனவலிய சேடன் அஞ்சவந் திடுவோனே-

குறமகளின் இடைதுவள பாத செஞ்சிலம்
பொலிய ஒரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத உம்பர்தம் பெருமாளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இந்திரன் முதலான தேவர்கள் சிறையிலிருந்து வெளிப்பட்டு தமது ஊரில் குடிபுக, கடல் ஓலமிட, மலைகள் வெந்து பொடியாகும்படி போர்புரிந்து, "சந்திரசேகர மைந்தா! சூரனை அழித்தருள்க" எனத் திருமாலும் வேண்ட, நொடியில் சூரனை வென்றவனே! பிரமனை சிறையிட்டவனே! ஐராவதம் என்னும் வெள்ளை யானையால் போற்றி வளர்க்கப்பட்ட தேவ சேனையை மணந்த பராக்ரமம் வாய்ந்த பெருமாளே!

குற்றங்களுக்கு இடமான இந்த உடம்பு நிலைத்து நிற்காது என்று எண்ணாமல், அதனை நிலைத்து நிற்கும்படிச் செய்ய வாயுவால் மூலாக்கினியை எழுப்பி, யோக மார்க்கப் பயிற்சிகளைப் பற்றி எண்ணுகின்ற எண்ணம் தொலையவும், கலக்கத்தைத் தரும் ஐம்புலன்களும் வேரற்றுபோகவும், என் செயல்கள் யாவும் மாளவும், குறைவில்லாத மவுன நிலையை - குணங்களற்ற நிலையை நான் அடைந்து, வீட்டின்பத்தைப் பெற, குருமலையில் விளங்கும் ஞானசற்குருநாதனே! குமரா சரணம் எனக் கூறி புதிய கூதள மலரால் உன் திருவடிகளை வணங்கி உன்னை உணர்வேனோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## குருமலை

கறைபடும்உ டம்பி ராதெனக்
கருதுதல்ஒ ழிந்து வாயுவைக்
கருமவச னங்க ளால் மறித் தனலூதிக்-
கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிந்தை போய்விடக்
கலகமிடும் அஞ்சும் வேரறச் செயல்மாளக்;
குறைவறநி றைந்த மோனநிர்க்
குணமதுபொ ருந்தி வீடுறக்
**குருமலை** விளங்கு ஞானசற் குருநாதா-
குமரசரண் என்று கூதளப்
புதுமலர் சொ ரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகழற் றுணர்வேனோ;
சிறைதளைவி ளங்கு பேர் முடிப்
புயலுடன் அடங்க வேபிழைத்
திமையவர்கள் தங்கள் ஊர்புகச் சமராடித்-
திமிரமிகு சிந்து வாய்விடச்
சிகரிகளும் வெந்து நீறெழத்
திகிரி கொள்அ நந்த சூடிகைத் திருமாலும்;
பிறைமவுலி மைந்த கோவெனப்
பிரமனைமு னிந்து காவலிட்
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்-
பெருகுமத கும்ப லாளிதக்
கரியெனப்ர சண்ட வாரணப்
பிடிதனைம ணந்த சேவகப் பெருமாளே. 22

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



முழவு, சங்கு, பேரி, தவில், கணப்பறை, எக்காளம் முதலிய கருவிகள் ஏழு கடல்களின் ஒலி போல முழக்கம் செய்து ஒலிக்கவும், போர் முனைகளில் அசுரர்கள் அழிவுற, தேர்கள் அழிவுபட, யானைகள் குதிரைகள் ஆகியவைகளின் இரத்தம் திசையெலாம் மூட, பேய்கள், நரிகள், பறவைகள் ஆகியவை மகிழ்ச்சியடைய வேலாயுதத்தைச் செலுத்தியவனே! சிவன் மகிழ்ந்தருளிய கணபதி உடன் இருந்து அருள்பாலிக்க, ஒப்பற்ற கயிலையில் மகிழ்ச்சியுடன், குறிஞ்சி மாது வள்ளி மருவும் புகழ்வாய்ந்த பெருமாளே!

சுக்கிலமானது பனி போல அளவில் கருவில் சேர்ந்து அது மிளகு, பாக்கு, பனம்பழம், தேங்காய் போன்ற அளவு ஆகி, பின்னர் பலாப்பழ அளவுக்கு வயிறு பெரிதாகி, பருவகாலம் வந்தவுடன் தலைகீழாக நழுவி, ஒன்பது துவாரங்கள் கொண்ட பொம்மை போல பிராணவாயுவாகிய கயிற்றின் உதவியால் பொருந்தி, உணர்ச்சியில்லாமல் மலசலப்பட்ட உடலுடன் தவழ்ந்தும், அழுதும், தாய் முலைப் பாலை உண்டு ஒரு குழந்தையாய், இப்பிறப்பில் விதிக்கப்பட்ட செயல்களைச் செய்து, முற்பிறவியின் தீவினை காரணமாக வடிவெடுத்து, உன்னை அடியோடு மறந்து, பாவத்தையும் வளர்த்துக் கொண்டு, தினமும் மனம் உடைந்து உடல் கெடுகின்றேன். உனது திருவடியைத் தந்தருளுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கயிலைமலை

பனியின் விந்துளி போலவே கருவினுறும்
அளவி லங்கொரு சூசமாய் மிளகு துவர்
பனைதெ னங்கனி போலவே பலகனியின் வயிறாகிப்-
பருவ முந்தலை கீழதாய் நழுவிநில
மருவி ஒன்பது வாசல்சேர் உருவமுள
பதுமை யின்செயல் போலவே வளிகயிறின் உடனாடி;
மனவி தந்தெரி யாமலே மலசலமொ
டுடல்ந கர்ந்தழு தாறியே அனைமுலையின்
மயம யின்றொரு பாலனாய் இகமுடைய செயல்மேவி-
வடிவ முன்செய்த தீமையால் எயுமுனையும்
அறம றந்தக மீதுபோய் தினதினமும்
மனம ழிந்துடல் நாறினேன் இனிஉனது கழல்தாராய்;
தனன தந்தன தானனா தனதனன
தினன திந்தன தீததோ திகுததிகு
தகுத குந்ததி தாகுதோ எனமுழவு வளைபேரி-
தவில்க ணம்பறை காளமோ டிமிலைதொனி
யினமு ழங்கெழு வேலைபோ லதிரபொரு
சமர்மு கங்களின் மேவியே விருது சொலும் அவுணோர்கள்;
சினம ழிந்திட தேர்கள் தோ லரிபரிகள்
குருதி எண்திசை மூடவே அலகைநரி
சிறையி னங்களி கூரவே நகையருளி விடும்வேலா-
சிவன்ம கிழ்ந்தரு ளானைமா முகன் மருவி
மனம கிழ்ந்தருள் கூரவோர் **கயிலை**மகிழ்
திகழ்கு றிஞ்சியின் மாதுமால் மருவுபுகழ் பெருமாளே.

23

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சேல் மீனாக (மச்சாவதாரம்) உருவம் கொண்டு (சோமுகன்) பெரியகடலில் பதுங்கி, மறைத்து வைத்த வேதங்களை மீட்டு வந்த திருமால், பாணத்தை பிரயோகித்து, கடலில் அணை கட்டி, இலக்குமணனோடும், அநுமனுடனும் படையைச் செலுத்தி இராவணனுடைய பத்து தலைகள் அறுபட்டு விழும்படி வில் ஏந்திய வெற்றி முகுந்தனாம் திருமாலின் மருகனே! மலர்ந்த தாமரை மலர் போன்ற செங்கையில் வேல் ஏந்திய குமரனே! (முன்பு ஒரு காலத்தில்) உமையுடன் கோபித்து நீ குகை வழியாக வந்து வெளிப்பட்ட வட (வேங்கட) மலையில் நிற்கும் பெருமாளே!

தலை நரைத்து, கண்கள் குழி விழுந்து, கன்னங்கள் சதை வற்றி, காதுகள் பயனற்ற தோலாய், கழுத்தின் அடிப்பாகம் வளைந்து நீண்ட முதுகு குனிந்து, பற்கள் விழுந்து, உதடுகள் நீர் ஒழுக, தூக்கம் வரும் சமயம் இருமல் எலும்புகளைக் குலுக்கும்படி தொடங்கிவர, குரல்அடங்கி, நடை தளர்ந்து தடியே கால்போலாகி உள்ள இந்த உடம்பு மூப்புத்தன்மை அடையும் முன்பு, உனக்கடிமை பூண்டுள்ள தொண்டர்களுக்கு விருப்பமுடன் தொண்டு புரிய மாட்டேனோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வடமலை-திருவேங்கடம்

கறுத்ததலை வெளிறு மிகுந்து
மதர்த்த இணை விழிகள் குழிந்து
கதுப்பிலுறு தசைகள் வறண்டு செவிதோலாய்க்-
கழுத்தடியு மடைய வளைந்து
கனத்த நெடு முதுகு குனிந்து
கதுப்புறுபல் அடைய விழுந்து தடுநீர்சோர்;
உறக்கம்வரு மளவில் எலும்பு
குலுக்கிவிடும் இருமல் தொடங்கி
உரத்தகன குரலு நெரிந்து தடிகாலாய்-
உரைத்த நடை தளரும் உடம்பு
பழுத்திடுமுன் மிகவும் விரும்பி
உனக்கடிமை படுமவர் தொண்டு புரிவேனோ;
சிறுத்த செலு வதனுள் இருந்து
பெருத்த திரை உததி கரந்து
செறித்தமறை கொணர நிவந்த ஜெயமாலே-
செறித்தவளை கடலில் வரம்பு
புதுக்கி இளை யவனொ டறிந்து
செயிர்த்த அநு மனையும் உகந்து படையோடி;
மறப்புரிசை வளையும் இலங்கை
அரக்கன் ஒரு பதுமுடி சிந்த
வளைத்தசிலை விஜய முகுந்தன் மருகோனே-
மலர்க்கமல வடிவுள செங்கை
அயிற்குமர குகைவழி வந்த
மலைச்சிகர வடமலை நின்ற பெருமாளே. 24

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திரிபுரங்களை எரித்த சிவபிரானின் குமரனே! திருப்போரூர், தணிகை, பழநி, வடமலை ஆகிய தலங்களில் உலவுகின்ற வடிவேலனே! தினமும் உனது புகழ் பாடும் அடியவர் மனங்களிலும், சக்தி, சிவம் ஆகிய இரண்டு பொருட்களிலும் விளங்குபவனே! ஆணவமலம் ஒழிய ஞான சூரியனாக வரும் பெருமானே! ஆதிசேஷன் மீது துயில் கொளும் நெடியவனாம் திருமாலின் மருகன் என வரும் அற்புத மூர்த்தியே! அமலி, விமலி, பரையாம் உமையவள் அருளிய குழந்தையே! அதலம் விதலம் முதலான ஏழு உலகங்களும் நடுங்க, மயிலில் ஒளிர்கின்ற ஆறெழுத்து மந்திரத்தின் மத்தியில் அழகுடன் விளங்கும் ஹரஹர சிவசிவ பெருமாளே!

சரவணபவனே! என் நிதியே! ஆறுமுகனே! குருபரனே! என்று பலமுறை ஓதித் தமிழ்ப் பாடல்களில் உருகிய அடியார்களுக்கு உற்ற பிறப்பு இறப்பு நீங்க சிவப்பேறு கிடைக்க, நோய்கள் ஓட, எமது உயிர் சுகம் அடைய வரம் அருள்வாயே! கருணை பொழியும் கண்களைக் கொண்டவனே! ஒப்பற்ற கணபதியைச் சகோதரனாகக் கொண்ட இளையவனே! அமுதம் போன்ற பாடல்களைத் தருபவர்களுடைய உயிர்க்கு நேசனே! கடல் சூழ்ந்த இவ்வுலகில் உள்ள உயிர்களுக்குத் துன்பங்களும் கலக்கங்களும் நீங்கவும், நற்கதியைப் பெறவும் உனது திருவடி நிழல் கிடைக்கும் ஒரு நாள் உண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வடமலை

சரவண பவநிதி அறுமுக குருபர
சரவண பவநிதி அறுமுக குருபர
சரவண பவநிதி அறுமுக குருபர எனஓதித்-
தமிழினில் உருகிய அடியவர் இடமுறு
சனன மரணமதை ஒழிவுற சிவமுற
தருபிணி துளவரம் எமதுயிர் சுகமுற
அருள்வாயே;
கருணைய விழிபொழி ஒருதனி முதலென
வருகரி திருமுகர் துணைகொளும் இளையவ
கவிதை அமுதமொழி தருபவர் உயிர்பெற
அருள்நேயா-
கடல்உல கினில் வரும் உயிர்படும் அவதிகள்
கலகமி னையதுள கழியவும் நிலைபெற
கதியும் உனதுதிரு வடிநிழல் தருவதும்
ஒருநாளே;
திரிபுரம் எரிசெயும் இறையவர் அருளிய
குமரச மரபுரி தணிகையும் மிகுமுயர்
சிவகிரி யிலும் வட மலையிலும் உலவிய
வடிவேலா-
தினமும் உனது துதி பரவிய அடியவர்
மனது குடியும் இரு பொருளிலும் இலகுவ
திமிர மலம்ஒழிய தினகரன் எனவரு
பெருவாழ்வே;
அரவணை மிசைதுயில் நரகரி நெடியவர்
மருகன் எனவெவரும் அதிசயம் உடையவ
அமலி விமலிபரை உமையவள் அருளிய
முருகோனே-
அதலவி தலமுதல் கிடுகிடு கிடுவென
வருமயில் இனிதொளிர் ஷடுமையில் நடுவுற
அழகி னுடன் அமரும் அரகர சிவசிவ
பெருமாளே. 25

*நல்வாழ்வு, சுகம்பெற இத்திருப்புகழை ஓதுக.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பால் பொங்கிக் கொதித்து எழுவது போல் எட்டுத் திசைகளிலும் உள்ள அசுர மூடர்கள் ஓடும்படி அழித்த சூரிய ஒளி போன்ற சக்தி வேலைக் கொண்ட அரசே! கங்கையுடைய சடை ஆடவும், மான் மழு ஏந்திய கரங்கள் ஆடவும், காலில் கழல் ஒலி செய்யவும் ஆடிய நடராஜப் பெருமானது செல்வமே! தினைப் புனத்திலே இருந்த மையிட்ட விழி மாதாம் வள்ளியை அணைத்த கந்த வேளே! மன்மதன் வெற்றி கொள்ளும் அழகான பூ முடித்த கூந்தலை உடைய மாதர்கள் வியக்கும்படி உண்மைத் தவசிகள் வாழும் திருத்தணிகை மலைப் பெருமாளே!

எனக்கு புத்தி ஏது ஐயா? யாரை விரும்பி நாடுவேன்! இறப்பதுதான் என் விதியோ? எனக்கு நீயே தாய் தந்தை என்று இருந்தும் நான் இப்படித் தவித்திடலாமா? உலகத்தவர் என்னை இப்படி இகழலாமா? என்னை பரிகசிப்பவர்கள் காண உன்னுடைய திருவடியை வைக்க நீயே மறுத்துவிட்டால் உலகம் என்னைப்பார்த்து சிரிக்கும் ஐயா! குழந்தை பால் வேண்டி தகப்பன் முன் ஓடிச் சென்று அழுதால் அதனை வெறுத்து விட்டு விடுவார்களோ? உன் திருவருள் எனக்கு சித்திக்குமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருத்தணி

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேன்அ வத்தினி
லேஇ றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதா யென்-
றேஇ ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவர்
ஏச விற்பட வோந கைத்தவர் கண்கள் காணப்;
பாதம் வைத்திடை ஆதெ ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார் ந கைக்கும்ஐ யாதகப்பன் முன் மைந்தன் ஓடிப்-
பால்மொ ழிக்குரல் ஓல மிட்டிடில்
யாரெடுப்பதெ னாவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ;
ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
ஓட வெட்டிய பாநு சத்திகை எங்கள் கோவே-
ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழல்
ஓசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே;
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே-
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே. 26

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வெற்றி முழக்கமாக பலவித தாளங்கள் அச்சம் தரும்படி ஒலித்து, ஆதிசேஷனது தலைகள் இடிபடவும், திசைகள் அதிரவும், அசுரர்கள் தங்கள் கூட்டம் சிதறி ஓட வேலாயுதத்தை செலுத்தியவனே! திரிபுரங்களை விழித்து எரித்தவனும், பிரமனது தலையை அரிந்த மழு ஏந்திய கையனும், அகில உலகத்தையும் காப்பவனும் ஆகிய சிவபிரானின் அருட்குழந்தையே! சமணர்களை கழுவில் ஏற்றியும், தேவசேனை, வள்ளி இருவருடனும் அழகு வாய்ந்த திருத்தணி மலையில் நடனம் புரிந்தருளும் பெருமாளே!

குருவி, கழுகு, நரிக் கூட்டம் மற்றும் காட்டிலுள்ள மிருகங்கள் போலவும், புழு, மீன் போலவும், யானை, மரம் போலவும் திரிபவர்களுடைய உறவு கூடாது. குமரிப் பெண்களால் வரும் மனத்துயரும், கொடுமைகளும் பிணிகளும் வருந்தத் திரிகின்ற நிலை கெட்டவன் இவன் என்றும், இழிவான தரித்திரன் இவன் என்றும் பலரும் பரிகசிக்கக் கூடாது. ஆபரணங்கள் விளங்க, யானைகள், குதிரைகள் சூழ்ந்து வர உயர்ந்த ஆடைகளைத் தரித்து வியாபாரச் சரக்கு போல் தங்கப் பல்லக்கில் செல்லும் பெருமையையும் நான் தேடேன். திருப்புகழ்ப் பாக்களை ஊற்றுப் பெருக்கு போல உனது திருவடி மலர்களில் நான் சமர்ப்பிக்க எனக்கு அருள் தர வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருத்தணி

குருவி யெனப்பல கழுகு நரித்திரள்
அரிய வனத்திடை மிருகம் எனப்புழு
குறவை எனக்கரி மரமும் எனத்திரி உறவாகா-
குமரி கலித்துறை முழுகி மனத்துயர்
கொடுமை எனப்பிணி கலக மிடத்திரி
குலையன் எனப்புலை கலியன் எனப்பலர்
நகையாமல்;
மருவு புயத்திடை பணிக ளணப்பல
கரிபரி சுற்றிட கலைகள் தரித்தொரு
மதன சரக்கென கனக பலக்குடன் அதுதேடேன்-
வரிய பதத்தினின் அருவி இருப்பிடம்
அமையும் எனக்கிடம் உனது பதச்சரன்
மருவு திருப்புகழ் அருள எனக்கினி அருள்வாயே;
விருது தனத்தன தனன தனத்தன
விதமி திமித்திமி திமித திமித்திமி
விகிர்த டடுட்டுடு ரிரிரி எனக்குகு
வெகுதாளம்-
வெருவ முகிழ்த்திசை உரகன் முடித்தலை
நெறுநெ றெனத்திசை அதிர அடைத்திட
மிகுதி கெடப்பொரு அசுரர் தெறித்திட
விடும்வேலா;
அரிய திரிப்புரம் எரிய விழித்தவன்
அயனை முடித்தலை அரியு மழுக்கையன்
அகிலம் அனைத்தையும் உயிரும் அளித்தவன்
அருள்சேயே!
அமணர் உடற்கெட வசியில் அழுத்திவி
ணமரர் கொடுத்திடும் அரிவை குறத்தியொ
டழகு **திருத்தணி** மலையில் நடித்தருள் பெருமாளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நொச்சி, கொன்றை, மூன்றாம் பிறை, பாம்பு இவைகளை அணிந்து சடை தாங்கிய பெருமானுடைய குழந்தை முருகனே! செண்பகக் காட்டிலும், பரண் மீதும், சந்தனக்காட்டிலும் உறைந்த வள்ளியின் சிலம்பணிந்த மரலரடிகளையும், தோள்களையும், ஒளி வீசும் முகத் தாமரையையும், இரு தனங்களையும், (நாதநாமக்ரியை என்னும்) இந்தளப் பண் போன்ற அமிர்த மொழிகளையும், அழகு வாய்ந்த சிவந்த வாயிதழ்களையும், பச்சை நிறத்தையும், வானவில் போன்ற புருவத்தையும், குழை காதணிகளையும், நீலோத்பல மலர் போன்ற கண்களையும் மடலின்கண் எழுதி மகிழ்ந்த பெருமாளே!

குரா மரத்தின் அடியிலும், அடியார்களுடைய இதயத் தாமரையின் நடுவிலும், பல துறைகள் கொண்ட வேதத்தின் உச்சியிலும் வீற்றிருக்கும் குருநாதனே! பழநியில் ஆறுமுகனே! செந்திலில் தேவசேனாபதியே! தணிகையில் இணையில்லாதவனே! காக்கைகள் போல கூச்சல் போட்டு சமய மாறுபாடு கொண்ட கூட்டத்தினர் பெறுதற்கு அரிதானதும், புற சமயத்தார் எவராலும் சந்திக்க முடியாததும், ஒப்பற்ற ஒரு குரு பரம்பரையாக வந்த உபதேசம் இது என்று மொழிந்தருளி, கடப்ப மலர் அணிந்த, வண்டுகள் போன்று இசை பாடும் பொற்கிங்கிணி அணிந்ததுமான திருவடி இணைமலரை அடியேனுக்குச் சூட்டிய பேரருளை கனவிலும் நனவிலும் மறவேன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## தணிகை

கொந்து வார்குர வடியினும் அடியவர்
சிந்தை வாரிஜ நடுவினும் நெறிபல
கொண்ட வேதநன் முடியினும் மருவிய
குருநாதா-
கொங்கி லேர்தரு பழநியில் அறுமுக
செந்தில் காவல **தணிகை**யில் இணையிலி
கொந்து காவென மொழிதர வருசம யவிரோத;
தந்த்ர வாதிகள் பெறஅரி யதுபிறர்
சந்தியாதது தனதென வரும்ஒரு
சம்ப்ர தாயமும் இதுவென உரைசெய்து
விரைநீபச்-
சஞ்ச ரீகரி கரமுரல் தமனிய
கிண்கி ணீமுக விதபத யுகமலர்
தந்த பேரருள் கனவிலும் நனவிலும் மறவேனே;
சிந்து வாரமும் இதழியும் இளநவ
சந்த்ர ரேகையும் அரவமும் அணிதரு
செஞ்ச டாதரர் திருமக வெனவரு முருகோனே-
செண்ப காடவி யினும்இத ணினும்உயர்
சந்த னாடவி யினும்உறை குறமகள்
செம்பொ னூபுர கமலமும் வளையணி
புதுவேயும்;
இந்து வாண்முக வனசமு ம்ருகமத
குங்கு மாசல யுகளமும் மதுரித
இந்த ளாம்ருத வசனமும் முறுவலும் அபிராம-
இந்த்ர கோபமும் மரகத வடிவமும்
இந்த்ர சாபமும் இருகுழை யொடுபொரும்
இந்த்ர நீலமும் மடலிடை எழுதிய பெருமாளே. 28

*திருவடி தரிசனம் பெற இத்திருப்புகழை ஓதுக*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கல்யாண மாப்பிள்ளையாக, குறமகள் வள்ளிக்கு அற்புதமாய் வாய்த்து அவளது புயங்களை அணைத்து திளைத்து விளையாடி மகிழ்ச்சி கொள்ளும் உன்னை துணையாகத் தேடுகின்ற அடியேனைச் சுகப்படுமாறு வைத்தருள்க! இது உனக்குத் கடமையாகும்; இது பெருமையும் ஆகும் முருகனே! உன்னைப் பலமுறை தொழுபவர்கள் மறவாது திருப்புகழையே கூறி உன்னைத் துதி செய்து வாழ்வதற்கு அருளும் செவ்வேளே! சிவலோகம் போன்ற திருத்தணியில் ஆசை கொண்டு உறைபவனே! பிறப்பு நோய் நீக்கும் வயித்தியநாதப் பெருமாளே!

நிலை காண முடியாத சமுத்திரம் போன்ற சமுசாரத்தில் மூழ்கி, உண்மை என்று பலவும் பேசி, பல நாள் உழைத்து, பெரியோர்கள் உள்ள இடத்திற்குச் செல்லாமல் மறைந்து உமது திருவடிக்கு உண்டான பணிகளை விரும்பிச் செய்யாது, மிகப் பலமான உடல் நோய்களில் ஊறி, பிறவி நோய்களால் அலைச்சலுற்று, கோபம் கொண்ட பயித்தியமாகி, தடுமாறி தவிக்காமல், பிறப்பை அறுக்க வல்ல ஆசையை ஒழித்து உன்னைப் புகழ்ந்து ஒதி இப்பூமியில் நான் பிழைத்து வாழ உன்னருளைத் தந்தருள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருத்தணி

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி அதனூடே-
நெடுநாளும் உழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக் கரவாகி
நினைவால்நி னடித் தொழில் பேணி துதியாமல்;
தலையான உடற்பிணி ஊறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்தியமாகி தடுமாறித்-
தவியாமல் பிறப்பையு நாடி
அது வேரை அறுத்துனை ஓதி
தலமீதில் பிழைத்திட வேநின் அருள்தாராய்;
கலியாண சுபுத்திர னாக
குறமாது தனக்குவி நோத
கவினாரு புயத்தில்உ லாவி விளையாடிக்-
களிகூரும் உனைத்துணை தேடும்
அடியேனை சுகப்பட வேவை
கடனாகும் இதுக்கன மாகு முருகோனே;
பலகாலும் உனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே-
பதியான **திருத்தணி** மேவு
சிவலோகம் எனப்பரிவேறு
பவரோக வயித்திய நாத பெருமாளே. **29**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிறந்த உடுக்கையும், ஊது குழலும், முரசும் சப்த ஒலிகளை எழுப்ப, மறை ஓத, மூர்க்கரான அசுரர்களை சம்காரம் செய்த சிகாமணியே! வேலால் அவர்களை நிலை குலைத்தவனே! ஒப்பற்ற மயிலில் ஏறிவரும் முருகனே! பிறை நிலா, கொன்றை, பாம்பு, கங்கை, எலும்புக்கூடு இவைகளைப் பிரகாசிக்கும் சடையில் தரித்த எனது பிதா, சதாசிவ கோத்திரன் அருளிய பாலனே! அழகான வள்ளியை விரும்பித் திருமணம் செய்து, திருச்சிராப்பள்ளி என்று உரைப்பவர் மனத்தில் வீற்றிருக்க விரும்பும் பெருமாளே!

மனமே! நம்முடைய உடலை நம்பாதே! இன்ப துன்பத்திற்கு இடம் தரும் பொறி இது! பிரமன் செய்த பூட்டு இந்த உடல்! இனிமேல் நாம் அஞ்ச வேண்டாம்! இவ்வுடலை வீணாக்காமல் மலையைச் சிதற அடித்த வேலவர்க்கு இன்பத்துடன் அன்பு செலுத்துவோம் வா! அவனுக்கு அன்படிமைப்பட வந்து விட்டோம்! நமக்கு நற்கதி தந்து நம்மை ஆள்வதற்கு மயில்வாகனப் பெருமான் தந்த சீட்டும், கட்டித் தந்த சிவநீறும் இந்தா! அவர் நம்மை ஆட்கொள்ள வந்துள்ளார். இதைவிடப் பெரிய பேறு இனி நமக்கு ஏது? ஆதலால் மனமே நீ ஈடேற "மைந்தா குமரா" என்று இடைவிடாது மறவாமல் ஓதுவாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திரிசிராப்பள்ளி

அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெயி தாகித சூத்திரம்
அம்போருகன் ஆடிய பூட்டிது இனிமேல் நாம்-
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னார்க்கியல்
அங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல்;
வந்தோம்இது வேகதி ஆட்சியும்
இந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும்-
வந்தேவெகு வாநமை ஆட்கொள்உ
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராஎனும் ஆர்ப்புய மறவாதே;
திந்தோதிமி தீதக மாத்துடி
தந்தாதன னாதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச்-
செங்காடென வேவரு மூர்க்கரை
சங்காரசி காமணி வேற் கொடு
செண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே;
இந்தோடிதழ் நாகம காக்கடல்
கங்காளமி னார்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திரன் அருள்பாலா-
எண்கூடரு ளால் நௌவி நோக்கியை
நன்பூமண மேவி **சிராப்பளி**
என்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே. 30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மாட கூடங்கள் நிறைந்த மதுரையில் கால்மாறியாடிய நடராஜப் பெருமானது புதல்வனாக வந்து, இறையனார் அகப்பொருள் நூலுக்கு நாற்பத் தொன்பது சங்கப் புலவர்கள் கூறி வந்த பொருளதிகாரத்தின் உண்மைப் பொருள் இதுதான் என்று கூற செட்டி குலத்தில் ஊமைப் பிள்ளையாய்த் தோன்றி திருவிளையாடலைப் புரிந்த ஆராய்ச்சி மிக்க தீரனே! வரதனே! குருநாதனே! பாரதப் போரில் அர்ச்சுனன் (இறப்பதற்குத் துணிய, அவனை) உய்யுமாறு தனது சக்கரத்தால் சூரியனை மறைத்து வைத்த கோபாலர் தலைவனாம் கிருஷ்ண பகவானின் அன்பு வைத்த மருமகனே! ஆரவாரத்துடன் அலைகளை வீசி வரும் காவேரியாறு பாய்கின்ற வயலூரிலும், கோனாடு என்ற பகுதியில் உள்ள விராலிமலையில் வீற்றிருக்கும் பெருமாளே!

ஆடம்பரமான நவமணிகள் பதிக்கப்பெற்ற கிரீடங்கள் திருமுடியில் தாங்கியதும் தேவாதி தேவர்கள் சேவை செய்கின்ற திருமுகமலர் ஆறினையும் வீரலக்ஷ்மி விளங்கும் பன்னிரு தோள்களையும், வண்டுகள் சீராகம் பாடும் கடப்ப மலர் மணம் வீசும் இரண்டு திருவடிகளையும், ஆராதகாதல் கொண்ட வள்ளியும், மேக வாகனத்தையுடைய இந்திரன் மகள் தேவசேனையும் இருபுறமும் ஆதாரமாக விளங்கவும், ஆராய்ச்சியுடன் நீதி செலுத்தும் உனது வேலையும், மயிலையும், மெய்ஞ்ஞான சொரூபமான உனது திருவுருவத்தையும் மிகக் கீழ்ப்பட்டவனான நானும் நாள்தோறும் தியானம் செய்யும் பேற்றைப் பெறுமாறு வேண்டுகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## விராலிமலை

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்-
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராகம் ஓது நீப பரிமள இருதாளும்;
ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமுத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்-
ஆராயு நீதி வேலு மயிலு மெய்ஞ்
ஞானாபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும்;
ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி ஆடும் இறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொருள் அதிகாரம்-
ஈடாய ஊமர் போல வணிகரில்
ஊடாடி ஆல வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர குருநாதா;
கூராழி யால்முன் வீய நினைபவன்
ஈடேறு மாறு பாநு மறைவுசெய்
கோபால ராயன் நேய முளதிரு மருகோனே-
கோடாமல் ஆர வார அலையெறி
காவேரி ஆறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி **ராலி** மலையுறை பெருமாளே. 31

*திருவருவ தரிசனம் பெற இத்திருப்புகழை ஓதுக*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



எதிர்த்த அசுரர்களின் சேனை அழிய, இந்திரலோகத்தில் தேவர்கள் குடியேற, பூதங்களும் பிசாசுகளும் பசியாற, துர்கை, காளி, பிடாரி முதலிய தேவதைகள் "ஹரஹரசங்கரா" என்று ஒலியை எழுப்ப வேலை செலுத்திய வயலூரானே! திருநீறு அணிந்து சடையையுடைய இருடிகள், உலக பாசங்களை வென்று, சமாதி நிலையைக் கூடுகின்ற மலைக்குகையுடையதும், மூங்கிலின் மேல் மயில் ஆடவும், மதுவை உண்டு வண்டுகள் பாடவும், கொன்றை மரமானது பொன் போன்று மலர்களை வீசுகின்றதுமான விராலி மலையில் வீற்றிருக்கின்ற பெருமாளே!

ஐந்து பூதங்களும், பைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்னும் ஆறுசமயங்களும் மந்திரம், வேதம், புராணங்கள், கலைகள், ஐம்பத்தொரு விதமான எழுத்துக்கள், தேவர்கள், இயங்கும் மற்றும் இயங்காப் பொருள்களும், பிரமன், திருமால், ருத்ரன், சந்திரன், சூரியன், ஹம்சமந்திரம், விந்து, நாதம் இவையெல்லாம் கலந்த ஒன்றான வடிவமே பரம்பொருள் சொரூபமென்று பாவித்து இருத்தலே சிவயோகம். இதனைப் பெற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கி, சம்ப்ரதாய நெறியில் குருவின் உபதேசம் பெறும் வழியைப் பெறுவேனோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## விராலிமலை

ஐந்து பூதமும் ஆறு சமயமும்
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப-
அண்ட ராதிச ராச ரமும்உயர்
புண்ட ரீகனும் மேக நிறவனும்
அந்தி போல்உரு வானு நிலவொடு வெயில்காலும்;
சந்த்ர சூரியர் தாமும் அசபையும்
விந்து நாதமும் மேக வடிவம
தன்சொ ரூபம தாக உறைவது சிவயோகம்-
தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போய்உப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ;
வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி-
வன்கண் வீரிபி டாரி ஹரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை உருவிய வயலூரா;
வெந்த நீறணி வேணி இருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுகுகல் முழைகூடும்-
விண்டு மேல்மயி லாட இனியகள்
உண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்சு வீசுவி ராலி மலைஉறை பெருமாளே. 32

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கிரவுஞ்ச மலையை வேலினால் பந்தை எடுத்து எரிவது போல், கண் சிவக்கக் கோபித்து அழித்து, மேகம் உதவுவது போல் இந்திரனுக்கு தேவலோகத்தைத் தந்தவனே! கொம்பால் குத்தியும், சம்பங்கோரை போன்ற நுனியால் அழுத்தியும் மலையையும் கூட அடக்கக்கூடிய பலத்துடன் சண்டையிட்டு எதிர்த்து வந்த யானையை உரித்து பார்வதி தேவியின் பயத்தை நீக்கிய சண்பக மலர் அணிந்த சங்கரன் நாள்தோறும் மகிழ்ச்சி கொள்ள, "அது நீயாய் இருக்கிறாய்" (தத்வமஸி) என்ற வேதவாக்யத்தின் இயல்பை விளக்கிய திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் அழகிய பெருமாளே!

புத்தியில் சற்றும் குறிக்கோள் இல்லாமல் மனம் கொதிக்க, சந்தேகம் கொண்டு விஷம் போன்ற சங்கடங்களால் மனம் புண்ணாகித் தாமரை போன்ற பிரகாசமான முகத்தில், மை தீட்டிய, கொடி போன்ற மாதர்கள் மீது ஆசை வைத்த எனக்கு, பொய்யாக முடியும் பிறப்பு ஆகிய கயிற்றை அறுத்து இன்று ஒழுக்கத்தில் நிற்க நற்குணத்தை அளித்து, மகிழ்ச்சியுறச் செய்து, தேன் உண்ணும் வண்டுகள் நிறைந்த வயலூரில் தொண்டு செய்யும் பணியை மேற்கொண்டு, உன்னை வணங்க செந்தாமரை மலர் போன்ற திருவடியைத் தந்தருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருச்செங்கோடு

பொன்ற லைப்பொய்க் கும்பி றப்பைத்
தும்ப றுத்திட் டின்று நிற்கப்
புந்தி யிற்சற் றுங்கு றிக்கைக் கறியாமே-
பொங்கி முக்கிச் சங்கை பற்றிச்
சிங்கி யொத்தச் சங்க டத்துப்
புண்ப டைத்துக் கஞ்ச மைக்கட் கொடியார்மேல்;
துன்றும் இச்சைப் பண்ட னுக்குப்
பண்ப ளித்துச் சம்ப்ர மித்துத்
தும்பி பட்சிக் கும்ப்ர சச் செய்ப் பதிமீதே-
தொண்டு பட்டுத் தெண்ட னிட்டுத்
கண்டு பற்றத் தண்டை வர்க்கத்
துங்க ரத்தப் பங்க யத்தைத் தருவாயே;
குன்றெ டுத்துப் பந்த டித்துக்
கண்சி வத்துச் சங்க ரித்துக்
கொண்ட லொத்திட் டிந்த் ரனுக்கிச் சுரலோகா-
கொம்பு குத்திச் சம்ப ழுத்தித்
திண்ட லத்திற் றண்டு வெற்பைக்
கொண்ட முக்கிச் சண்டை யிட்டுப் பொரும்வேழம்;
சென்று ரித்துச் சுந்த ரிக்கச்
சந்த விர்த்துக் கண்சு கித்துச்
சிந்தை யுட்பற் றின்றி நித்தக் களிகூருஞ்-
செண்ப கத்துச் சம்பு வுக்குத்
தொம்ப தத்துப் பண்பு ரைத்துச்
செங்கு வட்டிற் றங்கு சொக்கப் பெருமாளே. 33

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சடாமகுடம் தரித்தவர்; நஞ்சை உண்டவர்; பாம்பை அணிந்தவர்; மழுவையும் சந்திரனையும் தரித்தவர்; பரிசுத்தமானவர்; டமருகம், மான், அக்னி, சிரமாலை ஆகியவைகளைத் தரித்தவர்; பூமியைத் தாங்கும் மேரு மலையாம் வில்லை தரித்தவர்; பலமுகமாகப் பரந்து ஓடும் கங்கா நதியைத் தரித்தவருமான சிவபிரானது குமரனே! பாம்பு மலையாம் திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் தயாநிதியே! இந்திராணி வளர்த்த மயில் போன்ற தேவசேனையின் நாயகனே! பெரிய உடல், இருள் போன்ற உருவம், நிலவு போன்ற பற்கள், நெருப்பு எழும் கண்கள், அதிரும் குரலில் புகை எழ, இடி போன்ற ஒலி எழ, வானும் மண்ணும் பயம் கொள்ளும்படி வந்த அசுர சேனைகள் இறந்து அழிய, ஒப்பற்ற வேற்படையை பிரயோகித்த அரசே! தேவேந்திரன் போற்றிய பெருமாளே!

வள்ளி அணையும் பன்னிரு புயமும், ஆறு திருமுகங்களும், பன்னிரு கண்களும் சூரியனை அழைக்கும் கோழியும் ஆக எல்லாம் எதிர் தோன்ற, எட்டு திசைகளையும், பூமியையும், ஏழு கடல்களையும், சக்ரவாளக்கிரியையும் வலம் வந்த ஒப்பற்ற பச்சைக் குதிரையாம் மயிலில் ஏறி, பழைய அடியார் கூட்டத்துடன், தேவர் கூட்டமும் இருபுறமும் வர, தமிழும் மறையும் போற்ற அன்று அடியேனை ஆட்கொள்ள அருணையில் வந்தது போல், உனது இரண்டு திருவடிகளையும் வழிபட்டு நிற்கும் இந்தக் குழந்தையாகிய அடியேன் யமனோடு செய்யும் போரினைக் காண வரவேணும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பணிசயிலம் (திருச்செங்கோடு)

கொடிய மறலியும் அவனது கடகமு
மடிய ஒருதினம் இருபதம் வழிபடு
குதலை அடியவன் நினதருள் கொடு பொரும்
அமர்காண-
குறவர் மகள்புணர் புயகிரி சமுகமும்
அறுமு கமும்வெகு நயனமும் ரவிஉமிழ்
கொடியும் அகிலமும் வெளிபட இருதிசை
யிருநாலும்;
படியு நெடியன எழுபுண ரியுமுது
திகிரி திகிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறிப்-
பழைய அடியவ ருடன்இமை யவர்கணம்
இருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ வருமதில் அருணையில் ஒருவிசை
வரவேணும்;
சடில தரவிட தரபணி தரதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவணி தரசிர தரபாரத்-
தரணி தரதநு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுண தர**பணி**
**சயில** விதரண தருபுர சசிதரு மயில்வாழ்வே;
நெடிய உடல்உரு இருளெழ நிலவெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகையெழ இடியெழ
நெடுவானும்-
நிலனும் வெகுவர வருநிசி சரர்தள
நிகில சகலமு மடிய வொர் படை தொடு
நிருப குருபர சுரபதி பரவிய பெருமாளே. **34**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிவயோக நிலையில் கருத்து வரும்படி அருளும் ஞான குருவே! உலகை எல்லாம் படைக்கும் பிரமனுக்குத் தர்மத்தை உபதேசிக்கும் தந்தையாம் திருமாலின் மருகனே! உன்னையே நாடும் அடியேனது துன்பம் தீரும்படி திருவடியைத் தந்தவனே! "தகப்பன்சாமியே" என்று சிவபிரான் அன்புடன் அழைத்தருளிய வடிவேலனே! "தோதிமிதித்தித்........ தனத்ததந்த...." என்று இசையுடன் கணங்கள் சூழ நடனம் செய்து, நான் உயிரைவிடத் துணிந்தபோது திருவுள்ளத்தில் என் மீது இரக்கம் கொண்டு சுபமங்கள வாழ்த்தும் கூறி அருள்புரிந்தவனே! ஓதப்படும் மந்திரங்களின் உட்பொருளாகவும், சிவமயமான பக்தர்களிடம் இரக்கம் உள்ளவனாகவும், ஓம் எனும் பிரணவ எழுத்துக்கு உயிர்நாடியாகவும் நிற்கும் பேரொளியானவனே! ஒதிய மரம் பூத்து பொன் ஆபரணம் போல குகையில் உதிர்க்கின்றதான வகையில் முத்திப் பயன் தரும் ஊதிமலையில் உள்ள மகிழ்வோடு இருந்தருளும் பெருமாளே!

முடியைக் கோதி கொண்டையிட்டு, சூதான வழிகளுக்கு வகை செய்யும் மங்கையரைக் கூடும் அற்ப சுகத்தை நெஞ்சினில் நினையாமல், கோழை மனத்தை ஒழித்து, ஞான குணத்தைப் பெற்று, உமது அருட் பிரபாவங்களைப் பேசும் இடத்தில் அதனைக்கேட்டு இன்புற அருள்புரிவாயே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## ஊதிமலை

கோதி முடித்துக் கனத்த கொண்டையர்
சூது விதத்துக் கிதத்து மங்கையர்
கூடிய அற்பச் சுகத்தை நெஞ்சினில் நினையாதே-
கோழை மனத்தைக் கெடுத்து வன்புல
ஞான குணத்தைக் கொடுத்து நின்செயல்
கூறு மிடத்துக் கிதத்து நின்றருள் புரிவாயே;
நாத நிலைக்குட் கருத்து கந்தருள்
போதக மற்றெச் சகத்தை யுந்தரு
நான்முக னுக்குக் கிளத்து தந்தையின் மருகோனே-
நாடு மகத்தெற் கிடுக்கண் வந்தது
தீரிடு தற்குப் பதத்தை யுந்தரு
நாயகர் புத்ரக் குருக்கள் என்றருள் வடிவேலா;
தோதிமி தித்தித் திமித்த டிங்குகு
டீகுகு டிக்குட் டிகுக்கு டிண்டிமி
தோதிமி தித்தித் தனத்த தந்தவென் இசையோடே-
சூழ நடித்துச் சடத்தில் நின்றுயி
ரான துறத்தற் கிரக்க மும்சுப
சோபன முய்க்கக் கருத்தும் வந்தருள் புரிவோனே;
ஓத எழுத்துக் கடக்க முஞ்சிவ
காரண பத்தர்க் கிரக்க முந்தகு
ஓம்எ னெழுத்துக் குயிர்ப்பும் என்சுடர் ஒளியோனே-
ஓதி யிணர்த்திக் குகைக்கி டுங்கன
காபர ணத்திற் பொருட் பயன் தரு
**ஊதி கிரி**க்குட் கருத்து கந்தருள் பெருமாளே. 35

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஜகமுழுதையும் ஆட்டி வைக்கும் ஈசன் மேருமலையை வில்லாக வளைத்து அதில் வாசுகியை நாணாகக்கட்டி, திரிபுரத்தை எரித்து, யமனை உதைத்து, மன்மதனை சாம்பலாக்கி, தக்கனுடைய யாகத்தை குலைத்து, அவனுக்கு ஆட்டின் முகத்தைப் பொருத்தி, சரசுவதிக்குக் காயம் ஏற்படுத்தி வாட்டின உமாமகேசனின் பாலனே! ("வாழ்க அந்தணர்" என்னும்) திருப்பாசுரம் எழுதிய ஓலையை வைகையாற்று வெள்ளத்தில் எதிர்த்து வரும்படிச் செய்தும், நெருப்பிலிட்ட ஏட்டை வேகாமல் பச்சையாக விளங்கும்படி காட்டியும், சமணரைக் கோபித்து கழுவேற வைத்தருளிய குருநாதனே! என்மனம் விருப்பமுடன் உன்னை ஏத்தும்படி திருவருளைப் பாலித்து என்னைக் கண்பார்த்து அருளுக. தேவசேனையின் பெருமாளே! தீர்த்தமலை நகர்ப் பெருமானே!

மனமே! நீ பாட்டின் பொருளை அறிந்தும், பொருளைச் சொல்லக் கேட்டும் உருகவில்லை; யமன் வரும் வழியைக் கண்டும் உருகவில்லை; சிரமங்களைத் தினம் தோறும் அனுபவித்தும் உணரவில்லை; சிவபிரான் அருளும் வீட்டின்பத்தை விரும்புகின்றாயில்லை; நாவால் அவனைப் போற்ற அறிகிலை; பாழான இந்த பிறவியில் நல்வழிபோக மாட்டேன் என்கிறாய்; உடற் பாசத்தை விடுகின்றாயில்லை; தலைவிதி எப்படியுள்ளது என்பதை அறிகின்றிலை; எனவே (இதையெல்லாம் பார்த்து) ஒரு வார்த்தை சொல்கின்றேன்; கேள்! அவனது திருப்புகழை ஓதி அவனை ஏத்த, உனக்கு நல்லவாக்கையும், உனது உள்ளத்தில் நல்ல கருத்தையும் அருள்புரிவான், அடியார்க்கு எளியவனை வாழ்த்த இருவினையை நீக்கும் முருகனை நீ சிந்திப்பாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## தீர்த்தமலை

பாட்டில் உருகிலை கேட்டும் உருகிலை
கூற்று வழிவரு பார்த்தும் உருகிலை
பாட்டை அநுதினம் ஏற்றும் அறிகிலை தினமானம்-
பாப்ப ணியன்அருள் வீட்டை விழைகிலை
நாக்கின் நுனிகொடு ஏத்த அறிகிலை
பாழ்த்த பிறவியி லேற்ற மனதுநல் வழிபோக:
மாட்ட மெனுகிறை கூட்டை விடுகிலை
ஏட்டின் விதிவழி ஓட்டம் அறிகிலை
பார்த்தும் இனியொரு வார்த்தை அறைகுவன்
இதுகோளாய்-
வாக்கும் உனதுள நோக்கும் அருளுவன்
ஏத்த புகழடி யார்க்கும் எளியனை
வாழ்த்த இருவினை நீக்கு முருகனை மருவாயோ;
ஆட்டி வடவரை வாட்டி அரவொடு
பூட்டி திரிபுர மூட்டி மறலியி
னாட்ட மறசரண் நீட்டி மதனுடல் திருநீறாய்-
ஆக்கி மகமதை வீட்டி ஒருவனை
ஆட்டின் முகமதை நாட்டி மறைமக
ளார்க்கும் வடுவுற வாட்டும் உமையவன்
அருள்பாலா;
சீட்டை எழுதிவை ஆற்றில் எதிருற
ஓட்டி அழல்பசை காட்டி சமணரை
சீற்ற மொடுகழு வேற்ற அருளிய குருநாதா-
தீர்த்த எனதக மேட்டை யுடனினை
ஏத்த அருளுடன் நோக்கி அருளுதி
**தீர்த்த** மலைநகர் காத்த சசிமகள் பெருமாளே. **36**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



போரில் அசுரர்குலம் மங்க, மலைகள் நடுநடுங்க, கடல் கலங்க, பலத்துடன் கூர்மையான சக்திவேலை பிரயோகிக்கும் வெற்றிவேற் கரத்தை உடையவனே! கருணை பொழியும் அருளே முந்த பரிவுடன் பார்வதி கொஞ்ச "கலகல" என்று தண்டையொலிக்க வருகின்ற கடம்பனே! விநாயகப் பெருமானை அண்ணனாகப் பெற்ற குமரனே! அழகிய கனகமலையில் விளங்கும் கந்தப் பெருமாளே!

மாதர்களைத் தொடரும் சிற்றின்ப உலகநெறியில் மிகவும் மோகம் கொண்டு அசடனாகி, மனம் மிக வேதனையடைந்து தினமும் களிப்புடன் சுகமாக வழியிலே விருப்பம் கொண்டு பாவவழியில் செல்ல விரும்பும் புத்தியை நீக்க மாட்டேனோ! சூரிய சந்திரன் இரண்டும் பூரண ஒளியுடன் விளங்குவதைப் போன்ற உனது திருமுகங்களைக் கண்டு அதனால் துன்பங்கள் நீங்கி, உள்ளத்தில் அன்புடன் உன்னைத் துதித்து உனது திருவடியினை வணங்க அருள்புரிவாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கநககிரி

அரிவையர்கள் தொடரும் இன்பத்
துலகுநெறி மிகம ருண்டிட் (டு)
அசடன்என மனது நொந்திட் டயராமல்-
அநுதினமும் உவகை மிஞ்சிச்
சுகநெறியை விழைவு கொண்டிட்
டவநெறியின் விழைவும் ஒன்றைத் தவிர்வேனோ;
பரிதிமதி நிறைய நின்றஃ
தென ஒளிரும் உனது துங்கப்
படிவமுகம் அவைகள் கண்டுற் றகமேவும்-
படர்கள் முழு வதும்அ கன்றுட்
பரிவினொடு துதிபு கன்றெற்
பதயுகள மிசைவ ணங்கற் கருள்வாயே;
செருவிலகும் அசுரர் மங்கக்
குலகிரிகள் நடுந டுங்கச்
சிலு சிலென வளைகு லுங்கத் திடமான-
செயமுதவு மலர்பொ ருங்கைத்
தலம் இலகு மயில் கொளுஞ்சத்
தியை விடுதல் புரியு முன்பிற் குழகோனே;
கருணை பொழி கிருபை முந்தப்
பரிவி னொடு கவுரி கொஞ்சக்
கலகலென வருக டம்பத் திருமார்பா-
கரிமுகவர் தமையன் என்றுற்
றிடுமிளைய குமர பண்பிற்
**கநககிரி** இலகு கந்தப் பெருமாளே. **37**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சீதையைத் தேட மேற்கே சிலதூதர்கள், வடக்கே சிலதூதர்கள், கிழக்கே சில தூதர்கள் என்று அனுப்பிவைத்து குறிப்பினாலே குறித்த பொருளைக் காணவல்ல அனுமனைத் தூதனாகத் தென்திசைக்கு அனுப்ப, சொல்லியனுப்பும் குறிப்பின்படி குறித்த பொருள் கிட்டாது போனாலும் வீணாகத் திரும்பிவருதல் நல்லதல்ல என்று (சுக்ரீவன்) சொல்ல வஞ்சக அரக்கர்களிடம் தோற்காத தீரனாய், கடலைத்தாண்டிச் சென்று சீதை இருந்த அசோக வனத்தை அடைந்து, ஸ்ரீராமர் தந்த பொன்னால் ஆகிய அழகிய மோதிரத்தை சீதையிடம் அளித்த அனுமனுக்கு அன்புடன் அனுக்கிரகித்துக் கதிர்காமத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!

உடுப்பதற்கு ஆடை; பெரும்பசியைத் தணிக்கப் பருகும் உணவு; தேகம் ஒளிபெற நீரும் ஆடையும்; உடல் நோய்களை ஒழிக்க வைத்யம்; வீட்டில் இருக்க இளம் மனைவி, படுப்பதற்கு ஒரு தனி வீடு என்று இவ்வாறாக சௌகரியங்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்று குடும்ப ஸ்தனாகி, இல்லற மயக்கக் கடலில் திளைத்து சுற்றுத்தார் களை பரிபாலித்து இப்படியே உயிர் வீணாக அழிந்து போகும். ஆதலால் எனக்குக் கருணை உள்ளத்தையும், ஞான நிலை அறிவையும் தரவேணும். ஊழ்வினைப்படி பிறப்பு என்னும் மலைச்சுழலில் சுழல்கின்ற என்னை ஆண்டருளும் நாள் ஒன்று உண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கதிர்காமம்

உடுக்கத் துகில் வேணு நீள்பசி
அவிக்கக் கனபானம் வேணுநல்
ஒளிக்குப் புனல் ஆடை வேணுமெய் யுறுநோயை-
ஒழிக்கப் பரிகாரம் வேணும் உள்
இருக்கச் சிறுநாரி வேணுமொர்
படுக்கத் தனி வீடு வேணும்இவ் வகையாவுங்;
கிடைத்துக் க்ருஹ வாசி யாகிய
மயக்கக் கடலாடி நீடிய
கிளைக்குப் பரிபால னாய்உயிர் அவமேபோம்-
க்ருபைச் சித் தமுஞான போதமும்
அழைத்துத் தரவேணு மூழ்பவ
கிரிக்குட் சுழல் வேனை யாளுவ தொருநாளே;
குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சில தூதர் தேடுக வெனமேவிக்-
குறிப்பிற் குறிகாணு மாருதி
இனித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ;
அடிக்குத் திரகார ராகிய
அரக்கர்க் கிளையாத தீரனும்
அலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்
றருட் பொற் றிருவாழி மோதிரம்
அளித்துற் றவர்மேல் மனோகரம்
அளித்துக் **கதிர்காம** மேவிய பெருமாளே. 38

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இடை, பிங்கலை நாடிகள் வழியாக ஒளியுடன் பாயும் வாயுவை மறித்து நான்கு கமலம் போன்ற மூலாதாரத்தில் சேர்த்து, முதுகுத் தண்டின் நடுவில் உள்ள சுழுமுனை மார்க்கத்தில் செலுத்தி, அக்னி, சூரிய, சந்திர மண்டலங்களை ஊடுருவிச் சென்று, சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை முதலிய யோக ஆதாரநிலைகளைக் கடந்து, சந்திர ஒளி போன்ற கனகசபையிலும் ஆயிரத்தெட்டு இதழ் உள்ள சஹஸ்ரார கமலத்திலும் நிறுத்தி, பிரம்ம தேஜசுடன் கூடிய பரநாதம் விளங்கும் இடத்தில் பொருந்தி, குண்டலினி தாக்குவதால் சந்திர மண்டலத்திலிருந்து பெருகும் "கலா இன்ப அமுதூறலை"ப்பருகி, வேதத்தில் பரை என்று கூறப்படும் ஆதார சக்தியையும் நந்தி ஒளியையும் நான் காணும்படி செய்து, குகசாயுஜ்யம் அடையும் பொருட்டு, கபாலத்தின் உச்சியில் உள்ள பிரம்மரந்திரத்தை போதித்து, சீவசக்தி விளங்கும் (சந்திரசேகரன் பாவை விளையாடும் ஸ்படிக நாடை அடைய) அஷ்டாங்க யோகத்தை எனக்கு உபதேசிப்பாயாக.

குதிரை வியாபாரி என வந்து குதிரைகளை விற்று, மகிழ்ந்த மாணிக்கவாசகரை அடிமைகொண்ட கிருபாகரன், பொன் வண்ணத்தன், கையில் குதிரைச் சவுக்கு கொண்ட சிவபிரானின் பாதியில் விளங்கும் சத்தி, கௌரி, மழலைச் சொல்அம்பிகை, பச்சைவடிவினள், சிவை, எனது ஏழு பிறப்பையும் நீக்கிய உமையின் புதல்வனே! காசி, ராமேசுரம், ரத்னகிரி (என்னும் வாட்போக்கி), திருச்செங்கோடு, மதுரை, திருப்பறியலூர், திருவானைக்கா, பழம்பதியாகிய அண்ணாமலை, தணிகை, செந்தூர், நாகை, சீர்காழி, வேளூர், பழநி, குறுக்கை, நாவலூர், வெண்ணை நல்லூர் ஆகிய தலங்களிலும் உமது பிரியமான சோலை மலையிலும் உறைகின்ற முத்தர்புகழ் தம்பிரானே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சோலைவெற்பு (பழமுதிர் சோலை)

ஆசை நாலுசது ரக்கமல முற்றினொளி
வீசி ஓடிஇரு பக்கமொடு றச் செல்வளி
ஆவல் கூரமண்மு தற்சலச பொற்சபையும்
இந்துவாகை-
ஆர மூணுபதி யிற்கொளநி றுத்திவெளி
யாரு சோதி நுறு பத்தினுடன் எட்டுஇத
ழாகி ஏழும்அள விட்டருண விற்பதியின் விந்துநாத;
ஓசை சாலும்ஒரு சத்தம்அதி கப்படிக
மோடு கூடிஒரு மித்தமுத சித்தியொடும்
ஓது வேதசர சத்தியடி யுற்றதிரு நந்தியூடே-
ஊமை யேனையொளிர் வித்துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்டுனது ரத்தில்ஒளிர்
யோக பேதவகை எட்டும்இதில் ஒட்டும்வகை
இன்றுதாராய்;
வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாதவூரனடி மைக்கொளுக்கு பைக்கடவுள்
மாழை ரூபன்முக மத்திகைவிதத்தருண
செங்கையாளி-
வாகு பாதிஉறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாது துகிர் பச்சைவடி விச்சிவை என்
மாசு சேர்எழுபி றப்பையும்அ றுத்தஉமை தந்தவாழ்வே;
காசி ராமெசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேலூர் தெவுர் க்ச்சிமது ரைப்பறியல்
காவை மூதூர்அரு ணக்கிரிதி ருத்தணியல்
செந்தில்நாகை-
காழி வேளூர்பழ நிக்கிரி குறுக்கை திரு
நாவ லூர்திருவெ ணெய்ப்பதியின் மிக்கதிகழ்
காதல் சோலை வளர்வெற் பில் உறை முத்தர்புகழ்
தம்பிரானே.39

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வேகமாக உலவும் வாயு பெற்ற மகன் அனுமனும், வாலியின் புதல்வன் அங்கதனும் நிறைய மலைகளைப் போட்டு கடலில் அணைகட்டி, பகைவன் ஊர் சென்று, போரில் யானைகளைக் கொன்று தேர்களையும் தூளாக்கி, பத்துதலை ராவணனை அம்பினாற் கொன்ற திருமாலின் மருகனே! சூரபதுமன் மூளையை தூளாக்கிய நடனமயில் வீரனே! முனிவர்களும் தேவர்களும் ஞானம் பெற்ற பரிசுத்தமான சோலைமலையில் வீற்றருளும் வேலனே! தியாகமூர்த்தி பெற்ற பெருமாளே!

துடிக்கச் செய்யும் நோய்களால் உடல் வற்றி, கோழை, இருமல், ஈளை, வாதம், பித்தம் ஆகியவை அணுகாமல் இவ்வாழ்வை விட்டு, உலக நூல்களைக் கற்க வேண்டிய வேதனை நீங்கிச், சுகானுபூதியைப் பெற்று மகிழாமல் பாழான வயிற்றை உணவினால் வளரச் செய்து உயிரை வளர்க்கும் அசட்டுயோகி-ஆகலாமா? உருவம் இல்லாத வெட்ட வெளியில் ஆடுகின்ற நாதனே! உனது ஞானத் திருவடிக் கமலங்களை அடைவேனோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சோலை மாமலை

துடிகொள் நோய்க ளோடு வற்றி
தருண மேனி கோழை துற்ற
இருமல் ஈளை வாத பித்தம் அணுகாமல்-
துறைக ளோடு வாழ்வு விட்டு
உலக நூல்கள் வாதை யற்று
சுகமு ளாநு பூதி பெற்று மகிழாமே;
உடல்செய் கோர பாழ்வ யிற்றை
நிதமும் ஊணி னால்உ யர்த்தி
உயிரின் நீடு யோக சித்தி பெறலாமே-
உருவி லாத பாழில் வெட்ட
வெளியி லாடு நாத நிர்த்த
உனது ஞான பாத பத்மம் உறுவேனோ;
கடிது லாவு வாயு பெற்ற
மகனும் வாலி சேயு மிக்க
மலைகள் போட ஆழி கட்டி இகலூர்போய்க்-
களமு றானை தேர்நு றுக்கி
தலைகள் ஆறு நாலு பெற்ற
அவனை வாளி யால டத்தன் மருகோனே
முடுகு வீர சூர பத்மர்
தலையின் மூளை நீறு பட்டு
முடிவ தாக ஆடு நிர்த்த மயில்வீரா-
முநிவர் தேவர் ஞான முற்ற
புநித **சோலை மாம லைக்குள்**
முருக வேல த்யாகர் பெற்ற பெருமாளே. **40**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நெருப்பை வீசும் சிவந்த கண்களுடன் தன்னுடன் சண்டையிட்ட எட்டு திக்கஜங்களின் கொம்புகளை அணிந்த மார்பன்; கயிலை மலையை மிக்க பலத்துடன் பிடுங்க முற்பட்டபோது இருபது புயங்களும் நெரிப்பு உண்டவன்; சிவபிரானின் அங்குஷ்ட (பெரு) விரலின் எள்நுனி அளவுக்கும் ஈடாகாதவன்; உக்ரம் கொண்ட பத்து தலை அரக்கன் ஆகிய ராவணனுக்கு கட்கம் (வாள்) ஒன்றை அளித்த பெரியவர் சிவபிரானும் அவரது தலைவி பார்வதியும் சேர்ந்து இருக்கும் (அர்த்தநாரீச்வரராக விளங்கும்) திருச்செங்கோடும், தெற்கே உள்ள குரு (சுவாமி) மலையும் திருத்தணிகையும் தமது தலங்களாகப் பெற்று காஞ்சியில் விளங்கும் பெருமாளே.

கிரௌஞ்ச மலையில் வேலாயுதத்தை விட்டு அசுரர் படைகளை அழித்தவன்; முன்பு பிரமனைக் குட்டி சிறையிட்டவன்; தேவர்களைக் காத்தவன்; கற்ற பெரியோர்கள் வணங்கும் பெரிய தும்பிக்கைக் கொண்ட கற்பகம் போன்ற கணபதி முன்பு தம் கையைப் பிடித்து அழைத்துச் சென்ற ஒரு குழந்தை; உலகுக்கு ஒரு தந்தை; தினைப்புன வள்ளிக்கிளி ஆசையுடன் பேசும் புரவலன்; பக்தர்களுக்குத் துணை நிற்கும் புதியவன்; வெச்சி மலர் மணம் வீசும் கனத்த புயங்களை உடையவன் என்றெல்லாம் சொல்லும் வகையில், சொற்களைக் கற்று, பிற சொற்களைக் கற்கவேண்டும் என்று ஆசை யொழித்து, அர்த்தத்தில் கரும்புபோல தித்திக்கும் சொற்செல்வத்தை (இனிய வாக்கை)ப் பெறுவேனோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கச்சி (காஞ்சிபுரம்) *

கனக்ரவுஞ் சத்திற் சத்தியை விட்டன்
றசுரர்தண் டத்தைச் செற்ற விதழ்ப்பங்
கயனைமுன் குட்டிக் கைத்தளை யிட்டும்
பரையாளும்-
கடவுளன் புற்றுக் கற்றவர் சுற்றும்
பெரியதும் பிக்கைக் கற்பக முற்றங்
கரதலம் பற்றப் பெற்ற ஒருத்தன் ஜகதாதை;
புனஇளந் தத்தைக் கிச்சை யுரைக்கும்
புரவலன் பத்தர்க் குத்துணை நிற்கும்
புதியவன் செச்சைப் புட்ப மணக்கும் பலபாரப்-
புயனெனுஞ் சொற்கற் றுப்பிற கற்கும்
பசையொழிந் தத்தத் திக்கென நிற்கும்
பொருள்தொறும் பொத்தப் பட்டதொ ரத்தம்
பெறுவேனோ;
அனல்விடுஞ் செக்கட் டிக்கய மெட்டும்
பொரவரிந் திட்டெட் டிற்பகு திக்கொம்
பணிதருஞ் சித்ரத் தொற்றை யுரத்தன் திடமாக-
அடியொடும் பற்றிப் பொற்கயி லைக்குன்
றதுபிடுங் கப்புக் கப்பொழு தக்குன்
றணிபுயம் பத்துப் பத்துநெ ரிப்புண் டவனீடுந்;
தனதொரங் குட்டத் தெட்பல டுக்குஞ்
சரியலன் கொற்றத் துக்ரஅ ரக்கன்
தசமுகன் கைக்குக் கட்க மளிக்கும் பெரியோனுந்-
தலைவியும் பக்கத் தொக்க விருக்குஞ்
சயிலமும் தெற்குச் சற்குரு வெற்புந்
தணியலும் பெற்றுக் **கச்சியில்** நிற்கும் பெருமாளே.
41

* *ப்ருதிவி (மண்) தலம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சந்திரன், திருநீற்றுப்பச்சை, பாம்பு, ஊமத்தம்பூ, கபாலஎலும்பு, கங்கை, கொக்கின் இறகு, ருத்ராக்ஷம், பிரமனால் அன்று எட்டுதற்கு அரிதான கொன்றை மாலை இவை சடையிலே ஒன்றுசேர்ந்து (சிவபிரான் வணங்குவதால் இந்த எல்லாப் பொருள்களும்) தனது திருவடியில் பொருந்தி மணம் வீசப்பெற்றவள்; தாமரை போன்ற திருக்கரங்கள், கொடியும் கரும்பும் போன்றவள்; பக்தர்களுக்கு தக்க பொருளை அருளும் அம்மை; வென்று அடக்கும் குவிந்த கொங்கையுடைய கொம்பு போன்றவள்; ஞானாக்னியை ஏந்தியவள்; திரிபுரை; சிவந்தபட்டாடை அணிந்த இளநங்கை; துர்கை; சக்தி ஆகிய அரிய பச்சை நிறப் பெண்ணின் புதல்வனே! தொண்டர்களுக்கு வீடு பேறளிக்கும் பெருமாளே!

உக்ரம் பொருந்திய சக்தி ஆயுதத்தை உடைய சரவணன்; சித்தத்தில் ஒளிந்திருக்கும் திருடன்; கோழிக் கொடியோன்; வீரக்கழல் அணிந்த தாமரைக் திருவடிகளை உடையவன்; நாகமலைக் கிழவன்; பழநி அரசன்; காஞ்சி முதல்வன்; கங்கணம் அணிந்த வஞ்சியின் தலைவன் என்று செந்தமிழ்ப்பாடி குறைவிலாத அன்பு பூண்டு, குற்றங்களை விலக்கவல்ல பொறுமை குணம் மேற்பட, அற்ப புத்தியைவிட்டு, எனது தீய குணங்கள் நீங்கி, நல்ல சாத்வீக குணம் ஒன்றையே அடைந்து, பற்றுக்களை ஒழித்து ஞான ஆசாரியப் பதவி கைக்கூட உனது திருவருள் சற்றும் கிடைக்காதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கச்சி (காஞ்சிபுரம்)

கறையிலங் குக்ரச் சத்தி தரிக்குஞ்
சரவணன் சித்தத் துக்குள் ஒளிக்குங்
கரவடன் கொற்றக் குக்குட வத்தன் தனிவீரக்-
கழலிடும் பத்மக் கட்செவி வெற்பன்
பழநிமன் **கச்சி**க் கொற்றவன் மற்றுங்
கடகவஞ் சிக்குக் கர்த்தன் எனச் செந் தமிழ்பாடிக்;
குறையில் அன் புற்றுக் குற்ற மறுக்கும்
பொறைகள் நந் தற்பப் புத்தியை விட்டென்
குணமடங் கக்கெட் டுக்குண மற்றொன் றிலதான-
குணமடைந் தெப்பற் றுக்களு மற்றுங்
குறியொடுஞ் சுத்தப் பத்தர் இருக்குங்
குருபதஞ் சித்திக் கைக்கருள் சற்றுங் கிடையாதோ;
பிறைகரந் தைக் கொத் துப்பணி மத்தந்
தலைஎலும் பப்புக் கொக்கிற கக்கம்
பிரமன் அன் றெட்டற் கற்ற திருக்கொன்
றையும்வேணிப்
பிறவுநின் றொக்கத் தொக்கு மணக்குஞ்
சரணிஅம் பத்மக் கைக்கொடி முக்கண்
பெறுகரும் பத்தக் கத்தருள் நற்பங் கயவாவி;
திறைகொளுஞ் சித்ரக் குத்து முலைக்கொம்
பறியுமந் தத்தைக் கைக்கக மொய்க்குந்
த்ரிபுரை செம் பட்டுக் கட்டு நுசுப்பின் திருவான-
தெரிவைஅந் துர்க்கிச் சத்தி எவர்க்குந்
தெரிவருஞ் சுத்தப் பச்சை நிறப்பெண்
சிறுவ தொண் டர்க்குச் சித்தி அளிக்கும்
பெருமாளே. 42

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நீ, நான் எனும் இரண்டற்ற அத்வைத நிலையில், பற்று இன்றி தெளிவான சித்தத்தவர்கள் உணர்ந்த அமலை; அழகிய கச்சிப் பதியில் பிச்சிமலரை அணிந்துள்ள கூந்தலுடையவள்; அறம் வளர்த்தவள்; நுண்ணிய பச்சைக் கொடி போன்றவள்; கற்கண்டு அமுதைவிட அதிகம் தித்திக்கின்ற சொற்களையுடையவள்; எல்லா அண்டங்களையும் உற்பத்தி செய்யும் பொன்மேருமலை போன்றவள்; மணிவடம் அணிந்த மென்மையான இடையை உடைய இளமைப் பருவத்தினள்; அலை களிடையே சங்குகள் பரவும் கம்பையாற்றங்கரையில் தவம் செய்து சிறந்த இருநாழி நெல்லால் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த காமாட்சி தேவியின் பங்காளராம் சிவபிரானுக்கு மெய்ப்பொருளை உபதேசித்த பெருமாளே!

பழங்கள் நிறைந்த மாமரங்களையுடைய திருச்செங்கோட்டையும், பழநியையும், தெற்கிலுள்ள சுவாமி மலையையும், கதிர்காமத்தையும், திருச்செந்தூரை யும், வேலாயுதத்தையும் கனவிலும் நினைத்து அறியாதவன் நான்; சங்கடம் தரும் இந்த உடம்பின் சுகத்துக்கு வேண்டிய பொருள்களைத் திருட்டு வழியிலாவது அடைய வேண்டும் என்று அலைபவன் நான், நீ தேவியின் கையிலுள்ள ரத்தினம்; கங்கைக்குக் கிடைத்த புது முத்தம்; சேமித்து வைக்காமல் இளைத்தவர்களுக்கு வாரி வழங்குபவர் என்றெல்லாம் கூறி உருகி வணங்குதல் இல்லாதவன் ஆகிய என்னுடைய குற்றங்களைப் பொறுத்து உன் அடியார் கூட்டத்துள் ஒருவனாக இருக்க சம்மதித்து வைத்துள்ள உனது கருணையை நான் என்ன சொல்லிப் புகழ்வேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கச்சி (காஞ்சிபுரம்)

கனிதரும் கொக்குக் கட்செவி வெற்பும்
பழநியும் தெற்குச் சற்குரு வெற்பும்
கதிரையும் சொற்குட் பட்டதிருச்செந்
திலும்வேலும்-
கனவிலும் செப்பத் தப்பும் எனைச்சங்
கடஉடம் புக்குத் தக்கஅ னைத்தும்
களவுகொண் டிட்டுக் கற்பனை யிற்கண்
சுழல்வேனைப்;
புனிதனம் பைக்குக் கைத்தல ரத்நம்
பழையகங் கைக்குற் றப்புது முத்தம்
புவியிலன் றைக்கற் றெய்ப்பவர் வைப்பென்
றுருகாளப்-
பொழுதும் வந்திக்கைக் கற்ற எனைப் பின்
பிழையுடன் பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையையென் செப்பிச் செப்புவ தொப்பொன்
றுளதோதான்;
அனனியம் பெற்றற் றற்றொரு பற்றுந்
தெளிதருஞ் சித்தர்க் குத்தெளி சிற் கொந்
தமலை தென் **கச்சி**ப் பிச்சி மலர்க்கொந் தளபாரை-
அறவி நுண் பச்சைப் பொற்கொடி கற்கண்
டமுதினுந் தித்திக் கப்படு சொற்கொம்
பகில அண் டத்துற் பத்திசெய் முத்தின்
பொலமேருத்;
தனிவடம் பொற்புப் பெற்றமு லைக்குன்
றிணை சுமந் தெய்க்கப் பட்ட நுசுப்பின்
தருணி சங் குற்றுத் தத்துதி ரைக்கம் பையினூடே-
தவமுயன் றப் பொற் றப்படி கைக்கொண்
டற மிரண் டெட்டெட் டெட்டும் வளர்க்கும்
தலைவிபங் கர்க்குச் சத்யமு ரைக்கும் பெருமாளே. 43

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வாமனாவதாரம் எடுத்த மிகப்பெரியவன்; கற்றுக் கொடுக்க வந்த சுக்ராசாரியார் உள்ளம் நடுங்கி பயந்து, உண்மையை சாதித்துச் சொன்ன சிறு குழந்தை பிரகலாதனுடைய மழலைச் சொல்லுக்கு எதிர்த்துப் பேசின இரணியனுடைய உடலைக் கிழித்து குடலைப் பிடுங்கிய நரசிங்கமான திருமால்; ஆதிசேடன் மேல் துயில் கொள்பவன்; சக்கரம் ஏந்திய கையன்; மலை போன்றவன்; மேக நிறத்து அழகன்; உலகுக்குத் தந்தை; பாஞ்சசன்னியம் என்னும் சங்கைக் கைக் கொண்ட கூத்தன்; பழைய வடிவைக் கொண்ட மடப்பெண், (சக்தியின் புருஷ வடிவமாகிய) (கச்சிமேற்றளியில் தவங்கிடந்த திருமாலுக்கு, ஞானசம்பந்தர் சிவசாரூபம் அளித்த வரலாறு) மேகநிறத் திருமாலுக்கு வீடு பேறளித்த பெருமாளே!

நெருக்கமாக நிறைந்து மலரும் செங்கழுநீர் மலையாம் தணிகையையும், அதைப்போன்ற பிற தலங்களும், மலையைத் துண்டித்த ஒப்பற்ற செவ்வேலும், பன்னிரு திரண்ட புயங்கள் யாவும் நெஞ்சத்திலே நிறுத்தும் அறிவைப் பெற்று, மயக்கம் நிறைந்த இவ்வுலகு நீர்க்குமிழி போன்றது என்று உணரும் தன்மையை அடைந்து, தத்துவம் கடந்த நிலையை தந்தைக்கு உபதேசித்த இறைவன் என்றும், பக்தர்களின் பயத்தை நீக்கி அருளும் அன்பன் என்றும், அழகிய கச்சியில் நிற்பவன் என்றும் கூறி அன்பால் நெகிழ்ந்துருகும் மனோலயம் பெற்று, அந்த நிலையில் கிடைப்பதான பொருளை அடையும் ஆன்ம பக்குவத்தை அடியேனுக்கு எப்போது அருள்வாய்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கச்சிமேற்றளி

செறிதரும் செப்பத் துற்பல வெற்பும்
பிறிதுமங் கத்தைக் குற்ற விருப்புஞ்
சிகரிதுண் டிக்கக் கற்ற தனிச் செஞ் சுடர்வேலும்-
திரள் புயங் கொத்துப் பட்ட வனைத்துந்
தெளிய நெஞ்சத்துப் புற்று மயக்கம்
திகழ் ப்ரபஞ் சத்தைப் புற்புத மொக்கும் படிநாடும்;
அறிவறிந் தத்தற் கற்றது செப்புங்
கடவுளன் பத்தர்க் கச்சம றுத்தன்
பருள்பவன் பொற்புக் **கச்சி**யுள் நிற்கும்
பெருமான்என்-
றவிழு மன் புற்றுக் கற்றும னத்தின்
செயல் ஒழிந் தெட்டப் பட்டத னைச்சென்
றடைதரும் பக்வத் தைத்தமி யெற்கென்
றருள்வாயே;

குறியவன் செப்பப் பட்ட எவர்க்கும்
பெரியவன் கற்பிக் கப்படு சுக்ரன்
குலைகுலைந் துட்கச் சத்ய மிழற்றுஞ் சிறுபாலன்-
குதலையின் சொற்குத் தர்க்க முரைக்குங்
கனகனங் கத்திற் குத்தி நிணச் செங்
குடர்பிடுங் கித்திக் குற்ற முகச்சிங் கமுராரி;
பொறி விடுந் துத்திக் கட்செவி யிற்கண்
துயில் கொளுஞ் சக்ரக் கைக்கிரி சுத்தம்
புயல் எனும் பொற்புப் பெற்ற நிறத்தன் ஜகதாதை-
புனித சங் கத்துக் கைத்தல நிர்த்தன்
பழைய சந் தத்தைப் பெற்ற மடப்பெண்
புகலு கொண் டற்குச் சித்தி அளிக்கும் பெருமாளே.

44

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கனத்த பெரிய தொப்பையுடன் எள், பொரி, அப்பம், பழம், கிழங்கு, கரும்பு, சர்க்கரை, தேங்காய், கடலை, கற்கண்டு, பிட்டு இவைகளை வாரி உண்டு விழுங்கும் திருவாயர்; உயர்ந்த துதிக்கையால் கவளம் கவளமாக உண்ணும் கற்பக விநாயகன்; முக்கண்ணர்; ஒற்றை கொம்பையுடைய யானை முகத்தர்; மத்தகத்தில் புள்ளிகளை உடைய மலைபோன்ற கணபதியைப் பெற்ற அந்தணியாம் நவசக்ர பீடத்துப் பெண்; கவுரி; பட்டு ஆடைத்தரித்த பெண்மணி; அண்டமெல்லாம் பெற்றவள்; தம்மைப் பணிவார்களின் பிறவிக்கடலை விலக்கும் தேவி; ஏகாம்பரனின் இல்லாள் ஆகிய காஞ்சிகாமாட்சி தேவிக்கு அருகே வரம் பெற்று காஞ்சியில் நின்றருளும் பெருமாளே!

தினைப்புன வள்ளிக்கு ஏற்ற புயங்களை உடையவன்; குமரன் என்று பக்தர்கள் துதிக்கின்ற பொருள்; கற்பனையும், மற்றவைகளும் சொல்கின்ற, தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஆகிய அனைத்தையும் பற்றியும் பற்றற நிற்கின்ற பொருள்; தினமும் தர்க்கம் பேசி சண்டையிட்டு அறுவகைச் சமயத்தாரும் வாதிட்டும் ஒருவருக்கும் தெரிவதற்கு அரியதான ரகசியப் பொருளைத் தரிசித்து, உன்புகழ்பாடி எல்லா திசைகளிலும் உள்ளவர்களுக்கும் எடுத்து நான் உபதேசிக்க, நீ சற்று திருவுளம் வைத்து உன் திருவடித் தாமரையை எனக்கு அருள்புரிவாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## காஞ்சிபுரம் (குமரகோட்டம்)

புனமடந் தைக்குத் தக்க புயத்தன்
குமரன்என் றெத்திப் பத்தர் துதிக்கும்
பொருளைநெஞ் சத்துக் கற்பனை முற்றும்
பிறிதேதும்-
புகலும்எண் பத்தெட் டெட்டியல் தத்வம்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொதுவை என் றொக்கத் தக்கதொ ரத்தந்
தனைநாளும்;
சினமுடன் தர்க்கித் துச்சிலு கிக்கொண்
டறுவரும் கைக்குத் திட்டொரு வர்க்குந்
தெரிவரும் சத்யத் தைத்தெரி சித்துன் செயல்பாடித்-
திசைதொறும் கற்பிக் கைக்கினி யற்பந்
திருவுளம் பற்றிச் செச்சை மணக்கும்
சிறுசதங் கைப்பொற் பத்மம் எனக்கென்
றருள்வாயே;
கனபெருந் தொப்பைக் கெட்பொரி அப்பம்
கனிகிழங் கிக்குச் சர்க்கரை முக்கண்
கடலைகண் டப்பிப் பிட்டொடு மொக்கும்
திருவாயன்
கவளதுங் கக்கைக் கற்பக முக்கண்
திகழுநங் கொற்றத் தொற்றை மருப்பன்
கரிமுகன் சித்ரப் பொற்புகர் வெற்பன் தனைஈனும்;
பனவிஒன் றெட்டுச் சக்ரத லப்பெண்
கவுரிசெம் பொற்பட் டுத்தரி யப்பெண்
பழய அண் டத்தைப் பெற்ற மடப்பெண்
பணிவாரைப்-
பவதரங் கத்தைத் தப்ப நிறுத்தும்
பவதிகம் பார்க்குப் புக்கவள் பக்கம்
பயில் வரம் பெற்றுக் **கச்சி**யில் நிற்கும் பெருமாளே. **45**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இமயத்தில் பிறந்த பெண்; எல்லா உலகையும் ஈன்ற திருவயிற்றையுடைய குளிர்ந்த குணத்தவள்; முப்பத்திரண்டு அறங்களை குறைவில்லாமல் செய்தவள்; நற்குணத்தி; ஸ்ரீசக்ரத்தில் சங்கரி; பாம்பை கை வளையாக அணிந்தவள்; மேருவை வளைத்து திரிபுரத்தை எரித்து கோபித்த தேவி; நீலி; மயிலைப் போன்ற அழகி; சுந்தரி; கொடிய விஷத்தை கழுத்திலே அடக்கியவள்; வேண்டுவோர்க்கு வேண்டுவதை அளிக்கும் கருணை நிறைந்த கண்களை உடையவள்; நிர்வாணி; எங்கள் தாய்; தம்மைத் தியானிக்கும் பக்தர்களிடம் இரக்கம் காட்டும் அம்பிகை; வேதம் துதிக்கும் முக்கண்ணியாம் காமாட்சியம்மை கோயிலில் வீற்றிருக்கும் தேவர்களின் தம்பிரானே!

தலையாய புலவர்கள் போற்றித் துதிக்க, மயில், மலையைப்பிளந்து எறிந்த வேல், முத்துச் சதங்கை தழுவிய தாமரை போன்ற திருவடி இவைகளை வைத்து பெரும் பிரபந்தங்களைப் பாடவல்ல காளமேகம் போன்ற புலவன் இவன்; உண்மை ஞானம் பெற்ற தலைவன் இவன்; தருமங்களைச் செய்யும் பெரும் குணத்தை உடைய பெருமகன் இவன் என்று உலகோர் கூறும்படி மேலான பதத்தைத் தருகின்றதான பிறப்பை நான் பெறமாட்டேனா? பொறுமை உடையவன் இவன்; பொய் உலகைக் கண்டு பயந்த துறவி இவன் என்று உலகோர் சொல்வதில் அதிசயம் இல்லை; அறிவுக்கு மேம்பட்ட பெருநிலையாம் உமது திருவருள் பேற்றைத் தந்து அருளமாட்டாயா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கவுரி திருக்கோட்டம்
## (காஞ்சி காமாட்சி அம்மை திருக்கோயில்)

தலைவலை யத்துத் தரம்பெ றும்பல
புலவர் மதிக்கச் சிகண்டி குன்றெறி
தருமயில் செச்சைப் புயங்க யங்குற வஞ்சியோடு-
தமனிய முத்துச் சதங்கை கிண்கிணி
தழுவிய செக்கச் சிவந்த பங்கய
சரணமும் வைத்துப் பெரும்ப்ர பந்தம்வி
ளம்புகாளப்;
புலவன் எனத்தத் துவந்த ரந்தெரி
தலைவன் எனத்தக் கறஞ்செ யுங்குண
புருஷன் எனப்பொற் பதந்த ருஞ்சன னம்பெறாதோ-
பொறையன் எனப்பொய்ப் ப்ரபஞ்சம் அஞ்சிய
துறவன் எனத்திக் கியம்பு கின்றது
புதுமை யலச்சிற் பரம்பொ ருந்துகை தந்திடாதோ;
குலசயி லத்துப் பிறந்த பெண்கொடி
உலகடை யப்பெற் றவுந்தி யந்தணி
குறைவற முப்பத் திரண்ட றம்புரி கின்றபேதை-
குணதரி சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்நப் புயங்க கங்கணி
குவடு குனித்துப் புரஞ்சு டுஞ்சின வஞ்சிநீலி;
கலப விசித்ரச் சிகண்டி சுந்தரி
கடியவிடத்தைப் பொதிந்த கந்தரி
கருணை விழிக்கற் பகந்தி கம்பரி எங்களாயி-
கருதிய பத்தர்க் கிரங்கும் அம்பிகை
சுருதி துதிக்கப் படுந்த்ரி யம்பகி
கவுரி திருக்கொட் டமர்ந்த இந்திரர் தம்பிரானே. 46

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பால குமரனே! குகனே! கந்தனே! மலையை அழித்த மயில்வாகன வேலவனே! எனத்துதித்து வந்த தேவேந்திர னுடைய கொடிய துன்பத்தை நீக்கியவனே! மணம் வீசும் சந்தனக்கலவை அணிந்தவனே! விசேஷமானதும், பரிசுத்தமான மங்களம் பொருந்திய வீரகங்கணத்தைத் திருப்புயத்தில் அணிந்த அழகிய சிங்கமே! போர்க்களத்தில் வெற்றியைச் சூடும் வயலூர்ப் பெருமானே! உலகுக்கு முதல்வி; இமயம் ஈன்ற தேவி; நீலி; கவுரி; பராசக்தி; மங்கை; குண்டலி; நாளுக்கு நாள் இனிமை தரும் எங்கள் அம்பிகையாம் கன்னி; திரிபுரை; நாதவடிவினள்; அகிலாண்ட நாயகி; ஆலிலை போன்ற வயிறை உடையவள்; கரும்பு போன்று இனிமையானவள்; வெள்ளை நாவல் மரத்தின்கீழ் வீற்றிருக்கும் ஜம்புநாதரின் வஞ்சிக் கொடி போன்ற இல்லத்தலைவி பெற்றருளிய பெருமானே!

வேதங்கள் தேடும் ஒப்பற்ற ஒரு பொருள்; பரவெளியில் விளங்கும் பரஞ்சோதி; சரியை, கிரியை மார்க்கத்தினர் எவராலும் ஓதுதற்கு அரிய, கடந்த நிலையில் நிற்பது; விழிப்பு, கனவு, தூக்கம், சமாதி கடந்த நிலையில் ஞானமயமான அருவம், உருவம், உலகு, உடல், உயிர் ஆகிய அனைத்திலும் கலந்து நிற்பது; சிவஞானிகள் கண்டது; குறைவே இல்லாமல் மூலமாய் நிறைந்துள்ளது; சாதி குலம் இல்லாதது; அடியார்கள் ஞானாகாசத்தை அனுபவித்த பெரியோர்கள் மனம் ஒடுங்கிப் பொருந்திய மோட்ச வீடாகிய பரம சுகக்கடல் போன்றது; இத்தகைய புகழ்வாய்ந்த நினது திருவடியை, ஐம்புலன்களால் உண்டாகிற ஆசைகள், சபலங்கள் ஒழிய (அந்தக்கழலைப்) பெறுவேனோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவானைக்கா (வெண்நாவல் அரசுமனை) *

ஓல மறைகள் அறைகின்ற ஒன்றது
மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவர் எவராலும்-
ஓத அரிய துரியம் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனும் உயிரும் முழுதும் கலந்தது சிவஞானம்;
சால உடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமும் இலதன்றி அன்பர்சொ னவியோமஞ்-
சாரும் அநுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபலம் அறவந்து நின்கழல் பெறுவேனோ;
வால குமர குக கந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதிஇந்த்ரன் வெந்துயர் களைவோனே
வாச களப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா;
ஞால முதல்வி இமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளும் இனிய கனிஎங்கள் அம்பிகை த்ரிபுராயி-
நாதவடிவி அகிலம் பரந்தவள்
ஆலின் உதரம் உளபைங் கரும்புவெண்
நாவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே. 47

* *அப்பு (நீர்த்) தலம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கிரௌஞ்ச மலையும், அசுரர்களும், மாமரமும், கடலும், ஒப்பற்ற ஒரு வேலாயுதத்தால் மோதி உடைபட்டு அழியச் செய்த குமரனே! உயர்ந்த தவசிகள், தேவர்கள், உமது திருவடியைத் தொழுது வழிபடும் அடியார் ஆகியோர் உள்ளத்தில் நாள்தோறும் மகிழ்ச்சியுடன் விளையாடி வீற்றிருப்பவனே! ஆறு அங்கங்கள், யாகங்கள் இவைகளில் வல்ல அந்தணர்கள் "ஹரி ஹரி கோவிந்தா! கேசவா!" என்று கூறி இரண்டு திருவடிகளையும் தொழுகின்ற ஸ்ரீரங்க ராஜனாகிய திருமால் அன்புடன் மகிழும் மருகனே! பிரமனும், இந்திரனும் தமது தலைவன் என்று வணங்கும் கரிவனம் (திருவானைக்காவல்) வாழ்கின்ற ஜம்புநாதர் தந்தருளிய பெருமாளே!

ரத்தம், இறைச்சி, எலும்பு, தோல், நரம்புகள், புழுக்கள், காற்று, நீர் இவைகள் நிரம்பிய குடம், கொழுப்பு, மயிர், மூளை எனப்பட்ட இவை நிறைந்த உடல் என்னும் குடிசையுள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புல வேடர்கள்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலக்காட்டில் ஓடுகின்ற கெட்ட வஞ்சகர்கள்; பொல்லாதவர்கள்; கொலை, பொய், களவு, கள் உண்ணுதல்; குருநிந்தை என்ற பஞ்ச பாதங்களைச் செய்ய அதனால் வேதம், புராணம், ஆகமம் ஆகியவைகளில் சொல்லப்பட்ட சரியை, கிரியை, தேவபூஜை, வழிபாடு, தோத்திரம் இவைகளினால் செய்யும் தியானம் எதையும் அனுஷ்டிக்காமல், அறிவில்லாமல்-ஆசைகளை வளர்க்கும் கொடிய ஆணவம் கொண்ட மாந்தர்களுடன் கூடி வருத்தம் அடைந்த குற்றம் தொலைய பேரின்பவீட்டை நான் காணும்படி அருள்புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கரிவனம் (ஆனைக்கா)

குருதிபு லால்என்பு தோன ரம்புகள்
கிருமிகள் மாலம்பி சீத மண்டிய
குடர்நிணம் ரோமங்கள் மூளை என்பன பொதிகாயக்-
குடிலிடை யோர்ஐந்து வேடர் ஐம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்
கொடியவர் மாபஞ்ச பாத கஞ்செய அதனாலே;
சுருதிபு ராணங்கள் ஆக மம்பகர்
சரியைக்ரி யாஅண்டர் பூசை வந்தனை
துதியொடு நாடுந்தி யானம் ஒன்றையு முயலாதே-
சுமடம தாய்வம்பு மால்கொ ளுந்திய
திமிரரொ டேபந்த மாய் வருந்திய
துரிசற ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே;
ஒருதனி வேல்கொண்டு நீள்க்ர வுஞ்சமும்
நிருதரு மாவுங்க லோல சிந்துவும்
உடைபட மோதுங்கு மார பங்கய கரவீரா-
உயர்தவர் மாவும்ப ரான அண்டர்கள்
அடிதொழு தேமன்ப ராவு தொண்டர்கள்
உளமதில் நாளுங்கு லாவி இன்புற உறைவோனே;
கருதிய ஆறங்க வேள்வி அந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்றிரு
கழல்தொழு சீரங்க ராசன் அண்புறு மருகோனே-
கமலனு மாகண்ட லாதி அண்டரும்
எமது பிரான்என்று தாள்வ ணங்கிய
**கரிவனம்** வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே. 48

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அலைகளின் ஒலிமிகுந்த கடல் கலங்கிட, ஆறுபோல விஷத்தைக் கக்கும் படங்களைக் கொண்ட சர்ப்பராஜனாம் வாசுகி நெடிய கயிறாகவும், எல்லா உலகங்களையும் நிலைபெறும்படி நிறுத்திவைக்கும் மேருமலை மத்தாகச் சுழலவும், ஒப்பற்ற தலைவனாய் நின்று, திருக்கரங்கள் தளர்ச்சியுற, இனிய அமுதத்தைக் கடைந்து தேவர்களின் பசி நீங்க கிருபையுடன் உதவின மேகவண்ணன்; உலகங்கள் அனைத்தையும் அளக்கவல்ல (குட்டை) வாமனன்; அளவிட அரிய திரிவிக்ரமனாம் திருமாலின் மருகனே! பாம்பணிந்த புனிதனாம் சிவன் வணங்க உன் மழலைச் சொல்லால் அறிவை அறிவதுதான் (பிரணவப்) பொருள் என்று அவர் தெளிவுபெற உணர்த்திய பெருமாளே!

குமரனே! குருபரனே! அசுரர்களாகிய இருளை நீக்கும் சூரியனே! சரவணபவனே! பார்வதியின் புதல்வனே! காங்கேயனே! தேவேந்திரன் மகள் தேவசேனையும் குறவர்மகள் வள்ளியும் மருவும் திரண்ட புயங்களை உடையவனே! முருகா சரணம் என்று உருகாத கொடிய வினைகளை உடையவனை; வீணனை, மூடனை, காமத்தில் அழுந்தி மாதர்களிடம் சேர்க்கை இன்பத்தில் சுழலும் அறிவிலியாகிய என்னை ஆண்டருள, கருணைநிறைந்த அடியார் கூட்டத்துடன் ஒருமுறை வேத ஒலி முழக்கமிட வந்த சிலம்பணிந்த திருவடிகளை கனவிலும் நனவிலும் மறவேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவருணை (திருவண்ணாமலை) ✸

குமர குருபர குணதர நிசிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபகி ரதிசுத சுரபதி குலமானும்-
குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரண்என உருகுதல் சிறிதுமில்
கொடிய வினையனை அவலனை அசடனை
அதிமோகக்;
கமரில் விழவிடும் அழகுடை அரிவையர்
களவினொடு பொருள் அளவள அருளிய
கலவி யளறிடை துவளுறும் வெளிறனை
இனிதாளக்-
+ கருணை அடியரொ டருணையில் ஒருவிசை
சுருதி புடைதர வரும்இரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே;
தமர மிகுதிரை எறிவளை கடல்குடல்
மறுகி அலைபட விடநதி உமிழ்வன
சமுக முககண பணபணி பதிநெடு வடமாகச்-
சகல உலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர்
தளர இனியதொர் அமுதினை ஒருதனி
கடையாநின்று
அமரர் பசிகெட உதவிய க்ருபைமுகில்
அகில புவனமும் அளவிடு குறியவன்
அளவு நெடியவன் அளவிட அரியவன் மருகோனே-
அரவு புனைதரு புநிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை அறிவது பொருள்என அருளிய
பெருமாளே. 49

✸ *தேயு (நெருப்புத்) தலம்*

+ *அண்ணாமலையில் அருணகிரியார் பெற்ற அருள் அநுபவம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தாமரை போன்றதாய், இளமையுடன், நறுமணம் வீசும் சிலம்பணிந்த திருவடிகளை உடையவள்; மேருவை வில்லாகக் கொண்டவள்; திரிபுரங்களை எரித்தவள்; கவுரி, பகவதி, பயிரவி, சூலி, சடையுடையவள்; போகங்களை அளிப்பவள்; உமை, திரிபுரை, எல்லா உலகையும் ஈன்ற பதிவிரதை; சமயங்களுக்கெல்லாம் முதல்வி ஆகிய பார்வதியின் குமரனே! கங்கையின் மகனே! நூறு கோடி சிவந்த சூரியர்களை விட அழகான ஒளி வீசும் கருணையே அலங்காரமான உருவத்தை உடையவனே! குருபரனே! திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் சரவணனே! குராமலரை அணிந்த புயங்களை உடையவனே! வேடர்குலத்து பச்சை மங்கையும், தேவர் குமரியும் எப்போதும் இருபுறமும் அழகுடன் விளங்க அவர்களுக்கு வரம் அருளிய பெருமாளே!

கருணையில்லாமல் தலை மயிர் பறிப்பவர்கள்; அரக்கரைப் போன்றவர்கள்; புலால் உண்ணும் மறவரை ஒத்தவர் ஆன சமணர் முதலிய பலவகை பரசமயவாதிகள் பலரும் கூடி கூச்சலிட்டு, குதறி, திட்டி இப்படி நெறி தவறியவர்கள் எண்ணுதற்கும் அரியதான பொருளை, கண்களில் நீர்வர, மொழி குழற, அன்புடன் உருகி உனது திருவருளைப் போற்றும் மனநிலை வந்தால், தந்திர புத்தி, உலகியல் பிடிப்பு, வாக்கு செய்கை மனஉணர்ச்சி இம் மூன்றின் தொழில் அழிந்தால், இருவினைச் சேறு போகுமாறு உதறி விலக்கினால், எனது எனது என்னும் ஆசையாம் குற்றம் அற்றுப் போனால் அறிவால் எளிதில் பெறலாம் என்று வேதங்கள் அறைந்து சொல்லும் தோற்றம் முடிவு இல்லாத அந்த ஒப்பற்றப் பேரின்பப் பொருளை நீ அடியேனுக்கு அருள் செய்யும் நாள் எனக்குக் கிடைக்குமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவருணை

கருணை சிறிதுமில் பறிதலை நிசிசரர்
பிசித அசனம றவர்இவர் முதலிய
கலக விபரித வெகுபர சமயிகள் பலர்கூடிக்-
கலக லெனநெறி கெடமுறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத அரியதை விழிபுனல் வரமொழி குழறாவன்;
புருகி உனதருள் பரவுகை வரில்விர
கொழியில் உலகியல் பிணைவிடில் உரைசெயல்
உணர்வு கெடில்உயிர் புணர்இரு வினையள
றதுபோக-
உதறில் எனதெனு மலமறில் அறிவினில்
எளிது பெறலென மறைபறை அறைவதொ
ருதய மரணமில் பொருளினை அருளுவ
தொருநாளே;

தருண சததள பரிமள பரிபுர
சரணி தமனிய தநுதரி திரிபுர
தகனி கவுரிப வதிபக வதிபயி ரவிசூலி-
சடில தரிஅநு பவை உமை திரிபுரை
சகல புவனமும் உதவிய பதிவ்ருதை
சமய முதல்வித னயபகி ரதிசுத சதகோடி;
அருண ரவியினும் அழகிய ப்ரபைவிடு
கருணை வருணித தனுபர குருபர
**அருணை** நகருறை சரவண குரவணி புயவேளே-
அடவி சரர்குல மரகத வனிதையும்
அமரர் குமரியும் அனவர தமும்அரு
கழகு பெறநிலை பெறவரம் அருளிய
பெருமாளே. 50

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தனனதன...தந்தனந்...தகுகுகுகு...டங்குடங்...என்று மேளம், முரசு, பறை, திமிலை இவைகளெல்லாம் பேரொலி எழுப்பத் தேவர்களின் பேரிகை ஒலிக்கவும், சங்கு, ஊதுகொம்பு முதலியன பேரொலி செய்ய, கடல் அஞ்ச வஞ்சகனாகிய சூரர்கள் சிதறுண்டு மாள மிக்க கோபத்துடன் வேலாயுதத்தைச் செலுத்த, தேவர்கள், பல திசைகளிலும் உள்ளவர்கள், நாகர், மந்திர மலையில் உள்ளவர்கள், பிரமலோகத்தவர் முதலிய யாவரும் மகிழ்ச்சி கொள்ள, திருமாலும் பிரமனும் தொண்டு செய்யும் விருப்புடன் பாட, புன்னகை பூத்த முகத்துடன் தந்தை சிவபிரானுடன் விளங்கும் தாய் கவுரியும் மனம் குழைந்துருகவும், கங்கையும் கண்டு அன்பு கொள்ளும் திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் சங்கரன் கும்பிடும் தம்பிரானே!

நாய், நரி, கழுகு, பருந்தின் கூட்டம், காக்கை, கருடன், பேய், புழு இவையாவும் கண்டு உண்டு இன்பமடையும் உடல்; மலம், ஜலம், எலும்பும் கூடியுள்ள பாத்திரம்; துன்பம் நிறைந்த பிறப்பு வலை, இறப்பு வலை ஆகிய இரண்டும் தொடர்ந்து வருகின்ற உடல்; இப்படிக் கடலின் சிறுமணல் அளவை விட அதிகமாக அநேகவிதமான வடிவங்களை இப்புவியில் எடுத்து அழியக்கூடிய நாயேனை, உன்பால் அன்புளம் கொண்ட தொண்டர்கள் அருகில் சேர்த்து பொன்னுலகின் நிழலில் பொருந்த உனது அருட்கிருபையை அளிப்பது உமது கடமையாகும்; என் உடலும் உயிரும் உமது உடைமையாகும்; எனது தொண்டை ஏற்றுக்கொண்டு, அன்பர்களுடன் கலந்து இன்பம் பெருகி என் வடிவம் அழகுற்று உனது திருவடியில் என்மனம் பொருந்த, தேவர்களும் பொன்மாரி பெய்ய உன்னுடைய அன்பானது இன்றே எனக்குக் கிடைக்காதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவருணகிரி

சினமுடுவல் நரிகழுகு டன்பருந் தின்கணங்
கொடி கெருடன் அலகைபுழு வுண்டுகண் டின்புறுஞ்
செட மளறு மலசலமொ டென்புதுன் றுங்கலந்
துன்பமேவு
சென்னவலை மரணவலை ரண்டுமுன் பின்தொடர்ந்
தணுகு முடல் அநெகவடி விங்கடைந் தம்பரஞ்
சிறுமணலை அளவிடினும் அங்குயர்ந் திங்குலந்
தொன்றுநாயேன்;
கனகபுவி நிழல்மருவி அன்புறுந் தொண்டர்பங்
குறுகஇனி அருள்கிருபை வந்துதந் தென்றுமுன்
கடன்எனது உடலுயிரும் உன்பரந் தொண்டு கொண்
டன்பரோடே-
கலவிநல மருவிவடி வஞ்சிறந் துன்பதம்
புணர்கரண மயில்புறமொ டின்பு கொண் டண்டருங்
கனகமலர் பொழியஉன தன்புகந் தின்றுமுன்
சிந்தியாதோ;
தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தகுகுகுகு குகுகுகுகு டங்குடங் குந்தடந்
தவில் முரசு பறைதிமிலை டிங்குடிங் குந்தடர்ந்
தண்டர்பேரி-
தடுடுடுடு டுடுடுடுடு டுண்டுடுண் டுண்டு டுண்
டிமிடிமிட டகுர் திகுகு சங்குவெண் கொம்புதிண்
கடையுகமொ டொலியகட லஞ்சவஞ் சன்குலஞ்
சிந்திமாளச்;
சினமுடுகி அயில்அருளி உம்பரந் தம்பரந்
திகையுரகர் புவிஉளது மந்தரம் பங்கயன்
செகமுழுது மகிழஅரி அம்புயன் தொண்டுகொண்
டஞ்சல்பாடத்-
திருமுறுவல் அருளின தெந்தையின் பங்குறுங்
கவுரிமனம் உருகஒரு கங்கைகண் டன்புறுந்
**திருவருண கிரி**மருவு சங்கரன் கும்பிடுந்
தம்பிரானே. **51**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வினைகளினின்று நம்மைக் காத்திடும் "ஜெய ஜெய திருவடிமலையே" என்று முனிவர்கள் கூறவும், அசுரர்களின் உடலையும், முடியையும் கிரௌஞ்சமலை காப்பாற்ற நின்றபோதும் அவர்களை சுட்டெரித்த வேலாயுதனே! திருமாலும் பிரமனும் அடி, முடி தேடியும் அவர்களால் அறிய முடியாத வண்ணம் சிவ சுடராக விளங்கிய சிவபெருமானின் செவியில் உபதேசம் செய்தவனே! "ஜெய ஜெயசரணாத்திரி" என்று உச்சரிக்கும் அடியேனுக்கு இருவினைகளையும் பொடியாக்கிய சுடர்வெளியில் "இதோ திருநடம் பார்" என்று மகிழ்ச்சியுடன் கூறும் குருநாதனே! கிளியின் மொழியுடன், பாலின் சுவைபோல வாயிதழ் அமுதமாம் வள்ளியின் மேல் புதுமணத்தை அநுபவிக்கும் சிவமலையாம் அருணைத்தலத்தில் மகிழ்கின்ற அழகிய பெருமாளே!

"ஜெயஜெய அருணாசல" "சிவயநம" - ஜெய ஜெய அருணாசலா'மசிவயந' - ஜெயஜெய அருணாசல "நமசிவய" என்றும், மூலப்பொருளே, ஜெயஜெய அருணாசல "யநமசிவ" ஜெயஜெய அருணாசல "வயநமசி" ஜெயஜெய அருணாசல "சிவயநமஸ்து" என மாறி மாறி ஜெபித்து, ஜெயஜெய என்னும் அருணாசலத்தில் விழியைவைத்து "ஹரஹர சரணாத்திரி" எனத்தியானித்து, உள்ளம் உருகி, இந்த ஜெய ஜெய மந்திரம் குருதந்த பாக்கியம் என உள்ளம்களித்து, சுடர்விடும் திருவடியை "சிவசிவ சரணாத்திரி ஜெயஜெய" என்று தொழுது போற்றிய இன்பம் பெருக அந்த சிவ மந்திரத்தில் பெருகின்ற கடலமுதைப் பருகி மகிழ மாட்டேனோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## அருணாத்திரி

★ செய செய **அருணாத் திரி**சிவ யநமச்
செய செய அருணாத் திரிமசி வயநச்
செய செய அருணாத் திரிநம சிவயத் திருமூலா-
செய செய அருணாத் திரியந மசிவச்
செய செய அருணாத் திரிவய நமசிச்
செய செய அருணாத் திரிசிவ யநமஸ் தெனமாறி;
செய செய அருணாத் திரிதனின் விழிவைத்
தரகர சரணாத் திரியென உருகிச்
செயசெய குருபாக் கியமென மருவிச் சுடர்தாளைச்-
சிவசிவ சரணாத் திரிசெய செயெனச்
சரண்மிசை தொழுதேத் தியசுவை பெருகத்
திருவடி சிவவாக் கியகடல் அமுதைக் குடியேனோ;
செய செய சரணாத் திரியென முநிவர்க்
கணமிது வினைகாத் திடுமென மருவச்
செடமுடி மலைபேற் றவுணர்கள் அவியச்
சுடும்வேலா-
திருமுடி அடிபார்த் திடுமென இருவர்க்
கடதலை தெரியாப் படிநிண அருணச்
சிவசுடர் சிகிநாட் டவனிரு செவியிற் புகல்வோனே;
செய செய சரணாத் திரியெனும் அடியெற்
கிருவினை பொடியாக் கியசுடர் வெளியிற்
றிருநடம் இதுபார்த் திடுமென மகிழ்பொற்
குருநாதா-
திகழ்கிளி மொழிபாற் சுவைஇதழ் அமுதக்
குறமகள் முலைமேற் புதுமண மருவிச்
சிவகிரி **அருணாத் திரி**தல மகிழ்பொற் பெருமாளே.
52

★ *பஞ்சாக்ஷரத் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இமயமலையில் தோன்றிய பொற்பாவை, பச்சைநிற வஞ்சிக்கொடி போன்றவள், அண்டங்களைப் பெற்ற பூவை, சத்தி, அம்பை, ஆகிய பார்வதியின் திருமுலைப்பால் அருந்தியவனே! விளங்கும் உலக ஒழுக்கங்களைச் செம்மைப் படுத்தியவனே! சிவபிரான் கேட்க அவருக்கு ஆகம ஞான ப்ரசங்கம் செய்தவனே! போர்முனையில் சூரனது உடலைப் பிளந்த கூர்மையான வேலைக் கொண்டவனே! மதுரையில் சமணர்கள் அனைவரும் கழுவில் ஏற வைத்தவனே! கங்கையின் மைந்தனே! அடியவர்க்கு எளியவனே! தேவர்கள் வணங்கும் கந்தனே! குறத்தியின் தனத்தில் முழுகும் கடம்பனே! புகழ்வாய்ந்த அருணாபுரியில் பெரிய கோபுரத்தில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமாளே!

கரிய இருட்பிழம்பு போன்ற உடலுடன், ஒலி எழுப்பும் கால் குளம்புகளுடன், நெருப்பைக்கக்கும் பார்வையுடைய கண்களுடன், நீண்ட கொம்புகளுடன் கூடிய கோபம்நிறைந்த மதயானை போன்ற எருமை மேல் வருகின்ற எமன் பாசக்கயிற்றை எறிந்து உயிரைப் பறிப்பான் என்னும் மனக்கவலையில் உறவினரும், மக்களும் துக்கமுற்று வருந்த மரணம் வரும் நாளில், உம்முடைய தாமரை போன்ற திருமுகங்களும், அழகான புன்சிரிப்பும் நீண்ட கண்களும், காதணி (குதம்பை) தோடு, வாகுவலயம், ஆகிய ஆபரணங்களுடன், வெற்றிவேலாயுதமும் விளங்க, வேகமாக உலகம் சுற்றிய மயிலும், சதங்கை, வீரக்கழல், தண்டை இவையணிந்துள்ள திருவடியுடன் வந்து எனக்கு அருள்புரிய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவருணை

தமர குரங்களுங் காரி ருட்பி ழம்பு
மெழுகிய அங்கமும் பார்வை யிற்கொ ளுந்து
தழல்உமிழ் கண்களுங் காளம் ஒத்த கொம்பு
முளகதக் கடமாமேல்-
தனிவரும் அந்தகன் பாசம் விட்டெ றிந்து
அடவரு மென்றுசிந் தாகு லத்தி ருந்து
தமர்அழ மைந்தரும் சோக முற்றி ரங்க
மரணபக் குவமாநாள்;
கமல முகங்களும் கோம ளத்தி லங்கு
நகையு நெடுங்கணும் காதி னிற்று லங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்க
தமுமடற் சுடர்வேலும்-
கடிதுல கெங்கணுந் தாடி யிட்டு வந்த
மயிலும்இ லங்கலங் கார பொற்ச தங்கை
கழல்ஒலி தண்டையங் காலும் ஒக்க வந்து
வரமெனக் கருள்கூர்வாய்
இமகிரி வந்த பொன் பாவை பச்சை வஞ்சி
அகில தலம் பெறும் பூவை சத்தி அம்பை
இளமுலை யின் செழும் பால்கு டித்திலங்கும்
இயல்நிமிர்த்திடுவோனே
இறைவர் இறைஞ்ச நின் றாக மப்ர சங்கம்
உரைசெய் திடும்பிரசண் டாவி சித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூரு டற்பி ளந்த
அயிலுடைக் கதிர்வேலா;
அமணர் அடங்கலும் கூட லிற்றி ரண்டு
கழுவில் உதைந்துதைந் தேறவிட்டு நின்ற
அபிநவ துங்ககங் காந திக்குமைந்த
அடியவர்க் கெளியோனே
அமரர் வணங்குகந் தாகு றத்தி கொங்கை
தனில் முழு குங்கடம் பாமி குத்த செஞ்சொல்
**அருணை** நெடுந்தடங் கோபு ரத்த மர்ந்த
அறுமுகப் பெருமாளே. **53**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திரிபுரம் என்னும் (மும்மலக்) காடு எரிந்து பொடியாகவும், அழகான மன்மதன் அழியவும் செய்த சிவபிரானின் அன்பால் வந்து அடியார்க்கு அருள்பவனே! எட்டுத் திசைகளிலும் உள்ளவர்கள் பயப்படும்படி வந்த சூரனை தமது சக்தி வேலாயுதத்துக்கு இரையாகச் செய்து அருளியவனே! மலைக்காட்டில் பரிவுடன் விளங்கிய குறவள்ளி, யானைக்கு பயந்தபோது அவளை அணைத்து மகிழ்வித்தவனே! கடையவனாகிய நான் சிவப்பேறு அடைவதற்கு வேண்டிய வழியினைத் தந்து என்னை ஏற்றுக் கொள்வீராக! ஞானப் பொலிவு பெற்ற திருக்காளத்தியில் வாழ்கின்ற கந்தப் பெருமாளே!

பொருள் நிரம்பிய இவ்வுலகில் வாழும் இவ்வுடலில் ஐந்து சதிக்காரர்கள் அன்புள்ளவர்கள் போல் புகுந்து, உலைதலான தொழிலை மேற்கொண்டு, அதனால் மனம் சலித்து சம்சாரம், செல்வம் இவைகளை அனுபவித்து உறவினர் மகிழ்ச்சியுடன் புகழும் வாழ்வை விரும்பி, கழுகும் நாயும் உண்ணும் பிணமாய் குழியிலே போகும் இந்த உடலை விரும்பி, பழுதாகி அழிகின்ற என்னை, பொய்யான உலக மாயை, குலம், குடி என்கின்ற பற்றுக்கள் எல்லாம் வற்றிப்போக, முத்தி கொடுக்கும் இன்ப வழியைக்காட்டும் சிவஞானமாகிய உனது திருவடிகளைத் தந்தருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருக்காளத்தி ✱

சரக்கே றித்தப் பதிவாழ் தொந்தப்
பரிக்கா யத்திற் பரிவோ டைந்துச்
சதிக்கா ரர்ப்புக் குலைமே விந்தச் செயல்மேவிச்-
சலித்தே மெத்தச் சமுசா ரம்பொற்
சுகித்தே சுற்றத் தவரோ டின்பத்
தழைத்தே மெச்சத் தயவோ டிந்தக் குடிபேணிக்;
குரக்கோ ணத்திற் கழுநா யுண்பக்
குழிக்கே வைத்துச் சவமாய் நந்திக்
குடிற்கே நத்திப் பழுதாய் மங்கப் படுவேனைக்-
குறித்தே முத்திக் குமறா வின்பத்
தடத்தே பற்றிச் சகமா யம்பொய்க்
குலக்கால் வற்றச் சிவஞா னம் பொற் கழல்தாராய்;
புரக்கா டற்றுப் பொடியாய் மங்கக்
கழைச்சா பத்தைச் சடலா னுங்கப்
புகைத் தீ பற்றப் புகலோர் அன்புற் றருள்வோனே-
புடைத்தே எட்டுத் திசையோர் அஞ்சத்
தனிக்கோ லத்துப் புகுசூர் மங்கப்
புகழ்ப்போர் சத்திக் கிரையா நந்தத் தருள்வோனே;
திருக்கா னத்திற் பரிவோ டந்தக்
குறக்கோ லத்துச் செயலாள் அஞ்சத்
திகழ்ச்சீ ரத்திக் கழல்வா என்பப் புணர்வோனே-
சிவப்பே றுக்குக் கடையேன் வந்துட்
புகச்சீர் வைத்துக் கொளுஞா னம்பொற்
றிருக்கா ளத்திப் பதிவாழ் கந்தப் பெருமாளே. 54

✱ *வாயு (காற்றுத்) தலம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சடையில் சந்திரனையும் கங்கையையும் உலவும்படி அருளியவர்; மார்பில் பாம்பை அணிந்தவர்; வில்லையும் சூலத்தையும் ஏந்திய கையினர்; ஆழமான நீண்ட கடலில் வந்த ஆலகால விஷத்தைத் தமது கழுத்திலே கொண்ட சோதியராம் சிவபெருமானது தோள்களில் தவழ்ந்து பொலிவுற்ற குருநாதனே! நரசிங்கமாகத் திரிந்த திருமாலின் கர்வம் பொடிபட சரப பட்சியாய் பறந்து "ஹஹா" என்ற சப்தத்துடன் வந்த பெருமானாகிய வீரபத்ரர் முன்பு (தட்சயாகத்தில்) சூரியனைத் தண்டித்த தோஷம் நீங்கத் தவம் செய்த தட்சிண கயிலாயத்தில் (காளத்தியில்) வாழ்வருளும் பெருமாளே!

பிரமன் படைத்துள்ள அசைவன-அசையாதவன என்னும் இந்த அண்டத்தில் உள்ள பூமியில் ஐம் பூதங்களுடன் கூடி மனிதஉரு கொண்டு, பந்த பாசத்தில் கட்டுண்டு, ஆசைப்பட்டு, இஷ்டப்படி திரிந்து, மாதர்களின் வஞ்சக சூதில் திரிகின்ற பொய்யன், ஆகிய நான் வேதனைப்பட்டு, சோர்ந்து நோயும் வினையும் வந்து உடலை மூட அதனால் கலங்கிடாமல், நல்ல அறிவைத் தந்து காப்பாற்றுவீராக! சிவபிரானின் இடப்பக்கத்தில் இருக்கும் அழகி ஆதி பெற்ற குழந்தையே! தண்டையைத் திருவடியில் அணிந்தவனே! கோழிக் கொடியைக் கொண்டவனே! (திருவருளைப் பாலிப்பீராக!)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## தென்கயிலாயம் (காளத்தி)

பங்கய னார்பெற் றிடுஞ்ச ராசர
அண்டம தாயுற் றிருந்த பார்மிசை
பஞ்சவர் கூடித் திரண்ட தோர்நர உருவாயே-
பந்தம தாகப் பிணிந்த ஆசையில்
இங்கித மாகத் திரிந்து மாதர்கள்
பண்பொழி சூதைக் கடந்தி டாதுழல் படிறாயே;
சங்கட னாகித் தளர்ந்து நோய்வினை
வந்துடல் மூடக் கலங்கி டாமதி
தந்தடி யேனைப் புரந்தி டாய்உன தருளாலே-
சங்கரர் வாமத் திருந்த நூபுர
சுந்தரி ஆதித் தரும்சு தாபத
தண்டைய னேகுக் குடம்ப தாகையின் முருகோனே;
திங்களு லாவப் பணிந்த வேணியர்
பொங்கர வாடப் புனைந்து மார்பினர்
திண்சிலை சூலத் தழுந்து பாணியர் நெடிதாழ்வார்-
சிந்துவி லேஉற் றெழுந்த காளவி
டங்கள மீதிற் சிறந்த சோதியர்
திண்புய மீதிற் றவழ்ந்து வீறிய குருநாதா;
சிங்கம தாகத் திரிந்த மால்கெரு
வம்பொடி யாகப் பறந்து சீறிய
சிம்புள தாகச் சிறந்த காவென வருகோமுன்-
செங்கதி ரோனைக் கடிந்த தீவினை
துஞ்சிட வேநற் றவஞ் செய் தேறிய
தென்கயி லாயத் தமர்ந்து வாழ்வருள் பெருமாளே. 55

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"தகுட தகுதகு...திகுட...தடுடு...டிங்குட்" என்று தாளம் ஒலிக்கும் மத்தளம், பறைகள், ஊதுகுழல், பம்பை, கரடிகை என்னும் பறை, உடுக்கை, வீணை ஒலி முதலியன போர்க்களத்தில் பேரொலி எழுப்ப, பிணங்களைத் தின்று கூத்தாடும் கருடன் முதலிய பறவைகள் பசி அடங்க, சூரர்கள் அழிவுற, கடல்கள் வற்றிட, ஆதிசேஷனும் அஞ்சும்படி வேலாயுதத்தை செலுத்தியவனே! கயிலை மலையில் ஆடும் தந்தை சிவபிரான் மனம் உருகும்படி முன்பு அவருடன் கொஞ்சி விளையாடி கனகசபைதனில் வீற்றிருந்தருளும் கந்தப்பெருமானே!

குகனே! குருபரனே! என்று மனதால் புகழ, உனதருளால் எனது நாவில் இன்பரசம் பொங்கி, சிவ அமுது ஊறி அதனால் பசியாறி, கொடிய இருவினைகளின் மூலம், கேடு, நோய்கள் முதலியன வேரோடு அழியவும் "நமசிவய ஓம்" என்று ஓதி மகிழ்ச்சி பெருகவும், இரவு பகலற்ற இடத்தை அடைந்து, இணையில்லாத திருவிளையாடலும் பரகதியும் இதுவே என்னுணர்ந்து, அழகான பவளம் போன்ற திருமேனியுடன் உமது அழகிய திருவடியை அடைந்த அடியார்கள் உடன் வர, அழகிய மயிலில் ஏறி வந்து உனது பொன் போன்ற திருவடிகளைத் தந்தருளுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கனகசபை (சிதம்பரம்) ✱

குகனெ குருபர னேயென நெஞ்சிற்
புகழ அருள்கொடு நாவினில் இன்பக்
குமுளி சிவஅமு தூறுக உந்திப் பசியாறிக்-
கொடிய இருவினை மூலமும் வஞ்சக்
கலிகள் பிணிஇவை வேரொடு சிந்திக்
குலைய நமசிவ யோமென கொஞ்சிக் களிகூரப்;
பகலும் இரவும்இ லாவெளி யின்புக்
குறுகி இணையிலி நாடக செம்பொற்
பரம கதிஇது வாம்என சிந்தித் தழகாகப்-
பவள மனதிரு மேனியு டன்பொற்
சரண அடியவ ரார்மன வம்பொற்
றருண சரண்மயி லேறிஉன் அம்பொற் கழல்தாராய்;
தகுட தகுதகு தாதக தந்தத்
திகுட திகுதிகு தீதக தொந்தத்
தடுடு டுடுடுடு டாடக டிங்குட் டியல்தாளம்-
தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
தடிய ழனவுக மாருத சண்டச் சமர்ஏறிக்;
ககன மறைபட ஆடிய செம்புட்
பசிகள் தணிவுற சூரர்கள் மங்கக்
கடல்கள் எறிபட நாகமும் அஞ்சத் தொடும்வேலா-
கயிலை மலைதனில் ஆடிய தந்தைக்
குருக மனமுன நாடியெ கொஞ்சிக்
**கனக சபை**தனில் மேவிய கந்தப் பெருமாளே. 56

✱ *ஆகாயத்தலம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தேவர்கள் பிரமித்து ஓட, வித்யாதரர்கள், கந்தருவர், பிரமனும் மனம் சோர்வடைந்து ஓட, எட்டுத்திசையிலுள்ள பரந்த பூமியை உண்ட மாயோனும் அஞ்சி உனது திருவடி சேவையை வேண்டிட, கொடிய அசுரர்களின் காட்டுக் கூட்டம் எரிந்துவிழ நெருப்பு போன்ற அம்பினை செலுத்திய வேலனே! பருத்த தனத்தை உடைய குறமங்கை இன்புற்று மகிழ அவளது தோளை அணைந்து உருகி, தேவ சேனையை மணந்த கந்தவேளே! திரிபுரங்கள் என்னும் காடு சிதறுண்டு அழிய, சிரித்தே பெரு நெருப்பை ஏவிய அழகராம் தேவர்கள் புகழும் செம்பொன் அம்பலத்தாடும் அம்பலவாணருக்குத் தம்பிரானே!

மீண்டும் மீண்டும் விந்துவில் ஊறி கருவிலே தோன்றித் என் உடலானது வெந்துபோய் வாடி, பல கணக்கில்லாத வடிவங்களை எடுத்து அழிந்து அழிந்து போன என்னை, உமது திருவுள்ளம் மகிழ, ஆட்கொண்டருளுமாறு “பிணிமுகம்” என்னும் யானை மீது எழுந்தருளி, தேவர்களும் அடியார்களும் சூழ, என்னுடைய வஞ்சனைக்காடு அழிய, இசையைப் பாடிவரும் தேவரம்பையர் உள்ளம் கனிவுற்று பந்தடித்து நடனத்துடன் வர, வண்டுகள் மொய்க்கும் கடம்ப மாலை அணிந்த தோள்களும், பொன்முடியும் அழகிய திருப்பாதத் தாமரையும் எனக்கு முன் தோன்றி உன்னை தியானிக்கும் உள்ளத்தை நீ தந்தருளுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## செம்பொனம்பலம் (சிதம்பரம்)

வந்து வந்துவித் தூறி என்றனுடல்
வெந்து வெந்துவிட் டோட நொந்துயிரும்
வஞ்சி னங்களிற் காடு கொண்டவடி வங்களாலே-
மங்கி மங்கிவிட் டேனை உன்றனது
சிந்தை சந்தொஷித் தாளு கொண்டருள
வந்து சிந்துரத் தேறி அண்டரொடு தொண்டர்சூழ;
எந்தன் வஞ்சனைக்காடு சிந்திவிழ
சந்த ரண்டிசைத் தேவ ரம்பையர்க
ணிந்து பந்தடித் தாடல் கொண்டுவர மந்திமேவும்-
எண்க டம்பணித் தோளும் அம்பொன்முடி
சுந்தரந் திருப் பாத பங்கயமும்
என்றன் முந்துறத் தோணி யுன்றனது சிந்தைதாராய்;
அந்த ரந்திகைத் தோட விஞ்சையர்கள்
சிந்தை மந்திரத் தோட கெந்தருவ
ரம்பு யன்சலித் தோட எண்திசையை
உண்டமாயோன்-
அஞ்சி உன்பதச் சேவை தந்திடென
வந்த வெஞ்சினர்க் காடெ ரிந்துவிழ
அங்கி யின் குணக்கோலை உந்திவிடு
செங்கைவேலா;
சிந்து ரம்பணைக் கோடு கொங்கைகுற
மங்கை இன்புறத் தோள ணைந்துருக
சிந்து ரந்தனைச் சீம ணம் புணர்நல் கந்தவேளே-
சிந்தி முன்புரக் காடு மங்கநகை
கொண்ட செந்தழற் கோலர் அண்டர்புகழ்
**செம்பொன் அம்பலத்** தாடும் அம்பலவர் தம்பிரானே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நரிகள், நாய்கள், செம்பருந்துகள் முதலியன சிவந்த ரணகளத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைய, (அசுரர்களது) கண், தலை, கழுத்து, கால், கை எலும்புகள் இவைகளை அழியும்படி செய்த வேலனே! குளங்களில் உள்ள தாமரை மலர்களில் ஒளிகொண்ட வண்டுகள் "தனந்தந்தம்.. தனந்தந்தம்"...என்று ஒலிக்கக் கொஞ்சுகின்ற சிறுகூர்த் தலத்தில் உறைபவனே! தவத்தினரும், ஜபத்தினரும் சிவநெறியுடைய அடியார்களும் பிரியத்துடன் நாடி அடைகின்ற தலமாகிய பொன் அம்பலத்தில் வீற்றருளும் பெருமாளே!

மனக்கவலை, துன்பம், இவை தொடர்புள்ள இவ்வுடலில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளில் உண்டாகும் துன்பத்தினால் வேதனைப் படும் ஏழையாகிய நான் நற்குணம் ஒன்றும் இல்லாதவன்; ஆண்மையில்லாதவன்; கீழானவன்; இழிவான கோப குணங்களைக் கொண்டவன். நான் தெளிவுற்று உமது பழைய தொண்டன் என்னும் நிலையை அடைய பாம்பு, சந்திரன், குருந்த மலர், பிரமகபாலம், கங்கை இவை அணிந்த செஞ்சடையராம் சிவபிரான் புகழ்ந்தும், கண்டு மகிழ்ந்தும் கும்பிடும் செம்பொற் சிலம்பு ஒலிக்கும் தாமரைக் திருவடிகளை எனக்குத் தந்து எனது குறைகளைத் தீர்த்தருளுக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## அம்பலம் (சிதம்பரம்)

தியங்குஞ்சஞ் சலந்துன்பம்
கடந்தொந்தம் செறிந்தைந்திந்
த்ரியம்பந்தம் தரும்துன்பம் படும் ஏழை-
திதம்பண்பொன் றிலன்பண்டன்
தலன்குண்டன் சலன்கண்டன்
தெளிந்துன்றன் பழந்தொண்டென் றுயர்வாகப்;
புயங்கந்திங் களின்துண்டங்
குருந்தின்கொந் தயன்றன்கம்
பொருந்துங்கங் கலந்தஞ்செஞ் சடைசூடி-
புகழ்ந்துங்கண் டுகந்துங்கும்
பிடுஞ்செம்பொன் சிலம்பென்றும்
புலம்பும்பங் கயந்தந்தென் குறைதீராய்;
இயம்புஞ்சம் புகந்துன்றுஞ்
சுணங்கன்செம் பருந்தங்கங்
கிணங்குஞ்செந் தடங்கண்டுங் களிகூர-
இடும்பைங்கண் சிரங்கண்டம்
பதந்தங்தங் கரஞ்சந்தொன்
றெலும்புஞ்சிந் திடும்பங்கஞ் செயும்வேலா;
தயங்கும்பைஞ் சுரும்பெங்குந்
தனந்தந்தந் தனந்தந்தந்
தடந்தண்பங் கயங்கொஞ்சுஞ் சிறுகூரா-
தவங்கொண்டும் செபங்கொண்டும்
சிவம்கொண்டும் ப்ரியங்கொண்டும்
தலந்துன்றும் பலந்தங்கும் பெருமாளே. 58

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அழகான மணிமுடிகள் உடைய பாதாள லோக ஆதிசேஷனும், பச்சை நிறம் கொண்ட சர்ப்பராஜனும், பதஞ்சலியும், மநுநெறிதவறாது ஆண்ட சோழ அரசனும், தேவர்கள் தலைவன் இந்திரனும் புகழும் புலியூரில் வாழும் சபாநாயகர், மடமயிலாம் சிவகாமசுந்தரி இருவரும் மகிழும் தேவசேனாபதியே! மலைமகள் தந்த வாழ்வே! அழகிய அம்பலத்தில் ஆடும் சிவசிவ ஹரஹர தேவா நமோநம! தெரிசிப்பவர்களுக்கு பரகதியை அருள்பவனே நமோநம! எத்திசையிலும் புகழிலும் வாழ்பவனே நமோ நம! இனிய சொற்களைப் பேசும் வள்ளி நாயகியின் மணாளனே நமோ நம! திரிபுரம் எரித்த தலைவனே நமோநம! ஜெயஜெய ஹரஹர தேவா! தேவர் தலைவர்களுக்குத் தம்பிரானே!

துர்க்குணம் கொண்ட விரகதாபம் உடையவன்; வேதாளம் போன்றவன்; அசடன்; குணமில்லாதவன்; ஆசாரம் இல்லாத ஈனன்; அகதி, மறவன், வீம்பு பேசுபவன்; பஞ்சபூதங்கள் சேர்ந்த பயனற்றவன்; மூடருள் மூடன், கருவிலே வந்த வீணன், அழுகிப் போனதும் அவிந்து வீணானதும் ஆகிய பண்டம் போன்றவன்; விதவிதமாக உண்பவன்; அன்பு இல்லாத வஞ்சனை எண்ணம் கொண்டவன்; உன்மத்தம் கொண்டவன்; விகார நடவடிக்கை பூண்டவன், கோபி, மூதேவி மூடிய கலியன்; அலி; மாறுபட்ட வாழ்வை உடையவன்; குடியன்; அறிவுரை விரும்பாத மாநுடப்பதர்; இடிபோல் பேசுபவன்; மகா பாதகன், கதிகெட்டவள் இப்படிக் கீழானனைவனாம் அடியேனை ஆண்டருளுவது எந்த நாளோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## புலியூர் (சிதம்பரம்)

அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார ஈனனை
அகதியை மறவனை ஆதாளி வாயனை அஞ்சுபூதம்
அடைசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணாதி வீணனை
அழுகலை அவிசலை ஆறான வூணனை
அன்பிலாத
கவடனை விகடனை நானா விகாரனை
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனை அலியனை ஆதேச வாழ்வினை
வெம்பிவீழும்
களியனை அறிவுரை பேணாத மாநுட
கசனியை அசனியை மாபாத னாகிய
கதியிலி தனைஅடி நாயேனை ஆளுவ
தெந்தநாளோ

மவுலியில் அழகிய பாதாள லோகனும்
மரகத முழுகிய காகோத ராஜனும்
மநுநெறி யுடன்வளர் சோணாடர் கோனுடன்
உம்பர்சேரும்
மகபதி புகழ்புலி யூர்வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வானாடர் கோவென
மலைகள் உமைதரு வாழ்வே மனோகர
மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவா நமோநம
தெரிசன பரகதி யானாய் நமோநம
திசையினு மிசையினும் வாழ்வே நமோநம
செஞ்சொல்சேரும்
திருதரு கலவி மணாளா நமோநம
திரிபுரம் எரிசெய்த கோவே நமோநம
ஜெயஜெய ஹரஹர தேவா சுராதிபர் தம்பிரானே. 59

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கடல், மேகங்கள், ஆதிசேஷன் முடி, இவை பொடிபட்டு அலறவும், சூரனும், எழுகிரியும், அசுரர்களும் அழியுமாறு கடலில் வேலை செலுத்திய பெருமையுடையோனே! "ஓம் நமசிவய" என்னும் பிரணவ பஞ்சாட்சரத்திற்கு சுவாமியான சுத்த அடியார்களுக்கு உபகாரம் செய்பவரும், பச்சை உமையைபாகத்தில் கொண்டவருமான அருள் சிகாமணிக்கடவுள் பெற்ற குழந்தையே! ஆதி கற்பக விநாயகருக்குப்பின் வந்த சரவணப் பெருமாளே! பரப்பிரமமான சிவபிரானுக்கு மூலப்பொருளை ஓதுவிக்கும் தன்மையை அறிந்த தலைவனே! தினமும் தினைப்புனத்துக்குச் சென்று ஆசையுற்ற குற வள்ளியை பரிசுத்தமான வகையில் திருமணம் செய்து கொண்டு, புலியூரில் பொன்னும் பளிங்கும் பிரகாசிக்கும் அழகு கோபுரத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கும் தம்பிரானே!

வாதம், பித்தம், சூலை, புண்கட்டி, கிரந்தி, கோழை, இருமல், கண்டமாலை, புற்றுப்புண், பலவித ஜன்னிநோய், மாலைக்கண், கண்ணில் பூவிழுதல், செவிடு, ஊமை, கெட்டவலி நோய்கள், மூலநோய் இப்படி நோய்கள் முதிரும்படியான மரம் போன்ற இந்த உடல்; தொன்னூற்றாறு தத்துவங்கள் கொண்ட இந்த உடல்; வேதங்களுக்கு ஆதிமூலமாகிய இறைவன், ரட்சிக்கின்ற உருவம் எடுத்து, விளையாடுவது போல் ஓட்டுவிக்கின்ற கடல் தோணி போல் அலையும் இந்த உடல், சூழ்நிலைக்கேற்ப பல வேஷங்களைப் பூண்டு, பொருள் ஆசையால் திரிந்து, விஷகுணத்தால் நலிந்து, வீட்டைக் கட்டி சமுசார ஆசை, காம மயக்கம் இவற்றால் சரசத்தியாகிய உள்நாதம் அழிந்து வீணே மடிந்து போகாமல், முத்தி வீடு அளிக்க, முருகா! நீ மயிலில் நிர்த்தம் செய்யும் பராகாசத்தை நான் தியானிக்க மாட்டேனா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## புலியூர் (சிதம்பரம்)

வாத பித்தமொடு சூலை விப்புருதி
யேறு கற்படுவன் ஈளை பொக்கிருமல்
மாலை புற்றெழுதல் ஊசல் பற்சனியொ
டந்திமாலை-
மாச டைக்குருடு காதடைப்பு செவி
டூமை கெட்டவலி மூல முற்றுதரு
மாலை யுற்ற தொணு றாறு தத்துவர்க
ளுண்டகாயம்;
வேத வித்துபரி கோல முற்றுவிளை
யாடு வித்தகட லோட மொய்த்தபல
வேட மிட்டுப்பொரு ளாசை பற்றியுழல்
சிங்கியாலே-
வீடு கட்டிமயல் ஆசை பட்டுவிழ
ஓசை கெட்டுமடி யாமல் முத்திபெற
வீட ளித்துமயி லாடுசுத்தவெளி சிந்தியாதோ;
ஓத அத்திமுகி லோடு சர்ப்பமுடி
நீறு பட்டலற சூர வெற்பவுண
ரோடு பட்டுவிழ வேலை விட்டபுகழ் அங்கிவேலா-
ஓந மச்சிவய சாமி சுத்தஅடி
யார்க ளுக்கும்உப காரி பச்சைஉமை
ஓர்பு றத்தருள்சி காம ணிக்கடவுள் தந்தசேயே;
ஆதி கற்பகவி நாய கற்குபிற
கான பொற்சரவ ணாப ரப்பிரமன்
ஆதி யுற்ற பொருள் ஓது வித்தமைய றிந்தகோவே-
ஆசை பெற்றகுற மாதை நித்தவன
மேவி சுத்தமண மாடி நற்புலியூர்
ஆடக கப்படிக கோபு ரத்தின்மகிழ் தம்பிரானே. 60

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



முதலையானது கஜேந்திரனை முன்பு வளைத்து இழுத்தபோது அங்கு வந்து உதவின திருமாலுக்கு மகிழ்ச்சி தரும் மேன்மையான மருகனே! பொலிவுடன் விளங்கிய முப்புரங்களைச் சாம்பலாகச் செய்த சந்திரனைச் சூடிய பெருமானின் புதல்வனே! எல்லாவற்றிற்கும் மூலகாரணப் பொருளான நீதிப்பெருமானும் சிவபெருமானுக்கு முன் ஓதுகின்ற "திருநெறியத்தமிழ்" எனப்படும் (தேவார) அறநெறிச் சிவநூலை (திருஞானசம்பந்தராக வந்து) ஓதிய கதிர்வேலனே! கானகத்தில் குறமாதை விரும்பிய ஞான பண்டிதனான அரும்பொருளே! காசித்தலத்தில் பிரபலமாக உறைகின்ற பெருமாளே!

இவ்வுலகில் பெரியபாவியாய், அதிக சூது நிறைந்த மூடனாய், திருட்டு புத்தி உடையவனாய், அதிகமான காம மயக்கத்தில் ஆசை மிகுந்த வீணனாய், வேல் போன்ற விழி உடைய மாதர்களின் பிழைப்புக்கு உதவும் செல்வத்தைத் தேடும் நினைவுடன், நிறைவான சிவ நூல்களை ஓதும் அன்பர்கள் பூசும் செல்வமான திருநீற்றை இடாத இருவினையான் (ஆகிய என்னை) திருநீற்றைப் பூசும்படியாகச் செய்து உனது அற்புதமான திருவடிகளைக் காணும்படியும் அருளி ஞானபோக அறிவும் எனக்குக் கிடைக்குமாறு அருள் புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## காசி

தார ணிக்கதி பாவி யாய்வெகு
சூது மெத்திய மூட னாய்மன
சாத னைக்கள வாணி யாயுறும் அதிமோக-
தாப மிக்குள வீண னாய்பொரு
வேல் விழிச்சிய ராகு மாதர்கள்
தாமு யச்செயு மேது தேடிய நினைவாகிப்;
பூர ணச்சிவ ஞான காவியம்
ஓது தற்புணர் வான நேயர்கள்
பூசு மெய்த்திரு நீறி டாஇரு வினையேனைப்-
பூசி மெய்ப்பத மான சேவடி
காண வைத்தருள் ஞானமாகிய
போத கத்தினை ஏயு மாறருள் புரிவாயே;
வார ணத்தினை யேக ராவுமு
னேவ ளைத்திடு போது மேவிய
மாய வற்கித மாக வீறிய மருகோனே-
வாழு முப்புர வீற தானது
நீறெ ழப்புகை யாகவே செய்த
மாம திப்பிறை வேணி யாரருள் புதல்வோனே;
கார ணக்குறி யான நீதிய
ரான வர்க்குமு னாக வேநெறி
காவி யச்சிவ நூலை ஓதிய கதிர்வேலா-
கான கக்குற மாதை மேவிய
ஞான சொற்கும ராப ராபர
**காசி** யிற்பிர தாப மாய்உறை பெருமாளே. **61**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


கௌமோதகி எனும் கதை, சார்ங்கம் என்னும் வில், சுதர்சனம் என்னும் சக்கரம், பாஞ்ச சன்னியம் என்னும் சங்கு, நாந்தகம் எனும் வாள் ஆகிய ஐந்து ஆயுதங்களைக் கையில் கொண்டுள்ள திருமால், நந்தகோபாலன் தேவியாம் யசோதை மகிழ்ந்து வாழ, உரலோடு கயிற்றினால் கட்டப்பட்டு அதனை இழுத்து உலாவின கள்வன்; சகடத்தை உதைத்தவன்; பார்த்தவர்கள் பயப்பட, தமது தலை ஆகாயத்தைக் கிழிக்கும்படி நீண்டு, மகாபலி அரசன் அச்சமடைய வாமனனாய் நின்ற நாராயணமூர்த்தியின் சேயை கோபித்தத் தலைவனே! வயல்களில் சங்குகள் தவழ்ந்து விளையாடுகின்ற வெள்ளிநகரில் வீற்றிருக்கும் வேலாயுதனே! தேவர்கள் விரும்பும் தம்பிரானே!

முகம் தாமரை; கண் அம்பு அல்லது வண்டு போன்ற வள்ளியின் தினைப்புனத்திற்குச் சென்று "எம் ஊராம் திருத்தணி இருபத்தைந்து மைல் தூரம்தான்! உம் ஊர் வள்ளிமலையும் எம் பதி தணிகையும் ஒன்றுக்கொன்று சமீபம். வருவாயாக! இரண்டுக்கும் மத்தியில் ஒரே ஒரு வயல் தான் உள்ளது" என்றெல்லாம் கூறி வள்ளியை அந்த சோலையிலே சந்தித்தபோது உன் வலிமை தொலைந்து அழிந்து வள்ளிமீது இச்சை கொண்டு மடல் ஏறின மோகம் கொண்ட எம்பிரானே! வேடுவனாம் கண்ணப்பர் இனிப்புள்ளவை என்று கொடுத்த எச்சில் உணவை விரும்பி (கண்ணில் ரத்தம் வருமாறு) லீலை செய்து விளையாடிய சிவமூர்த்தியின் குமாரனே! 'எப்போதும் இளையவனே' என்றும், மூதுரை (யாம் திருமுருகாற்றுப்படையில்) சொன்னபடி "மலைக்கிழவோனே" என்றும் ஓதினால் நூறாயிரபேதமாய் வருவதான பிறப்புக்கள் ஒழிந்து போயின! இது என்ன அற்புதம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வெள்ளிநகர்

* தனன தனுதன தனன தனுதன
தய்ய தனத்த தந்த
தானுதன தானந் தானன தந்ததான

வதன சரோருக நயன சிலீமுக
வள்ளி புனத்தில் நின்று
வாராய் பதி காதங் காதரை ஒன்றுமூரும்-
வயலும் ஒரேஇடை எனஒரு காவிடை
வல்லப மற்ற ழிந்து
மாலாய்மட லேறுங் காமுக எம்பிரானே;
இதவிய காணிவை தகையென வேடுவன்
எய்த்திடும் எச்சில் தின்று
லீலாசலம் ஆடுந் தூயவன் மைந்த நாளும்-
இளையவ மூதுரை மலைகிழ வோன்என
வெள்ள மெனக் கலந்து
நூறாயிர பேதஞ் சாதம்ஒ ழிந்தவாதான்;
கதைகன சாபதி கிரிவளை வாளொடு
கைவசி வித்த நந்த
கோபாலம கீபன் தேவிம கிழ்ந்துவாழக்-
கயிறொ டுலூகலம் உருள உலாவிய
கள்வன் அறப்ப யந்து
ஆகாயக பாலம் பீறநி மிர்ந்து நீள
விதரண மாவலி வெருவ மகாவ்ருத
வெள்ள வெளுக்க நின்ற
நாராயண மாமன் சேயைமு னிந்தகோவே
விளைவய லூடிடை வளைவிளை யாடிய
**வெள்ளி நகர்க்க** மர்ந்த
வேலாயுத மேவும் தேவர்கள் தம்பிரானே.**62**

* *எட்டுவிதமான கலப்பு சந்தம் கொண்ட அற்புதத் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மலையைக் குடையாகப் பிடித்துக் கன்றுகளையும் பசுக்களையும் முன்பு காத்தவர்; பூமியை உண்ட திருமால் கொண்டாடும் மருகனே! பூமாலை அணிந்துள்ள வள்ளியின் திருவடிகள் தன்மனத்தில் நீங்காமல் காமத்தால் அவளிடம் சென்று "ஆட்கொண்டருளுக" என்று மொழிந்தவனே! அன்று தேவர்களும் பிழைக்குமாறு திருவாலங்காட்டில் நின்று ஆடிய நடராஜப் பெருமானது திருவருட்பயன் நிறைந்த பதிகங்களை ஓதி அருளிய செல்வனே! அன்பினால் உன் திருவடியைக் கும்பிடுபவர் பாவங்களை நீக்கி அவர்களுக்கு இவ்வுலகில் அஞ்சாத நெஞ்சத்தையும் செல்வங்களையும் தரவல்ல பெருமாளே!

அழியாத புகழைப் பெருக்கும் புதல்வராலும் நல்லபடி நிலையான உதவி ஆகார்; அனைவருக்கும் இக்காலத்தில் துணையாயிருப்பது பொன்தான் எனினும் அதுவும் நிலையில்லாதது என்று ஆட்டம் நிறைந்த இப்பூமியிலே, கோபம் கொண்ட எமன் மறைந்து நிற்க, அலங்காரம் கொண்டு விளங்கும் இழிவான கூட்டில் இவ்வுயிர் இடம்கொள்ள இவன் நிற்கின்றான்; உன்னைப் போற்றும் படியான நினைவுகூட இவனுக்கு இல்லை என்று நிந்தனை செய்யும் பேச்சு எங்கும் பரவுமுன், ஐம்பொறிகளினாலும், மனத்தாலும் உண்டாகிப் பெருகும் வினையானது என்னிடம் வளராமல் நீங்க, உமது திருவடிகளைத் தந்து ஆட்கொண்டு அருளுங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவாலங்காடு

பொன்றாமன் றாக்கும் புதல்வரும்
நன்றாமன் றார்க்கின் றுறுதுணை
பொன்றான்என் றாட்டம் பெருகிய புவியூடே-
பொங்காவெங் கூற்றம் பொதிதரு
சிங்காரஞ் சேர்த்திங் குயரிய
புன்கூடொன் றாய்க்கொண் டுறைதரும் உயிர்கோல;
நின்றான்நின் றேத்தும் படிநினை
வுந்தானும் போச்சென் றுயர்வற
நிந்தாகும் பேச்சென் பதுபட நிகழாமுன்-
நெஞ்சாலஞ் சாற்பொங் கியவினை
விஞ்சாதென் பாற்சென் றகலிட
நின்தாள்தந் தாட்கொண் டருள்தர நினைவாயே;
குன்றால் விண் டாழ்க்குங் குடைகொடு
கன்றாமுன் காத்துங் குவலய
முண்டார்கொண் டாட்டம் பெருகிய மருகோனே-
கொந்தார்பைந் தார்த்திண் குயகுற
மின்தாள்சிந் தாச்சிந் தையில்மயல்
கொண்டேசென் றாட்கொண் டருளென மொழிவோனே;

**அன்றாலங் காட்ட**ண் டரும்உய
நின்றாடுங் கூத்தன் திருவருள்
அங்காகும் பாட்டின் பயனினை அருள்வாழ்வே-
அன்பால்நின் தாட்கும் பிடுபவர்
தம்பாவந் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கம் தரவல பெருமாளே. **63**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மேருமலையை வில்லாகத் தரித்த தேவியுடன் கூடிய அருணாசல மூர்த்திக்கு குருவே! பெரியமாதவம் பெறும் நற்குணத்துடன் கூடிய பிறப்பில் உடலாகிய வீட்டை தேவரீர் தரும் நாள் எது என்று கூறுவீராக! நல்ல யோகிகள் பணிகின்ற நற்குணப் பொருளே! சிவனே! சிவனுக்கு குருநாதனே! பாம்புகளை ஆபரணமாகக் கொண்டு பூதகணங்களோடு அமர்ந்த கள்ளி; காட்டில் (சிவனுடன்) ஆடும் மென்மை வாய்ந்த பரமேச்வரி தந்த பெருமானே! அல்லி, தாமரை முதலான நீரில் வளரும் மலர்ப் பாணங்களை உடைய வில்லியாகிய அழகிய மன்மதனின் தாயாம் பெருமை வாய்ந்த மகாலட்சுமியின் மருகரே! தேவ முருகேசா! மலைக்கொடியாம் சிவகாமியை விரைந்து மணந்து கொண்டு தில்லையில் அற்புத நடனத்தை ஆடும் நடராஜப் பெருமானின் அருட் குழந்தையே! வாசனை நிரம்பிய மல்லிகைக் கொடி நிறைந்த சோலையும், வனங்களும், நீர்நிலைகளும் நிரம்பி பக்கங்களில் சூழ்ந்துள்ள வடமுல்லைவாயிலில் வீற்றிருக்கும் பெருமாளே!

அழகியமாதர்கள், கடல்சூழ்ந்த பூமி, பொன் என்னும் மூவாசைகளைக் கடந்து கரையேறிட அறிவில்லாதவனாகிய அடியேனுடைய துன்பங்கள் நீங்குவதற்கு வேண்டிய திருவருளை அருளமாட்டாயா? அப்படியின்றி இருள்வீடாகிய பல பிறவிகள் நெடுங்காலத்துக்குத் தொடருமோ? உமது அடியார் கூட்டத்தை அறிந்து கொள்ளவில்லையே! உமது திருவருள் எமக்கு இல்லையே?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வடதிருமுல்லைவாயில்

அணிசெவ்வி யார்திரை சூழ்புவி
தனநிவ்வி யேகரை யேறிட
அறிவில்லி யாம்அடி யேனிடர் அதுதீர-
அருள்வல்லை யோநெடு நாளினம்
இருள்இல்லி லேஇடு மோஉன
தருளில்லை யோஇன மானவை அறியேனே;
குணவில்ல தாமக மேரினை
அணிசெல்வி யாய்அரு ணாசல
குருவல்ல மாதவ மேபெறு குணசாத-
குடில்இல்ல மேதரு நாள்எது
மொழிநல்ல யோகவ ரேபணி
குணவல்ல வாசிவ னேசிவ குருநாதா;
பணிகொள்ளி மாகண பூதமொ
டமர்கள்ளி கானக நாடக
பரமெல்லி யார்பர மேசுரி தருகோவே-
படரல்லிமாமலர் பாணம
துடைவில்லி மாமத னாரனை
பரிசெல்வி யார்மரு காசுர முருகேசா;
மணமொல்லை யாகி நகாகன
தனவல்லி மோகன மோடமர்
மகிழ்தில்லை மாநட மாடினர் அருள்பாலா;
மருமல்லி மாவன நீடிய
பொழில் மெல்லி காவன மாடமை
வடமுல்லை வாயிலின் மேவிய பெருமாளே. 64

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிகரம் போன்ற தனத்தையுடைய குறமகள் வள்ளிக்குத் தோழனை போன்று நலத்தைத் தரும் அமுதமொழிகளைப் பேசிய அறுமுகனே! நிறைந்த அருள் நீதிமானே பெருமை நிறைந்த நிறைவே! தயாளனே! நிரம்ப அறிவாளனே! அடைக்கலம் அளிப்பவனே! சரவணனே! குகனே! சிவ ஒளியின் சாரமே! அதிக மேன்மையுடையவனே! வேதத்தின் முடிந்தபொருளாய் விளங்கும் நீதிமானே! அகரமாகிய முதற் பொருளே! சிவசக்தியாய் விளங்கும் அறிவே! ஆணவத்தை அழிப்பவனே! ஜீவான்மாவில் விளங்குபவனே! அருளே! ஞானமே! அசுரர்களை அழியும் படி செய்த வேலாயுதனே! அழகும், புலமையும், பெருமையும், வளமையும் நிறைந்த மயிலை நகரில் விளங்குபவனே! 'அரஹர' சிவகுமாரனே! அடியவர் பெருமாளே!

கடல் சூழ்ந்த உலகில் இப்போது உள்ள பிறப்பின் இன்பத்தைப் பெறவும், வருகின்ற துன்பத்தோடு வினைகள் ஒழியவும் உன் திருவடிகளை மனத்தில் இருத்தி நினைக்காதவன்; உன் திருவருளாகிய இன்பம் பெற உருகாதவன்; பக்தி நிலையில் தன்வசம் அழியாதவன்; உன்னைத் தொழாதவன்; உமாமகேச்வரன் மகிழும் குமரனே என்று கூறாதவன்; சிந்தை நிறைவில்லாதவன்; பேதமை குணம் நிறைந்தவன்; அறிவு தெளிவு இல்லாதவன்; மவுனத்தை அநுஷ்டிக்காதவன்; அழகிய மாதர்களை மனத்தில் எண்ணி துன்பம் அடைபவன்; இப்படிப்பட்ட நான் உமது அடியார்களுடன் கூடி உனது திருவருள் கிருபை பெறும் நாள் ஒன்று உண்டா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருமயிலை

இகல வருதிரை பெருகிய சலநிதி
நிலவும் உலகினில் இகமுறு பிறவியின்
இனிமை பெறவரும் இடருறும் இருவினை யதுதீர-
இசையும் உனதிரு பதமலர் தனைமனம்
இசைய நினைகிலி இதமுற உனதருள்
இவர உருகிலி அயர்கிலி தொழுகிலி உமைபாகர்;
மகிழு மகவென அறைகிலி நிறைகிலி
மடமை குறைகிலி மதியுணர் வறிகிலி
வசன மறவுறு மவுனமொ டுறைகிலி மடமாதர்-
மயம தடரிட இடருறும் அடியனும்
இனிமை தரும்உன தடியவர் உடனுற
மருவ அருள்தரு கிருபையின் மலிகுவ தொருநாளே;
சிகர தனகிரி குறமகள் இனிதுற
சிலத நலமுறு சிலபல வசனமு
திறைய அறைபயில் அறுமுக நிறைதரு மருணீத-
சிரண புரணவி தரணவி சிரவண
சரணு சரவண பவகுக சயனொளி
திரவ பரவதி சிரமறை முடிவுறு பொருணீத;
அகர உகரதி மகரதி சிகரதி
யகர அருளதி தெருளதி வலவல
அரண முரணுறும் அசுரர்கள் கெடஅயில்
விடுவோனே-
அழகும் இலகிய புலமையும் மகிமையும்
வளமும் உறைதிரு மயிலையில் அநுதினம்
அமரும் அரகர சிவசுத அடியவர் பெருமாளே. 65

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



விநாயகப் பெருமானுடைய இளைய சகோதரனே! சிவபிரானின் அன்பனே! ஞான சூரியனே! திருமகள் மருகனே! கடலை வற்றச் செய்த சூரனே! மாமறையாம் வேதங்கள் உபதேசிக்க வல்லவனே! தயை நிறைந்தவனே! மார்பில் தேன் சொட்டும் கடப்ப மாலையை அணிந்தவனே! பூரண நிலவு போன்ற ஆறுமாமுகனே! முருகேசனே! தேவர்களும் திருமாலும் பிரமனும் யாவரும் புகழும் ஏழுலகின் தலைவனே! வடிவேலனே! தேவேந்திரப் பட்டினத்தை விட மேம்பட்டு விளங்கியும், குபேரனுடைய அளகாபுரியை விட மேன்மையுடன் சிறப்பாகவே செல்வச் செழிப்புடன் விளங்கும் சிறுவாபுரி என்னும் தலத்தில் வாழும் தேவர்கள் பெருமாளே!

குளிர்ச்சியான தாமரை போன்ற திருப்பாதனே! உம்மை வணங்குகின்றேன்; நாரத முனிவரின் இசைப் பிரியனே! உம்மை வணங்குகின்றேன்! கோழிக்கொடி, மயில் மீது பிரியம் உள்ளவனே! உம்மை வணங்குகின்றேன்! வேதங்கள் தேடும் அற்புத கீர்த்தி பெற்றவனே! உம்மை வணங்குகின்றேன்; ஆகமங்களின் சாரமே சொருபமாக விளங்குபவனே! உம்மை வணங்குகின்றேன்! தேவர்களின் சேனாபதியே! உம்மை வணங்குகின்றேன்; அடியார்கள் நற்கதியை அடைய பாதகத்தை பிளந்து அழிக்கும் கோடாலியே! உம்மை வணங்குகின்றேன்; அசுரேசர்களை பயப்படும்படிச் செய்பவனே! உம்மை வணங்குகின்றேன்; உலகத்தில் வெற்றி வீரனாய் விளங்குபவனே! உம்மை வணங்குகின்றேன்; இமயவல்லியாம் பார்வதியின் குழந்தையே! உம்மை வணங்குகின்றேன்; வாக்குவல்லமை உடையவனே! ஞானிகளின் மனத்தில் உலா வருபவனே! உம்மை வணங்குகின்றேன்; பாலகுமாரசுவாமியே! உம்மை வணங்குகின்றேன்; உம்மை வணங்குகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சிறுவாபுரி

★ சீதள வாரிஜ பாதாந மோநம
நாரத கீதவி நோதாந மோநம
சேவல மாமயில் ப்ரீதாந மோநம மறைதேடும்
சேகர மானப்ர தாபாந மோநம
ஆகமசார சொ ரூபாந மோநம
தேவர்கள் சேனைம கீபாந மோநம கதிதோயப்
பாதக நீவுகு டாராந மோநம
மாவசு ரேசக டோராந மோநம
பாரினி லேஜய வீராந மோநம மலைமாது
பார்வதி யாள்தரு பாலாந மோநம
நாவல ஞானம னோலாந மோநம
பாலகு மாரசு வாமீந மோநம அருள்தாராய்
போதக மாமுகன் நேரான சோதர
நீறணி வேணியர் நேயாப்ர பாகர
பூமக ளார்மரு கேசாம கோததி இகல்சூரா-
போதக மாமறை ஞானத யாகர
தேனவிழ் நீபந றாவாரு மார்பக
பூரண மாமதி போலாறு மாமுக முருகேசா
மாதவர் தேவர்க ளோடேமு ராரியும்
மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்
மாநில மேழினு மேலான நாயக வடிவேலா
வானவர் ஊரினும் வீறாகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் பெருமாளே. 66

★ *அர்ச்சனைத் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தனதாந்தன தான தனந்தன...எனும்படியான அற்புதமாக நடனம் செய்கின்ற எம்பிரான் தமக்குரிய குழந்தையே! அசைவன, அசையாதவன எனப் பொருள்களை பாதுகாப்பதற்கு சிருஷ்டித்தவனே! புதுமையான "தாம்பிர சூடம்" என்னும் சேவல் பணிசெய்யும் பெருமானே! இன்பமளிக்கும் தேவர் வாழ்வே! (முருகவேள்) வா என்று அழைத்தவுடன் வேகமாய் வந்த திருவடிகளை உடையவரும், மூஷிக அசுரன் வணங்கும் படி செய்தவரும், வள்ளியின் அருகில் யானையாகத் தோன்றி விளங்கியவரான ஐங்கரனின் தம்பியே! அழகான ஆறுமுகங்களுடன் கம்பீரமாக வீற்றிருப்பவனே! செல்வத்தோடு திகழும் மதுராந்தக மாநகரத்தின் திகழும் முருகப்பெருமானே! உறுதியான பக்தியுடன் உள்ள தேவர்களின் தம்பிரானே!

மனைவி, மக்கள் என்று சோர்வு தருபவர்களும், மனம் நொந்து வெந்து போவதற்கு இடம் தரும் செல்வங்களும், மடியக்கூடிய என்னைப் பெற்ற தெய்வத்தாயும், பயனற்ற பிறர் முதலானவர்களின் கூட்டம் என்கின்ற மயக்கமும், 'யான்', 'எனது', என்று அளவு கடந்து செல்லும் குணமும், இன்பத்துக்குத் தக்கபடி செல்லும் குதிரைகள், தான்யங்கள், சொத்துக்கள், வாழும் ஊர் இவை எல்லாம் விட்டு நீங்கும்படி, என்னை ஏற்றுக்கொண்டு, மோன நிலையையும், மேம்பட்டதான தெய்வத்தையும் நான் காண, தேவர்கள் பொருந்தி நிறைந்ததான (உமது) முழந்தாள், கடகம், சிவந்த உடல், இவைகளுக்கு மேலான இடமாம் பெருமை நிறைந்த உமது திருவடியை எனக்கு அருளும் நிலை என்றைக்கோ? (அறிந்திலனே).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## மதுராந்தகம்

மனைமாண்சுத ரான சுணங்கரும்
மனம்வேந்திணை யான தனங்களும்
மடிவேன்தனை ஈண அணங்குறு வம்பராதி-
மயமாம்பல வான கணங்குலம்
என ப்ராந்தியும் யானென தென்றுறு
வன வாம்பிர மாத குணங்குறி யின்பசார;
இனவாம்பரி தான்ய தனம்பதி
விட ஏன்றெனை மோன தடம்பர
மிகுதாம்பதி காண கணங்கன வும்பரேசா-
இடவார்ந்தன சானு நயம்பெறு
கடகாங்கர சோண வியம்பர
இடமாங்கன தாள்அரு ளும்படி என்றுதானோ;
தனதாந்தன தான தனந்தன
தென தோங்கிட தோன துனங்கிட
தனவாம்பர மான நடம்பயில் எம்பிரானார்-
தமதாஞ்சுத தாபர சங்கமம்
என வோம்புறு தாவன வம்படர்
தகுதாம்பிர சேவித ரஞ்சித வும்பர்வாழ்வே;
முனவாம்பத மூடிக வந்தன
முயல்வான்பிடி மாடிமை ஐங்கரர்
முகதாம்பின மேவுறு சம்ப்ரம சங்கணாறு-
முககாம்பிர மோடமர் சம்பன
**மதுராந்தக மாநக ரந்திகழ்**
முருகாந்திர மோடமர் உம்பர்கள் தம்பிரானே. 67

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பயனற்ற காரியங்களை விலக்காத அசுரர்களின் உயிரை "யமனே எடுத்துக் கொள்வீராக! என்று சொல்லி வேலைச் செலுத்திய கரத்தைக் கொண்டவனே! உமையின் திருமுலைப்பால் உண்ட அரசனே! வேதநாயகன் பிரமனிடம் விளையாடி அவனைக் குட்டிய வீரனே! மலைக் குறவர்கள் ஊராகிய வள்ளிமலையில் உயரமான பரண் மீதிருந்த வள்ளியிடம் மயக்கம் கொள்ளும்படியான லீலைகள் செய்து அவளை அணைய விரும்பிய திருடனே! அருள் தரும் கந்தவேளே! யாரும் அணுகமுடியாதபடி (பறவைகள் போல) திரிந்து கொண்டிருக்கும் மெய்ஞ்ஞான யோகிகளின் உள்ளத்தே உறைகின்ற தேவனூர் விளங்கும் குமரா! தேவர்கள் பெருமாளே!

பல விளக்கங்களுக்கு இடம் தருவது காண்பதற்கு முடியாதது; உருவமும் அருவமும் உள்ளது; பேச இயலாதது; காணப்படும் நான்கு வேதங்களுக்கும் முடிவான பொருளாய் நிறைந்து நிற்பது; பஞ்ச பூதங்களால் ஆகிய இந்தஉடல் மீதுள்ள ஆசையால் உறைவது; மாயமான இந்த உடலால் அறியஇயலாதது; காயசித்தி பெற்றவராலும் அவர் எதிரே வந்து நின்று பேசினாலும் அறிந்து பேணமுடியாதது; பரவெளியில் ஒளியாய் இருப்பது; மால், அரியால் அறியமுடியாத வகையில் இருப்பது; வேற்றுமை, ஒற்றுமை, என்ற தன்மைகளுடன் உலகமாய் வளர்வது; விந்து, நாதம் என்ற பேர் உடையதும், கலை அறிவாகவும், யோகிகளின் நிலைக்கும் மேம்பட்டதாய் உள்ளது; என்னுடைய வினைக்கு முடிந்த தவப்பேறாய் அருள் நிறைவாய் விளைகின்றதும் ஆக இத்தனையும் பொருந்தியது நீ மட்டுமே?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## தேவனூர்

காணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது பஞ்சபூதக்-
காய பாசம தனிலே உறைவது
மாய மாய்உடல் அறியா வகையது
காய மானவர் எதிரே அவரென வந்துபேசிப்;
பேணொ ணாதது வெளியே ஒளியது
மாய னாரயன் அறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது விந்துநாதப்
பேரு மாய்கலை அறிவாய் துரியஅ
தீத மானது வினையேன் முடிதவ
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்றுநீயே;
வீணொ ணாதென அமையா தசுரரை
நூறி யேஉயிர் நமனீ கொளுவென
வேல்க டாவிய கரனே உமைமுலை உண்டகோவே-
வேத நான்முக மறையோ னொடும்வினை
யாடி யேகுடு மியிலே கரமொடு
வீற மோதின மறவா குறவர்கு ஞ்சியூடே;
சேணொ ணாயிடும் இதண்மேல் அரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள்செய்து
சேர நாடிய திருடா வருடரு கந்தவேளே-
சேரொ ணாவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிகள் உளமே உறைதரு
தேவ னூர்வரு குமரா அமரர்கள் பெருமாளே. 68

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


இழிந்தவர்களும், திருநீற்றை விலக்கித் தள்ளுபவர்களாம் சமணர்களை கழுவில் ஏறச் செய்த சித்ரப் புலவன் எனும் விருது பெற்ற இளையவனே! வள்ளிமலையில் தினைப்புனத்தில் உள்ள வள்ளியின் அருகில் கிழவேடம் பூண்டுவந்து சுனையில் அவளது கரத்தைப் பற்றி மகிழ்ந்து, எதிரில் யானைவர, அவளை அணைந்து புணர்ந்த மணிமார்பனே! மேருமலையை வில்லாகப் பிடித்த கடவுளின் இடது பக்கம் உறையும் அம்பிகை, அறச் செல்வி, தகப்பன் தக்கனை மழுவால் வெட்டிவித்த நிமலி பெற்ற முருகோனே! மகிழ்ச்சியளிக்கும் பெண்ணை யாற்றங்கரையில் சோலையும் முகிலும் சூழ்ந்த திருவெண்ணை நல்லூர் எனும் புகழ் பெற்ற பதியில் அற்புதமாக மயிலின் மேல் இருந்து நடனம் புரியும் பெருமாளே!

பலவிதமான தத்துவங்களையும், அஞ்ஞான இருளையும் எரித்து, அருட்சக்தியே காவலாக, துக்கங்களை வடவாமுகாக்னிக்கு இறையாகும்படி செய்து, பிரகாச வெளியிலே நடன ஜோதியைக் கண்டு, வாயுவை அடக்கி, இடைகலை பிங்கலை எனும் வழிகளை மாற்றி அடைத்து, ஒப்பற்ற சூரியப் பிரகாச நிலையில், விளங்கி ஆகாய வெளியில் பவுரி நடனம் கொள்ள, சிவமயமாய் இருக்கும் பரவெளியில் கலகல என்று சுழலும் பாதசிலம்பின் ஒலிநிரம்பத் திருநடம் இடுகின்ற பொற்சபையில் உருகி நின்று ஆனந்தக் கடலில் மூழ்கி, கவுரி, சடையுடைய அரன் நித்தமும் இவர்கள் அருளால் "உலகமெலாம் நீயாகத் தோன்றும்" நிலை கிடைக்க, புகழ் உடலே நிலைத்து நிற்கும் நிலையைத் தந்தருள்வாயே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவெண்ணெய்நல்லூர்

பலபல தத்துவம் அதனை எரித்திருள்
பரைஅர ணப்படர் வடவன லுக்கிரை
படநட நச்சுடர் பெருவெளி யிற்கொள விடமேவிப்-
பவன மொழித் திரு வழியை அடைத்தொரு
பருதி வழிப்பட விடல்கக னத்தொடு
பவுரி கொளச்சிவ மயமென முற்றிய பரமூடே;
கலக லனக்கழல் பரிபுர பொற்பத
ஒலிமலி யத்திரு நடனம் இயற்றிய
கனக சபைக்குளில் உருகி நிறைக்கடல் அதில்மூழ்கிக்-
கவுரி மினற்சடை யரனொடு நித்தமொ
டனக சகத்துவம் வருதலும் இப்படி
கழிய நலக்கினி நிறமென விற்றுடல் அருள்வாயே;
புலையர் பொடித்தளும் அமணர் உடற்களை
நிரையில் கழுக்களில் உறவிடு சித்திர
புலவனெ னச்சில விருது படைத்திடும் இளையோனே-
புனமலை யிற்குற மகளய லுற்றொரு
கிழவ னெனச்சுனை தனில வளைப்புய
புளகித முற்றிபம் வரவணை யப்புணர் மணிமார்பா;
மலைசிலை பற்றிய கடவு ளிடத்துறை
கிழவி யறச்சுக குமரி தகப்பனை
மழுகொடு வெட்டிய நிமலிகை பெற்றருள் முருகோனே-
மகிழ்பெணை யிற்கரை பொழில்முகில் சுற்றிய
**திருவெணெய் நற்பதி** புகழ்பெற அற்புத
* மயிலின் மிசைக்கொடு திருநட மிட்டுறை பெருமாளே. 69

* *அருணகிரியாருக்கு நடன தரிசனம் கிடைத்த அநுபவம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


சூரியன் பயந்து விலகும் மதில்களையுடைய இலங்கையின் தலைவனான ராவணனது ரத்னமணி பதித்த மகுடங்கள் அணிந்த தலைகள் பத்தும் அறுபட்டு பூமியில் உருளும்படி கோபம் கொண்ட அம்புகள் கையிலிருந்த வில்லிலிருந்து தேடிச் சென்ற மேக நிறப்பெருமானாம் அரி திருமாலின் மருகனே! கயிலைமலை நடுங்க, அஷ்டகுலகிரிகள் இடிந்து தூள்பட, அலை வீசும் கடல் குழம்ப, வேல்விடும் முருகனே! முன்பு தேவி அரியதவம் செய்த பாடல வளநகர் என்னும் திருப்பாதிரிப்புலியூரில் அமர்ந்த தேசிகனே! அறுமுகனே! வள்ளியின் அன்பனே! மாதவர் பெருமாளே!

மாமிசத்துடன் ரத்தம், நரம்பு, சதை, குடல், எலும்பு, தோல் இவை வரிசையாக நெருங்கிய உடம்பு; நோய் வாய்ப்படுகின்ற இந்தப் பழைமையான உடம்பு; அந்தந்த வயதுக்கு ஏற்ப மலங்கள் உண்டாவதும், ஒன்பது வாசலையுடைய இந்த உடலில் உயிருடன் இருக்கும் போதே, உய்யவேண்டி முயன்று சிறந்த தவங்களை உணரக்கூடிய உணர்வில்லாதவன்; ஜெபம் முதலானவை இல்லாதவன்; உயர் குணம் இல்லாதவன்; எனினும் எனது நெஞ்சு நினைவை இழக்கு முன் ஒப்பற்ற அழகிய பச்சை மயிலில் உன் ஆறுமுகங்களும் பிரகாசிக்க வந்து, நான்கு வேதங்களும், உபநிடதங்களும் எனக்கு விளக்கி நீ அருள்புரிய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பாடலவளநகர் (திருப்பாதிரிப்புலியூர்)

நிணமொடு குருதி நரம்பு மாறிய
தசைகுடல் மிடையும் எலும்பு தோலிவை
நிரை நிரை செறியும் உடம்பு நோய்படு முதுகாயம்-
நிலைநிலை உருவ மலங்க ளாவது
நவதொளை யுடைய குரம்பை யாம்இதில்
நிகழ்தரு பொழுதில் முயன்று மாதவம் உயவோரும்;
உணர்விலி செபமுதல் ஒன்று தானிலி
நிறையிலி முறையிலி அன்பு தானிலி
உயர்விலி எனினும் என் நெஞ்சு தானினை
வழியாமுன்-
ஒருதிரு மரகத துங்க மாமிசை
அறுமுகம் ஒளிவிட வந்து நான்மறை
உபநிடம் அதனை விளங்க நீ அருள் புரிவாயே;
புணரியில் விரவி எழுந்த ஞாயிறு
விலகிய புரிசை இலங்கை வாழ்பதி
பொலமணி மகுட சிரங்கள் தாமொரு பதுமாறிப்-
புவியிடை உருள முனிந்து கூர்கணை
யுறுசிலை வளைய வலிந்து நாடிய
புயலதி விறலரி விண்டு மால் திரு மருகோனே;
அணிதரு கயிலை நடுங்க வோரெழு
குலகிரி யடைய இடிந்து தூளெழ
அலையெறி உததி குழம்ப வேல்விடு முருகோனே-
அமலைமுன் அரிய தவஞ்செய் பாடல
வளநகர் மருவி அமர்ந்த தேசிக
அறுமுக குறமகள் அன்ப மாதவர் பெருமாளே. 70

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பூமி அதிர, நான்கு திசைகளிலும் உள்ளமலைகள் பொடிபடும்படி மூர்க்கத்தனமான அசுரர்களின் நீண்ட கிரீடங்கள் சிதற கடல் பேரொலி செய்ய வேலை விடுபவனே! சிவபிரான் பத்தினியும், யமனை உதைத்த திருவடியை உடையவளும், மூத்தவளும், இடர்களை நீக்குபவளும், அண்டங்களை உற்பத்தி செய்தவளும் ஆகிய பார்வதி அருளிய பாலனே! விதுரனுக்கும் பாம்புக்கொடியை உடைய துரியோதனனுக்கும், மனம்வேறுபடும்படியான உறவை ஏற்படுத்திய மாதவன், அருச்சுனனுக்கு தேரோட்டியுமான திருமாலின் மருகனே! எட்டு திசைகளிலும் சூரனாக நின்று, சண்டையிட்டு, கையில் சேவற்கொடியுடன் கீர்த்தியுடன் உலவியவனே! திருவேட்களத்தில் வீற்றருளும் பெருமாளே!

நான்கிதழ் கொண்டு பூமியின் நான்குபுறமும் நோக்கிய மூலாதார கமலம் முதல் அக்னி முதலான மண்டலங்கள் வரை தழைய சிவப்பேற்றைத் தருவதான அநுபூதியாகிய திருவடிக்கழலைக் காட்டி, என்னுடைய ஆணவ மலங்கள் அற்றுப்போகும்படி, அதைக் கெடுத்து ஒழித்த உனது மலை போன்ற பன்னிரண்டு தோள்களையும், ஆறுமுகங்களையும், சுற்றிலும் ஒளிபரவி ரக்ஷிக்கின்ற திருவடியும், மயிலின் மேலிருந்து பாதுகாக்கின்றவன் நான் என்று வந்து கருணைக் கடலாகக் காட்டிய திருக்கோலமும், இனிமையான பார்வையுடன் அடியார்கள் முத்தமிழாற்பாடிக் கதிபுகவும், அடியேன் நல்லகதி பெற்றிட நோக்கிய உமது பார்வையையும் மறவேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவேட்களம்

சதுரத்தரை நோக்கிய பூவொடு
கதிரொத்திட ஆக்கிய கோளகை
தழையச்சிவ பாக்கிய நாடக அநுபூதி-
சரணக்கழல் காட்டிஎன் ஆணவ
மலமற்றிட வாட்டிய ஆறிரு
சயிலக்குல மீட்டிய தோளொடு முகமாறும்;
கதிர்சுற்றுக நோக்கிய பாதமும்
மயிலிற்புற நோக்கிய னாமென
கருணைக்கடல் காட்டிய கோலமும் அடியேனைக்-
கனகத்தினு நோக்கினி தாய்அடி
யவர் முத்தமி ழாற்புக வேபர
கதி பெற்றிட நோக்கிய பார்வையும் மறவேனே;*
சிதறத் தரை நாற்றிசை பூதர
நெரியப்பறை மூர்க்கர்கள் மாமுடி
சிதறக்கட லார்ப்புற வேஅயில் விடுவோனே-
சிவபத்தினி கூற்றினை மோதிய
பதசத்தினி மூத்தவி நாயகி
செகமிப்படி தோற்றிய பார்வதி அருள்பாலா
விதுரற்கும் அராக்கொடி யானையும்
விகடத்துற வாக்கிய மாதவன்
விசையற்குயர் தேர்ப்பரி ஊர்பவன் மருகோனே
வெளிஎட்டிசை சூர்ப்பொரு தாடிய
கொடிகைக் கொடு கீர்த்தி உலாவிய
விறல் மெய்த்திரு வேட்கள மேவிய பெருமாளே.71

* அருணகிரியார் பெற்ற அருள் அநுபவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இலங்கை அழிந்து போகும் படியும், அரக்கர்கள் அனைவரும் இறந்து விழும்படியும், சூரிய சந்திரர்கள் பழையபடி பிரகாசித்து வரும்படியும் செய்தமாயன்; கஜேந்திரன் எனும் யானை நடுங்கி வருந்திய போது மடுவினில் வந்து உதவிய நீலமேகன்; திருமகள் கொழுநன்; சீரங்கத்தில் விளங்கும் பெரிய பெருமாள்; சகடத்தை உதைத்து மோதி, மருதமரம் குலுங்கி விழும்படி கோபித்தவன்; வரதன்; மாலை சூடிய வாமனன்; பெரிய கடல் வருத்தமடைய ஓர் அம்பை விட்ட பெருவீரனாம் திருமாலின் மருகனே! தேவேந்திரன் தவம் செய்த பதியாம் பிரமபுரத்திலும், 'குகன்' என்று உரைப்பவர் மனதிலும் அன்புடன் வீற்றிருக்கும் பெருமாளே!

சமயச் சண்டையினால் ஒருவரை ஒருவர் இகழ்ந்து, வெகுண்டு, கோபித்து, சமயம் என்பதே ஒன்றும் இல்லை என்று தர்க்கமிடும் பறிதலையராம் சமணரும் நின்று கலங்கும்படியாக விருப்பமானத் தமிழ்ப் பாடல்களைக் கூறும் செல்வாக்கையும், நல்ல குணத்தையும், வெற்றியையும், மங்கலமான பல பெருமைகளையும், நல்ல குணத்தையும், நீ விளையாடிய சரவணப்பொய்கையையும், உமது பொறுமையும், புகழ் நிறைந்த வேலாயுதத்தையும், வெற்றிச் சின்னங்களுடன் தேவர்களும் உருகி வணங்கும்படியாக மயில்மீது வருகின்ற உமது திருவடியையும், பெருமை, சாமர்த்தியம், தகுதி இவைகளையும், தினைப்புனவள்ளியிடம் மயல்கொண்டு, அவளது கால் பிடித்து மணந்து, அவளை அணைத்து நின்றதையும், உனது பல வெற்றிப் பெருமைகளையும் அன்புடன் பலமுறை எடுத்துப்போற்றுவதை மறவேன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பிரமபுரம் (சீகாழி)

சருவி இகழ்ந்து மருண்டு வெகுண்டுறு
சமயமும் ஒன்றிலை என்ற வரும்பறி
தலையரு நின்று கலங்க விரும்பிய தமிழ்கூறுஞ்-
சலிகையும் நன்றியும் வென்றியும் மங்கள
பெருமைக ளும்கன முங்குண மும்பயில்
சரவண மும்பொறை யும்புக ழுந்திகழ் தனிவேலும்;
விருது துலங்க சிகண்டியில் அண்டரும்
உருகி வணங்க வரும்பத மும்பல
விதரண முந்திற முந்தர முந்தினை புனமானின்-
ம்ருகமத குங்கும கொங்கையில் நொந்தடி
வருடிம ணந்துபு ணர்ந்தது வும்பல
விஜயமும் அன்பின்மொ ழிந்துமொ ழிந்தியல்
மறவேனே;

கருதிஇ லங்கை அழிந்து விடும்படி
அவுணர டங்கம டிந்துவி ழும்படி
கதிரவன் இந்து விளங்கி வரும்படி விடுமாயன்
கடகரி அஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துத வும்புயல் இந்திரை
கணவன் அரங்க முகுந்தன் வருஞ்சக டறமோதி
மருது குலுங்கி நலங்க முனிந்திடு
வரதன் அலங்கல் புனைந்தரு ளுங்குறள்
வடிவன் நெடுங்கடல் மங்கவொ ரம்புகை தொடுமீளி
மருக பு ரந்தர னுந்தவம் ஒன்றிய
**பிரமபு ரந்தனி** லுங்குகன் என்பவர்
மனதினி லும்பரி ஒன்றிஅ மர்ந்தருள் பெருமாளே.72

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருமகளை மார்பில் வைத்துள்ள திருமாலும், நான்கு வேதங்களைச் சொல்லும் பிரமனும், தேவர்கள் கூட்டத்தின் தலைவனாம் இந்திரனும், முனிவர்களும் யாவரும் சொல்லுகின்ற வேதப் பொருளை உணர்த்தும் நூல்களில் ஆராய்ச்சி செய்யாத அசுரர்கள் போர் செய்வதால் பயந்து மறைந்து அதனால் ஒன்றுகூடி, "நீ அசுரர்களை அழிக்கவல்ல பகைவனைத் தந்தருள்க" என ஈசனைப் பாமாலைகளால் தொழுது வேண்டி, திருநீறு பூசிய மேனியனே! தேன் சொட்டும் கொன்றை மாலையோடு நீர் பெருகும் கங்கையையும், அழகான நிலவையும், பாம்பையும், மாதுளம்பூ, வில்வம், நாவல்இலை விளாஇலை முதலியவைகளை சடையில் கொண்டுள்ள எம்பிரானே! "உன்னைத்தவிர எங்களுக்கு வழிஎது? சொல்லியருளுக" என்று பலமுறை வேண்டி முறையிடவே, கருணை நிறைந்த சிவபிரான் அருளால் தந்தருளிய வேலனே! நீல மயில் ஏறி பூலோகம் மற்றும் ஆறு உலகங்களையும் ஒரு நொடிப் போதில் சுற்றி வந்தவனே! தேவர்களின் சேனாபதியே! அழியா அழகுடையவனே! ஆறு சந்திரர்களுக்கு சமமான முகங்களை உடையவனே! மணம் நிறைந்த கடப்பமாலை அணிந்தவனே! பிரகாசிப்பவனே! என்று அன்பினால் உன்னைத் துதியாமல் உழல்கின்ற வஞ்சனாகிய என்னைக் காத்தருள்க! சூர் முதலான அசுரர்களை அழித்த கூர்மையான வடிவேலை உடையவனே! மேகம் சூழ்ந்த சீகாழியில் வீற்றிருக்கும் பெருமாளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சீகாழி

* பூமாதுர மேயணி மான் மறை
வாய்நாலுடை யோன்மலி வானவர்
கோமான்முநி வோர்முதல் யாரும்இ யம்புவேதம்
பூராயம தாய்மொழி நூல்களும்
ஆராய்வ திலாதட லாசுரர்
பேரால்மறை வாயுறு பீதியின் வந்துகூடி
நீமாறரு ளாய்என ஈசனை
பாமாலைக ளால்தொழு தேதிரு
நீறார்தரு மேனிய தேனியல் கொன்றையோடு
நீரோர்தரு சானவி மாமதி
காகோதர மாதுளை கூவிளை
நேரோடம் விளாமுத லார்சடை எம்பிரானே
போமாறினி வேறெது வோதென
வேயாரரு ளால்அவர் ஈதரு
போர்வேலவ நீலக லாவியி வர்ந்துநீடு
பூலோகமொ டேஅறு லோகமு
நேரோர்நொடி யேவரு வோய்சுர
சேனாபதி யாயவ னேஉனை அன்பினோடுங்
காமாஅறு சோம ஸமானன
தாமாமண மார்தரு நீபசு
தாமாவென வேதுதி யாதுழல் வஞ்சனேனைக்
காவாய்அடி நாள்அசு ரேசரை
யேசாடிய கூர்வடி வேலவ
காரார்தரு காழியின் மேவிய தம்பிரானே. 73

* இத்திருப்புகழ் கந்தபுராணச் சுருக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சூலனி, மாதுஉமை, அருள் பொழியும் சாம்பவி, தாய், இரவும் பகலும் காத்தருளும் அன்னை; சூட்டோடு நம்மை ஈர்த்துச் செல்லும் வினைகளை வாட்டி மைந்தனைக் காப்பதுபோல் நம்மைக் காத்து ஆளுகின்ற தூயவள்; முத்தொழிலையும் செய்யும் மூவரையும் ஸ்தாபிக்கும் எந்தையார், வேளூரில் வாழ்கின்ற வினைதீர்த்த சங்கரர், உருவத்திருமேனி கொண்ட பெருமானுடன் வீற்றிருப்பவளாம் தேவியின் குழந்தையே! வேலா! ஏழு கடல்களையும் வாட்டி, வஞ்சக மூடர்களாம் சூரர்களையும் வாட்டி, அவர்களை யமன் ஊருக்கு அனுப்பிய மயில் வாகனனே! படைப்பவனது நான்கு தலைகளும் சீழ்கொளும்படி குட்டி ஆர்ப்பரித்த மந்திர வேலாயுதனே! திருமாலின் மகளுக்கு இரங்கி அன்பு காட்டிய பெருமாளே!

மூலாதாரத்தில் எழுப்பிய அக்னியை ஆறு ஆதாரங்களிலும் செலுத்தி ஆதார யந்திரங்களின் மூலம் பிராணவாயுவை சுழுமுனை வழியே ஓடச்செய்து, மூத்ததான லலாட ஸ்தானத்து ஆஞ்ஞை கோட்டில் புருவ மத்தியில் நாதகீதம் ஒளி செய்யும் மேலான இடத்தில் நிற்கும் யோக ஜீவனை விலகிப்போகாத வழியில், சாஸ்திரங்களும் சொல்லும் ஞானபுரியாம் துவாதசாந்தப் பெருவெளியில் ஏற்றி, மந்திர பீடத்தில் உலகமாதாவும், பரமேச்வரனும் இருந்தருளும் திருச்சபையில் முச்சுடர்கள் ஒளியைத் தரிசித்து, பொங்கி எழும் சந்திரகலையாம் தேனமுதத்தை ஊட்டி என்னை ஆண்டருள்வீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வேளூர்

மூலா தாரமொ டேற்றி அங்கியை
ஆறா தாரமொ டோட்டி யந்திர
மூலா வாயுவை ஏற்று நன்சுழி முனையூடே-
மூதா தாரம ரூப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்;
மாலா டூனொடு சேர்த்தி தம்பெற
நானா வேதம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னாபுரி ஏற்றி மந்திர தவிசூடே-
மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூணொளி காட்டி சந்திர
வாகார் தேனமு தூட்டி என்றனை உடனாள்வாய்;
சூலாள் மாதுமை தூர்த்த சம்பவி
மாதா ராபகல் காத்த மைந்தனை
சூடோ டீர்வினை வாட்டி மைந்தரென் எமையாளுந்-
தூயாள் மூவரை நாட்டும் எந்தையர்
**வேளூர்** வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவள் அருள்பாலா;
வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி அந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே-
வேதா நால்தலை சீக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மால்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே. **74**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



எங்கும் பரவியிருந்த சூரர்கள் காற்றில் பறப்பது போலச் செய்து இறந்து போக வெற்றி பெற்ற யமன் வலிமையையும், சூரிய ப்ரகாசத்தையும் உடைய சக்திவேலைக் கொண்டவனே! காமனது மலரம்பு வருத்தியதால் பல கோடி மாதரைப் புணர்ந்த காளையாம் திருமாலாகிய ரிஷபத்தின் மேல் ஏறி வந்த எந்தை சிவபிரானது அருள் பாலனே! சேல் மீனைப்போன்ற விழியை உடைய குறப்பெண்ணை ஆசையுடன் அணைத்த தோளனே! உன்புகழை ஓதும் பக்தர்களது அன்பில் வீற்றிருப்பவனே! தேவர்களும், மாதர்களும், சித்தர்களும், தொண்டர்களும் சென்று வணங்கும் வேளூரில் மகிழ்ச்சியுடன் சேவற்கொடியுடன் விளங்கும் பெருமாளே!

ஆசையினால் உருவான கிழிந்த உடை, சோறு கொண்டு வளர்த்த உடம்பு, மாறிமாறி எண்ணத்தை வளர்க்கும் சிந்தை இவைகளை அநியாயமான ப்ரபஞ்ச மாயையால் எடுத்து மயங்குகின்றேன். ஐயா! எனக்கு இரங்கி வாரும் ஐயா! இனிமேலும் பிறந்தும் இறந்தும் போகாமல், உமது வேலினால் என் வினைகளைத் தூளாகும்படி எரித்து உனது அருள் வீட்டைத் தாரும்! பரிவு நிரம்பிய அன்பர் கூட்டத்தில் நானும் கலந்து உன்னைப்போல் சிந்தை மிகவும் மகிழ்ச்சியடையவும் கந்தவேளே எமக்கு உற்றதுணை என அன்பு கூர பரிவுடன் அருள்புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வேளூர்

மாலி னால்எ டுத்த கந்தல்
சோறி னால்வ ளர்த்த பொந்தி
மாறி யாடெ டுத்த சிந்தை அநியாய-
மாயை யால்எ டுத்து மங்கி
னேனை யாள னக்கி ரங்கி
வாரை யாஇ னிப்பி றந்து இறவாமல்;
வேலி னால்வி னைக்க ணங்கள்
தூள தாஎ ரித்து உன்றன்
வீடு தாப ரித்த அன்பர் கணமூடே-
மேவி யானு னைப்பொல் சிந்தை
யாக வேக ளித்து கந்த
வேளெ யாமெ னப்பரிந்து அருள்வாயே;
காலி னால்எ னப்ப ரந்த
சூரர் மாள வெற்றி கொண்ட
கால பாநு சத்தி அங்கை முருகோனே-
காம பாணம் அட்ட நந்த
கோடி மாத ரைப்பு ணர்ந்த
காளை ஏறு கர்த்தன் எந்தை அருள்பாலா;
சேலை நேர்வி ழிக்கு றம்பெண்
ஆசை தோளு றப்பு ணர்ந்து
சீரை ஓது பத்தர் அன்பில் உறைவோனே-
தேவர் மாதர் சித்தர் தொண்டர்
ஏக வேளு ருக்கு கந்த
சேவல் கேது சுற்று கந்த பெருமாளே. 75

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அரக்கு மாளிகையில் இருக்கச் செய்து தீயிட்ட பாதகனாம் துரியோதனன், (பாண்டவர்கள்) பல சூதாட்டத்தில் தோல்வியடைந்ததால் விதிப்படி நாட்டை விட்டுப் போகும்படி செய்ய, அவர்களும் காட்டுக்குப்போய், மாற்றுவேடம் பூண்டு, மறைவாக வாழ்ந்தும், அந்த நாள் முடிந்ததும், கௌரவர் நூறுபேரையும் அழித்திடவே ஒரு பாரத யுத்தத்தை நடக்கும்படி செய்த மகாவீர மாயவன் மருகனே! சூரனது மகேந்திர புரிக் கோட்டையை அழித்து, சூரன், 'கோ' வென்று அலறவும், அவனது நகரத்தை எரித்தவனே! அழகாகக் கோத்த மாணிக்கம் போன்ற ஒளியையுடைய வேலாயுதத்தை உடையவனே! யமன் இறந்து போகும்படி உதைத்த பார்வதி தேவியின் இனிமையான மருமகளின் தலைவனே! திருக்கடவூரில் உறையும் பெருமாளே!

பிரமனது ஏட்டின் விதிப்படி இந்த உயிரைக் கொண்டுபோய் நல்ல உடலாகிய வீட்டில் சேர்த்து, சவுக்கு போன்ற (சுழுமுனை, இடைகலை, பிங்கலை எனும்) மூன்று நாடிகளை அதில் பொருத்தி அடித்துச் செலுத்த, கடலில் படகு செல்வது போல் சென்று பொருளாசை, பெண்ணாசை ஆகியவை நல்லது என்று கொண்டு, பலரும் 'தூ' என்று இகழவும் வருந்தித், தவம் என்பது எது என்று அறியாமல் இவ்வுடலை விரும்பிப் பாதுகாத்து கழுத்து அணிபூட்டி மன்மதன் இவன் என்று ஆட்டியும் அசைத்தும் திரிகின்ற நாளில், நிறைந்த மலக் குகையோ, பொதிசோறோ என்று கழுகும் காகமும் விரும்பி தமக்கு இறையாக்கொள்ள பூமியில் இவ்வுடல் விழுகின்ற காலத்தில் நாகபந்த மயூரனே! அருள்புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கடவூர்

ஏட்டின் விதிப்படி யோகொடு மாபுர
வீட்டில டைத்திசை வேகசை மூணதில்
ஏற்றி அடித்திட வேகடல் ஓடம தெனவேகி-
ஏற்கும் எனப்பொரு ளாசைபெ ணாசைகொ
ளாத்து வெனத்திரி யாபரி யாதவ
மேற்றி இருப்பிட மேஅறி யாமலும் உடல்பேணிப்;
பூட்டு சரப்பளி யேமத னாமென
ஆட்டி அசைத்திய லேதிரி நாளையில்
பூத்த மலக்குகை யோபொதி சோறனெ கழுகாகம்-
போற்றி நமக்கிரை யாமென வேகொள
நாட்டி லொடு க்கென வேவிழு போதினில்
பூட்டு பணிப்பத மாமயி லாஅருள் புரிவாயே;
வீட்டி லடைத் தெரி யேயிடு பாதகன்
நாட்டை விடுத்திட வேபல சூதினில்
வீழ்த்த விதிப்படி யேகுரு காவலர் வனமேபோய்-
வேற்றுமை யுற்றுரு வோடியல் நாளது
பார்த்து முடித்திட வேஒரு பாரத
மேற்புனை வித்தம காவிர மாயவன் மருகோனே;
கோட்டை அழித்தசு ரார்பதி கோவென
மூட்டி எரித்தப ராபர சேகர
கோத்த மணிக்கதி ரேநிக ராகிய வடிவேலா-
கூற்று மரித்திட வேஉதை பார்வதி
யார்க்கும் இனித்தபெ ணாகிய மான்மகள்
கோட்டு முலைக்கதி பாகட வூர்உறை பெருமாளே.

76

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சூரிய மண்டலங்கள், சந்திர மண்டலங்கள் ஒன்றோடொன்று சேரவும், அங்கு பிரமலோகம் கூடவும், உனது தோகைமயிலானது கடல் வட்டத்தையும் கடந்து அண்டங்கள் முதலான மண்டலங்களையும் தேடி, கீழேயுள்ள பாதாளலோகத்தில் உள்ள ஆதிசேஷனைக் கொத்தி, அதனை உணவாகக் கொண்டு உலாவவும், சூரிய மண்டலங்கள் தூளாகி, விண்ணில் பறந்தோடவும், அவை தன்னை நெருங்கி வருவதைக் கண்ட ஒவ்வொரு சூரியனும் பயந்து புரண்டு உருண்டோடக்கண்டு அதைப்பார்த்து சிரித்து மகிழ்ந்த வேலனே! உள்ளத்தில் விருப்புடனே மலைமங்கை வள்ளி மீது மோகித்து விளையாடியவன்; இந்திரன் முதலான தேவர்கள் வந்து தொழுகின்ற சோழ மண்டலத்தைச் சார்ந்த அம்பர் எனும் தலத்தில் வாழும் பெருமாளே.

யோகத்தால் ஜோதிவெளி, உபதேசத்தால் ஞானகாசப் பெருவெளி, புண்ணியத்தால் பொன் மலர் மணக்கும் தேவருலகம் என மேலான பதங்களை அடைய முயலாமல், சூது, பந்தயம் முதலியன பேசி, ஐம்புலன்களாம் நிலைகெட்டு ஓடும் வீரர்கள் வஞ்சகச் செயல்களை அன்புடன் செய்வதுபோலப் புரிந்து, வடவை தீ பாய்ந்து வருவதுபோல் வந்து உலக பரப்பில் சிக்கி, அழகாக அனுபவித்து, இன்ப வகையே வேண்டும் என்னும் நோக்கத்தால் தளர்ந்து, ஐம்புலன்களும் ஒடுங்கும் அந்த வேளையில் பிரமன் அனுப்பிய ஏட்டைப் பார்த்த அளவில் உயிர் பிரிந்து ஓட, சுடுகாட்டில் (என்) உடலை உறவினர் சுட்டு எரிக்க வெந்து சாம்பலாகும் இந்த துன்பம் என்று போகுமோ? (நீங்குமோ?)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## அம்பர்

சோதி மந்திரம் போத கம்பரவு
ஞான கம்பரந் தேயி ருந்தவெளி
தோட லர்ந்தபொன் பூவி ருந்தஇட முங்கொளாமல்-
சூது பந்தயம் பேசி அஞ்சுவகை
சாதி விண்பறிந் தோடு கண்டர்மிகு
தோத கம்பரிந் தாடு சிந்துபரி கந்துபாயும்;
வீதி மண்டலம் பூண மர்ந்துகழி
கோல மண்டிநின் றாடி யின்பவகை
வேணு மென்றுகண் சோர ஐம்புலனொ
டுங்குபோதில்-
வேதி யன்புரிந் தேடு கண்டளவில்
ஓடி வெஞ்சுடுங் காட ணைந்துசுட
வீழ்கி வெந்துகுந் தீடு மிந்தஇடர் என்றுபோமோ;
ஆதி மண்டலஞ் சேர வும்பரம
சோம மண்டலங் கூட வும்பதும
வாளன் மண்டலஞ் சார வுஞ்சுழிப டர்ந்த தோகை-
ஆழி மண்டலந் தாவி அண்டமுத
லான மண்டலந் தேடி யொன்றதொமு
கான மண்டலஞ் சேட னங்கணயில்
கொண்டுலாவிச்
சூதர் மண்டலந் தூளெ ழுந்து பொடி
யாகி விண்பறந் தோட மண்டிஒரு
சூரி யன்திரண் டோட கண்டுநகை
கொண்டவேலா
சோடை கொண்டுளங் கான மங்கைமய
லாடி இந்திரன் தேவர் வந்துதொழ
சோழ மண்டலஞ் சாரும் அம்பர் வளர் தம்பிரானே.77

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இடுப்பில் கச்சை, வாள், பன்னிரு அழகிய கரங்கள், வேல், பன்னிரு கண்கள், தாமரை போன்ற ஆறு திரு முகங்கள் கொண்ட முருகப்பெருமானே! கற்பக மரம் உள்ள தேவருலகம் வாழ்வுற, சித்தர்களும், விஞ்சையர்களும், தேவர்களும் "சபாஷ்" என்று பாராட்ட, தொல்லை கொடுத்து வந்த சூரர் குலம் வேரோடு அழிய வேலைச் செலுத்தியவனே! விஷம் கொண்ட ஆதிசேஷன் மீது துயில் பவன்; முகில் வண்ணன்; பச்சை நிற புயத்தன்; கருடவாகனன்; கரங்களில், வில், அம்பு, சங்கு, சக்கரம் ஆகியவை தரித்த திருமாலின் மருகனே! தினைப்புனத்தில் வாழ்ந்த வள்ளி நாயகி மீது ப்ரியம் கொண்டு, ஒப்பற்ற தேவசேனையுடனும் திருநள்ளாறு என்னும் தலத்தில் உறையும் பெருமாளே!

பச்சை நிறத்துடன் ஒளி வீசும் மலை போன்ற முலைகளையுடையவள்; வண்டுகள் சேரும் கூந்தல்; பிரகாசிக்கின்ற வேல் போன்றதும், கயல்மீன் போன்றதுமான கண்கள் ஞான ஒளி போன்ற வெள்ளை நிற முத்துக்களாம் பற்கள், வில்லைப்போன்ற நெற்றி, பவளம், தாமரை, செண்பகம் இவை போன்ற வாயிதழ்கள் உடைய ஞானஅருட் செல்வி, இச்சைகளைப் பூர்த்தி செயும் பார்வதி, பேரழகி, கிளி, பொன், அழகுவாய்ந்த ஆலிலை போன்ற வயிற்றினள், பசுங்கிளி போன்றவள், மின்னலும் நூலும் போன்ற இடையை உடைய அபிராமி, எல்லா குலத்தினருக்கும், எல்லா உலகங்களுக்கும் இருந்த இடத்திலேயே இரண்டு படி நெல்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் செய்தவள், ஆகிய பரமேச்வரியின் குமரனே! என உள்ளம் உருகி கூற மாட்டேனா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருநள்ளாறு

பச்சை யொண்கிரி போலிரு மாதன
முற்றி தம்பொறி சேர்குழல் வாள்அயில்
பற்று புண்டரி காமென ஏய்கழல் விழிஞான-
பத்தி வெண்தர ளாமெனும் வாணகை
வித்ரு மம்சிலை போல்நுத லாரிதழ்
பத்ம செண்பக மாம்அநு பூதியின் அழகாளென்(று);
இச்சை அந்தரி பார்வதி மோகினி
தத்தை பொன்கவின் ஆலிலை போல்வயி
றிற்ப சுங்கிளி யானமின் நூலிடை அபிராமி-
எக்கு லங்குடி லோடுல கியாவையு
மிற்ப திந்திரு நாழிநெ லாலறம்
எப்பொ தும்பகிர் வாள்கும ராஎன உருகேனோ:
கச்சை யும்திரு வாளும்இ ராறுடை
பொற்பு யங்களும் வேலும்இ ராறுள
கட்சி வம்கம லாமுகம் ஆறுள முருகோனே
கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் விஞ்சையர் மாகர்ச பாசென
கட்ட வெங்கொடு சூர்கிளை வேரற விடும்வேலா;
நச்சு வெண்பட மீதணை வார் முகில்
பச்சை வண்புய னார்கரு டாசனர்
நற்க ரம்தநு கோல்வளை நேமியர் மருகோனே-
நற்பு னந்தனில் வாழ்வளி நாயகி
இச்சை கொண்டொரு வாரண மாதொடு
நத்தி வந்துந ளாறுறை தேவர்கள் பெருமாளே. 78

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இந்திரன் மகள் தேவசேனை ஒருபுறம், வில் ஏந்திய வேடர் மகள் ஒருபுறம் வீற்றிருக்க, எழிலான மயில் மீது ஏறி வரும் அழகனே! புனுகுசட்டம், பன்னீர் முதலிய வாசனையுள்ள மாலையை மார்பில் அணிந்தவனே! முப்புரிநூல் அசைகின்ற பன்னிருபுயங்களை உடைய வீரனே! வாசனையுடன் குளிர்ச்சி மிக்க குளங்கள், சோலைகள், வயல்கள் நிறைந்துள்ள வளமை மிக்கதும், முனிவர்கள் வாசம் கொண்ட பழைமையான ஊரில் மகாதேவர் முப்புரம் எரித்தவர், சதாசிவர் ஆகிய சிவனது சுதனாகிய தேவசிகாமணியே! வழுவூரில் வாழ்வு அருளும் பெருமாளே.

புல்லாங்குழல் போன்று இசை பாட வல்லவர்கள், குயிலின் குரலைப் போன்ற மொழியார், வஞ்சனை செய்யும் மாதர்கள் மீது தணியாத காம இச்சையாம் கடலில் மூழ்கியும் அழியாமலும், நெருப்பைப் பொழியும் கண்கள், எரியும் பாசக் கயிறு, கூரிய முனைகளையுடைய சூலம் இவை ஏந்தியுள்ள எமனார் எருமைக்கடாவில் ஏறிவந்து என்னை அணுகாமலும், கருவில் ஊறிய முந்நூறு நாட்களும், பின்பு வருகின்ற மலதேகமும், மூவகை ஆசைகளும், வஞ்சகத்தால் ஏற்படும் தீமைகளும் வறுமை முதலியன தொலையவும், முதிர்ச்சியான அறிவும் உயர்ந்த மெய்ஞ்ஞானமும் தகுதியுள்ள சிவநேசமும் எனக்கு ஏற்பட, கழலும் சிலம்பும் கொண்ட உனது திருவடிநிழலைத் தந்தருள்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வழுவூர்

தருவூர்இசை யார்அமு தார்நிகர்
குயிலார்மொழி தோதக மாதர்கள்
தணியாமய லாழியில் ஆழவும் அமிழாதே-
தழலேபொழி கோரவி லோசனம்
எறிபாசம காமுனை சூலமுள்
சமனார்முகில் மேனிக டாவினில் அணுகாதே;
கருவூறிய நாளுமு நூறெழு
மலதேகமும் ஆவலும் ஆசைக
படமாகிய பாதக தீதற மிடிதீரக்-
கனிவீறிய போதமெய் ஞானமும்
இயலார்சிவ நேசமு மேவர
கழல்சேரணி நூபுர தாளிணை நிழல்தாராய்;
புருகூதன்மி னாள்ஒரு பாலுற
சிலைவேடுவர் மான்ஒரு பாலுற
புதுமாமயில் மீதணை யாவரும் அழகோனே-
புழுகார்பனிர் மூசிய வாசனை
உரகாலணி கோலமென் மாலைய
புரிநூலமு லாவுது வாதச புயவீரா;
மருவூர்குளிர் வாவிகள் சோலைகள்
செழிசாலிகு லாவிய கார்வயல்
மகதாபத சீலமு மேபுனை வளமூதூர்-
மகதேவர்பு ராரிச தாசிவர்
சுதராகிய தேவசி காமணி
வழுவூரில்நி லாவியெ வாழ்வருள் பெருமாளே. 79

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வில் அழிய, கடல்போன்ற அசுரக்கூட்டம் அழியவும், அரக்கர்களின் தலைகளை வெட்டி, தேவேந்திரனை ஆகாயத்து உச்சியில் உள்ள சுவர்க்கத்தில் குடிபுக வைத்த கதிர்வேலனே! சிவகாம சுந்தரியின் அன்பர், எந்தையர், பாம்பை அணிந்தவராம் சிவபிரானுக்கு ஒரு சிவஞானப் பொருளை உபதேசித்த அழகனே! மலையில் இருந்து தினைகாத்த கிளியாம் அமுதம் போன்ற உடலும், கடப்ப மாலையைக் கூந்தலில் அணிந்த அழகி வள்ளியின் மணவாளனே! நீண்ட கோழிக் கொடி விளங்க நடனமாடி தேவர்கள் போற்றும் குளிர்ந்த சோலை சூழ்ந்த வழுவூர் என்னும் பதியில் வீற்றிருந்தருளும் பெருமானே!

இளமையிலேயே எனக்கு திருவடிதீட்சை அளித்து, அன்புடன் ஞானோபதேசமும் தத்துவோபதேசமும் செய்து, அதன் மூலம் நான் ஞான சமுத்திரத்தில் நீராடும்படி செய்து, உன் சமர்த்தரான அடியாரோடு என்னையும் சேர்த்து, வடமொழி வல்லவர்களான தேவர்களுக்கு தெரியாத தமிழின் இயல், இசை, நாடகங்களின் நுணுக்கத்தை எனக்கு கற்பித்து, வைராக்யத்தை எடுத்துச் சொல்லும் முண்டக உபநிடத்தை படிப்பித்து, குண்டலினியை சூரிய, சந்திர, அக்கினி மண்டலங்களின் வழியில் செலுத்தி துவாதசாந்தத்தில் ஸ்படிக ஒளியாகிய சிவசக்தியை தரிசித்து, பரநாதத்தொடு ஒன்றி மீண்டும் அவரோஹண மார்க்கத்தில் இறங்கி சுழிமுனை வழியாக ஆறு ஆதாரங்களில் உள்ள பலபலயோக ஜோதியைத் தெரிசிக்கச் செய்த, யோக அனுபூதியையும் மயில்வாகனச் சேவையையும் மறவேனே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வழுவூர்

* தலைநா ளிற்பத மேத்தி அன்புற
உபதே சப்பொருள் ஊட்டி மந்திர
தவஞா னக்கட லாட்டி என்றனை அருளால்உன்-
சதுரா கத்தொடு கூட்டி அண்டர்கள்
அறியா முத்தமி ழூட்டி முண்டக
தளிர்வே தத்துறை காட்டி மண்டலம் வலமேவும்;
கலைசோ திக்கதிர் காட்டி நன்சுடர்
ஒளிநா தப்பர மேற்றி முன்சுழி
கமழ்வா சற்படி நாட்ட முங்கொள விதிதாவிக்-
கமலா லைப்பதி சேர்த்து முன்பதி
வெளியா கப்புக ஏற்றி அன்பொடு
கதிர்தோ கைப்பரி மேற்கொ ளுஞ்செயல் மறவேனே;
சிலைவீ ழக்கடல் கூட்டமுங்கெட
அவுணோ ரைத்தலை வாட்டி அம்பர
சிரமா லைப்புக வேற்ற வுந்தொடு கதிர்வேலா-
சிவகா மிக்கொரு தூர்த்தர் எந்தையர்
வரிநா கத்தொடை யார்க்கு கந்தொரு
சிவஞா னப்பொரு ளூட்டு முண்டக அழகோனே;
மலைமே வித்தினை காக்கும் ஒண்கிளி
அமுதா கத்தன வாட்டி இந்துள
மலர்மா லைக்குழ லாட்ட ணங்கிதன் மணவாளா-
வரிகோ ழிக்கொடி மீக்கொ ளும்படி
நடமா டிச்சுரர் போற்று தண்பொழில்
வழுவூர் நற்பதி வீற்றி ருந்தருள் பெருமாளே. 80

* *அருணகிரியார் திருவடி தீக்ஷை, உபதேசம் முதலியன பெற்ற அருள் அநுபவம்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



குருகுலத்தில் உதித்த மன அமைதியான உள்ளத்தையுடைய பஞ்சபாண்டவர்க்கு வரங்களைக் கொடுத்தவன், நீலமேகவண்ணன், விசுவரூபம் கொண்டவன், ரிஷிகேசன், உலகங்களை ஈன்ற பச்சை நிற உமையம்மையின் அண்ணனும், வடவேங்கடத்தில் உறைபவனும், உயர்ந்த சார்ங்கம் என்னும் வில், சுதர்சனம் எனும் சக்கரத்தையும் கையிலே கொண்ட திருமாலின் மருகனே! திரிபுரங்களை அழித்த சிவபிரானின் சுதனே! ரதியின் கணவன் மன்மதனுக்கு மைத்துனனே! முருகனே! பராக்ரமம் வாய்ந்த சுப்ரமண்ய! ஆறுமுகனே! வேலனே! அலைகள் மிக்க தாமரைத் தடாகங்கள் உள்ள வயலூர் தலைவா! முத்தியைத் தரும் திருவாஞ்சியம் எனும் தலத்தில் தேவர்கள் பெருமாளே!

யானை, காலாள், முதலான நால் வகைப் படைகளுடன் சக்ரவர்த்தியாய் ஆட்சி செய்து, திக்விஜயம் செய்து ஏகசக்ரவர்த்தியாகி, இறுமாந்து வட்ட வடிவமான சாய்வு மெத்தையில் சாய்ந்து, வெற்றிமலர் மாலை, எழிலான ஆடைகள், நறுமணக்கலவைபூச்சு, ரத்னமணியால் ஆகிய அணிகலன் இப்படிப்பல சேர்ந்த ஒரு மனிதவித்துவின் வடிவு இது; உறவினர் சூழ்ந்திருக்க பெருமையுடன் இப்படிப்பட்ட உயிரானது பிரிந்த பொழுது, நெருப்பில் இட அவ்வுடல் ஒருபிடி சாம்பலாகும் நிலையை அடையும் என்பதை அறியாமல் இருக்கிறார்களே! பொருள் ஆசை கொண்டு உன் திருவடிகளை நினையாமல் இருக்கிறார்களே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவாஞ்சியம்

இபமாந்தர் சக்ர பதிசெறி
படையாண்டு சக்ர வரிசைக
ளிடவாழ்ந்து திக்கு விசயமண் அரசாகி-
இறுமாந்து வட்ட வணைமிசை
விரிசார்ந்து வெற்றி மலர்தொடை
எழிலார்ந்த பட்டி வகைபரி மளலேபந்;
தபனாங்க ரத்ந அணிகலன்
இவைசேர்ந்த விச்சு வடிவது
தமர்சூழ்ந்து மிக்க உயிர்நழு வியபோது-
தழல்தாங்கொ ளுத்தி யிடஒரு
பிடிசாம்பல் பட்ட தறிகிலர்
தனவாஞ்சை மிக்குன் அடிதொழ நினையாரே;
உபசாந்த சித்த குருகுல
பவபாண்ட வர்க்கு வரதன்மை
உருவோன்ப்ர சித்த நெடியவன் ரிஷிகேசன்-
உலகீன்ற பச்சை உமையணன்
வடவேங்க டத்தில் உறைபவன்
உயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே;
த்ரிபுராந்த கற்கு வரசுத
ரதிகாந்தன் மைத்து னமுருக
திறல்பூண்ட சுப்ரம ணியஷண் முகவேலா-
திரைபாய்ந்த பத்ம தடவய
லியில்வேந்த முத்தி அருள்தரு
திருவாஞ்சி யத்தில் அமரர்கள் பெருமாளே. 81

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மகிழ்ச்சியுடன் தேவர்கள் பூமழை பொழிய திருஅவதாரம் செய்தவனே! "சூரனே" என முனிவர்கள் புகழும் மாயா சொரூபனே! 'ஹர ஹர சிவ' என்று ஓதாமல் வாதாடி நின்ற அவுணர்களும், அலைகடலும் "கோகோ" என்று அலற, மலைகள் வெடிபடிவும், வாளாலும், வேலாலும் அவர்களை அழித்த முருகனே! சூலாயுதம் ஏந்தியவள், திருமாலுக்குரிய மலர்மகளாம் பூமகள், கலைமகளாம் சரஸ்வதி, இவர்கள் போற்றிப் பரவும் பெருமைமிக்கவள், சந்திரகாச தோட்டை அணிந்தவள், மலைபோன்ற முலையையுடைய குமரி அளித்த அருள்பாலனே! தூயவர்கள் சுகமான சிவபத வாழ்வு இங்குள்ளது என்று ஞான உணர்ச்சியோடு வந்து தங்கும் சிறப்பான திருவாரூரில் மருவிய தேவர்கள் பெருமாளே!

பாலோ! தேனோ! பலாச்சுளையோ! அமுதமோ! கரும்புரசப் பாகோ! ஊன் உருகப் பாடிய மகனாம் திருஞானசம்பந்தருக்கு அளித்த ஞானப்பாலோ! வேறு ஏதாவதோ! பெண்கள் மொழி இது என்றும், கண்கள் வேலோ! அம்போ! என்றும், முகமானது சூரிய ஒளியோ, சந்திர ஒளியோ என்றும் பெண்கள்பால் மகிழும் நான், பல வகையான வடிவம் கொண்டவனே! தாமரை போன்ற ஆறுமுக ஒளியே! வேறு எதுவோ! குற்றம் நிறைந்த என் மனத்தில் வளரும் ஜோதியே! ஸ்படிகம் போல் விளங்கும் இடம் நானோ! நீயோ! அது ஜோதி நாடோ அல்லது வீடோ! நடுவுநிலைமையான உண்மையை மொழி என்று பிரார்த்தித்து நடுவில் உள்ள தூணுக்குச் சமமான தோளனே! தேவசபையின் நாதனே! தயாளனே! என்று என் மனம் உருகுமாறு அருள்புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவாரூர்

பாலோ தேனோ பலவுறு சுளையது
தானோ வானோர் அமுதுகொல் கழைரச
பாகோ ஊனோ டுருகிய மகன்உண வருண்ஞானப்-
பாலோ வேறோ மொழியென அடுகொடு
வேலோ கோலோ விழியென முகமது
பானோ வானூர் நிலவுகொல் எனமகள் மகிழ்வேனை;
நாலாம் ரூபா கமலஷண் முகஒளி
யேதோ மாதோம் எனதகம் வளரொளி
நானோ நீயோ படிகமொ டொளிரிட மதுசோதி-
நாடோ வீடோ நடுமொழி யெனநடு
தூணோர் தோளா சுரமுக கனசபை
நாதா தாதா எனவுரு கிடஅருள் புரிவாயே;
மாலாய் வானோர் மலர்மழை பொழியவ
தாரா சூரா எனமுநி வர்கள் புகழ்
மாயா ரூபா அரகர சிவசிவ எனஓதா-
வாதா டூரோ டவுணரொ டலைகடல்
கோகோ கோகோ எனமலை வெடிபட
வாளால் வேலால் மடிவுசெய் தருளிய முருகோனே;
சூலாள் மாலாள் மலர்மகள் கலைமகள்
ஓதார் சீராள் கதிர்மதி குலவிய
தோடாள் கோடார் இணைமுலை குமரிமுன்
அருள்பாலா
தூயா ராயார் இதுசுக சிவபத
வாழ்வாம் ஈனே வதிவம்என் உணர்வொடு
சூழ்சீர் ஆரூர் மருவிய இமையவர் பெருமாளே. **82**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிறந்த வெட்சி மாலையை அணிந்த மார்பும், புயங்களையும் கொண்டவனே! வில்லைப் போன்ற புருவம், மை பூசிய கண்கள், குங்குமம் அணிந்த நெற்றியையும் கொண்ட இமராஜ புதல்விக்கு குமாரனாகிய முருகனே! மலைப் பெண்ணாகிய இளையவளுக்கும், இந்திரன் புதல்வி தேவசேனைக்கும் சீலமாகிய நாயகனே! நீலமேக வண்ணனாம் திருமாலின் மருகனே! மலரும் பூவின் மணமானது பல திசைகளிலும் முப்பத்தெட்டு காதம் (380 மைல்) வரை வீசும் அழகிய நந்தவனங்களில் சஞ்சரிக்கும் வண்டின் இசை ஒலியால் அழகு நிறைந்த சிக்கல் தலத்தில் வீற்றிருக்கும் சிங்காரவேலனே! போரில் பொங்கி வந்த அசுரர்களை வெட்டி சம்ஹரித்த பெருமாளே!

புலவரை ஆதரிக்கும் கற்பக மரமே! இனிமையான மாதர் மார்பில் திளைக்கும் புயத்தனே! எட்டு திசைகளிலும் போய் உலவும் பெருமையுடையோனே! நட்புப் பண்பான வாய்மை நிலையில் உலகில் உனக்கு ஒப்பானவர் ஒருவரும் இலர் என்று நல்ல பொருட்களுடன் செம்மையாகக் கவிதைப் பாடி, விலை மதிப்பில்லாத தமிழ்ச் சொற்களை ஆதரிக்க உன்னைப்போல் தாளாளர்கள் யார்தான் இருக்கிறார்கள்? என்று நிரம்பக் கொண்டாடி, வாழ்வே பெரிது என்று வெறி கொண்டுள்ள உலோபிகளிடம் சென்று என் வருத்தங்களைக் கூறும் தரித்திர நிலை நீங்க, மிக்க பிரயாசையுடன் உன் பாத தாமரைகளே சரணம் என்று பற்றிக்கொள்ளும் பேதையாகிய என்மீது உன் திருக்கண் வைத்து குறைவில்லாத பேரின்ப வாழ்வைத் தந்தருள்வீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



**சிக்கல்**

புலவரை ரக்ஷிக் குந்தாரு வேமது
ரிதகுண வெற்பொக் கும்பூவை மார்முலை
பொருபுய திக்கெட் டும்போய்உ லாவிய புகழாளா-
பொருவரு நட்புப் பண்பான வாய்மையில்
உலகில் உனக்கொப் புண்டோவெ னாநல
பொருள்கள் நிரைத்துச் செம்பாக மாகிய கவிபாடி;
விலையில்த மிழ்ச்சொற் குன்போல்உ தாரிகள்
எவரென மெத்தக் கொண்டாடி வாழ்வெனும்
வெறிகொளு லுத்தர்க் கென்பாடு கூறிடு மிடிதீர-
மிகஅரு மைப்பட் டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும் பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றாத வாழ்வையும்
அருள்வாயே;

இலகிய வெட்சிச் செந்தாம மார்புய
சிலைநுதல் மைக்கட் சிந்தூர வாணுதல்
இமயம கட்குச் சந்தான மாகிய முருகோனே-
இளையகொ டிச்சிக் கும்பாக சாதனன்
உதவும்ஒ ருத்திக் குஞ்சீல நாயக
எழிலிள ழிற்பற் றுங்காய மாயவன் மருகோனே;
அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசை தொறு முப்பத் தெண்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமளி இசையாலே-
அழகிய **சிக்கற்** சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே. 83

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அனைவராலும் போற்றி வணங்கப்படும் பன்னிருதோள்கள், மயில், வேல் இவைகளை எவரும் காணாதவகையில் (மறைத்து) ராஜ கம்பீரத்துடன் கவுணியர் குலத்தில் வேதியனாய் வந்து, உமையின் திருமுலைப்பால் உண்ட குழந்தையாய், சிறந்த அற்புதத் தேவாரப் பாடல்களைப் பாடுவதில் மேம்பட்ட கவிஞனாய், திருவிளையாடல்கள் செய்து, வாதுக்கு வந்த சமணர்களை கழுவில் ஏறும்படி செய்து, (மதுரை) வீதிகள் எல்லாம் மலர்கள் நிரம்பிடவும், அனைவரையும் திருநீறு இடும்படி செய்தும், சமணத்தைச் சார்ந்த கூன்பட்ட பாண்டியனை (நின்ற சீர்நெடுமாறனாக்கி) நிமிரச் செய்தும், சமண்பகை அழித்து பொன்னுலகில் குடிபுகுவது போல் மதுரைப்பதியை வைதீகபுரி எனும்படி நேர்செய்து, குடசைமாநகர் (குடவாயில்) பதியில் வாழ்வுற வீற்றிருக்கும் பெருமாளே!

வேதமாய், ஆகமமாய், அதன் பல தொகுதிகளாய், பல மொழிகளில் அதன் தொடர்புமாய், அடியாய், நடுவாய், மிக்க துணையாய், துறவு நெறியாய், அறநெறியாய், விரிவு கொண்டதாய், விளைவுப்பொருளாய், அருள் ஞானிகளின் சுகப்பொருளாய், மேகமாய், மழையாய், பிரகாசிக்கும் சூரியனாய், சந்திரனாய், நிறைந்துள்ள நட்சத்திரங்களாய், ஆகாயவெளியாய், ஒளியாய், உண்டாகின்ற பகல் இரவு இல்லாததாய், நிலைத்துள்ளதாய், மிக்க மேலான பரம மாயையின் உண்மைத் தத்துவத்தை எவரும் அறிய முடியாததை நீ குருவாய் வந்து இப்படி எனக்கு உபதேசித்து உலகுக்கு ஓதுமாறு திருவருள் செய்தாய்! இது முற்பிறவியில் யான் செய்த தவப்பயனாகும் அல்லவோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## குடசைமாநகர் (திருக்குடவாயில்)

✸சுருதி யாய்இய லாய்இயல் நீடிய
தொகுதி யாய்வெகு வாய்வெகு பாஷைகொள்
தொடர்பு மாய்அடி யாய்நடு வாய்மிகு
துணையாய்மேல்-
துறவு மாய்அற மாய்நெறி யாய்மிகு
விரிவு மாய்விளை வாய்அருள் ஞானிகள்
சுகமு மாய் முகி லாய்மழை யாய்எழு சுடர்வீசும்;
பருதி யாய்மதி யாய்நிறை தாரகை
பலவு மாய்வெளி யாய்ஒளி யாய்எழு
பகலி ராவிலை யாய்நிலை யாய்மிகு பரமாகும்-
பரம மாயையின் நேர்மையை யாவரும்
அறியொ ணாததை நீகுரு வாய்இது
பகரு மாறுசெய் தாய்முதல் நாளுறு பயனோதான்;
கருது மாறிரு தோள்மயில் வேல்இவை
கருதொ ணாவகை யோர்அர சாய்வரு
கவுணி யோர்குல வேதிய னாய்உமை கனபாரக்-
களப பூண்முலை ஊறிய பால்உணு
மதலை யாய்மிகு பாடலின் மீறிய
கவிஞ னாய்விளை யாடிடம் வாதிகள் கழுவேறக்;
குருதி யாறெழ வீதியெ லாமலர்
நிறைவ தாய்விட நீறிட வேசெய்து
கொடிய மாறன்மெய் கூனிமி ராமுனை குலையாவான்-
குடிபு கீரென மாமது ராபுரி
யியலை யாரண ஊர்என நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய பெருமாளே. 84

✸ *அருணகிரியார் முருகவேளிடம் தான்பெற்ற உபதேசத்தின் பெருமையை வியத்தல்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மந்திரமும் தந்திரமும் பயின்றுவந்த அசுரர்களின் உடல்களை கடுகுப் பொடி போல தவிடு பொடியாக்கி, கடல் கதறவும், ரத்த ஆறு பெருகி ஓடும்படி, களிப்புடன் அப்போர்க்களத்தில் கழுகும், நரியும், காக்கையும், கருடனும் எங்கும் சுற்றி நிற்க, பேய்கள் பல பம்பை, பறை கொண்டு 'தந்தனம், தந்தனம்', என்று இசைகளை எழுப்பி நிணத்தை உட்கொள்ளும் காட்சியைப் பார்த்து மகிழ்ச்சியுறுகின்ற வேலனே! வெற்றித் திருநகராம் திருவிடைமருதூரில் விளங்கும் பெரிய குருபரனே! குமரனே! யானைகள் தூங்கும் வள்ளிமலைக் காட்டில் வாழ்ந்த வள்ளியின் சந்தனம் தோய்ந்த மார்பில் அணைபவனே! பிரகாசிக்கும் தண்டைகள் அணிந்த தாமரை போன்றதும், கருணைப் பொழியும் திருவடிகளே பற்றுக்கோடு என்று அந்தத் திருவடிகளைப் பற்றித் தொண்டு செய்யும் தேவர்கள் பெருமாளே!

பூமியை அளந்த மேக நிறத் திருமாலும், சூரியனும், தமர ஒலியுடன் ஓதப்படும் நான்கு வேதங்களும், தேவர் கூட்டமும், பிரமனும் போற்றுதற்கரிய அரசன், சமர்த்தன், சம்பத்து உடையவன், செம்பொன் மேனியுடையபரமன், பாம்பு, கங்கை, தாமரை, சந்திரன், கொன்றை, கும்மிழம்பூ, அறுகம்புல், தும்பை மலர், சிற்றகத்தி மலர் ஆகியவை சடையில் அணிந்துள்ளவன் ஆகிய நலம் தரும் சங்கரன் கும்பிடும் குமரன், ஆறுமுகன், செஞ்சொல் உடையவன், சரவணன், தேவசேனாபதி, கந்தன் என்று பலவிதம் பாடி வழிபடும் நல்லவழி ஒன்றிலும் செல்லாதவன்; தினையளவு கூட பங்கிட்டு பிறருக்குக் கொடுக்கும் பண்பில்லாதவன்; அப்படிப்பட்ட எனக்கு தவநெறியில் ஒழுகி நல்ல வழியில் செல்லும் எண்ணம் சிந்திக்காதா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருவிடைமருதூர்

படியையள விடுநெடிய கொண்டலும் சண்டனும்
தமரசது மறையமரர் சங்கமும் சம்புவும்
பரவரிய நிருபன்விர கன்சுடுஞ் சம்பனன்
செம்பொன்மேனிப்-
பரமனெழில் புனையும்அர வங்களும் கங்கையும்
திருவளரு முளரியொடு திங்களும் கொன்றையும்
பரியகுமிழ் அறுகுகன தும்பையும் செம்பையுந்
துன்றுமூலச்;
சடைமுடியில் அணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரன்அறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொந்தகன் கந்தன் என்
றுய்ந்துபாடித்-
தணிய ஒலி புகலும்விதம் ஒன்றிலுஞ் சென்றிலன்
பகிர ஒரு தினைஅளவு பண்புகொண் டண்டிலன்
தவநெறியில் ஒழுகிவழி பண்படுங் கங்கணஞ்
சிந்தியாதோ;
கடுகு பொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயில வரு நிருதருட லம்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்ப்ரமங்
கண்டுசேரக்-
கழுகுநரி கொடிகருடன் அங்கெழுந் தெங்குநின்
றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங்
கருதிஇசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந்
துங்கவேலா;
அடல்புனையும் **இடைமருதில்** வந்திணங் குங்குணம்
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவி தனில் உறைகுமரி சந்திலங் குந்தனந்
தங்குமார்பா-
அருணமணி வெயில்இலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமுந் தம்பமென்
றழகுபெற நெறிவருடி அண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே. 85

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தனத்த னந்தன.....தீதக தோதக..... என்று துந்துமி, தாரை, ஊதுகுழல், வீராணம், வெற்றி முரசு இவைகளுடன் போருக்கு வந்த அசுர சேனையை வளைத்து கோபத்துடன் வேலாயுதத்தை செலுத்தியவனே! உனது திறமையை உணர்ந்திடும் மாதவர்பால் அருள் புரிபவனே! தினைப்புனத்தில் மயலாகி மயில் போன்ற வள்ளியின் பாதத்தில் சரணம் என்று கூற, திருப்புயங்களைத் தந்த அந்த மானை அணைபவனே! சிவத்தினின்றும் தோன்றிய சுடரே! தவம் செய்வோர் பொருட்டு வந்த பாலனே! கிருபாகரனே! திருக்குடந்தையில் வாழும் முருகனே! தேவர்கள் பெருமாளே!

பிறப்பாகிய பொய்மையோடு கூடிய விளையாட்டாகிய கூத்தில் ஊழலும் அப்பிறப்பால் ஏற்படும் ஆணவம், சதை, பீளை, கோழை முதலியன கொண்டுள்ள இத்தேகமானது பல சாதி, குலம், வாதம், கூச்சலிடும் தன்மை, கோபம் எனும் வாதனையில் சுழன்று பிறப்பு ஒரு நோய் என்றும், கலிகாலத்தின் கூத்தோ என்று கூறுவதும், பிணத்தை சுடுகாட்டுக்கு எடுத்துப் போங்கள் என்பதும், அங்கே கவிழ்த்து தீ மூட்டி சாம்பலாய்விடுவதுமான இந்த உடலை நான் பாதுகாத்து, காதில் கடுக்கன் முதலிய ஆபரணங்களை அணிந்தும், உடைகளை அணிந்தும், வேதமந்திரங்களாற் பெறப்படும், சாத்திர நூல்களைப் படிப்பதும், பல வகையான ஆசைகளைக் கொண்டிருப்பதும், ஆக இவை எல்லாவற்றையும் ஒழிக்கவல்ல சிவயோகத்தையும் ஞானத்தையும் அருள் புரிவாயாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருக்குடந்தை (கும்பகோணம்)

செனித்தி டுஞ்சல சாழலும் ஊழலும்
விளைத்தி டுங்குடல் பீறியு மீறிய
செருக்கொ டுஞ்சதை பீளையும் ஈளையும்
உடலூடே-
தெளித்தி டும்பல சாதியும் வாதியும்
இரைத்தி டுங்குல மேசில கால்படர்
சினத்தி டும்பவ நோயென வேஇதை
யனைவோருங்;
கனைத்தி டுங்கலி காலமி தோவென
எடுத்தி டுஞ்சுடு காடுபு காவென
கவிழ்த்தி டுஞ்சட மோபொடி யாய்விடும்
உடல்பேணிக்-
கடுக்க னுஞ்சில பூடண மாடைகள்
இருக்கி டுங்கலை யேபல வாசைகள்
கழித்தி டுஞ்சிவ யோகமும் ஞானமும் அருள்வாயே;
தனத்த னந்தன தானன தானன
திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து துந்துமி தாரைவி ராணமொ டடல்பேரி-
சமர்த்த மொன்றிய தானவர் சேனையை
வளைத்து வெஞ்சின வேல்விடு சேவக
சமத்து ணர்ந்திடு மாதவர் பாலருள் புரிவோனே;
தினைப்பு னந்தனி லேமய லால்ஒரு
மயிற்ப தந்தனி லேசரண் நான்என
திருப்பு யந்தரு மோகன மானினை அணைவோனே-
சிவக்கொ ழுஞ்சுட ரேபர னாகிய
தவத்தில் வந்தருள் பாலக்ரு பாகர
திருக்கு டந்தையில் வாழ்முரு காசுரர் பெருமாளே.86

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஜெனனி, சங்கரி, ஆரணி, நாரணி, விமலி, எண்குணங்களும் நிறைந்தவள், எல்லாவற்றிற்கும் காரணமானவள், சிவை, பராபரையாகிய பார்வதி அருளிய குமரனே! சிறையிலிருந்த தேவர்களும் முனிவர்களும் மேலான சுகநிலையைப்பெற அசுரர் கூட்டம் வேரோடு அழிய சிவன் மகிழ்ந்து அருளிய கூர்மையான வேலைச் செலுத்திய முருகனே! இரணியன் தனது கையால் அறைந்த தூணினின்றும் நரசிம்ம மூர்த்தியாய், மலை, பூமி, திசைகள், கடல் முதலிய யாவும் கலங்க வந்து அவனுடன் போர் செய்து, அவன் கதறும்படி நகநுனியால் உடலைக்கீறி, இரத்தம் சிதறாதபடி அமுதாக உண்ட, தாமரை உந்தி உடையவனாகிய திருமாலின் மருகனே! சூரியன், கரும்புவில் மன்மதன், மாதவர்கள், தேவர்கள், இந்திரர், நாகலோகத் தலைவர், பிரமன், மாமறையோர் அனைவரும் போற்றிப் புகழும் அழகனே! அஷ்ட லக்ஷ்மிகள் நிறைந்த வீடுகளுடன், அழகான பொன் ஆலயம் சிறப்புற்று விளங்கும் சிவபுரம் என்னும் தலத்தில் வாழும் குரு நாயகனே!

மனம் என்ற ஒரு பொருளுடன் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் ஆக பஞ்ச பூதங்கள் கூடின ஒரு தேகம் எடுத்து அதிலே 96 தத்துவங்களில் சிவ தத்துவம் ஐந்துபோக, தொண்ணூற்று ஒன்று தத்துவக் கூட்டங்களாலே ஏற்படும் இன்பம், துன்பம், ஆசை இவைகளில் உழலும் என் புத்தியை நான் வென்று மேலான ஞான நன்னெறியைப் பெறும் படியாக நாயனைய அடியேனுக்கு உன் திருவருளைக் கொடுப்பீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## சிவபுரம்

மனமெ னும்பொருள் வானறை கால்கனல்
புனலு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லேபதி மூணெழு வகையாலே-
வருசு கந்துய ராசையி லேஉழல்
மதியை வென்றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனைநின் அருள்சேராய்;
செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி எண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா-
சிறைபு குஞ்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேரற
சிவனு கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே;
கனகன் அங்கையி னால்அறை தூணிடை
மனித சிங்கம தாய் வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே-
கதற வென்றுடல் கீணவன் ஆருயிர்
உதிர முஞ்சித றாதமு தாய்உணு
கமல உந்திய னாகிய மால்திரு மருகோனே;
தினக ரன்சிலை வேளருள் மாதவர்
சுரர்கள் இந்திர னாருர காதிபர்
திசைமு கன்செழு மாமறை யோர்புகழ் அழகோனே-
திரும டந்தையர் நாலிரு வோர் நிறை
அகமொ டம்பொனின் ஆலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக பெருமாளே. 87

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சூலாயுதம், கபாலம் ஏந்தியவள்; பராகாச வடிவி; சங்கரி, திரிபுரத்தை எரித்தவள்; சிதாகாசத்தில் உறைபவள், எண்குணத்தவரான சிவனின் பாதியை உடையவளாம் சிவகாம சுந்தரி விரும்பும் குழந்தையே! சூரனை சம்ஹாரம் செய்த குமரனே! இந்திரனுக்கு உதவியவனே! அன்பர்களுக்கு உபகாரியே! அழகான குகனே என்று வேதம் ஓலமிட திருநடனம் செய்யும் வேலனே! புனிதமான திருநீற்றை அணியாத துட்டசமணர்கள் கழுவிலேற (பாண்டியன் முதலானவர்களுக்கு) திருநீறிட்ட தாமரை போன்ற அழகான கரத்தை உடையவனே! சந்திரன் போன்ற பிரகாச முகமுடைய கந்தவேளே! தேவரம்பை போன்ற பாற்கடலில் தோன்றிய மகாலட்சுமி அளித்த மானாகிய வள்ளி (அல்லது அமுதவல்லி என்ற பெயரையுடையவள், கற்பகத்தரு நிழலில் இருந்த தேவசேனை) அணைத்த புயத்தை உடையவனே! தீரனே! சங்கரதியாகர் வந்து உறைகின்ற நல்லூரில் அமர்ந்து விளங்கும் தம்பிரானே!

மூலாதாரத் தாமரையில் உள்ள அனுபூதி மந்திரம், மேல்நிலையில் உள்ள மூன்று மண்டலங்கள், ஆறுஆதாரங்கள், இந்திரலோகத்திலுள்ள கற்பகமரம் போல் விரும்பியவற்றை அளிக்கும் மேலைவெளி, இவைகளைத் தாண்டி அம்பலவர் பீடம் எனப்படும் லலாட ஸ்தானத்தில் முடிவில்லாத ஆயிரம் கிரணங்கள் வீசும் மூன்றாம்பிறை போன்ற ஆஞ்ஞை சோதியுடன் கூடி மேலே பளிங்குபோன்ற விந்துநாத ஒலிஓலமிட பலதாளங்கள் சந்தங்களும் கலக்கும் தரிசனத்தைக்கண்டு தேவாம்ருத கடலைப்பருகி ஈரேழு உலகங்களையும் தரிசித்து மூன்று நாடிகளின் வழியே சூலம்போல் ஓடுகின்ற பிராணவாயு ஒடுங்க முதுகுத்தண்டில் தங்கி சுழுமுனை நாடியின் வழியே அணைந்து நூறுகோடி சந்திரஒளியில் சிவப்பேரொளியைக் காண்பேனா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருநல்லூர்

(சங்கரதியாகர் வந்துறைநல்லூர்)

மூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் மூணு மண்டலஅ
தார சந்திமுகம் ஆறும் இந்த்ரதரு வும்தளாமேல்-
மூது ரம்பலவர் பீட மந்தமும்இ
லாத பந்தஒளி ஆயி ரங்கிரண
மூணும் இந்துஒளிர் சோதி விண்படிக விந்துநாதம்;
ஓலம் என்று பல தாள சந்தமிடு
சேவை கண்டமுதை வாரி உண் டுலகி
ரேழு கண்டுவிளை யாடி இந்துகதிர் அங்கிசூலம்-
ஓடும் அந்தகலி கால்ஓ டுங்கநடு
தூணில் தங்கவரி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடி சந்த்ரஒளி சந்தியாதோ;
சூலி அந்தரிக பாலி சங்கரிபு
ராரி அம்பரிகு மாரி எண்குணசு
வாமி பங்கிசிவ காம சுந்தரிஉ கந்தசேயே-
சூர சங்கரகு மார இந்திரச
காய அன்பர்உப கார சுந்தரகு
காஎ னுஞ்சுருதி ஓலம் ஒன்றநட னங்கொள்வேலா;
சீல வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவில் ஏறும் என்றுபொடி
நீறி டுங்கமல பாணி சந்த்ரமுக கந்தவேளே-
தேவ ரம்பை அமு தீண மங்கைதரு
மான்அ ணைந்தபுய தீர சங்கரதி
யாகர் வந்துறைந லூர்அ மர்ந்துவளர் தம்பிரானே. 88

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வெற்றி முரசுகள் "மொகு மொகு மொகு" என்று ஒலி எழுப்ப, ஆகாயத்தின் உச்சியில் தன் இறகுகளைக் கொண்டு கருடன் வட்டமிட, பேய்கள் நடமாட, தேவர்கள் 'ஹர ஹர சிவசிவ சரணம்' என்று பேரொலி செய்ய, சூரியனும் குளிர்ச்சியான சந்திரனும் வலம்வர, தீய அசுரர்கள் பொடிபட போர் செய்த வடிவேலனே! மருதமரம் 'நெறு நெறு நெறு' என்று முறிபடவும், உருண்டு சென்ற உரலோடு தவழ்ந்த கண்ணனின் மருமகனே! செந்தாமரை மலர்கின்ற சுனையும், புலி நுழையும் குகையும் கொண்ட விராலி மலையில் விளங்கும் ஆறுமுகனே! குருபரனே! கயல், மகர முதலான மயிலை மீன்கள் குதித்தோடும் செந்நெல் வயல் நிறைந்த வயலூர்ப்பதியில் இறைவனே! அருள் தரும் பெருமாளே.

ரத்தம், புழுக்கள், ஜலம், மலம், மயிர், சதை இவை சேர்ந்த உருவமாம் இதனை எடுத்தது போதும்! போதும்! அழகான ஆபரணங்கள், நறுமணம், அறுசுவை உணவு, மெத்தைப்படுக்கை, குளிருக்கு அடக்கமான வீடு இவை போதும்! போதும்! மனைவி, குழந்தைகள், தாய், தம்பி தங்கையர் என்று உறவுமுறை கூறி குலவும் சுற்றத்தார்கள் இவர்களும் போதும்! போதும்! ஒரு நாலு வேத மார்க்கங்களை எடுத்துக் கூறும் சைவ சித்தாந்த நூல்களைத் தவிர மற்ற உலக கலை நூல்களும் போதும்! போதும்! அழிவில்லாத உன்னை நினைப்பவர்களுடைய உறவு தவிர, இனி மற்றவர்களிடம் சுற்றித் திரிவது நல்லது என்று அவர்கள் வசப்பட்டு உறவு கொள்வதும் போதும்! போதும்! அருள் அலைவீசும் கடற்கரை துறை வழியில் செல்லும் அறிவை எனது உள்ளம் மகிழ்ச்சியுடன் பெற அருள்புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## வயலூர்

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவும் உருவமும் அலம்அலம் அழகொடு
குலவு பலபணி பரிமளம் அறுசுவை மடைபாயல்-
குளிரில் அறையகம் இவைகளும் அலம்அலம்
மனைவி மகவனை அநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்கள் இவர்களும் அலம்அலம்
ஒருநாலு;

சுருதி வழிமொழி சிவகலை யலதினி
உலக கலைகளும் அலம்அலம் இலகிய
தொலைவில் உனைநினை பவருற வலதினி
அயலார் பால்-
சுழல்வ தினிதென வசமுடன் வழிபடும்
உறவும் அலம் அலம் அருளலை கடல்கழி
துறைசெல் அறிவினை எனதுள மகிழ்வுற
அருள்வாயே;

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
முகுற ககபதி முகில்திகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட-
விபுதர் அரகர சிவசிவ சரண்என
விரவு கதிர்முதிர் இமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும்
வடிவேலோ;

மருது நெறுநெறு நெறுவென முறிபட
உருளும் உரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை யவிராலி-
மலையில் உறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமும் உகள்செநெல்
வயலி நகரியில் இறையவ அருள்தரு பெருமாளே 89

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தரித்த னந்தன தானன..... தடுட்டு டுண்டுடு டூடுடி... என்று தாளத்துடன், தனத்த குந்தகு தானன தந்தக்.... கென்று கொதித்து வந்த சூரனுடைய உடல் சிதற, கடலை வற்றச் செய்து, மலையைப் பொடிபடச் செய்த வேலாயுதனே! தலைவணங்கவும், கையானது மலர்களைப் பொழிந்து அருச்சித்தும் வந்த தேவர்கள் உன்னை வணங்கும்போது அவர்கள் சிரத்திலுள்ள மணம் வீசும் மாலைகளின் நறுமணம் வீசும் திருவடிகளை உடையவனே! உலகுக்கெல்லாம் குருவாகிய தந்தைக்கு (சிவனுக்கு) உபதேசித்த குருவே! (அடியார்களுக்கு) உன் தந்தை ஞானப்ரசங்கம் செய்த திருப்பெருந்துறையில் விளங்கும் கந்தப் பெருமாளே!

ரத்தம், சீழ், மூளை, எலும்பு, மாமிசம், குடல், நாடிகள் இவைகளைக் கொண்டு கட்டப்பட்டு, அழுத்தமான மண்ணாலும், நீராலும் ஆன வீட்டில் (உடலில்) நுழைந்து, இதத்துடன் பேசும் சூது மொழிகளால், ஏற்படும் பொருளாசையால், பிறர் சொன்னாலும் தெளிவு பெறாமல், மாயை அதிகரிக்க உண்டாகும் வாதம், சுரம், பித்தம் இவைகளின் வருத்துதலோடு பலவகை வாயுக்களும் அதிகரித்து, பலம் ஒடுங்கி, கையில் தடிக்கொண்டு, ஊன்றிப்பிடிப்பதான நாட்கள் செல்ல, 'குரங்குக் கூட்டத்தவன் இவன் என்று பிறர் சொல்லும்படி கூனிப்போய் (உடம்பு) அடங்கி மரணம் வரும் சமயத்தில் பிறகு அஞ்சுவதான இந்த உடல் வேண்டுமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்பெருந்துறை

இரத்த முஞ்சியு மூளை எலும்புட்
டசைப்ப சுங்குடல் நாடிபு னைந்திட்
டிறுக்கு மண்சல வீடுபு குந்திட் டதில்மேவி-
இதத்து டன்புகல் சூதுமி குந்திட்
டகைத்தி டும்பொரு ளாசையெ னும்புட்
டெருட்ட வுந்தெளி யாதுப றந்திட் டிட மாயா;
பிரத்தம் வந்தடு வாதசு ரம்பித்
துளைப்பு டன்பல வாயுவு மிஞ்சிப்
பெலத்தை யுஞ்சில நாளுளொ டுங்கித் தடிமேலாய்ப்-
பிடித்தி டும்பல நாள்கொடு மந்திக்
குலத்தெ னும்படி கூனிய டங்கிப்
பிசக்கு வந்திடு போதுபின் அஞ்சிச் சடமாமோ;
தரித்த னந்தன தானன தந்தத்
திமித்தி மிந்திமி தீதக திந்தத்
தடுட்டு டுண்டுடு டூடுடி மிண்டிட் டியல்தாளம்-
தனத்த குந்தகு தானன தந்தக்
கொதித்து வந்திடு சூருடல் சிந்தச்
சலத்து டன்கிரி தூள்படெ றிந்திட் டிடும்வேலா;
சிரத்து டன்கர மேடுபொ ழிந்திட்
டிரைத்து வந்தம ரோர்கள் படிந்துச்
சிரத்தி னுங்கமழ் மாலைம ணம்பொற் சரணோனே-
செகத்தி னின்குரு வாகிய தந்தைக்
களித்தி டுங்குரு ஞானப்ர சங்கத்
திருப்பெ ருந்துறை மேவிய கந்தப் பெருமாளே. 90

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தத்தத் தனதன தானன..... தாகுட தீகுட..... என்று முரசின் பேரொலி திசைகளைக் கடந்து செல்ல, தேவர்கள் வாழும் திசைகள் கலங்கிட, சூரர்கள் தூளாகும்படி ஆதிசேஷனது ஆயிரம் முடிகள் பயம் கொள்ள, வேலாயுதத்தை எரிபவனே! வெற்றியைத் தரும் திருநீற்றை அணிந்த மேனியர், கோகுலத்தில் வளர்ந்த திருமாலுக்கு தனது இடதுபாகத்தைத் தந்த ஆத்திமாலை அணிந்த சடையர், மலைபோன்ற திரிபுரங்களை சாம்பலாகச் செய்தவர் ஆகிய சிவபிரானின் அருட்செல்வனே! மலைபோன்ற கொங்கையுடைய வள்ளிநாயகியின் சித்தத்தில் வீற்றிருக்கும் குமரனே! எம்மை ஆட்கொள்ள வெற்றிப்புகழ் கருவூரில் வீற்றிருக்கும் பெருமாளே!

தினமும் நோயுடன் கூடிய உடல் இது; இது நீர், மண், வாயு, அக்னி, ஆகாயம் எனப்படும் ஐந்து பூதங்களின் சேர்க்கையால் உண்டாகி நிற்கின்றது; உலகை ஆள வேண்டும், தேவலோகத்தையும் கொள்ள வேண்டும் என்னும் பேராசை கொண்டு, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அங்கும் இங்கும் ஓடி அலைந்து, ஆணவத்துடன் ஆடை அணிகலன் அணிந்து கொண்டு, 'நான்' எனும் மடமை அகங்காரத்துடன் எத்தித் திரியும் இந்நிலை ஏது? இது என்ன? இது சற்றும் பொய்யாகாது; நிலையாக இருக்கும் என்று திடமாக எண்ணி, உண்மையை உணராது மெய்ஞ்ஞானத்தை அரிய விரும்பாமல், பொய்யான மாயையில் அலையும் என்னை தந்திரமாக ஆட்கொண்டு, உனது அடியார்களுடன் என்னை சேர்த்து உன் திருவருளால் உயர்ந்த ஞான அமுதத்தை அளித்து உனது திருவடியாம் உயர்ந்த வாழ்வை நான் பெற இனிது ஆண்டருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கருவூர்

நித்தப் பிணிகொடு மேவிய காயமி
தப்புப் பிருதிவி வாயுவு தேயுவு
நிற்பொற் ககனமொ டாம்இவை பூதக லவைமேவி-
நிற்கப் படும்உல காளவு மாகர்இ
டத்தைக் கொளவுமெ நாடிடும் ஓடிடு
நெட்டுப் பணிகலை பூணிடு நான் எனு
மடவாண்மை;
எத்தித் திரியும்இ தேதுபொ யாதென
வுற்றுத் தெளிவுண ராதுமெய் ஞானமொ
டிச்சைப் படஅறி யாதுபொய் மாயையில்
உழல் வேனை-
எத்திற் கொடுநின தாரடி யாரொடும்
உய்த்திட் டுனதரு ளால்உயர் ஞானமு
திட்டுத் திருவடி யாம் உயர் வாழ்வுற இனிதாள்வாய்;
தத்தத் தனதன தானன தானன
தித்தித் திமிதிமி தீதக தோதக
டத்தக் குடகுகு தாகுட தீகுட எனபேரிச்-
சத்தத் தொலி திகை தாவிட வானவர்
திக்குக் கெடவரு சூரர்கள் தூள்பட
சர்ப்பச் சதமுடி நாணிட வேலதை எறிவோனே;
வெற்றிப் பொடியணி மேனியர் கோகுல
சத்திக் கிடமருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழ காணியர் அருள்பாலா-
வெற்புத் தடமுலை யாள்வளி நாயகி
சித்தத் தமர்கும ராஎமை யாள்கொள
வெற்றிப் புகழ்கரு வூர்தனில் மேவிய பெருமாளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பொருள் செறிந்த செந்தமிழால் உன்னை தினமும் நினைக்கவும், உன்னுடைய திருவருளைத் தந்தருள்க! எனது கருத்தில் பொருந்தி எனக்கு உயிர்த்துணையாக நீ இருக்க வேண்டும்; கடலில் ஒளிந்த சூரனுடைய உடலை இரண்டாகப் பிளந்து சேவலும் மயிலும் ஆடும்படி வேலாயுதத்தை ஏவியவனே! அன்னத்தை வாகனமாகக் கொண்ட பிரமன், தாமரை மீது வீற்றிருக்கும் லக்ஷ்மியுடன் சேர்ந்த திருமால் இருவருமாக அடி முடி தேடிய சிவபிரானுக்கு அரியபொருளை விளக்கி உபதேசித்த குமரேசனே! அறநெறியை உபதேசிப்பவரும், அந்தணர்களும் உன்னைத் தினமும் தொழும் அவிநாசித் தலத்தில் உறைந்து அடியார்களும் அருள் நிறைய பாலிக்கும் பெருமாளே!

நெஞ்சில் இரைச்சலுடன் எழுகின்ற கோழை அதிகரிக்கவும், கரிய முடியானது வெளுக்கவும், நடை தடுமாற்றம் அடைந்து வருத்தத்தைத் தர, தாய், மனைவி, மகன், மகள், வெறுப்புக் கொள்ளும் உறவினர், மற்றும் யாவரும் பழிக்கும்படியான பேச்சினால் தினமும் பரிகசித்து சிரிக்க, என்னை அடக்கி, பாசக்கயிறு கொண்டு கோபத்துடன் எதிர்வந்து, சூலத்தை என் மேல் வீசி, வாய் நெருப்பைக்கக்க, நான் பயம் கொள்ளும்படி என்னை இழுக்க வந்திடும் எமதூதர்களானவர் என்னைப் பிடிப்பதற்கு முன்பு உன்னுடைய திருவடித் தாமரைகளை அடியேனுக்குத்தர மயில் மேல் வந்தருள வேண்டும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## அவிநாசி

மனத்தி ரைந்தெழும் ஈளையு மேலிட
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட
மலர்க்கண் அண்டிரு ளாகியு மேநடை தடுமாறி-
வருத்த முந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கிளை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னால்மிக வேதின நகையாட;
எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையில்
எடுத்தெ றிந்தழல் வாய்விட வேபய முறவே தான்-
இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்;
கனத்த செந்தமி ழால்நினை யேதினம்
நினைக்க வுந்தரு வாய்உன தாரருள்
கருத்தி ருந்துறை வாய்என தாருயிர் துணையாகக்-
கடற்ச லந்தனி லேஒளி சூரனை
உடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா;
அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மால்அடி தேடிய
அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசா-
அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்
நினைத்தி னந்தொழு வார்அம ராய்புரி
அருட்செ றிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே.92

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருவாரூரில் பரவை நாச்சியாருக்காக ஆயிரம் பொன் பெற வேண்டி தலங்கள் தோறும் சென்று தரிசித்த தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தாள இசைக்குப் பொருந்த உறுதியான பக்திப்பெருக்குடன் பதிகம் பாடிவருகையில் கோடைக்கால வெப்பத்தால் இளைப்பு நீங்கிட மறையவர் கோலத்துடன் அவர் எதிரில் தோன்றி, கட்டுச் சோற்றை அவிழ்த்துத் தந்தவரும், அவிநாசித் தலத்தில் அவர் திக்கு திசை தெரியாமல் தவித்தபோது அவருக்குத் திசையைக் காட்டி உதவி செய்து மறைந்த வரும், முன்பு ஏரியில் முதலை உண்ட பாலகனை மீண்டும் அதன் வாயினின்று வரவழைத்தவருமான கிருபாகரர், திருப்புக் கொளியூரில் உறையும் பெருமான் புகழும் தம்பிரானே!

மதநீர் பெருகுவதும், விசாலமான முகபடாமும், நெற்றிப்பட்டமும், பச்சைக் கற்பூர பூச்சுக்கொண்ட நெற்றியும், முதுகில் பொருந்திய பறை முரசும், மிகச் சிவந்த கண்களும், வேகமாய்ச் செல்லும்போது மணிகளின் சப்தம் அழகாகக் கேட்கும்படி கட்டப்பட்ட கழுத்துக்கயிறும் ஆகிய இந்த அழகிய கோலத்தைக் கொண்ட ஐராவதத்தின் மீது ஏறி பவனி வந்தும், நிறைந்த செழிப்பான கற்பக மரத்தின் நீழலில் இருந்தும், மலைக்கோட்டை, நிலாமுற்றம், அரண்மனை ஆகியவைகளை உடைய இந்திரலோகத்தில் தேவர்கள் சூழ்ந்து பணி செய்கின்ற பிரபுவாய் விளங்கும் குமாரனே! என்முன் எதிரில் தோன்றி ஆண்டருளிய வயலூரில் வாழும் பெருமாளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்புக்கொளியூர் (அவிநாசி)

மதப்பட்டவி சாலக போலமும்
முகப்பிற்சன வாடையும் ஓடையும்
மருக்கற்புர லேபல லாடமும் மஞ்சையாரி-
வயிற்றுக் கிடு சீகர பாணியும்
மிதற்செக்கர்வி லோசன வேகமும்
மணிச்சத்தக டோபுர ரோசமும் ஒன்றுகோல;
விதப்பட்டவெ ளானையில் ஏறியும்
நிறைக்கற்பக நீழலில் ஆறியும்
விஷத்துர்க்கன சூளிகை மாளிகை இந்த்ரலோகம்-
விளக்கச்சுரர் சூழ்தர வாழ்தரு
பிரப்புத்வகு மாரசொ ரூபக
★ வெளிப்பட்டெனை யாள்வய லூரில்இ ருந்தவாழ்வே;
இதப்பட்டிட வேகம லாலய
ஒருத்திக்கிசை வானபொ னாயிரம்
இயற்றப்பதி தோறும்உ லாவிய தொண்டர்தாள
இசைக் கொக்கவி ராசத பாவனை
உளப்பெற்றொடு பாடிட வேடையில்
இளைப்புக்கிட வார்மறை யோன்என வந்துகானில்
திதப்பட்டெதி ரேபொதி சோறினை
அவிழ்த்திட்டவி **நாசி**யி லேவரும்
திசைக்குற்றச காயனு மாகிம றைந்து போமுன்
செறிப்பித்தக ராவதின் வாய்மக
வழைப்பித்தபு ராணக்ரு பாகர
**திருப்புக்கொளி** யூருடை யார்புகழ் தம்பிரானே. 93

★ *வயலூரில் அருணகிரியாரை ஆட்கொண்ட அற்புதம்*
*வேண்டுகோள் இல்லாத திருப்புகழ் (துதி)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கற்கண்டு போன்ற பேச்சு, பின்னப்பட்ட கூந்தல், அன்னநடை, தழை இலைகளால் ஆகிய ஆடை, சுறாமீனையும் அடக்கவல்ல கெண்டை மீனைப் போன்ற கண்கள் ஆகியவைகளையுடையவளை, பொழுதுவிடியு முன் களவு செய்துகொண்டு வேடுவர் இல்லமான ஒரு கல் குகையில் புகுந்து வேர்வை பெருக நின்ற செல்வனே! மேருமலைக்குப் பிறகு அசைவற்ற தன்மையில் (ஸ்திரமாக) இருந்த சோழ அரசனது (ஆட்சிக்கு உட்பட்ட) அழகிய கன்னபுரம் என்ற தலத்தின் தலைவனே! காவிரிக்கரையில் சர்ப்பாபரணச் சிவனுக்கு நாதனே! கயிலை மலையிலும், வைகுண்டத்திலும் உள்ள புண்ணியர்களுக்கும் பொற் கிரீடங்களை அணிந்துள்ள தேவலோகத்து அரசர்களுக்கும் தம்பிரானே!

அன்னப்பறவை வாகனம் கொண்டவனும், திருமாலின் உந்தியில் தோன்றியவனுமாகிய பிரமனுடைய கணக்கின்படி உதித்த சோறுமயமான மாமிசத்தோடு கூடிய உடலானது அழியாது என்று அந்த நினைவிலே மயக்கம் கொண்டு, பகைவர் போன்ற ஐம்புலன்களின் வழியே புகுந்து சென்றும், ஆட்டுவித்தபடி ஆடியும், சிறிது சிறிதாக உலவுகின்ற மூச்சு அடங்கும்படி ஹடயோகம் என்னும் மயக்கத்தைத் தருகின்ற நூல்களைக் கற்று, மேலும் அப்படிக் கற்றவைகளையும் விட்டு, இவ்வாறாக இளைப்புற்று இவ்வழிகள் தகாதவை; இன்பம் கொடுக்காது என்று உணர்ந்து துன்பங்கள் யாவற்றையும் விலக்கி, விளக்க முடியாத பேரின்ப வாழ்க்கையை உமது திருவருள் தராதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கன்னபுரம்

அன்னமிசைச் செந்நளிநச்
செம்மிகணக் கந்தியமத்
தன்னமயப் புலால் யாக்கை துஞ்சிடாதென்-
றந்நினைவுற் றன்னினைவுற்
றன்னியரிற் றன்னெறிபுக்
கன்னியசற் றுலாமூச்ச டங்கயோகம்;
என்னுமருட் கின்னமுடைப்
பன்னவைகற் றின்னவைவிட்
டின்னண மெய்த் தடா மார்க்கம்
இன்புறாதென்(று)
இன்ன தெனக் கென்னுமதப்
புன்மைகெடுத் தின்னல்விடுத்
தின்னதெனப் படாவாழ்க்கை தந்திடாதோ;
கன்னல்மொழிப் பின்னளகத்
தன்னநடைப் பன்னவுடைக்
கண்ணவிரச் சுறாவீட்டு கெண்டையாளைக்
கன்னமிடப் பின்னிரவிற்
றுன்னுபுரைக் கன்முழையிற்
கன்னிலையிற் புகாவேர்த்து நின்றவாழ்வே;
பொன்னசலப் பின்னசலப்
சென்னியினற் **கன்னபுரப்**
பொன்னிநதிக் கராநீர்ப்பு யங்கனாதா-
பொன்மலையிற் பொன்னிநகர்ப்
புண்ணியர் பொற் பொன்மவுலிப்
பொன்னுலகத் திராசாக்கள் தம்பிரானே. **94**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கடலை, கற்கண்டு, தேன் இவைகளுடன் தினைமாவு, வெல்லம் ஆகியவைகளை இனிமையாக உண்ணும் எம்பெருமான், ஒரு கொம்பினால் "பாரதக்கதையை எழுதியருளுக" என்று வியாசர் வேண்ட, மேருமலையில் அதனை எழுதியவரும், பவளமலை போன்றவருமாகிய கணபதி, அன்று சிவனை சுற்றி வலம்வரும் நேரத்தில், சண்டமாருதத்தைவிட மேலான வேகத்துடன் எட்டு திசையாகிய உலகம் முழுவதையும், பாம்பை உண்ணும் பச்சைத்தோகையுடைய மயில் வாகனத்தில் வரும் முருகச்சரபமே! என்று புகழ்ந்து தேவர்கள் வழிபடும் மதுரையில் விளங்கும் பெருமாளே!

அளவில்லாத அவுணர்களைக் கொன்ற தோளனே! கிரௌஞ்சமலையை ஊடுருவிச் சென்ற வேலனே! அழகிய தண்டை அணிந்த தாமரை போன்ற பாதனே! கூதளம் அணிந்த திருமுடியனே! மலைமகள் வள்ளியை அணைந்த மார்பனே! ஆறுமுகனே! என்றெல்லாம் கூறி உள்ளம் உருகும்படியான அன்பு எனக்குக் கிடைக்காதோ? 'கலகலகல' வென்று கண்டபேர்களுடன் கூச்சலிட்டு சமயவாதங்களைச் செய்து உரக்கக் கத்துபவர்கள் சொல்லும் குற்றம் நிறைந்த கலைகளை எல்லாம் ஒழித்து, பஞ்ச பூதங்களின் செயல்களும் அடங்கி, மனம் ஒடுங்கி ஒழியுமாறு நீ எனக்கு ஞான உபதேசம் அருளிய பெருமை தான் என்ன? அதிசயமானதன்றோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## மதுரை

அலகில் அவுணரைக் கொன்ற தோளென
மலைதொளை உருவச் சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக-
அடியென முடியிற் கொண்ட கூதளம்
எனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக் கென்பெ லாமுரு கன்புறாதோ;
கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவுங்-
கலைகளும் ஒழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு றாதன
கரணமும் ஒழியத் தந்த ஞானமி ருந்தவாறென்;
இலகுக டலைகற் கண்டு தேனொடும்
இரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ரான்ஒரு கொம்பினாலே-
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை அன்றுசூழ;
வலம் வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுணம் உண்டுலாவும்
மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்ப ரார்தொழு தம்பிரானே.95

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருநீறிடாமலும், அகம்பாவத்தால் மதிக்காமலும் இருந்த அமணர்களை வென்று அவர்களை கழுவில் ஏறும்படி செய்தும், கூன்பாண்டியன் ஈடேறுமாறு மதுரையில் வந்தவனே! மகா வீரனான அரக்கர் தலைவன் ராவணன் உடல் இரு கூறாக விழுமாறு அம்பு எய்த ரகுராமன், தாமரை மலர் போன்ற திருவாயினன், நாராயணன், மாயன், ராகவன் மருகனே! வாழ்நாளை அழித்துக்கொள்ள வந்த சூரர்கள் மாளவும், தேவர்களின் விண்ணுலகம் ஈடேறிடவும், அந்தத் தேவர்களுக்குத் தலைவனாக வந்த நாதனே!குருபரேன! குமரேசனே! வாக்குக்கும் எட்டாத பிரணவத்திற்கு பொருள் கூறினவனே! பல தேசங்களிலும் உள்ளவர்கள் திருவடிகளைத் தொழுது வணங்க ஆசாபாசங்களை நீக்கி விளங்கும் பெருமாளே!

ஞானத்தை ஆபரணமாக அணிந்தவள்; கரிய நிறம் கொண்டு அனைத்திற்கும் காரணமாயிருப்பவள்; விருப்பங்களை உயிர்களுக்கு ஊட்டும் மோகினி; பாதிரி மரத்தடியில் சிவனை பூசித்தவள்; பச்சை நிறத்தி; மாயையில் சிறந்த பார்வதி தேவி, நற்குணத்தி ஆகிய உமையின் நாதனும் கிருபாகரனும் ஆகிய தட்சிணாமூர்த்திக்கும் குருவே! வேதம் ஆகமங்கள் இவைகளை அருளிய தேவதேவனே! நல்ல ஈசனே! சடாமுடியை உடைய பரமேச்வரர், சர்வேச்வரி இவர்களின் புதல்வனே! தேன் போன்ற இனிய மொழிகளைப் பேசும் வள்ளி நாயகியின் கணவனே! தேவலோகத்தில் உள்ளவர்கள் தொழும் மாமயில் வாகனனே! பொன்னுலகத் தலைவன் இந்திரனின் மகளாம் தேவசேனை மனம் விரும்பும் மணவாளனே! உமது திருவடியை என் தலைமேற் சூடவும், நாயினேனது மோகம், விகார தாகம் கெட்டு ஓடும்படி நல்ல வேத ஞானத்துடன் உன் புகழை ஓதவும் அருள்புரிவாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## கூடல் (மதுரை)

ஞானாவி பூஷணி காரணி காரணி
காமாவி மோகினி வாகினி யாமளை
மாமாயி பார்வதி தேவிகு ணாதரி உமையாள்தன்-
நாதாக்ரு பாகர தேசிகர் தேசிக
வேதாக மேஅருள் தேவர்கள் தேவநல்
ஈசா சடாபர மேசர் சர் வேசுரி முருகோனே;
தேனார் மொ ழிவளி நாயகி நாயக
வானாடுளோர் தொழு மாமயில் வாகன
சேணாளு மானின்ம னோகர மாகிய மணவாளா-
சீர்பாத சேகர னாகவு நாயினன்
மோகாவி காரவி டாய் கெட ஓடவெ
சீராக வேகலை யால்உனை ஓதவும் அருள்வாயே;
பேணார்கள் நீறதி டாஅம ணோர்களை
சூராடி யேகழு மீதினில் ஏறிட
கூனான மீனன்ஈ டேறிட **கூடலில்** வருவோனே-
பேராண்மை யாளன் நி சா சரர் கோன்இரு
கூறாக வாளி தொ டு ரகு நாயகன்
பூவாயன் நாரணன் மாயன்இ ராகவன் மருகோனே;
வாணாள் படாவரு சூரர்கள் மாளவெ
சேணாடு ளோரவர் வீடதி டேறிட
கோனாக வேவரு நாதகு ரூபர குமரேசா-
வாசாம கோசர மாகிய வாசக
தேசாதி யோரவர் பாதம தே தொழ
பாசாவி நாசக னாகவு மேவிய பெருமாளே. 96

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கொலைத் தொழிலில் உறைப்பு கொண்ட எண்ணத்தைத் திருத்தி இது தீயது (அமணர்களுக்கும் சூரபத்மாதியருக்கும் பொருந்தும்) என்று அன்புடன் பலமுறை புத்தி சொன்னபோதும் நல்ல கதியைக் காணாதவர்கள் கண்கூடாகக் கொடுமையான நோய் கொண்டு, வேதனைப்பட்டு கெட்டே தடுமாறும்படி வருத்துபவனே! பெண்மேல் காமம் கொண்டு ஒருவேடரூபம் தாங்கி வனவேடர்களின் கூட்டத்தின் நடுவே குடியிருக்க வந்த முருகனே! குற்றமற்ற பக்தர்களுடன் மாதவச்சீலர்கள், சித்தர் முதலானோர் வலம் வரும் அழகிய திருக்குற்றாலம் என்னும் தலத்தில் விளங்கும் பெருமாளே!

வேதங்களால் முடிவு கூற இயலாதது; நமக்கு வெகு அருகில் உள்ளது; அறிவுகொண்டு அறிய முடியாதது; வீசம் பங்கும் தூரம் கூட இல்லாதது; கதிபெற விரும்புவோர் புத்தியால் ஆராய்ந்து தேடுதற்கு அரிதானது; சூரியனால் சுட முடியாதது; காட்டில் ஏற்படும் நெருப்பினாலும் வேகாதது; காற்றினால் அவிந்து போகாதது; பத்து மைல் தூரம் நறுமணம் வீசும் மலரைப் போன்றது; பேரொளியாய் விளங்குவது; ஆணவ மதம் ஊறுகின்ற மாயமான இந்த உடலில் ஆணவமதநீர் உள்ள தீதர்களுக்கு எட்ட முடியாத தூரத்தில் இருப்பதுமான இத்தகைய பெருவாழ்வைப் பெற அடியேனையும் பொருட்படுத்தி அருள்வீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## குற்றாலம்

வேதத்திற் கேள்வி இலாதது
போதத்திற் காண ஒணாதது
வீசத்திற் தூரம் இலாதது கதியாளர்-
வீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காய ஒணாதது
வேகத்துத் தீயில் வெகாதது சுடர்கானம்;
வாதத்துக் கேஅவி யாதது
காதத்திற் பூஇய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறு-
மாயத்திற் காய மதாசல
தீதர்க்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாஇனி அருள்வாயே;
காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணார்-
காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே;
கோதைப்பித் தாயொரு வேடுவ
ரூபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே-
கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலம்உ லாவிய பெருமாளே 97

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



போர் மிடுக்குள்ள குதிரைகளும், யானைகளும் குப்பைபோலவும், அசுரர்களது பிணங்கள் எட்டுத்திக் குகளையும் மூடி, திசைகளெல்லாம் செந்நிறமடைய அஷ்டகஜங்கள் அயர்ச்சியடைய, பம்பைகள் 'தத்தன தானத் தடுடுடு என்றும் "தொகு தொகு" என்றும் தாளங்கள் ஒலிக்க முரச வாத்யங்கள் இடி இடிப்பது போலவும் மின்னலைப் போன்றும் காட்சியளிக்க, தேவர்கள் தமது ஊரைத்திரும்பப் பெற்று அங்குள்ள செல்வங்களுடன் பொன்மாரி பெய்யும்படி வேலாயுதத்தை செலுத்திய வீரனே! உண்மைப் பொருள் உணர்ந்த ஞானியாம் குறமகள் வள்ளியும், ஐராவதம் வளர்த்த அழகிய தேவசேனையும், மயில் வாகனமும் விளங்க உத்தர கோசமங்கை என்னும் தலத்தில் உறையும் கந்தப்பெருமாளே!

கற்பக மரம் போன்று வேண்டுவதை வழங்கும் ஞானக்கடவுளே! தேவசேனாபதியே! இன்பச்சுவை கொண்ட தேன்போன்ற கரும்பு, வெல்லம், அப்பம், அமுது, சர்க்கரை, பால், தேன், இளநீர், வாழை, மா, பலா எனும் முப்பழம், பயறு ஆகியவற்றை தொப்பையில் ஏற்றருளும் கணபதியின் வலிமை மிக்க இளையவனே! திருவடியை வேண்டி வணங்கி, மயில்வாகனனே! ரத்னமணி பதித்த தண்டை அணிந்தவனே! நாதங்கள் ஒலிக்கும் சிலம்பை அணிந்தவனே! என்றெல்லாம் உன்னைத் துதித்து, மனம் குழைந்து, தியானித்து, உன் அற்புதப் புகழ்பாடி, சிவபதம் பெற்று ஞானப்பெருவெளி நிலையைப்பெற்று உடலில் ஊறும் ஞானஅமுதை உண்டு இன்புறுவேனோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## உத்தரகோசமங்கை

கற்பக ஞானக் கடவுண்முன் அண்டத்
திற்புத சேனைக் கதிபதி இன்பக்
கட்கழை பாகப் பமமுது வெண்சர்க் கரைபால்தேன்-
கட்டிள நீர்முக் கனிபய றம்பொற்
றொப்பையின் ஏறிட் டருளிய தந்திக்
கட்டிளை யாய்பொற் பதமதி றைஞ்சிப் பரியாய;
பொற்சிசி யாய்கொத் துருண்மணி தண்டைப்
பொற்சரி நாதப் பரிபுர என்றுப்
பொற்புற ஓதிக் கசிவொடு சிந்தித் தினிதேயான்-
பொற்புகழ் பாடிச் சிவபத மும்பெற
றுப்பொருள் ஞானப் பெருவெளி யும்பெற்
றுப்புக லாகத் தமுதையும் உண்டிட் டிடுவேனோ;
தெற்பமு ளாகத் திரள்பரி யும்பற்
குப்பைக ளாகத் தசுரர்பி ணந்திக்
கெட்டையு மூடிக் குருதிகள் மங்குற் செவையாகித்-
திக்கய மாடச் சிலசில பம்பைத்
தத்தன தானத் தடுடுடு வெங்கச்
செப்பறை தாளத் தகுதொகு வெங்கச் சிலபேரி;
உற்பன மாகத் தடிபடு சம்பத்
தற்புத மாகத் தமரர்பு ரம்பெற
றுட்செல்வ மேவிக் கனமலர் சிந்தத் தொடுவேலா-
உட்பொருள் ஞானக் குறமக ளும்பற்
சித்திரை நீடப் பரிமயில் முன்பெற்
றுத்தர கோசத் தலமுறை கந்தப் பெருமாளே 98

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திமிலை எனும் பறை, மத்தளவகைகள் திந்திந்தி மித்தமித.....திகுர்த்திகுந்த..... என்று ஒலிக்கவும், பிரபஞ்சமும், ஆதிசேஷன் முடிகளும் அண்டங்களும் பிளக்கும்படி பேரொலியை எழுப்பும் வெற்றிச் சின்னங்களின் ஒலி எழும்பும்படி அசுரர்களோடு போரிட, அங்கே தேவர்கள் கூடி மலர்மாரி பொழிய, கோழிக்கொடி எங்கும் பரந்து விளங்கத், திருமால், பிரமன், முநிவர்கள் அண்டங்கள் அனைவரும் பிழைத்தருள வேலை செலுத்தியவனே! அரியின் புதல்வி வள்ளியின் மார்பில் அழகான திருப்புயங்களால் அவளை அணைத்து இன்பத்தில் சுகித்து மகிழவும், மயில் வேலுடன், இந்தம்பலம் எனும் தலத்தில் மகிழ்ச்சியுடன் விளங்கும் பெருமாளே!

மாசற்ற ஆயிரத்தெட்டு இதழோடு கூடிய சஹஸ்ரதள உருவிடத்தே சங்கநாதம் உண்டாகும் ரகசியமான, அருமையான, மேலான ஞானவெளி எங்கும் பொலிவுறும் செயலை உணர்ந்தும், ஒருவராலும் அதன் தன்மையை அறிய முடியாததாய், ஐம்பத்தொரு அட்சரங்களுக்கும், அகில புவனங்களுக்கும், நதிகளுக்கும், அண்டங்களுக்கும் முதன்மையான செந்நிற ஜோதிப் பேரொளியை எங்கும்வீசப் பெற்றதாய், முதல் நடுவான யோகியர் உயர்நிலையில் இருக்கும் சந்திரகாந்தப் பொன் ஒளி வீசும் தன்மை கொண்டதும், ஸ்படிக நிறமான அழகிய ஆகாய வெளியில் சுழிமுனை நாடியின் உச்சியில், பஞ்ச இந்திரியங்களும் இன்பம் பெறக்கூடிய அமுதம் போல் இனிக்கும் சிவயோக நிலையை உனது கருணையால் அறியும்படியான வழியை அடைய கவுரி குமரனே! குருபரனே! என்று உன்னைப் பலமுறை அழைத்து முதிர்ந்த கனிந்த பக்தி நிலை வர இளமை தந்து, உன்திருவடியில் அடியேனையும் சேர்த்துக் கொள்வீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## இந்தம்பலம்

அமல கமலஉரு சங்கம் தொனித்த மறை
அரிய பரமவெளி யெங்கும் பொலித்தசெயல்
அளவும் அசலமது கண்டங் கொருத்தருள அறியாத
தகர முதலுருகொள் ஐம்பந் தொர்அக்ஷரமொ
டகில புவனநதி அண்டங் களுக்குமுதல்
அருண கிரணஒளி எங்கெங் குமுற்றுமுதல்
நடுவான;
கமல துரியமதில் இந்துங் கதிர்ப்பரவு
கனக நிறமுடைய பண்பம் படிக்கதவ
ககன சுழிமுனையில் அஞ்சுங் களித்தமுத
சிவயோகம்-
கருணை யுடனறிவி தங்கொண் டிடக்கவுரி
குமர குமரகுரு வென்றென் றுரைப்பமுது
கனிவு வரஇளமை தந்துன் பதத்தில்எனை
அருள்வாயே;
திமிலை பலமுருடு திந்திந் திமித்தி மித
டுமுட டுமுடுமுட டுண்டுண் டுமுட்டுமுட
திகுட திகுட திகு திந்திந் திகுர்த்திகுர்த திகுதீதோ-
செகண செகணசெக செஞ்செஞ் செகக்கணென
அகில முரகன்முடி அண்டம் பிளக்கவெகு
திமிர்த குலவிருது சங்கந் தொனித் தசுரர் களமீதே;
அமரர் குழுமிமலர் கொண்டங் கிறைத்தருள
அரிய குருகு கொடி எங்குந் தழைத்தருள
அரியொ டயன் முனிவர் அண்டம்பிழைத்தருள
விடும்வேலா-
அரியின் மகள் தனமொ டங்கம் புகைக்க முக
அழகு புயமொடணை இன்பங் களித்துமகிழ்
அரிய மயில்அயில்கொ **டிந்தம் பலத்**தின் மகிழ்
பெருமாளே. **99**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



எட்டுத்திக்கையும் அடக்கி தேவர்களுக்கு பல வேலைகளை கட்டளையிட்டு ஏவல் செய்யுமாறு செய்து, கருணையில்லா மனத்துடன் இருந்த சூரர்கள் படை கொண்டு சண்டைக்கு வந்தபோது அவர்கள் புயங்கள் அனைத்தும் விழும்படி சக்தி வேற்படையை செலுத்தி, தேவேந்திரனது மனத்துயரை நீக்கி, அவனது ஊரைத் திரும்பப்பெற அருளியவனே! சங்குமணியை அணிந்த குறமகள் வள்ளியின் அச்சத்தை நீக்கி, யானை எதிரில் வந்தபோது அவளை அன்புடன் அணைத்தவனே! கங்கையையும் சந்திரனையும் கொண்டுள்ள செஞ்சடையாருக்கு அருமைப் புத்திரனே! அத்திக்கரை என்னும் தலத்தில் விரும்பி உறையும் பெருமாளே!

உடலைக் கழுவி, பொன் ஆடைகளை சுற்றிக்கொண்டு, ஆபரணங்களை அணிந்து, வாசனைப் பொடிகளை நிறைய பூசிக் கொள்ளும் மாதர்களைப் புகழ்ந்து அந்த மயக்கத்தால் பரிசுத்த நிலையை விட்டு, பெரியோர்கள் சொல்லும் புத்திமதிகளைக் கேட்காமல் ஐம்புலன் முதலான சுற்றத்துடன், அதன்வழியே போய், இந்த பூமியில் அலையாமல், மூன்றுகுற்றங்களையும் நீக்கி, பலவித கலைநூல்களைக் கற்று, பிழையான மார்க்கங்களை நீக்கி, ஆத்ம ஞானிகளுக்கு அடிமை பூண்டு, அந்த ஒழுக்கத்தால் நல்லறிவு பெற்று, முத்தியை அடையும் தவநிலையைக் கற்று, நல்ல கதி தரக்கூடிய உண்மையை தரிசித்து, எல்லையில்லாத முத்திக்கடலில் நான் புகுமாறு வரம் அருள்வாயாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## அத்திக்கரை

*தொக்கைக்கழு விப்பொற் றகும்உடை
சுற்றிக்கல னிட்டுக் கடிதரு
சொக்குப்புலி அப்பிப் புகழுறு களியாலே-
சுத்தத்தைஅ கற்றிப் பெரியவர்
சொற்றப்பிஅ கத்தைப் புரிபுல
சுற்றத்துடன் உற்றிப் புவியிடை அலையாமல்;
முக்குற்றம்அ கற்றிப் பலகலை
கற்றுப்பிழை யற்றுத் தனைஉணர்
முத்தர்க்கடி மைப்பட் டிலகிய அறிவாலே-
முத்தித்தவ சுற்றுக் கதியுறு
சத்தைத்தெரி சித்துக் கரையகல்
முத்திப்புண ரிக்குட் புகவரம் அருள்வாயே;
திக்கெட்டும டக்கிக் கடவுள
ருக்குப் பணி கற்பித் தருளறு
சித்தத் தொட டுத்துப் படைகொடு பொருசூரர்-
செச்சைப் புய மற்றுப் புகவொரு
சத்திப்படை விட்டுச் சுரர்பதி
சித்தத்துயர் கெட்டுப் பதிபெற அருள்வோனே;
அக்கைப்புனை கொச்சைக் குறமகள்
அச்சத்தைஒ ழித்துக் கரிவரும்
அத்தத்தில் அழைத்துப் பரிவுடன் அணைவோனே-
அப்பைப்பிறை யைக்கட் டியசடை
அத்தர்க்கரு மைப்புத் திரவிரி
**அத்திக்கரை** யிச்சித் துறைதரு பெருமாளே. **100**

* *இந்தத்திருப்புகழ் ''முத்தைத்தரு'' என்னும்*
*முதற் திருப்புகழ்ச் சந்தத்தில் அமைந்தது.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தகுதகுகு...ரிரி என்று இடையறாது இடக்கை பறையும் உடுக்கை முதலிய அனைத்து வாத்தியங்களும் பேரொலி எழுப்ப, பேரண்டங்கள் அந்த அதிர்ச்சியினால் பிளவுபட, நெடும் பேய்கள் களிப்புடன் குட்டிக்கரணம் இட, பூவுலகோர் மருண்டு திகைக்க, நடனம் புரிபயிரவர்கள் மண்டலக் கூத்தாடி மகிழ, அவுணர்கள் மடிந்த பூமியில் கணக்கற்ற கிழட்டு கழுகுகள், காக்கைகள், கருடன் முதலிய பறவைகள், மாய்ந்த உடல்களைக் கொத்தித்தின்ன, உதிர ஆறுபெருக, அரக்கர்களின் தலை அறுந்த முண்டங்கள் கூத்தாட, முரசுகள் அதிர, ராக்ஷதர்களை வென்று இந்திரற்கு மீண்டும் ஆட்சியை உதவியப் பெருமானே!

அகரம் முதல் எழுத்தாக வரும் (ஆறு ஆதாரங்களில் காணப்படும்) ஐம்பத்தொரு எழுத்துக்களையும், அந்த எழுத்துக்களை தன்னில் அடக்கிய அழிவில்லாத கலைகளையும், அக்கலைகளில் உள்ள பலவிதமான உண்மைப் பொருள்களையும், இவை எல்லாம் அமைந்த மாபெரும் வேதங்களையும் தன்ரூபமாகக் கொண்ட ஏகமான மெய்ப்பொருளை (உணர்த்தியருள்!) மேற் சொன்ன அரும் பொருள்கள் அனைத்துமாகி விளங்கும் அறிவின் ரூபத்தை அறியும் ஞானிகள் அனுபவிக்கும் இன்ப அனுபவத்தை (அறிவித்தருள்!)- விழிப்பு, கனவு, ஆழ்தூக்கம் மூன்று நிலைகளையும் கடந்த நாலாவது நிலையாகிய துரிய அனுபவத்தை (விளக்கியருள்!) எதிலும் முதல் இடை இறுதியில் பரிசுத்தமாக நிகழ் நிலையை (உதவியருள்) அணுவிற்கு அணுவாய் இருக்கும் அதிநுட்பத்தை (உணர்த்தியருள்!) ஆணவ, கன்ம, மாயை மலங்களும், மனமும், சத்வ ராஜஸ தாமஸ குணங்களும் அற்ற நிலையில் விளங்கும் சொருபத்தை (காட்டி அருள்!) இப்பிரபஞ்சமே அற்ற இறுதியில் ஏகவஸ்துவாய் இருக்கும் உமது நிலையை (உணர்த்தி அருள்!) நிறைவு குறைவு நீக்கம் இன்றி பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் உனது பரம வியாபக நிலையை (விளக்கி அருள்!) ஒப்புயர்வற்ற அந்த மேல் நிலையை (உணர்த்தி அருள்!) திரிபுராரியாகிய சிவனும், சிவ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியே! ஞான குருவே! இளம் பரிபூரணா! என்று துதித்தபோது அவர்க்கு அறிவித்த மௌன உபதேச மந்திரத்தை வழிவழி அடிமையான எளியனுக்கும் உணர்த்தி அருளும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

அகரமுதல் எனஉரைசெய் ஐம்பந்தொர் அக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும் அடங்குந்த னிப்பொருளை
எம்பொருளு மாய-
அறிவைஅறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவை அடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவை அணு வினின்மலமு நெஞ்சுங்கு ணத்ரயமு
மற்றதொரு காலம்;
நிகழும்வடி வினைமுடிவில் ஒன்றென்றி ருப்பதனை
நிறைவுகுறை ஒழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ
ரித்தபெரு மானும்-
நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள் வாயே;

தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிண்டி குக்குடிகு
தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத
தத்ததகு தீதோ-
தன தனன தனதனன தந்தந்த னத்ததன
டுடுடுடுடு டுடுடுடுடு டுண் டுண்டு டுட்டுடுடு
தர ரரர ரிரிரிரிரி யென்றென்றி டக்கையும்உ
டுக்கையுமி யாவும்;
மொகுமொகன அதிரமுதி ரண்டம்பி ளக்கநிமிர்
அலகைகர ணமிடஉல கெங்கும்ப்ர மிக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக
ளத்தில்ஒரு கோடி-
முதுகழுகு கொடி கருட னங்கம்பொ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச
ளித்த பெருமாளே. 101

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


வாசுகி எனும் பாம்பாகிய கயிற்றை நாணாகக் கட்டி மேருமலையை வில்லாகப்பிடித்து, திருமாலாகிய அம்பை செலுத்தி திரிபுரத்து அரக்கர்களில் மூவர் மட்டும் இறக்காமல், பாதகம் செய்த முப்புரத்து அசுரர்கள் பொடிபட்டு விழ புன்சிரிப்பால் சிரித்த வித்தகச் சிவபிரானது செல்வமே! தேவந்திரனது கற்பக வனத்துடன் கூடிய தேசத்துக்குத் தலைவனே! என்று போற்றிய உத்தம தேவர்கள் வாழ, பராக்ரமம் நிறைந்த உமது திருவடிகளைக் சேராத சூரனை வெட்டி அடக்கி, கிரௌஞ்சமலையை மோதிச் சேறுபோல் ரத்தம்பாய்வதால் கடலும், மலைமேடு போல் நிற்க, பகைத்த அசுரர்குலத்தை இப்படி வாளால் அறுத்துத் துண்டாகும்படி செய்த பெருமாளே!

என்றும் கெடாத சிவஞான அறிவைக் கொடுத்ததையும், ஆராய்ந்து அறிய வேண்டிய நூல்களில் உட்கருத்தை அளித்ததையும், நிலையில்லாத திரிபுடன் உள்ள வாழ்க்கையில் பிரமித்து தளர்ச்சியுற்று உயிர் அழியாமல் ஆசை என்கின்ற கடலைக் கடக்கும்படியான ஆற்றலைத் தந்ததையும், வாக்குக்கு எட்டாத ஒருநிலையில் என்னை இருக்கும்படி வைத்தருளியதையும், கீழ்ப் பட்டவனான நான் மிகவும் பெருமையுடன் இனிமையான ஏழுலகில் உள்ளவையும் நானே எனும் அத்துவித நிலையைப் பெற்றும், கீர்த்தி நிறைந்த திருப்புகழ்ப் பாக்களை தேனாக இனிமையுடன் பாடி எல்லாத் திசைகளிலும் நான் எழுதி அனுப்பும் கடிதமோ, பாடலோ மிகவும் போற்றும்படியான ராஜமரியாதையை எனக்கு அருளியதையும், துன்பக் கட்லினின்று கரையேற முடியாத மும்மலங்களையும், மூவகைக் குணங்களையும், பலவித கலக்கங்களையும், நீர்க்குமிழி போல் தோன்றி மறையும் பிறப்பை நீக்கும் வகையில் இன்பம் தருவதான வரமாக எனக்கு அனுக்ரகித்ததையும் ஒருபோதும் நான் மறக்கமாட்டேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

ஆனாத ஞான புத்தி யைக்கொ டுத்ததும்
ஆராயு நூலக ளிற்க ருத்த ளித்ததும்
ஆதேச வாழ்வி னிற்ப்ர மித்தி ளைத்துயிர்
அழியாதே-
ஆசாப யோதி யைக்க டக்க விட்டதும்
வாசாம கோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபாத னேன்மி கப்ர சித்தி பெற்றினி துலகேழும்;
யானாக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற ஓதி எத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடராழி-
ஏறாத மாம லத்ர யக்கு ணத்ரய
நானாவி கார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாய்எ னக்க நுக்ர கித்ததும் மறவேனே;
மாநாக நாண்வ லுப்பு றத்து வக்கியொா்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரில் ஒருமூவர்-
மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தூளாக வேமு தற்சி ரித்த வித்தகர்
வாழ்வேவ லாரி பெற்றெ டுத்த கற்பக வனமேவும்;
தேநாய காஎ னத்து தித்த உத்தம
வானாடர் வாழ விக்ர மத்தி ருக்கழல்
சேராத சூர னைத்து ணித்த டக்கிய வரைமோதிச்-
சேறாய சோரி புக்க ளக்கர் திட்டெழ
மாறாநி சாச ரக்கு லத்தை இப்படி
சீராவி னால்அ றுத்தொ துக்கிய பெருமாளே. 102

★ *அருணகிரியார் பெற்ற அருள் அநுபவம் விவரிக்கும்*
*அற்புதத் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கொடுமையான படுகொலைகளைச் செய்யும் அசுரர்களின் மார்பிலிருந்து குமுகுமு வென்று சத்தத்துடன் ரத்தம் நதி போன்று தாளத்துடன் குதித்துப்பாயவும், பிரமன் அஞ்சவும், குமுறும் கடலின் குடல் பாகங்கள் கிழிபடவும், சூரனாகிய மாமரம் 'மொளுமொளு' என்று அடிமுதல் அலறி விழவும், கிரவுஞ்சம் எனும் பறவைப் பெயர் கொண்ட மலை தொளைபடவும் சுடர்வேலைச் செலுத்தியவனே! இடியும், கூர்மையான தன்னுடைய பிறந்த வீட்டுச் சீராக குலிசாயுதமும், கவளமாக ஊன் உண்பதுவும், வெண்ணிற முடையதும், மதம் பொழிவதுமான ஐராவதம் எனும் வெள்ளை யானையையும், பொன்னுலகும் இவை களையுடைய ஒப்பற்ற தேவசேனைக்குத் தலைவனே! குருபர! சரவணபவனே! பலமுகமாய் ஓடிவரும் கங்கையும், கிருத்திகைப் பெண்கள் அறுவரும் எனதுமகன் என்று நேசிக்கும் உமையம்மை தந்தருளிய தேவர் பெருமாளே!

வடக்கே நீண்டுள்ள மேருமலை இடிபடவும், ஏழுமலைகளும் 'நெறுநெறு' என்று நெரியவும், முதுமையுடைய நாகராஜனான ஆதிசேஷனது பணாமுடிகள் கிழிபடவும், நிலம் அதிரும்படி விளையாடும் நிகரில்லாத மயிலும், சூரியனை உமிழும் கொடியாகிய சேவலும் உன்னுடைய கருணையும், நிலைத்து விளங்கும் பெருமையும், உனது ஒளியும், இளமையும், இரண்டு திருவடிகளும், கடம்பணிந்த திருமுடிகளும், வேடர்மகள் வள்ளியின் கொடியிடை தளரும்படி வளரும் கஸ்தூரி அணிந்த நறுமணமுள்ள மொட்டுபோன்ற புளகிதம் கொண்ட தனங்களை அணைந்த திரண்ட தோளும், 'மொகுமொகு' என்று வண்டுகள் ஒலிக்கின்ற குராமலரை அணியும் முருகன், ஆறுமுகன் என்று வருவதுமான உன்நாமங்கள் முழுதும் இயற்றமிழில் பழுதில்லாமல் சொல்லும்படியான நாள் எனக்குக் கிட்டுமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


## பொது

நெடிய வடகுவ டிடியவும் எழுகிரி
நெறுநெ றெனநெரி யவுமுது பணிபதி
நிபிட முடிகிழி யவுநில மதிரவும் விளையாடும்-
நிகரில் கலபியும் ரவிஉமிழ் துவசமும்
நினது கருணையு முறைதரு பெருமையும்
நிறமும் இளமையும் வளமையும் இருசர ணமும்நீப;
முடியும் அபிநவ வனசரர் கொடியிடை
தளர வளர்வன ம்ருகமத பரிமள
முகுள புளகித தனகிரி தழுவிய திரள்தோளும்-
மொகுமொ கெனமது கரமுரல் குரவணி
முருகன் அறுமுகன் எனவரு வனபெயர்
முழுதும் இயல்கொடு பழுதற மொழிவதும்
ஒருநாளே;
கொடிய படுகொலை நிசிசரர் உரமொடு
குமுகும் எனவிசை யுடன்இசை பெறமிகு
குருதி நதிவித சதியொடு குதிகொள விதியோடக்-
குமுறு கடல்குடல் கிழிபட அடுமரம்
மொளுமொ ளென அடி யொடலறி விழவுயிர்
குருகு பெயரிய வரைதொளை படவிடு சுடர்வேலா;
இடியு முனைமலி குலிசமும் இலகிடு
கவள தவளவி கடதட கனகட
இபமும் இரணிய தரணியும் உடையதொர்
தனியானைக்
கிறைவ குருபர சரவண வெகுமுக
ககன புனிதையும் வனிதையர் அறுவரும்
எனது மகவென உமைதரும் இமையவர்
பெருமாளே.103

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மகர மீன்கள் நிறைந்த கடல் ஓலமிடவும், ராவணனது பத்து கிரீடங்களும் இருபது புயங்களும் அற்று விழும்படி ஒரு பாணத்தைச் செலுத்திய மேக வண்ணனும், குருவம்சத்து பஞ்சபாண்டவர்களுக்குத் தூதனாகவும், மடுவில் மதயானை கஜேந்திரன், 'ஆதி மூலமே'! என்று அழைக்க உடனே வந்து உதவிய வரதனும், இரண்டு வலிமை வாய்ந்த மருதமரங்களை முறித்தவனும், பிரகலாதப்பிள்ளையின் "நாராயணாயநம" எனும் வேத மொழியை இகழ்ந்த இரணியன் உடலை நகத்தின் நுனியால் கீறிப்பிளந்த ஒப்பற்ற வலிமை மிக்க நரசிங்க மூர்த்தியும், சக்கரம் தரித்த, பச்சைமலை போன்ற மேனியை உடையவரும், நெருப்பைக் கக்கும் காளிங்கன் எனும் பெரும்பாம்பின் மீது நடனம் செய்த ஹரியாம் திருமாலின் மருகனே! உருகும் அடியார்களின் இருவினை இருளைப் போக்கும் ஞானசூரியனே! சந்திரன் வலம் வரும் உலகம் முழுவதையும் ஒருநொடியில் வலம் வந்த பெருமாளே!

இரப்போர்க்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற நினைப்பு தினையளவுகூட இல்லாதவன்; கருணை யில்லாதவன்; உனது திருவண்ணாமலை, திருத்தணிகை, பழநி, சுவாமிமலை, திருச்செங்கோடு எனும் பலமலைகளையும் பாடிப் போற்றுகின்ற திறமில்லாதவன் நான்; வஞ்சனையுடன் மாறுபாடுள்ள பேச்சுக்களில் பழகுபவன் நான்; அழகில்லாதவன்; குலமில்லாதவன்; நற்செயல் ஒன்றும் இல்லாதவன்; பக்தி என்பதே இல்லாதவன்; பெருமை யில்லாதவன்; குயவனது சக்கரம் சுழலும் ஒரு சுழற்சி வேகத்தில் எழுபது சுழற்சி கொண்டு வருந்தும் மனக் கோணல் உடையவன்; உருகுதல், அழுதல், வணங்குதல் இவை நினையாத திமிர் கொண்டவன்; நல்ல இயல்பு, மறுமைக்கு அருள், இம்மைக்கு பொருள் இவை இல்லாதவன்; திருடன், அறிவில்லாதவன், திக்கற்றவன், ஒழுங்கு இல்லாதவன், செய்கின்ற செயல்களில் உணர்ச்சி இல்லாதவன் ஆகிய நான் சிவபதம் அடையும் நாளும் உண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

பகிர நினைஒரு தினைஅள விலுமிலி
கருணை இலிஉன தருணையொ டுதணியல்
பழநி மலைகுரு மலைபணி மலைபல மலைபாடிப்-
பரவு மிடறிலி படிறுகொ டிடறுசொல்
பழகி அழகிலி குலமிலி நலமிலி
பதிமை இலிபவு ஷதுமிலி மகிமையி லிகுலாலன்;
திகிரி வரும்ஒரு செலவினில் எழுபது
செலவு வருமன பவுரிகொ டலமரு
திருகன் உருகுதல் அழுகுதல் தொழுகுதல் நினையாத-
திமிரன் இயல்பிலி அருளிலி பொருளிலி
திருடன் மதியிலி கதிஇலி விதிஇலி
செயலில் உணர்விலி சிவபதம் அடைவதும் ஒருநாளே;
மகர சலநிதி முறையிட நிசிசரன்
மகுடம் ஒருபதும் இருபது திரள்புய
வரையு மறஒரு கணைதெரி புயல்குரு நருபதூதன்-
மடுவில் மதகரி முதலென உதவிய
வரதன் இருதிறல் மருதொடு பொருதவன்
மதலை குதலையின் மறைமொழி இகழ்இர ணியனாகம்;
உகிரி னுதிகொடு வகிருமொர் அடலரி
திகிரி தரமர கதகிரி எரியுமிழ்
உரக சுடிகையில் நடநவில் அரிதிரு மருகோனே-
உருகும் அடியவர் இருவினை இருள்பொரும்
உதய தினகர இமகரன் வலம்வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு பெருமாளே. 104

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மகரமீன் கொடியையும், செந்தமிழ்வீசும் மலய மருதமாகிய தென்றல் காற்றும் பலவகை வாசனை மிகுந்த மலர்ப் பாணங்களையும், பூங்கொத்துக்களில் தேனை உண்டு ஆடும் வண்டுகளின் மாலை போன்ற அம்பையும், இனிப்பான கரும்பு வில்லையும் கொண்டு சண்டையிட்ட மதனராஜன் காமனை வெந்து போகுமாறு நெற்றிக் கண்ணால் கோபித்தவர்; சந்திரனையும் கங்கையையும் சடையில் அணிந்த சிவபிரான், வேதச் சிலம்போடு நின்று மணம்வீசும் அழகியும் தாமரை போன்ற திருவடிகளை யுடையவளுமான சங்கரி, பார்வதி, முக்கண்ணி தந்தருளிய முருகனே! தேவசேனையை மகிழ்விக்கும் பெருமாளே!

குற்றமற்ற சேவற் கொடியோனே! தெற்றிப்பல்லும் போரில் வல்லமையும் உடைய அசுரர்களை கோபித்தவனே! கிரௌஞ்சமலையோடு போரிட்ட பராக்ரமசாலியே! மலைக்கொடி வள்ளி மணாளரே! புனிதமான அந்தணர்களும், தேவர்களும் பணிகின்ற மலைபோன்ற திருப்புயங்களை உடையவனே என்று பலவாறாக உனைப்போற்றி இருகண்களிலும் நீர் பொழிய, அன்பு ததும்பும் மனத்தை உடையவனாகி, பஞ்ச பூதங்களால் ஆகிய உடம்பினில் பொருந்திய உயிரும், நான்கு கரணங்களும் நெகிழ்ந்து இளக, நான் எனும் அகந்தை அழிந்த நிலையில், ஞான உணர்ச்சியால், சமய வாதிகளும் சமயங்களும் அடையமுடியும்; முடியாது என்று முறையிடும்படி நிற்கும் பொருளை அறிவிலியாகிய அடியேன் அறிந்துகொள்ளும்படி இன்று திருவருள் புரிவீராக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

புகரில் சேவல தந்துர சங்க்ரம
நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக குன்றவர் பெண்கொடி மணவாள-
புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
புயச பூதர என்றிரு கண்புனல்
பொழிய மீமிசை அன்புது ளும்பிய மனனாகி;
அகில பூதவு டம்பும்உ டம்பினில்
மருவும் ஆருயி ருங்கர ணங்களும்
அவிழ யானும்இ ழந்தஇ டந்தனில் உணர்வாலே-
அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
அறிவி லேன்அறி யும்படி இன்றருள் புரிவாயே;
மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலய மாருத மும்பல வெம்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி வெறிஆடும்-
மதுகர் ஆரம்வி குஞ்சணி யுங்கர
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராஜனை வெந்துவி ழும்படி முனிபால;
முகிழ்வி லோசன ரஞ்சிறு திங்களு
முதுப கீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் வேதமு நின்றும ணங்கமழ் அபிராமி-
முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருக னேசுர குஞ்சரி ரஞ்சித பெருமாளே. 105

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உலகம் அனைத்தையும் தமது திருவடியால் அளக்க வேண்டி; திரிவிக்ரம அவதாரம் எடுத்த முகுந்தர், மடுவினில் முதலைவாயில் அகப்பட்டு உயிர்போய்விட்டது என்று மலை போன்ற கஜேந்திரன் எனும் யானை புலம்பிட அப்போது பாஞ்சசன்னியம் எனும் சங்கை ஊதி, அந்த ஓசை அடங்குவதற்குள் சக்கரத்தை ஏந்தி வந்து அந்த மடுஇருந்த வனத்தில், யானையைக் காப்பாற்ற தனியாகவே வந்து அபயம் அளித்த நீலநிற மேனியனாம் திருமாலின் மருகனே! தென்னம் பாளையின் நறுமணம் எங்கும் வீசுகின்ற பூஞ்சோலையில் இருந்த ஒப்பற்ற மலைவேடர்களின் மயில் போன்ற அழகிய வள்ளியை விரும்பிய பெருமாளே!

யுகாந்தத்தில் முடிவுஅடையும் தேவர்களின் எலும்பை அணிபவர்; சடைமுடியை உடையவராம் சிவபிரானுக்கு நீ உபதேசித்த பொருளை, ஆகாயம், பூமி, காற்று, நெருப்பு, நீர் எனும் ஐம்பூதங்களும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு கரணங்களும், 'நான்' எனும் அகங்காரமும் ஒடுங்க, அப்போது அங்கு விளங்கும் ஒப்பற்ற பொருளை எனக்கு அருள உமக்கு விருப்பம் இல்லையாயின் வேண்டாமை எனும் நிராசையையாவது நான் அடைந்து, உள்ளம் பலவிதமாகச் செல்லாது, வேகம் அடங்கி, என்னுள்ளே நிலைத்து நின்று, உன் திருவடியில் வீழ்ந்து ஆவல் கொண்டு உருகும்படியான அன்பு நிலையை நான் உடையவனாய் "வேந்தா! கடப்பமாலையை அணியும் சேந்தா! உன் திருவடிகளே சரணம்! சரணம்!" என்னும் அந்த வழிபடும் தொண்டு வீணாகாது பயன்தரக் கூடியது என்பதை என் உள்ளம் உணர்ந்து கொள்ளாதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

மாண்டார்எ லும்பணி யுஞ்சடை
யாண்டார்இ றைஞ்ச மொழிந்ததை
வான்பூத லம்பவ னங்கனல் புனலான-
வான்பூத மும்கர ணங்களு
நான்போயொ டுங்கஅ டங்கலு
மாய்ந்தால்வி ளங்கும தொன்றினை அருளாயேல்;
வேண்டாமை ஒன்றைஅ டைந்துளம்
மீண்டாறி நின்சர ணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை உடையேனாய்-
வேந்தாக டம்புபு னைந்தருள்
சேந்தாச ரண்சரண் என்பது
வீண்போம தொன்றல என்பதை உணராதோ;
ஆண்டார்த லங்கள்அ ளந்திட
நீண்டார்மு குந்தர்த டந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்றுமு தலைவாயுற்(று)
ஆங்கோர் சி லம்புபு லம்பிட
ஞான்றூது துங்கச லஞ்சலம்
ஆம்பூமு ழங்கிஅ டங்கும்அ ளவில்நேசம்;
பூண்டாழி கொண்டுவ னங்களில்
ஏய்ந்தாள வென்று வெறுந்தனி
போந்தோல மென்று தவும்புயல் மருகோனே-
பூம்பாளை எங்கும ணங்கமழ்
தேங்காவில் நின்றதொர் குன்றவர்
பூந்தோகை கொங்கைவி ரும்பிய பெருமாளே. **106**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வேத வித்தகனே! சுவாமியே! நமோநம! வேலாயுதத்தை ஏந்தும் மாசூரனே! நமோநம! சக்ரவடிவான பயங்கர சேனைப்படை நடத்தும் ஆண்டவனே! நமோநம! விந்துநாதவீரனே! தாமரை போன்ற அழகான திருவடிகளை உடையவனே! நமோநம! நீலநிறத்து கூதளப் பூமாலை அணிந்தவனே! நமோநம! மேகநிறம் கொண்ட மயில் வாகனனே நமோநம! விண்டிடாத ஞான நிலையை அடைந்தவர்களின் ஞானப்பொருளே நமோநம! பஞ்ச பூதங்களாய் மற்றும் அனைத்துமாய் விளங்குபவனே நமோநம! பூரணப் பொருளாய் இருப்பவனே நமோ நம! உயர்ந்த மலைகளில் வாழ்பவனே நமோநம! பன்னிரண்டு தோளனே நமோநம! அணிமணி ஆபரணங்கள் அணிந்த அழகிய மார்பனே! நமோ நம! தாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதியும், செந்தாமரையில் வீற்றிருக்கும் லட்சுமியும், இந்திராணியும், வீரம் செறிந்த சப்த மாதாக்களும் அவர்களுடன் கூடிநிற்கும் தெய்வமகளிரும் எதிரே நின்று வேதவித்தகியே! பயங்கரியே! பற்றற்றவளே! அழகிய வீணையை கையில் ஏந்தியவளே! மகாமேரு போல விளங்கி வாழும் சிறப்புடையவளே! சிவனுடைய தேகத்தில் பங்கு கொண்டவளே! வாசனைத் திரவியங்களைப் பூசியுள்ளவளே! ஆதிசக்தியே! சாமவேதம் போற்றும் தேவியே! பார்வதி! நீலி! நாகாபரணம் அணிந்தவளே! தாயே! நித்தியமே! துர்காதேவியே! என்று தினந்தோறும் தொழுது வணங்குகின்ற மகாதேவி பெற்ற சிராளனே! நமோநம! சூரனை வதைத்துப் பெரும்புகழ் பெற்றவனே! நமோ நம! வேதம் வல்லவர்கள் செல்வமே! தம்பிரானே! உம்மை வணங்குகின்றேன்! உம்மை வணங்குகின்றேன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

★ வேத வித்தகா சாமீ நமோ நம
வேல்மி குத்தமா சூரா நமோ நம
வீம சக்ரயூ காளா நமோநம விந்துநாத
வீர பத்ம சீர் பாதா நமோ நம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேகம் ஒத்தமா யூரா நமோநம விண்டிடாத
போத மொத்தபேர் போதா நமோ நம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம துங்கமேவும்
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷ ணத்துமா மார்பா நமோநம புண்டரீக
மீதி ருக்குநா மாதோடு சேயிதழ்
மீதி ருக்குமே ரார்மாபு லோமசை
வீர மிக்க ஏழ் பேர்மாதர் நீடினம் நின்றுநாளும்
வேத வித்தகி வீமா விராகிணி
வீறு மிக்கமா வீணா கரேமக
மேரு வுற்றுவாழ் சீரே சிவாதரெ யங்கராகீ
ஆதி சத்திசா மாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீணாக பூஷணி
ஆயி நித்தியே கோடீர மாதவி என்றுதாழும்
ஆர்யை பெற்றசீ ராள நமோ நம
சூரை யட்டுநீள் பேரா நமோநம
ஆர ணத்தினார் வாழ்வே நமோநம தம்பிரானே. 107

★ *அர்ச்சனைத் திருப்புகழ்*

*வேண்டுகோள் இல்லாத திருப்புகழ் (துதி)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆடல் பாடல் கொண்ட வேதாள கணப் பெருங்கூட்டத்துடன் காட்டில் நடனம் செய்கின்ற நாதனது புத்திரனே! காங்கேயனே! கருணைக்கடலே! இந்திரன் புதல்வி தேவசேனையின் கணவனே! மயில் வாகனனே! கீர்த்திமானே! மூலகாரணமான அதிபனே! மாலைகள் அணிந்த குமரேசனே! விசாகனே! கிருபாநிதியே! பவள நிறத்தவனே! தாமரை போன்ற பிரகாசமான ஆறுமுகனே! வேதவித்தகனே! பிரமனிடம் திருவிளையாடல் புரிந்தவனே! வேட லக்ஷ்மியாம் வள்ளியுடன் விளையாடிய வீரனே! பராக்ரமசாலியே! சூரத்வம் கொண்டவனே! வீரர்களில் கொடுமையான வீரனே! வீரசூரனைக் கோபித்தவனே! மூல காரணப் பொருளே! தீரனே! அழகனே! விநாயகப் பெருமானினிடம் பிரியம் கொண்டவனே! வேலாயுதனே! தேவர்கள் தம்பிரானே!

ஞானம் நிறைந்த குணாதீதனே! நமோநம! உருவம் அற்ற நாதனே! நமோ நம! அனைத்துக் கலைகளின் சாராம்சமாய் உள்ளவனே நமோ நம! ஐந்துமலர்ப் பாணங்கள் கொண்ட மன்மதனின் மைத்துனனே நமோ நம! திருவடிகளில் கடப்பமாலையை அணிந்தவனே நமோ நம! இன்பங்களுக்கு இடமான சொர்க்கத்தைக் காத்தவனே! நமோ நம! சங்கப்பலகையில் வீற்றிருந்த முத்தமிழ்ச் சேயே நமோ நம! மூன்று வேதங்களும் போற்றும் வேளே நமோ நம! வாழும் மூவுலகங்களும் போற்றும் செல்வனே! நமோநம! என்று உன் திருவடித்தாமரையில் வீழ்ந்து வணங்காமல் ஏழ் பிறப்பாம் கடலில் மூழ்கி எண்ணங்களாம் மாயையில் சிக்கி வெளிவர இயலாது கலங்குதல் நல்லதா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

* போத நிர்க்குண போதா நமோ நம
நாத நிஷ்கள நாதா நமோ நம
பூர ணக்கலை சாரா நமோ நம பஞ்சபாண
பூபன் மைத்துன பூபா நமோநம
நீப புஷ்பக தாளா நமோ நம
போக சொர்க்கபு பாலா நமோ நம சங்கமேறும்
மாத மிழ்த்ரய சேயே நமோ நம
வேத னத்ரய வேளே நமோ நம
வாழ்ஜ கத்ரய வாழ்வே நமோ நம என்றுபாத
வாரி ஜத்தில்வீ ழாதே மகோததி
ஏழ்பி றப்பினில் மூழ்கா மனோ பவ
மாயை யிற்சுழி யூடே விடாதுக லங்கலாமோ
கீத நிர்த்தவெ தாளா டவீநட
நாத புத்திர பாகீர தீகிரு
பாச முத்திர ஜீமுத வாகனர் தந்திபாகா
கேக யப்பிர தாபா முலாதிப
மாலி கைக்கும ரேசா விசாகக்ரு
பாலு வித்ரும காரா ஷடானன புண்டரீகா
வேத வித்தக வேதா விநோதகி
ராத லக்ஷ்மிகி ரீடா மகாசல
வீர விக்ரம பாரா வதானவ கண்டசூர
வீர நிட்டுர வீராதி காரண
தீர நிர்ப்பய தீராபி ராம வி
நாய கப்ரிய வேலாயு தாசுரர் தம்பிரானே 108

* *அர்ச்சனைத் திருப்புகழ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆலகால விஷம் பொருந்திய கழுத்தை உடையவள், ஆடம்பரமான துர்க்கை, இளமையானவள், பொன்நிறத்தவள், ஒளி நிறைந்தவள்! பற்று அற்றவள் சுமங்கலி, உலகத்தை ஈன்றவள், எல்லா உயிரிடத்தும் அன்பைப் பொழிபவள், மாதவி, ஆதி அம்பிகை, அனைத்தும் அறிந்த இறைவனுடன் திருவம்பலத்தில் ஆடிய அபிராமி, காலனை சம்கரித்தவள், மிக்க பரிசுத்தமானவள், சூலத்தை ஏந்தியவள், மந்திரங்களான நல்ல சொற்களைச் சொல்பவள், கறுத்த கழுத்தை உடையவள், கபாலத்தை ஏந்தியவள், மாலினி, கல்யாணி, காமதந்திர லீலைகளை நடத்தி வைப்பவள், சக்தி உபாசனை நூல்களால் ஆராயப்பட்டவள் ஆகிய சிவகாமசுந்தரியின் செல்வமே! தேவர்கள் பெருமாளே!

ஆறிதழ் தாமரையின் மேல் சுவாதிஷ்டானம் என்ற ஆதார பீடத்தில் உதிக்கும் கதிரவன் போன்று சொல்லும்படியான செம்பொன் நிற பிரமனும், அதன் மேல்நிலையில் பூமியை உண்டவரும், உயிர்களைக் காக்கும் தொழிலைச் செய்பவருமான திருமால் மணிபூரகம் எனும் ஆதார ஸ்தானத்தில் இருக்க, யோக மந்திரங்களுக்கும் மூலாதார ஸ்தானமாகிய அனாகதம் என்படும் ஆதார ஸ்தானத்தில் ருத்ரமூர்த்தியும், தேடிநிற்கும் ஒளித்தன்மை கொண்ட புருவமத்தியில் உள்ள சதாசிவ மூர்த்தியும், நடுவாக வீற்றிருக்க, இவர்களுக்கு மேலான நிலையில் இருந்த உனது லீலைகளுக்கு வேண்டிய இருப்பிடமும், சாஸ்திர நூல்கள் அறிந்து கூறும் ரத்னமயமான அழகிய மண்டபமுமான மேலான ஒளி கோடானுகோடிக்கணக்காய் விளங்கும் இடமாகக் கொண்டு, வீசி நின்று காட்டப்படும் தூப தீபங்கள் விளங்கும் விசால மண்டபத்திலே ஏறி அமர்ந்த வீரபண்டிதனே! வீர ஆசாரியனே! எனது வினைளை ஒழித்தருளுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

நாலி ரண்டித ழாலே கோலிய
ஞால முண்டக மேலே தான்இள
ஞாயி றென்றுறு கோலா காலனும் அதின்மேலே
ஞால முண்டபி ராணா தாரனும்
யோக மந்திர மூலா தாரனும்
நாடி நின்றப்ர பாவா காரனும் நடுவாக
மேலி ருந்தகி ரீடா பீடமும்
நூல்அ றிந்தம ணீமா மாடமும்
மேத கும்ப்ரபை கோடா கோடியும் இடமாக
வீசி நின்றுள தூபா தீபவி
சால மண்டப மீதே ஏறிய
வீர பண்டித வீரா சாரிய வினைதீராய்
ஆல கந்தரி மோடா மோடிகு
மாரி பிங்கலை நானா தேசிஅ
மோகி மங்கலை லோகா லோகிள வுயிர்பாலும்
ஆன சம்ப்ரமி மாதா மாதவி
ஆதி அம்பிகை ஞாதா வானவர்
ஆட மன்றினில் ஆடா நாடிய அபிராமி
கால சங்கரி சீலா சீலித்ரி
சூலி மந்த்ரசு பாஷா பாஷணி
காள கண்டிக பாலீ மாலினி கலியாணி
காம தந்திர லீலா லோகினி
வாம தந்திர நூலாய் வாள்சிவ
காம சுந்தரி வாழ்வே தேவர்கள் பெருமாளே.109

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கற்பகவிருட்சம் உள்ள நாட்டை ஆளும் தேவேந்திரன் மூங்கிலின் உருவெடுத்து பலநாட்கள் செய்த தவப்பயனால் சிவபிரான் தேவர்களின் சிறையை நீக்க வேண்டி, சகல உலக இன்பங்களையும் அனுபவிக்கும் சூரனையும், அவனது மக்கள் சுற்றத்தையும் வேலாயுதத்தால் பொடியாக அழிந்து போகுமாறு செய்வாயாக! என்று உம்மிடம் அருள, அதனை ஏற்று போருக்குச் சென்று அந்த அசுரர்கள் உறையும் கிரவுஞ்சமலை, மற்றும் சேனைகளையும் அழியுமாறு செய்து, எதிர்த்து வந்த சூரனைப் போரிட்டு ஒழித்து, தேவர்களை சிறையினின்றும் மீட்டு சிவபிரானிடம் வந்து சேர்ந்த மகா பராக்ரமசாலியான வீரனே! தேவர்கள் பெருமாளே!

அசுரர்களுக்கு யமனாக வந்தவனே! உமக்கு வெற்றி உண்டாவதாக! தேவர்கள் போற்றித் துதிக்கும் வேலனே! நீ வெல்க! வெல்க! நிமலனின் ஒப்பற்ற பாலனே உமக்கு வெற்றி உண்டாவதாக! வீரம்மிக்க நீண்ட வேலாயுதப் படையை உடையவனே! நீர் வெல்க! வெல்க! என்றெல்லாம் இரவும். பகலும் நான் உனது திருவடியை மிகவும் பணிந்து வணங்கும்படி, இனி தாமதிக்காமல், ஆழமுள்ள ஏழு திரைக்கடல் போல எழுகின்ற ஏழு பிறவிக்கடலுள் நான் அனுபவிக்கும் மனக்கவலையை ஒழித்து, உன்னுடைய அடியார்கள் வாழும் சபையில் என்னை சேர்த்து, இனிய ஞான உபதேசத்தையும், எனக்கு அருளிச்செய்து, என்னை ஆட்கொள்ளும் பொருட்டு என்முன்பு நீ வந்து தோன்றும் ஒருநாள் எனக்குக் கிடைக்குமோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## பொது

நிருத ரார்க்கொரு காலா ஜேஜெய
சுரர்க ளேத்திடு வேலா ஜேஜெய
நிமல னார்க்கொரு பாலா ஜேஜெய விறலான-
நெடிய வேற்படை யானே ஜேஜெய
எனஇ ராப்பகல் தானே நான்மிக
நினது தாள்தொழு மாறே தான்இனி உடனேதான்;
தரையி னாழ்த்திரை யேழே போல்எழு
பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்துன தாளே சூடியுன் அடியார்வாழ்-
சபையின் ஏற்றிஇன் ஞானா போதமும்
அருளி ஆட்கொளு மாறே தானது
தமிய னேற்குமு னேநீ மேவுவ தொருநாளே;
தருவின் நாட்டர சாள்வான் வேணுவின்
உருவ மாய்ப்பல நாளே தானுறு
தவசி னாற்சிவன் நீபோய் வானவர் சிறைதீரச்-
சகல லோக்கிய மேதான் நாளுறும்
அசுர பார்த்திப னோடே சேயவர்
தமரை வேற்கொடு நீறா யேபட விழமோதென்(று)
அருள ஏற்றம ரோடே போயவர்
உறையு மாக்கிரி யோடே தானையும்
அழிய வீழ்த்தெதிர் சூரோ டேயமர் அடலாகி-
அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட்டர னார்பால் மேவிய
அதிப ராக்ரம வீரா வானவர் பெருமாளே. 110

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கும்பகோணம், திருவாரூர், சிதம்பரம், தேவர்கள் வாழ்வு கொள்ளும் சீகாழி, கொன்றை மலரை சடையில் கொண்டுள்ளவரின் மாயூரம், அழகு வாய்ந்த காசித்தலம், திரளான மக்கள் உலவுகின்ற ராமேசுவரம், ஒப்பற்ற நான்கு வேதங்களில் வல்லவர்கள் வந்து கூடி பூஜைசெய்யும் வேளூர் (வைதீச்வரன் கோயில்), திருப்பரங்குன்றம் ஆகிய தலங்களில் வாழ்பவரே! திருவானைக்கா, திருஆடானை, நீ இன்பமுடன் வாழும் திருச்செந்தூர், திருஏடகம், சோலைமலை, தென்றல் காற்று வந்து உலவும் பொதியமலை, முதலான தலங்களில் வீற்றிருப்பவரே! ஜெகநாதம், குருவாக வந்து உபதேசித்த ஏரகம், திருவாவினன்குடி (பழநி), குன்றுதோறாடல் இவைகளுடன் பழம்பதி எனப்படும் திருப்புனவாயில், விரிஞ்சிபுரம், செம்பொன்மேனியை உடைய நீ சோழநாட்டின் (தலைநகராம்) வஞ்சி என்னும் கருவூரிலும் வீற்றிருக்கும் தேவனே! கம்பைநதி விளங்கும் மாமரத்தின் அடியில் உள்ள காஞ்சியில் உறைபவரே! அழகான சங்குகள் உலவும் காவேரி சங்கமம் ஆகும் காவிரிப்பூம்பட்டினம், திருச்சிராப் பள்ளியிலும் வாழ்கின்ற தேவனே! வயலூர்ப் பெருமாளே! சந்தண நறுமணம் வீசும் திருப்போரூர், நீ நடனம் புரியும் தென்சிவாயமாகிய திருவாட்போக்கி, ஆகிய தலங்களில் விளங்குபவனே! பாபங்களை நீக்குகின்ற திருக்கண்டியூரில் உறையும் சுவாமியே! கடப்பமாலை அணிந்த மார்பழகனே! எம்பிரான் சிவனொடு தர்க்கம் புரிந்த காளி, தேவர்கள், சரஸ்வதி, லட்சுமி, ஆகிய இவர்கள் தினமும் உள்ளத்தில் எழுச்சியுடன் போற்றுகின்ற இந்திராணியின் மகள் தேவசேனையுடன், குறமங்கையாம் வள்ளியையும் ஆசையுடன் மணந்து உலகத்தில் எங்குமுள்ள தேவாலயங்கள் தோறும் வீற்றிருக்கும் பெருமாளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## க்ஷேத்திரக்கோவைத் திருப்புகழ்

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூரம் அம்பெறு சிவகாசி-
கொந்து லாவிய ராமே சுரந்தனில்
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர்ப ரங்கிரி தனில்வாழ்வே
செம்பு கேசுரம் ஆடானை இன்புறு
செந்தில் ஏடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றல் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்
செஞ்சொல் ஏரகம் மாஆவி னன்குடி
குன்று தோறுடன் மூதூர்வி ரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் வருதேவே
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா
கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயாய் அகம்படு
கண்டியூர் வரு சாமிக டம்பணி மணிமார்பா
எம்பி ரானொடு வாதாடு மங்கையர்
உம்பர் வாணிபொன் நீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறும் ஏர்பாக நின்றுறு துதிஓதும்-
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
**கெங்கு மேவிய தேவால யந்தொறு** பெருமாளே. 111

*வேண்டுகோள் இல்லாத திருப்புகழ் (துதி)*
*இத்திருப்புகழில் 30 தலப்பெயர்கள் வருகின்றன.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



# திருப்புகழ்-111 முதற்குறிப்பு அகராதி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அகரமுதலென | - 203 | ஒருவரையும் | - 43 |
| அணிசெவ்வி | - 129 | ஓலமறைகள் | - 95 |
| அதலவிதல | - 35 | கருணைசிறிது | - 101 |
| அந்தகன் | - 15 | கருவடைந்து | - 11 |
| அந்தோமன | - 61 | கறுத்ததலை | - 49 |
| அமலகமல | - 199 | கறைபடும் | - 45 |
| அரிவையர் | - 75 | கறையிலங் | - 85 |
| அலகில் அவு | - 191 | கற்பகஞான | - 197 |
| அவகுணவிர | - 119 | கனகந்திரள் | - 7 |
| அன்னமிசை | - 189 | கனகிரவுஞ் | - 83 |
| ஆசை நாலு | - 79 | கனிதரும் | - 87 |
| ஆனாத ஞான | - 205 | காணொணாதது | - 137 |
| ஆனாத பிருதிவி | - 39 | குகனெகுரு | - 113 |
| இகலவரு | - 131 | குமரகுரு | - 99 |
| இபமாந்தர் | - 163 | கும்பகோணம் | - 223 |
| இரத்தமுஞ் | - 181 | குரம்பை மல | - 25 |
| இரவிஎன | - 29 | குருதிகிருமி | - 179 |
| உடுக்கத்துகில் | - 77 | குருதி புலால் | - 97 |
| உனைத்தினம் | - 9 | குருவி என | - 55 |
| எந்தத்திகை | - 41 | கொடியமறலி | - 69 |
| ஏட்டின் விதி | - 153 | கொந்துவார் | - 57 |
| ஏது புத்தி | - 53 | கோதிமுடி | - 71 |
| ஐந்து பூதமும் | - 65 | சதுரத்தரை | - 143 |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy




| | | | |
|---|---|---|---|
| சரக்கேறித்த | - 109 | நிணமொடு | - 141 |
| சரவணபவநிதி | - 51 | நித்தப்பிணி | - 183 |
| சருவிஇகழ்ந்து | - 145 | நிருதரார்க் | - 221 |
| சினமுடுவல் | - 103 | நிலையாதசமு | - 59 |
| சீதளவாரிஜ | - 133 | நினது திருவடி | - 3 |
| சீரானகோல | - 63 | நெடியவட | - 207 |
| சுருதிமுடி | - 31 | பகிரநினை | - 209 |
| சுருதியாய் | - 169 | பங்கயனார் | - 111 |
| செயசெய | - 105 | பச்சையொண் | - 157 |
| செறிதரும் | - 89 | படியை அள | - 171 |
| செனித்திடும் | - 173 | பலபலதத்து | - 139 |
| சோதிமந்திரம் | - 155 | பனியின் விந்து | - 47 |
| ஞானாவிபூஷ | - 193 | பாட்டில் உரு | - 73 |
| தமரகுரங் | - 107 | பாலோ தேனோ | - 165 |
| தருவூரிசை | - 159 | புகரில் சேவ | - 211 |
| தலைநாளிற் | - 161 | புடவிக்கணி | - 27 |
| தலைவலிமருத் | - 33 | புலவரைரட்சி | - 167 |
| தலைவலை | - 93 | புனமடந்தை | - 91 |
| தாரணிக் | - 123 | பூமாதுரவேணி | - 147 |
| தியங்குஞ் | - 117 | பொன்றலை | - 67 |
| துடிகொள் | - 81 | பொன்றாமன் | - 127 |
| தொக்கை | - 201 | போதகந்தரு | - 23 |
| தொந்திசரிய | - 17 | போதநிர்க்குண | - 217 |
| நாதவிந்து | - 21 | மதப்பட்ட | - 187 |
| நாலிரண்டு | - 219 | மனந்திரைந் | - 185 |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy




| | | | |
|---|---|---|---|
| மனமெனும் | - 175 | மூலங்கிளர் | - 37 |
| மனைமாண் | - 135 | வஞ்சங்கொண் | - 19 |
| மாண்டார் | - 213 | வதனசரோருக | - 125 |
| மாலினால் | - 151 | வந்து வந்து | - 115 |
| முத்தைத்தரு | - 5 | வாதபித்த | - 121 |
| முந்துதமிழ் | - 13 | வேதத்திற்கேள் | - 195 |
| மூலமுண்டக | - 177 | வேதவித்தக | - 215 |
| மூலாதார | - 149 | | |


---

ஆறுமுகந் தோன்றும் அழகிய வேல்தோன்றும்
ஏறுமயில் தோன்றும் எழில்தோன்றும் - சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் **திருப்புகழைப்**
பாரில் வழுத்தினோர் பால்.

வள்ளிமண வாளன் மயிலேறும் வள்ளல்தனைத்
தெள்ளுதமி ழாற்புனைந்து சீர்பெறவே-உள்ளபடி
வைப்பாம் **அருணகிரி** வாழ்த்தும் **திருப்புகழைக்**
கற்பார் கரைஏறு வார்.

தருப்புகழ் வல்ல சுரர்மகள் நாயகன் சங்கரற்குக்
குருப்புகழ் வல்ல குமரேசன் சண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ் வல்ல **அருணகிரிப்** பெயர் வள்ளல் சொன்ன
**திருப்புகழ்** வல்லவர் சீர்பாதத்தூளி என் சென்னியதே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



# நன்றியுரை

'வாக்கிற்கு அருணகிரி'
'வாழ்க்கைக்குத் திருப்புகழ்'

என்பது ஆன்றோர்வாக்கு.

திருப்புகழ், முருகன் புகழ்பாடும் அற்புதப் பாமாலையாகவும், அதே சமயம் கணபதி, சிவபெருமான், அம்பிகை, திருமால் முதலான அறுவகை சமய வழிபாட்டுத் துதியாகவும் அமைந்துள்ள பெருமையுடையது. முருகனடியார்கள் வழிபாட்டிற்கு உதவியாக, துதி, பக்தி, ஞானம் முதலான வேண்டுகோளுடன், ஏற்கனவே வெளிவந்துள்ள திருப்புகழ்-66, திருப்புகழ்-108 ஆகியவற்றுடன் மூன்றாவது தொகுதியாக **திருப்புகழ்-111** என்னும் இந்நூலை கந்தவேள் திருவடிகளில் அர்ப்பணிக்கிறேன். இந்நூல் வெளிவர பலவகையிலும் உதவிய ஞானதானச் செல்வர்கள் திருவாளர்கள் Dr. S. சுந்தரம், K. மோகன், N. அனந்தகிருஷ்ணன், T.K.B. வேங்கடராமன், S. வீரவாகு, M.S. தியாகராஜன், V. ராமதாஸ், J. ரமணன், S. சுவாமிநாதன், V. கணேசன், T.S. கங்காதரன், R. சண்முகம், A. கிருஷ்ணமூர்த்தி, M.G.G. கல்யாணசுந்தரம், V. வேங்கடராமன், ஸ்ரீமதி அன்னபூரணிராஜன், P. கிருஷ்ணமூர்த்தி, S. நடராஜன், S. கணேசன், பரணிகுமார், ஸ்ரீமதி சௌம்யா வேங்கடராமன் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியும் வணக்கமும் உரித்தாகும்.

இந்நூலை சிறந்த முறையில் லேசர் டைப் செய்து வடிவமைத்த திருவானைக்கா அபயா கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் திருவாளர்கள் N. வெங்கடசுப்ரமணியன், V. நாராயணன், V. நடராஜன் ஆகியோருக்கும், அழகிய முறையில் அச்சிட்ட சென்னை ராயப்பேட்டை அபிராமி பிரிண்டிங் ஒர்க்ஸ் நிறுவனத்தாருக்கும் மிக்க நன்றி. இந்நூலை அனைவரும் ஓதி வள்ளி குஞ்சரி மணாளன் திருவருளைப் பெற வேண்டுகிறேன்.

**வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உ

# திருப்புகழ் இன்னிசை

## AUDIO CASSETTES & COMPACT DISCS

பாடியுள்ளோர்:

'திருப்புகழ் கான சரஸ்வதி' ஸ்ரீமதி T.V. சுந்தரவல்லி,
V.G. அக்ஷயா, ப்ரியா, ரமா குழுவினர்

- திருப்புகழ் 66 (2 பாகங்கள்) 66 ராகங்களில்
- திருப்புகழ் 108 (8 பாகங்கள்) 115 ராகங்களில்
- சுவாமிமலைத் திருப்புகழ்
- ஆறுபடைவீடு திருப்புகழ்
- திருப்புகழ் அருவி
- திருப்புகழ் அமிர்தம்
- வேண்டுவது அளிக்கும் வேலன் திருப்புகழ்
- அபிஷேகங்களில் அழகு முருகன் & அர்ச்சனைத் திருப்புகழ் ஆறு
- அருள்வாய் ஆறுமுகா
- வேல்வழிபாடு

## திருப்புகழ்ச் சங்கமம்

41-C கடற்கரை சாலை,
கலாக்ஷேத்ரா காலனி, பெசண்ட் நகர்
சென்னை - 600 090.
போன் : 4901565, 4463168, 8474468
e-mail : s_sundaram@vsnl.net

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்புகழ் பதிப்பகம்
சென்னை
600005

Easwari library
002-S25114

Sri Abirami Printing Works Pvt. Ltd
Tel : 044 - 2813285, 2813 0282